உ

சிவமயம்.

# சுந்தரமூர்த்திநாயனார் புராணம்.

குன்றத்தூர்

## சேக்கிழார்சுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்டது.

இஃது

திருப்பனந்தாள் ஆதீனகர்த்தா

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

**சொக்கலிங்கசுவாமிகள்**

கட்டளையிட்டருளியபடி

உறையூர்

சொ. சோமசுந்தர முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

காவாலகுடி மிராசு

அ. தியாகராசமுதலியாரவர்கள்

குமாரர்

கணபதிகார்த்திகேயமுதலியாரவர்கள்

வேண்டுகோளாலும்

கும்பகோணம்

வ. கி. த வெங்கிடகிருஷ்ணசெட்டியாரவர்கள்

ஷையூர் வல்லம் சு. பொன்னுசாமிபிள்ளையவர்கள்

இவ்விருவர்களின் முயற்சியினாலும்

திருப்பரங்குன்றம்

**அ. நாராயணசரணரால்**

1 பாரம்முதல் 9 பாரம் வரை தஞ்சாவூர் மணியன்கோ அச்சாபீசிலும்,
10 முதல் 18 பாரம் கும்பகோணம் லெட்சுமிவிலாசப்பிரசிலும்,
19 வது பாரம் ஷை தஞ்சாவூர்

ஸ்ரீ வித்தியாவிநோதினி பிரஸிலும்
பதிப்பிக்கப்பட்டது.

இப்புத்தகத்தின் ஊதியம் சுந்தரமூர்த்தி நாயனார்
குருபூசைக்கு உபயோகப்படும்.

1917.

Dr. U. V. S. LIBRARY MADRAS-90 22997

Dr. U.V.S. Iyer Library Madras-90
22997
அன்பளிப்பு
திருமதி: கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை-600 028

## இப்புராணத்தில் அடங்கிவருஞ்சரித்திரங்களாவன


| | | |
|---|---|---|
| பாயிரம் ... ... | (கவி) | ௰ |
| ௧-வது திருமலைச்சிறப்பு ... | (கவி) | ௪௰ |
| ௨-வது தடுத்தாட்கொண்ட புராணம் ... | (கவி) | ௨௱௩ |
| ௩-வது ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணம் | (கவி) | ௪௱௰ |
| ௪-வது கழறிற்றறிவார்நாயனர் புராணம் | (கவி) | ௱௭௰௫ |
| ௫-வது வெள்ளானைச்சருக்கம் ... | (கவி) | ௫௰௪ |
| ௬-வது விறன்மிண்ட நாயனர் புராணம்... | (கவி) | ௰௧ |
| ௭-வது பெருமிழலைக்குறும்பநாயனர் புராணம் | (கவி) | ௰௧ |
| ௮-வது சோமாசி மாறநாயனர் புராணம் | (கவி) | ௬ |
| ௯-வது சடையநாயனர் புராணம் ... | (கவி) | ௧ |
| ௰-வது இசைஞானியார் புராணம் ... | (கவி) | ௧ |

இவ்விருவர்களும் சுந்தரமூர்த்தி நாயனர் பிதாமாதாக்கள்.

௰௧-வது நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருவந்தாதியில் சுந்தரமூர்த்தி நாயனர்தோத்திரம் (கவி) ௰௧

௰௨-வது பெரிய புராணச் சருக்கங்கள் பதினொன்றில் அந்தந்தச் சருக்கத்தின் ஈற்றில் சுந்தரமூர்த்தி நாயனருக்காக ஏற்பட்டுள்ள தோத்திரம் (கவி) ௰.

௰௩-வது சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நால்வர் நான்மணிமாலையில் சுந்தரமூர்த்திநாயனர் தோத்திரம் (கவி) ௰.


இத்துடன் சுந்தரர் வேடிபறியும் அச்சிடப்படும்.

மேற்கூறிய ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் (கவி) ௪௱௰ல் ௧-வது கவி முதல் (கவி) ௭, இறுதியில் (௩௱௮௰௪-வது கவி முதல் (௪௱௰-வது கவி வரையினும் இந்நாயனர் சரித்திரம் முற்றுப்பெற்றது. ஆக (கவி) ௩௰௨.

௨௱௭-வது கவி முதல் (௨௱௭௰)வது கவிவரையினும் சங்கிலி நாச்சியார் கதையும் (௩௱௪) வது கவி முதல் (௩௱௮௰௩)வது கவி வரையினும் பரவை நாச்சியார் ஊடற் சிறப்புமெனக் கொள்க. மற்றக் கவிகள் (௨௱௪௩-ம் தலயாத்திரையின் மகத்துவங் கூறப்பட்டது.

கழறிற்றறிவார் நாயனார் புராணம் கவி (௱௫௰௫) இதில் (௯௰௩.)-வது செய்யுள் முதல் இறுதிச்செய்யுள்வரையினும் வெள்ளானைச் சருக்கம் (கவி) (௫௰௪) இவ்விரண்டினும் சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரமும் கழறிற்றறிவார் நாயனார்புராணமும் கலந்து முற்றுப்பெற்றது. சுந்தரமூர்த்திநாயனாருக்காக பெரிய புராணத்துள் அடங்கிய மொத்தம் செய்யுள் (௮௱௫௰.)

இந்நூல் சிவநேசச் செல்வர்களுக்கு அவசியம் வேண்டுவதால் எனது பிதாவின் ஏவுதலால் *திருப்பரங்குன்றம் அ. நாராயண சரணர்.* பிரயாசையுஞ்சிலதுண்டு.

இப்புத்தகம் வேண்டுபவர்கள்:—உறையூர் மதுரை நாயகமுதலியாரவர்கள் கிரகத்திலும், தஞ்சாவூர் சவுளிச்செட்டித்தெரு சுப்பு செட்டியாரவர்கள்கிரகத்திலும்விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருவானைக்காப் புராணம் | ... | ... | ... | ரூ | ௧ |
| பிரபுலிங்கலீலை / திருக்காளத்திப்புராணம் | ... | ... | ... | ரூ | ௧ |
| உறையூர்ப்புராணம் | ... | ... | ... | ரூ | ௧ |

இன்னும் சில சில்லரை புத்தகங்களும் உண்டு

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பாயிரம்.

## நடேசர் துதி.

### விருத்தம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம். (க

ஊனடைந்தவுடம்பின் † பிறவியே
தானடைந்தவுறுதியைச்சாருமாற்
றேனடைந்தமலர்ப்பொழிற்றில்லையுண்
மானடஞ்செய்வரதர்பொற்றாடொழ. (உ)

### விநாயகர் துதி.

எடுக்குமாக்கதையின்றமிழ்ச்செய்யுளாய்
நடக்குமேன்மைநமக்கருள்செய்திடத்
தடக்கையைந்துடைத்தாழ்செவிநீண்முடிக்
கடக்களிற்றைக்கருத்துளிருத்துவாம். (ங)

### திருக்கூட்டப்புகழ்ச்சி—வேறு.

மதிவளர்சடைமுடிமன்றுளாரைமுன்
றுதிசெய்நாயன்மார்தூயசொன்மலர்ப்
பொதிநலனுகர்தருபுனிதர்பேரவை
விதிமுறையுலகினில்விளங்கிவெல்கவே. (ச)

### அவையடக்கம்—வேறு.

அளவிலாதபெருமையராகிய
அளவிலாவடியார்புகழ்கூறுகேன்
அளவுகூடவுரைப்பரிதாயினும்
அளவிலாசைதுரப்பவறைகுவேன். (ரு)

---

† பிறவியை - எனவும்பாடம்

தெரிவரும்பெருமைத்திருத்தொண்டர்தம்
பொருவருஞ்சீர்புகலலுற்றேன்முற்றப்
பெருகுதண்கட § லூற்றும்பெருநசை
யொருசுணங்கனையொக்குந்தகைமையேன். (௬)

செப்பலுற்றபொருளின்சிறப்பினால்
அப்பொருட்குரையாவருங்கொள்வரால்
இப்பொருட்கென்னுரைசிறிதாயினு
மெய்ப்பொருட்குரியார்கொள்வர்மேன்மையால். (௭)

மேயவிவ்வுரைகொண்டுவிரும்புமாஞ்
சேயவன்றிருப்பேரம்பலஞ்செய்ய
தூயபொன்னணிசோழனீடூழிபா
ராயசீரநபாயனரசவை. (௮)

அருளினீர்மைத்திருத்தொண்டறிவருந்
தெருளினீரிதுசெப்புதற்காமெனின்
வெருளின்மெய்ம்மொழிவானிழல்கூறிய
பொருளினாகுமெனப்புகல்வாமன்றே. (௯)

நாற்பெயர்—வேறு.

இங்கிதனாமங்கூறினிவ்வுலகத்துமுன்னாட்
டங்கிருளிரண்டின்மாக்கள்சிந்தையுட்சார்ந்துநின்ற
பொங்கியவிருளையேனைப்புறவிருள்போக்குகின்ற
செங்கதிரவன்போனீக்குந்திருத்தொண்டர்புராணமென்பாம். (௧௦)

பாயிரமுற்றிற்று.

---

§ ஊற்றுப்பெருநசை - எனவும்பாடம்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமலைச் சிறப்பு.

விருத்தம்.

பொன்னின்வெண்டிருநீறுபுனைந்தெனப்
பன்னுநீள்பனிமால்வரைப்பாலது
தன்னையார்க்குமறிவரியானென்று
மன்னிவாழ்கயிலைத்திருமாமலை. (க)

அண்ணல்வீற்றிருக்கப்பெற்றதாதலி
னண்ணுமூன்றுலகுநான்மறைகளும்
எண்ணின்மாதவஞ்செய்யவந்தெய்திய
புண்ணியந்திரண்டுள்ளதுபோல்வது. (உ)

நிலவுமெண்ணிறலங்களுநீடொளி
யிலகுதண்டளிராகவெழுந்ததோர்
உலகமென்னுமொளிமணிவல்லிமேன்
மலரும்வெண்மலர்போல்வதம்மால்வரை. (௩)

மேன்மைநான்மறைநாதமும்விஞ்சையர்
கானவீணையினோசையுங்காரிதிர்
தானமாக்கண்முழக்கமுந்தாவில்சீர்
வானதுந்துபியார்ப்புமருங்கெலாம், (௪)

பணிவிசும்பிலமரர்பணிந்துசூழ்
அணிதகோடியணிமுடிமாலையும்
புனிதகற்பகப்பொன்னரிமாலையு
முனிவரஞ்சலிமாலையுமுன்னெலாம். (௫)

நீடுதேவர்நிலைகளும்வேண்டிடி
னாடுமைம்பெரும்பூதமுநாட்டுவ
கோடிகோடிகுறட்சிறுபூதங்கள்
பாடியாடும்பரப்பதுபாங்கெலாம். (௬)

நாயகன்கழல்சேவிக்கநான்முகன்
மேயகாலமலாமையின்மீண்டவன்
றூயமால்வரைச்சோதியின்மூழ்கியோன்
றூயவன்னமுங்காணாதயர்க்குமால்.

வேறு. இதுவெள்ளிப்பாடல்.

காதில்வெண்குழையோன்கழறொழுநெடியோன்காலம் பார்த்திருந்ததுமறியான், சோதிவெண்கயிலைத்தாழ்வரைமுழையிற்றுதிக்கையோனூர்தியைக்கண்டு, மீதெழுபண்டைச்செஞ்சுடரின்றுவெண்சுடரானதென்றதன்கீ, ழாதியேனமதாயிடக்கலுற்றானென்றதனைவந்தணைதருங்கலுழன். (அ)

---

அரம்பையர்பாடன்முழவுடன்மருங்கினருவிகளெதிரெதிர்முழங்க, வரம்பெறுங்காதன்மனத்துடன்றெய்வமதுமலரிருகையுமேந்தி, நிரந்தரமிடைந்தவிமானசோபானநீடுபேர்வழியினாலேறிப், புரந்தரன்முதலாங்கடவுளர்போற்றப்பொலிவதத்திருமலைப்புறம்பு. (கூ)

வேதநான்முகன்மால்புரந்தரன்முதலாம்விண்ணவரெண்ணிலார்மற்றுங், காதலான்மிடைந்துழைதற்பெருந்தடையாங்கதிர்மணிக்கோபுரத்துள்ளார், பூதவேதாளப்பெருகணநாதர்போற்றிடப்பொதுவினின்றாடு, நாதனாரதிதேவனார்கோயினாயகனந்தியெம்பெருமான். (கo)

நெற்றியிற்கண்ணார்நாற்பெருந்தோளர்நீறணிமேனியரநேகர், பெற்றமேற்கொண்ட தம்பிரானடியார் பிஞ்ஞகன் றன்னருள் பெறுவார், மற்றவர்க்கெல்லாந்தலைமையாம்பணியுமலர்க்கையிற்சுரிகையும்பிரம்புங், கற்றைவார்சடையானருளினாற்பெற்றான்காப்பதக்கயிலைமால்வரைதான். (கக)

கையின்மான்மழுவர்கங்கைசூழ்சடையிற்கதிரிளம்பிறைநறுங்கண்ணி, யையர்வீற்றிருக்குந்தன்மையினாலுமளப்பரும்பெருமையினாலு, மெய்யொளிதழைக்குந்தூய்மையினாலும்வென்றிவெண்குடையநபாயன், செய்யகோலபயன்றிருமனத்தோங்குந்திருக்கயிலாயநீள்சிலம்பு. (கஉ)

வேறு.

அன்னதன்றிருத்தாழ்வரையின்னிடத்
தின்னதன்மையனென்றறியாச்சிவன்
றன்னையேயுணர்ந்தார் வந்தழைக்கின்றான்
உன்னருஞ்சீருபமன்னியமுனி. (கங)

யாதவன்றுவரைக்கிறையாகிய
மாதவன்முடிமேலடிவைத்தவன்
பூதநாதன்பொருவருந்தொண்டினுக்
காதியந்தமிலாமையடைந்தவன். (கச)

அத்தர்தந்தவருட்பாற்கடலுண்டு
சித்தமார்ந்துதெவிட்டிவளர்ந்தவன்
பத்தராயமுனிவர்பல்லாயிரர்
சுத்தயோகிகள்சூழவிருந்துழி. (கரு)

அங்கணோரொளியாயிரஞாயிறு
பொங்குபேரொளிபோன்றுமுன்றோன்றிடத்
துங்கமாதவர்சூழ்ந்திருந்தாரெலாம்
இங்கிதென்கொலதிசயமென்றலும். (கசா)

அந்திவான்மதிசூடியவண்ணலாள்
சிந்தியாவுணர்ந்தம்முனிதென்றிசை
வந்தநாவலர்கோன்புகழ்வன்றொண்டன்
எந்தையாரருளாலணைவானெனா. (கஎ)

கைகள்கூப்பித்தொழுதெழுந்தத்திசை
மெய்யிலாநந்தவாரிவிரவிடச்
செய்யநீள்சடைமாமுனிசெல்வுழி
ஐயநீங்கவினவுவோரந்தணர். (கஅ)

சம்புவின்னடித்தாமரைப்போதலால்
எம்பிரானிறைஞ்சாயிஃதென்னெனத்
தம்பிரானைத்தன்னுள்ளந்தழீஇயவ
னம்பியாரூரனுந்தொழுந்தன்மையான். (கசு)

என்றுகூறவிறைஞ்சியியம்புவார்
வென்றபேரொளியார்செய்விழுத்தவம்
நன்றுகேட்கவிரும்புநசையினேம்
இன்றெமக்குரைசெய்தருளென்றலும். (உ0)

உள்ளவண்ணமுனிவனுரைசெய்வான்
வெள்ளநீர்ச்சடைமெய்ப்பொருளாகிய
வள்ளல்சாத்துமதுமலர்மாலையும்
அள்ளுநீறுமெடுத்தணைவானுளன். (உக)

## திருமலைச்சிறப்பு.

அன்னவன்பெயராலாலசுந்தரன்
முன்னமாங்கொருநாண்முதல்வன்றனக்
கின்னவாமெனுநாண்மலர்கொய்திடத்
துன்னினானந்தனவனச்சூழலில். (உ௨)

அங்குமுன்னரேயாளுடைநாயகி
கொங்குசேர்குழற்காமலர்கொய்திடத்
திங்கள்வாண்முகச்சேடியரெய்தினார்
பொங்குகின்றகவினுடைப்பூவைமார். (உ௩)

அந்தமிழ்சீரனிந்திதையாய்குழற்
கந்தமாலைக்கமலினியென்பவர்
கொந்துகொண்டதிருமலர்கொய்வழி
வந்துவானவரீசரருளென. (உ௪)

பார்தவஞ்செய்ததென்றிசைவாழ்ந்திடத்
தீதிலாத்திருத்தொண்டத்தொகைதரப்
போதுவாரவர்மேன்மனம்போக்கிடக்
காதன்மாதருங்காட்சியிற்கண்ணினார். (உ௫)

முன்னமாங்கவர்மொய்ம்முகைநாண்மலர்
என்னையாட்கொண்டவீசனுக்கேய்வன
பன்மலர்கொய்துசெல்லப்பனிமலர்
அன்னமன்னவருங்கொண்டகன்றபின். (உ௬

ஆதிமூர்த்தியவன்றிறநோக்கியே
மாதர்மேன்மனம்வைத்தனைதென்புவி
மீதுதோன்றியம்மெல்லியலாருடன்
காதலின்பங்கலந்தணைவாயென. (உ௭)

கைகளஞ்சலிகூப்பிக்கலங்கினான்
செய்யசேவடிநீங்குஞ்சிறுமையேன்
மையன்மானிடமாய்மயங்கும்வழி
யையனேதடுத்தாண்டருள்செய்யென. (உ௮)

அங்கணாளனதற்கருள்செய்தபி
னங்கைமாருடனம்பிமற்றத்திசை
தங்குதோற்றத்திலின்புற்றுச்சாருமென்
றங்கவன்செயலெல்லாமறைந்தனன். (உ௯)

அந்தணாளருமாங்கதுகேட்டவர்
பந்தமானிடப்பாற்படுதென்றிசை
இந்தவான்றிசையெட்டினுமேற்பட
வந்தபுண்ணியமியாதெனமாதவன். (௧௦)

**சிதம்பரம்.**

பொருவருந்தவத்தான்புலிக்காலனும்
அருமுனியெந்தையர்ச்சித்துமுள்ளது
பெருமைசேர்பெரும்பற்றப்புலியூரென்
றொருமையாளர்வைப்பாம்பதியோங்குமால். (௧௧)

**இதுவுமது.**

அத்திருப்பதியின்னமையாளுடை
மெய்த்தவக்கொடிகாணவிருப்புட
னித்தனீடியவம்பலத்தாடுமற்
றித்திறம்பெறலாந்திசையெத்திசை. (௧௨)

**திருவாரூர்.**

† பூதமியாவையினுள்ளலர்போதென
வேதமூலம்வெளிப்படுமேதினிக்
காதன்மங்கையிதயகமலமா
மாதொர்பாகனாரூர்மலர்ந்ததால். (௧௩)

**காஞ்சீபுரம்.**

எம்பிராட்டியிவ்வேழுலகீன்றவ
டம்பிரானைக்கசிந்ததவத்தாலெய்திக்
கம்பையாற்றில்வழிபடுகாஞ்சியென்
றும்பர்போற்றும்பதியுமுடையது. (௧௪)

**திருவையாறு.**

நங்கணாதனந்திதவஞ்செய்து
பொங்குநீடருளெய்தியபொற்பது
கங்கைவேணிமலர்க்கனன்மலர்
செங்கையாளரையாறுந்திகழ்வது. (௧௫)

**சீர்காழி.**

தேசமெல்லாம்விளக்கியதென்றிசை
யீசர்தோணிபுரத்துடனெங்கணும்
பூசனைக்குப்பொருந்துமிடம்பல
பேசிலத்திசையொவ்வாபிறதிசை. (௧௬)

என்றுமாமுனிவன்றொண்டர்செய்கையை
அன்றுசொன்னபடியாலடியவர்
துன்றுசீர்த்திருத்தொண்டத்தொகைவிரி
யின்றெனாதாவாவிங்கியம்புகேன். (௧௭)

Dr. U. V. S. IYER LIBRARY

---

† பூதமியாவையுமுள்ளலர் எனவும், வேதமூலம் வெளிப்படுமேதினி எனவும், பாடபேதம்.

மற்றிதற்குப்பதிகம்வன்றொண்டர்தாம்
புற்றிடத்தெம்புராணாருளினாற்
சொற்றமெய்த்திருத்தொண்டத்தொகையெனப்
பெற்றநற்பதிகந்தொழப்பெற்றதால். (௩அ)

அந்தமெய்ப்பதிகத்தடியார்களை
நந்தநாதனுநம்பியாண்டார்நம்பி
புந்தியாரப்புகன்றவகையினால்
வந்தவாறுவழாமலியம்புவாம். (௩௯)

உலகமுய்யவுஞ்சைவநின்றோங்கவும்
அலகில்சீர்நம்பியாரூரர்பாடிய
நிலவுதொண்டர்தங்கூட்டநிறைந்துறை
குலவுதண்புனனாட்டணிகூறுவாம். (௪0)

திருமலைச்சிறப்பு-முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௫0.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## புராணவரலாறு.

இத்திருமலைச்சிறப்பில் சுந்தரமூர்த்தி நாயனாரது பூர்வ கதையின் வரலாறு சொல்லப்பட்டது.

அநாதிமலமுத்தராய், நித்தியராய், வியாபகராய், எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவநுக்கிரகமுமுடையராய், ஆன்மாக்களிடத்தே பதிந்த கைம்மாறற்ற பெருங்கருணையினாலே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இயற்றுதியற்றும் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், ஒருதிருமுகமும், சந்திரன் சூரியன் அக்கினி என்னும் முச்சுடர்களாகிய மூன்றுதிருக்கண்களும், கங்கையையும் பிறையையும் கொன்றைமாலையையுஞ் சூடிய சடாமுடியும், சங்கக்குண்டலத்தையும் தோட்டையும் அணிந்ததிருச்செவிகளும், காளகண்

டமும், மான் மழு அபயம் வரதம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், விபூதியினாலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத்திருமேனியும், வெள்ளைப்பூணூலையும் எண்ணிறந்த பிரமவிட்டுணுக்களுடைய என்புமாலைகளையும் பிரமகபாலங்களையும் அணிந்த திருமார்பும், புலித்தோலையுடுத்து உடைவாளுடனே கச்சையுடைத்தாய் விளங்குந்திருவரையும், வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்கும் செந்தாமரை மலர்போலுந் திருவடிகளும் உடைய ஸ்ரீகண்ட சரீரியாய், பலவிரத்தினங்களால் அலங்கரிக்கபபட்ட வெள்ளிமயமாகிய நானாவித சிகரங்களோடு கூடிய திருக்கைலாசமலையிலே, செம்பொற்றிருக்கோயிலிலே பூதர்களுட்பலர் நானாவித வாத்தியங்களை முழக்க, பலர் இருபுறத்தும் வெண்சாமரம் வீச, வேறுபலர் ஆலவட்டம் அசைப்ப, தும்புருநாரதர்களும் விஞ்சையர்களும் இசை பாட, கணநாதர்களெல்லாம் அழலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங்கரைந்து நெக்குநெக்குருகவும், சரீரநடுங்கவும், உரோமஞ்சிலிர்ப்பவும், மதகினிற்புறப்படுஞ் சலம்போல ஆனந்தவருவி சொரியவும், பேரானந்தப் பெருங்கடலுட்டிளைத்து ஆடிப்பாட, முனிவர்கள் தங்கள் கைகளைச் சிரசின்மீது குவித்து வேத சிரசுகளாகிய உபநிடதங்களை எடுத்தோத, பிரமாவிட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் திருநந்திதேவருடைய வேத்திரப்படையினாலே பலமுறை விலக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் ஆடையை ஒதுக்கி வாய்புதைத்து நின்று தத்தங் குறைகளைக்கூற, அநந்தகோடி சூரியர்களது ஒளியைப்போலும் பேரொளியையுடைய திவ்விய சிங்காசனத்தின்மேலே, தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய பார்ப்பதி தேவியார் தமது இடப்பாகத்தின்மேவ, வீற்றிருந்தருளுவர்.

அத்திருக்கைலாசமலையின் அடிவாரத்தின்கண்ணே, வியாக்கிரபாத மகாமுனிவருடைய திருக்குமாரரும், சிதம்பரத்திலே சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்கடலை உண்ட மெய்யடியாரும், கிருஷ்ணரைச் சிவதீக்ஷைசெய்து தடுத்தாட்கொண்டருளிய சைவாசாரியருமாகிய உபமன்னியுமகாமுனிவர் எண்ணில்லாத முனிவர்கள் கூட்டஞ்சூழ எழுந்தருளியிருந்தார். அப்பொழுது. அவ்விடத்தில் அவரெதிரே ஓர்பேரொளி ஆயிரஞ்சூரியருடைய ஒளிபோலத் தோன்றிற்று. அதுகண்ட முனிவர்களெல்லாரும் "இது என்னையாச்சரியம்" என்றார்கள். உடனே உபமன்னியு மகாமுனிவர் உயிர்க்குயிராய் நின்று உணர்த்துஞ் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, அவரது திருவருளினாலே, திருக்கயிலாசத்தினின்று நீங்கித் தக்கிணபூமியிலே திருவவதாரஞ்செய்தருளிய சுந்தரமூர்த்திநாயனார் எழுந்தருளிவருகின்றார் என்பதனை உணர்ந்து, விரைந்தெழுந்து, இரண்டுகைகளுஞ்

சிரசின்மீதேறிக்குவிய, ஆனந்தவருவி திருமேனியெங்கும் பெருக, அந்தத்திக்கை நோக்கி நடந்தார். அப்பொழுது முனிவர்கள் முனிவர்பெருமானே, சிவபெருமானையன்றிப் பிறரொருவரையும் வணங்கா இயல்பினராகிய நீர் இங்கே வணங்கிய காரணம் யாது" என்று வினவ, உபமன்னியு மகாமுனிவர் "முனிவர்களே கேளுங்கள். ஆதிகாலத்திலே திருக்கைலாசபதியாகிய சிவபெருமான் தமது திருவுருவத்தைக் கண்ணாடியிலே பார்த்து அழைத்தருளலும், கோடிசூரியர்கள் ஒருங்கு திரண்டாற்போலுந் திருமேனிப் பிரகாசத்தோடுந் தோன்றினார். அவர்பெயர் சுந்தரர். அவர் திருப்பாற்கடலினின்றுந் தோன்றி விட்டுணு முதலிய தேவர்களெல்லாரையும் அஞ்சி ஓட்டெடுப்பித்த ஆலாகலவிஷத்தைச் சிவபெருமான் திருவமுதுசெய்தருளும்பொருட்டுத் தமது உள்ளங்கையினுள்ளே அடக்கிக்கொண்டு போய்க் கொடுத்தார். அதனால் அவர்பெயர் ஆலாலசுந்தரர் என்றாயிற்று. அவர் சிவபெருமானுக்குப் புஷ்பமாலை கொடுத்துச் சாத்துதலும் விபூதிபாத்திரந்தாங்குதலுமாகிய திருத்தொண்டு பூண்டவர். அவர் சிவபெருமானது ஆஞ்ஞையினாலே திருக்கைலாசமலையினின்று நீங்கித் தக்ஷிணபூமியிலே திருவவதாரஞ்செய்து, ஆன்மாக்களெல்லாம் உய்யும்பொருட்டுத் தமிழ் வேதமாகிய தேவாரத்தை அருளிச்செய்து, இப்போது தேவர்கள் சூழ வெள்ளையானைமேற்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளிவருகின்றார். அவர் எம்மாலும் எவராலும் வணங்கப்படும் பெருந்தகைமையையுடையவர்" என்றுசொல்லியருளினார்.

அதுகேட்ட முனிவர்கள் உபமன்னியுமகாமுனிவரை வணங்கி "சுவாமி, இத்துணைப் பெருஞ்சிறப்பினையுடைய நாயனாரது சரித்திரத்தைக் கேட்கப் பேராசைகொண்டோம், அடியேங்களுக்கு அருளிச்செய்யும்" என்று விண்ணப்பஞ்செய்ய, உபமன்னியுமகாமகாமுனிவர் "முனிவர்களே, சுந்தரமூர்த்திநாயனாருடைய சரித்திரத்தையும், அவர் திருவாரூரிலே வான்மீகநாதர் அடியெடுத்துக் கொடுக்க அருளிச்செய்த திருத்தொண்டத்தொகை என்னுந் திருப்பதிகத்திற் சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும், சர்வான்மாக்களும் உய்யும்பொருட்டு, உங்களுக்குச் சொல்வோம், கேளுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருள்வாராயினார்.

இதுவன்றி மேற்கூறிய

திருக்கைலாசமலையிலே பிரமவிட்டுணு முதலிய ஆன்மாக்களுக்கு நிக்கிரகாநுக்கிரகங்கள் செய்யும்பொருட்டுத் தமது சத்தியாகிய உமாதேவியாரோடும் எழுந்தருளியிருக்கின்ற அகண்டாகாரநித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமானுடைய

அடியார் கூட்டத்துள் ஒருவராகிய ஆலாலசுந்தரர், ஒரு நாள், பத்தர்கள் செய்யும் அருச்சனையை அவர்கள் முத்திபெற்று உய்யும் பொருட்டுக் கொண்டருளுகின்ற அக்கடவுளுக்குத் தரிக்கும்பொருட்டு, புஷ்பங்களைக் கொய்வதற்குத் திருநந்தவனத்துக்குப் போனார். போனபோது, பார்வதிதேவியாருக்குத் தரிக்கும் பொருட்டுக் அந்தத் திருநந்தனவனத்திலே புஷ்பங்கொய்து கொண்டு நின்ற அவருடைய சேடியர்களாகிய அனிந்திதை கமலினி என்னும் பெயர்களையுடைய பெண்களிருவரையுங் கண்டு, அவர் கண்மேல் ஆசை வைத்தார். அவர்களும் ஆலாலசுந்தரரைக் கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள். பின்பு ஒருபிரகாரம் மனதைத் திருப்பி, புஷ்பங்களைக் கொய்துகொண்டு, ஆலாலசுந்தரர் சிவசந்நிதானத்துக்கும், சேடியார்கள் தேவிசந்நிதானத்துக்கும், திரும்பிவிட்டார்கள். அப்பொழுது, சர்வான்மாக்களிடத்திலும் வியாபித்திருந்து அந்த அந்த ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயங்களினாலே செய்கின்ற கர்மங்களை அறிந்து அந்த அந்தக் கர்மங்களுக்கு ஏற்ற பலன்களை ஊட்டி அக்கர்மங்களைத் தொலைப்பிக்கின்ற காருண்ணிய ஸ்வரூபியாகிய கடவுளானவர் ஆலாலசுந்தரரை நோக்கி, "நீ பெண்கள்மேல் இச்சைகொண்டபடியால், தக்ஷிண பூமியிலே மானுடதேகம் எடுத்துப் பிறந்து அந்தப்பெண்களோடு புணர்ந்து இன்பம் அனுபவிப்பாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதைக்கேட்ட ஆலாலசுந்தரர் மனங்கலங்கி, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி, எழுந்து நின்று, அஞ்சலியஸ்தராகி, எம்பெருமானே தேவரீருடைய அருமைத்திருவடிகளைப் பிரிதற்கு ஏதுவாகிய கொடும்பாவத்தைச் செய்தவனாகிய சிறியேன் மயக்கம்பொருந்திய மனிதப்பிறப்பை எடுத்து, செய்ய வேண்டியது இன்னது என்றும் நீக்கவேண்டியது இன்னது என்றும் அறியாது, பிரபஞ்சவாழ்க்கையிலே மயங்கும்போது, தேவரீர் வெளிப்பட்டு வந்து அடியேனைத்தடுத்து ஆட்கொண்டருளவேண்டும்" என்று பிரார்த்திக்க; வேண்டுவார் வேண்டியவைகளை ஈந்தருளுங்கடவுளும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருளினார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தடுத்தாட்கொண்டபுராணம்!

இப்புராணத்துள் சுந்தரமூர்த்தி நாயனார் பூவுலகத்தில் அவதரித்து திருவீதியில் சிறுதேருருட்டி விளையாடும் பருவத்தில் நரசிங்கமுனையரென்னும் ஓரரசரால் அபிமானபுத்திரனாக வளர்த்து விவாகஞ்செய்யுங்காலத்தில் சிவபெருமான் தடுத்தாட்கொண்டதும் பின் இந்நாயனாருக்கு பரவை நாச்சியாரை விவாகம் பண்ணினதும் அடியார்கள் நிமித்தம் தியாகராசப்பெருமான் அடியெடுத்துக்கொடுத்துத் திருத்தொண்டத்தொகை பாடியருளியதும் கூறப்பட்டது.

கங்கையுமதியும்பாம்புங்கடுக்கையுமுடிமேல்வைத்த
அங்கணரோலைகாட்டியாண்டவர்தமக்குநாடு
மங்கையர்வதனசீதமதியிருமருங்குமோடிச்
செங்கயல்குழைகணாடுந்திருமுனைப்பாடிநாடு. (௧)

பெருகியவளத்தான்மிக்கபெருந்திருநாடுதன்னில்
அருமறைச்சைவமோங்கவருளினாலவதரித்த
மருவியதவத்தான்மிக்கவளம்பதிவாய்மைகுன்றாத்
திருமறையவர்கணீடுந்திருநாவலூராமன்றே. (௨)

மாதொருபாகனார்க்குவழிவழியடிமைசெய்யும்
வேதியர்குலத்துட்டோன்றிமேம்படுசடையனார்க்
கேதமில்கற்பின்வாழ்க்கைமனையிசைஞானியார்பாற்
றீதகன்றுலகமுய்யத்திருவவதாரஞ்செய்தார். (௩)

தம்பிரானருளினாலே தவத்தினான்மிக்கார்பெற்று
நம்பியாரூரரென்றேநாமமுஞ்சாற்றிமிக்க
ஐம்படைச்சதங்கைசாத்தியணிமணிச்சுட்டி சாத்திச்
செம்பொனாணரையின்மின்னத்தெருவிற்றேருருட்டுநாளில்()

நரசிங்கமுனையரென்னுநாடுவாழரசர்கண்டு
பரவருங்காதல்கூரப்பயந்தவர்தம்பாற்சென்று
விரவியநண்பினாலேவேண்டினர்பெற்றுத்தங்கள்
அரசிளங்குமரற்கேற்பவன்பினான்மகன்மைகொண்டார். (௫)

பெருமைசாலரசர்காதற்பிள்ளையாய்ப்பின்னுந்தங்கள்
வருமுறைமரபின்வைகிவளர்ந்துமங்கலஞ்செய்கோலத்
தருமறைமுந்நூல்சாத்தியளவிறொல்கலைகளாய்ந்து
திருமலிசிறப்பினோங்கிச்சீர்மணப்பருவஞ்சேர்ந்தார். (௬)

தந்தையார்சடையனார்தந்தனித்திருமகற்குச்சைவ
அந்தணர்குலத்துட்டங்களரும்பெருமரபுக்கேற்ப
வந்ததோர்சிறப்பிற்புத்தூர்ச்சடங்கவிமறையோன்றன்பாற்
செந்திருவனையகன்னிமணத்திறஞ்செப்பிவிட்டார். (௭)

குலமுதலறிவுமிக்ககோத்திரமுறையுந்தேர்ந்தார்
நலமிகுமுதியோர்சொல்லச்சடங்கவிநன்மையேற்று
மலர்தருமுகத்தனாகிமணம்புரிசெயலின்வாய்மை
பலவுடன்பேசியொத்தபண்பினாலன்புநேர்ந்தான். (௮)

மற்றவனிசைந்தவார்த்தைகேட்டவர்வள்ளறன்னைப்
பெற்றவர்தம்பாற்சென்றுசொன்னபின்பெருகுசிந்தை
யுற்றதோர்மகிழ்ச்சியெய்திமணவினையுவந்துசாற்றிக்
கொற்றவர்திருவுக்கேற்பக்குறித்தநாளோலைவிட்டார். (௯)

மங்கலம்பொலியச்செய்தமணவினையோலையேந்தி
யங்கயற்கண்ணினாருமாடவர்பலருமீண்டிக்
கொங்கலர்சோலைமூதூர்குறுகினாரெதிரேவந்து
பங்கயவதனிமாருமைந்தரும்பணிந்துகொண்டார். (௧௦)

மகிழ்ச்சியான்மணமீக்கூறிமங்கலவினைகளெல்லாம்
புகழ்ச்சியாற்பொலிந்துதோன்றப்போற்றியதொழிலராகி
யிகழ்ச்சியொன்றானுமின்றியேந்துபூமாலைப்பந்தர்
நிகழ்ச்சியின்மைந்தரீண்டிநீண்முளைசாத்தினார்கள். (௧௧)

மணவினைக்கமைந்தசெய்கைமாதினைப்பயந்தார்செய்யத்
துணர்மலர்க்கோதைத்தாமச்சுரும்பணைதோளினானைப்
புணர்மணத்திருநாண்முன்னாட்பொருந்தியவிதியினாலே
பணைமுரசியம்பவாழ்த்திப்பைம்பொனாண்காப்புச்சேர்த்தார் ()

மாமறைவிதிவழாமன்மணத்துறைக்கடன்களாற்றித்
தூமறைமூதூர்க்கங்குன்மங்கலந்துவன்றியார்ப்பத்
தேமருதொடையன்மார்பன்றிருமணக்கோலங்காணக்
காமுறுமனத்தான்போலக்கதிரவனுதயஞ்செய்தான். (௧௩)

காலைசெய்வினைகண்முற்றிக்கணிதநூற்புலவர்சொன்ன
வேலைவந்தணையமுன்னர்விதிமணக்கோலங்கொள்வா
னாலசைந்திலங்குமார்பினுணங்கியகேள்விமேலோன்
மாலையுந்தாரும்பொங்கமஞ்சனச்சாலைபுக்கான். (௧௪)

† மகண்மை—மக்கட்டன்மை.

வாசநெய்யூட்டிமிக்கமலர்விரையடுத்ததூநீர்ப்
பாசனத்தமைந்தபாங்கர்பருமணிப்பைம்பொற்றிண்கால்
ஆசனத்தணிநீராட்டியரிசனஞ்சாத்தியபின்பால்
ஈசனுக்கினியான்மேனியெழில்பெறவிளக்கினார்கள். (கரு)

அகில்விரைத்தூபமேய்ந்தவணிகொள்பட்டாடைசாத்தி
முகினுழைமதியம்போலக்கைவலான்முன்கைசூழ்ந்த
துகில்கொடுகுஞ்சியீரம்புலர்த்தித்தன்றூயசெங்கை
யுகிர்நுதிமுறையிற்போக்கியொளிர்நறுஞ்சிகழியார்த்தான். ()

தூநறும்பசுங்கர்ப்பூரச்சுண்ணத்தால்வண்ணப்போதில்
ஆனதண்பனிநீர்கூட்டியமைந்தசந்தனச்சேறட்டி
மான்மதச்சாந்துதோய்ந்தமங்கலக்கலவைசாத்திப்
பான்முறைமுந்நூன்மின்னப்பவித்திரஞ்சிறந்தகையான். (க௭)

தூமலர்ப்பிணையன்மாலைதுணையிணர்க்கண்ணிகோதை
தாமமென்றினையவேறுதகுதியாலமையச்சாத்தி
மாமணிபணிந்ததூயவளரொளியிருள்கால்சீய்க்கும்
நாமநீள்கலன்கள்சாத்திநன்மணக்கோலங்கொண்டான். (கஅ)

மன்னவர்திருவுந்தங்கள்வைதிகத்திருவும்பொங்க
நன்னகர்விழவுகொள்ளநம்பியாரூரர்நாதன்
றன்னடியனைத்தாட்கொண்டுதகுந்திருநீறுசாத்திப்
பொன்னணிமணியார்யோகப்புரவிமேற்கொண்டுபோந்தார். ()

இயம்பலதுவைப்பவெங்குமேத்தொலியெடுப்பமாதர்
நயந்துபல்லாண்டுபோற்றநான்மறையொலியினோங்க
வியந்துபார்விரும்பவந்துவிரவினர்க்கின்பஞ்செய்தே
யுயர்ந்தவாகனயானங்கண்மிசைக்கொண்டாருழையரானார் ()

மங்கலகீதநாதமறையவர்குழாங்களோடு
தொங்கலும்விரையுஞ்சூழ்ந்தமைந்தருந்துவன்றிச்சூதும்
பங்கயமுகையுஞ்சாய்த்துப்பணைத்தெழுந்தணியின்மிக்க
குங்குமமுலையினாரும்பரந்தெழுகொள்கைத்தாகி. (உக)

அருங்கடியெழுந்தபோதினார்த்தவெள்வளைகளாலும்
இருங்குழைமகரத்தாலுமிலங்கொளிமணிகளாலு
நெருங்கியபீலிச்சோலைநீணிறத்தாங்கத்தாலுங்
கருடங்கடல்கிளர்ந்ததென்னக்காட்சியிற்பொலிந்ததன்றே. ()

நெருங்குதூரியங்களெங்கநிரைத்தசாமரைகடோரைப்
பெருங்குடைமிடைந்துசெல்லப்பிறங்குபூங்கொடிகளாட
அருங்கடிமணம்வந்தெய்தவன்றுதொட்டென்றுமன்பில்
வருங்குலமறையோர்புத்தூர்மணம்வந்தபுத்தூராமால். (௨௩)

நிறைகுடந்தூபதீபநெருங்குபாலிகைகளேந்தி
நறைமலராறுசுண்ணநறும்பொரிபலவும்வீசி
யுறைமலிகலவைச்சாந்தினாறுபுனறெளித்துவீதி
மறையவர்மடவார்வள்ளன்மணமெதிர்கொள்ளவந்தார். (௨௪)

கண்களெண்ணிலாதவேண்டுங்காளையைக்காணவென்பார்
பெண்களிலுயர்நோற்றாள்சடங்கவிபேதையென்பார்
மண்களிகூரவந்தமணங்கண்டுவாழ்ந்தோமென்பார்
பண்களினிறைந்தகீதம்பாடுவாராடுவார்கள். (௨௫)

ஆண்டகையருளினோக்கின்வெள்ளத்துளலைந்தோமென்பார்
தாண்டியபரியுநம்பாற்றகுதியினடைந்ததென்பார்
பூண்டபங்கிவனேகாணும்புண்ணியமூர்த்தியென்பார்
ஈண்டியமடவார்கூட்டமின்னனவிசைப்பச்சென்றார். (௨௬)

வருமணக்கோலத்தெங்கள்வள்ளலார்தெள்ளும்வாசத்
திருமணப்பந்தர்முன்புசென்றுவெண்சங்கமெங்கும்
பெருமழைக்குலத்தினார்ப்பப்பரிமிசையிழிந்துபேணும்
ஒருமணத்திறத்தினங்குநிகழ்ந்ததுமொழிவேனுய்ந்தேன். ()

வேறு.

ஆலுமறைசூழ்கயிலையின்கணருள்செய்த
சாலுமொழிபால்வழிதடுத்தடிமைகொள்வான்
மேலுறவெழுந்துமிகுகீழுறவகழ்ந்து
மாலுமயனுக்குமரியாரொருவர்வந்தார். (௨௮)

கண்ணிடைகரந்தகதிர்வெண்படமெனச்சூழ்
பண்ணியநுதற்புனிதநீறுபொலிவெய்தத்
தண்மதிமுதிர்ந்துகதிர்சாய்வதெனமீதே
வெண்ணரைமுடித்ததுவிழுந்திடைசழங்க. (௨௯)

காதிலணிகண்டிகைவடிந்தகுழைதாழச்
சோதிமணிமார்பின்மிசைநூலினொடுதோளின்
மீதுபுனையுத்தரியவெண்டுகினுடங்க
ஆதபமறைக்குடையணிக்காம்விளங்க. (௩௦)

டபபழமைகூறக்

கொண்டதொர்சழுக்கலுடையார்ந்தழகுகொள்ள
வெண்டுகிலுடன்குசைமுடிந்துவிடுவேணுத்
தண்டொருகைகொண்டுகழறள்ளுநடைகொள்ள (௩௧)

மொய்த்துவளர்பேரழகுமூத்தவடிவேயோ
அத்தகையமூப்பெனுமதன்படிவமேயோ
மெய்த்தநெறிவைதிகம்விளைத்தமுதலேயோ
இத்தகையவேடமெனவையமுறவெய்தி. (௩௨)

வந்துதிருமாமறைமணத்தொழிறொடங்கும்
பந்தரிடைநம்பியெதிர்பன்னுசபைமுன்னின்
றிந்தமொழிகேண்மினெதிர்யாவர்களுமென்றான்
முந்தைமறையாயிரமொழிந்ததிருவாயான். (௩௩)

என்றுரைசெயந்தணனையெண்ணின்மறையோரு
மன்றல்வினைமங்கலமடங்கலரியானு
நன்றுமதுநல்வாவுநங்கடவமென்றே
நின்றதிவனீர்மொழிமினீர்மொழிவதென்றார். (௩௪)

பிஞ்ஞகனுநாவலர்பெருந்தகையைநோக்கி
என்னிடையுநின்னிடையுநின்றவிசைவால்யான்
முன்னுடையதோர்பருவழக்கினைமுடித்தே
நின்னுடையவேள்வியினைநீமுயறியென்றான். (௩௫)

நெற்றிவிழியான்மொழியநின்றநிகரில்லா
லுற்றதொர்வழக்கெனிடைநீயுடையதுண்டேன்
மற்றதுமுடித்தலதுயான்வதுவைசெய்யேன்
முற்றவிதுசொல்லுகெனவெல்லைமுடிவில்லான். (௩௬)

ஆவதிதுகேண்மின்மறையோரென்னடியானிந்
நாவலனகரூரனிதுநான்மொழிவதென்றான்
றேவரையுமாலயன்முதற்றிருவின்மிக்கோர்
யாவரையும்வேறடிமையாவுடையவெம்மான். (௩௭)

வேறு.

என்றானிறையோனிதுகேட்டவரெம்மருங்கு
நின்றாரிருந்தாரிவனென்னினைந்தான்கொலென்று
சென்றார்வெகுண்டார்சிரித்தார்திருநாவலூர
னன்றான்மறையோன்மொழியென்றெதிர்நோக்கிநக்கான்.

நக்கான்முகநோக்கிநடுங்கி நடங்கியார்க்கு
மிக்கான்மிசையுத்தரியத்துகிறாங்கிமேற்சென்
றக்கால முன்றந்தைதன்றந்தையாளோலையீதால்
இக்காரியத்தைநீயின்றுசிரித்ததென்னேடவென்றான். (௩௯)

வேறு

மாசிலாமரபில்வந்தவள்ளல்வேதியனைநோக்கி
நேசமுன்கிடந்தசிந்தைநெகிழ்ச்சியாற்சிரிப்புநீங்கி
யாசிலந்தணர்கள்வேறோரந்தணர்க்கடிமையாதல்
பேசவின்றுன்னைக்கேட்டோம்பித்தனோமறையோனென்றார்.

பித்தனுமாகப்பின்னும்பேயனுமாகநீயின்
றெத்தனைதீங்குசொன்னாயாதுமற்றவற்றானாணேன்
அத்தனைக்கென்னையென்றுமறிந்திலையாகினின்று
வித்தகம்பேசவேண்டாபணிசெயவேண்டுமென்றார். (௪௧)

கண்டதோர்வடிவாலுள்ளங்காதல்செய்துருகாநிற்குங்
கொண்டதோர்பித்தவார்த்தைகோபமுமுடனேயாக்கு
முண்டொராளோலையென்னுமதனுண்மையறிவேனென்று
தொண்டனாரோலைகாட்டுகென்றனர்துணைவனாரை. (௪௨)

ஓலைகாட்டென்றுநம்பியுரைக்கநீயோலைகாணற்
பாலையோவவைமுன்காட்டப்பணிசெயற்பாலையென்ற
வேலையினாவலூரர்வெகுண்டுமேல்விரைந்துசென்று
மாலயன்றொடாததானைவலிந்துபின்றொடரலுற்றார். (௪௩)

ஆவணம்பறிக்கச்சென்றவளவினிலந்தணாளன்
காவணத்திடையேயோடக்கடிதுபின்றொடர்ந்துநம்பி
பூவணத்தவரையுற்றாரவராலாற்புரங்கள்செற்ற
ஏவணச்சிலையினாரையார்தொடர்ந்தெட்டவல்லார். (௪௪)

மறைநகளாயினமுன்போற்றிமலர்ப்பதம்பற்றிநின்ற
இறைவனைத்தொடர்ந்துபற்றியெழுதுமாளோலைவாங்கி
அறைகழலண்ணலாளாயந்தணர்செய்தலென்ன
முறையெனக்கீறியிட்டான்முறையிட்டான்முடிவிலாதான். ()

அருமறைமுறையிட்டன்னமறிவதற்கரியான்பற்றி
யொருமுறைமுறையோவென்னவுழைநின்றார்விலக்கியிந்தப்
பெருமுறையுலகிலில்லாநெறிகொண்டுபிணங்குகின்ற
திருமறைமுனிவரோநீரெங்குளீர்செப்புமென்றார் (௪௯)

என்றலுநின்றவையரிங்குளனிருப்புஞ்செய்த
தன்றிருந்தவெண்ணெய்நல்லூரதுநிற்கவறத்தாறின்றி
வன்றிறல்செய்தென்கையிலாவணம்வலியவாங்கி
நின்றவன்கிழித்துத்தானேநிரப்பினானடிமையென்றான். (சஎ)

குழைமறைகாதினானைக்கோதிலாரூரர்நோக்கிப்
பழையமன்றாடிபோலுமிவனென்றுபண்பின்மிக்க
விழைவுறுமனமும்பொங்கவெண்ணெய்நல்லூரேயுன்
பிழைநெறிவழக்கையாங்கேபேசநீபோதாவென்றார். (சஅ)

வேதியனதனைக்கேட்டுவெண்ணெய்நல்லூரிலேநீ
போதினுநன்றுமற்றைப்புனிதநான்மறையோர்முன்னர்
ஆதியின்மூலவோலைகாட்டிநீயடிமையாதல்
சாதிப்பனென்றுமுன்னேதண்டுமுன்றாங்கிச்சென்றான். (சகூ)

செல்லுநான்மறையோன்றன்பின்றிரிமுகக்காந்தஞ்சேர்ந்த
வல்லிரும்பணையுமாபோல்வள்ளலுங்கடிதுசென்றான்
எல்லையில்சுற்றத்தாருமிதுவென்னுமென்றுசெல்ல
நல்லவந்தணர்கள்வாழும்வெண்ணெய்நல்லூரைநண்ணி. (ருO)

வேதபாரகரின்மிக்கார்விளங்குபேரவைமுன்சென்று
நாதனுமறையோன்சொல்லுநாவலூராரூரன்றான்
காதலென்னடியானென்னக்காட்டியவோலைகீறி
மூதறிவீர்முன்போந்தானிதுமற்றென்முறைப்பாடென்றான்.

அந்தணரவையின்மிக்கார்மறையவரடிமையாதல்
இந்தமாநிலத்திலில்லையென்சொன்னாயவென்றார்
வந்தவாறிசைவேபன்றேவழக்கிவன்கிழித்தவோலை
தந்தைதன்றந்தைநேர்ந்ததென்றனன்றனியாய்நின்றான். (ருஉ)

இசைவினாலெழுதுமோலைகாட்டினாகிலின்று
விசையினால்வலியவாங்கிக்கிழிப்பதுவெற்றியாமோ
தசையெலாமொடுங்கமூத்தான்வழக்கினைச்சாரச்சொன்னான்
அசைவிலாரூரனெண்ணமென்னென்றாரவையின்மிக்கார். (ருங)

அனைத்துநூலுணர்ந்தீராதிசைவனென்றறிவீரென்னைத்
தனக்குவேறடிமையென்றிவ்வந்தணன்சாதித்தானேல்
மனத்தினாலுணர்தற்கெட்டாமாயையென்சொல்லுகேன்யான்
எனக்கிதுதெளியவொண்ணாதென்றனனெண்ணமிக்கான். ()

அவ்வுரையவையின்முன்புநம்பியாரூரர்சொல்லச்
செவ்வியமறையோர்நின்றதிருமறைமுனியைநோக்கி
இவ்வுலகின்கணீரின்றிவரைநும்மடிமையென்ற
வெவ்வுரையெம்முன்பேற்றவேண்டுமென்றுரைத்துமீண்டும். ()

ஆட்சியிலாவணத்திலன்றிமற்றயலார்தங்கள்
காட்சியின்மூன்றிலொன்றுகாட்டுவாயென்னமுன்னே
மூட்சியிற்கிழித்தவோலைபடியோலைமூலவோலை
மாட்சியிற்காட்டவைத்தேனென்றனன்மாயைவல்லான். (ருசு)

வல்லையேற்காட்டிங்கென்னமறையவன்வலிசெய்யாமற்
சொல்லநீர்வல்லீராகிற்காட்டுவேனென்றுசொல்லச்
செல்வநான்மறையோர்நாங்களீங்குறவொட்டோமென்றார்
அல்லறீர்த்தாளநின்றாராவணங்கொண்டுசென்றார். (ருஎ)

இருண்மறைமிடற்றோன்கையிலோலைகண்டவையோரேவ
அருள்பெறுகரணத்தானுமாவணந்தொழுதுவாங்கிச்
சுருள்பெறுமடியைநீக்கிவிரித்துத்தன்றொன்மைநோக்கித்
தெருள்பெறுசபையோர்கேட்பவாசகஞ்செப்புகின்றான். ()

அருமறைநாவலாதிசைவனாரூரன்செய்கை
பெருமுனிவெண்ணெய்நல்லூர்ப்பித்தனுக்கியானுமென்பால்
வருமுறைமரபுளோரும்வழித்தொண்டுசெய்தற்கோலை
இருமையாலெழுதிநேர்ந்தேனிதற்கிவையென்னெழுத்து. ()

வாசகங்கேட்டபின்னர்மற்றுமேலெழுத்திட்டார்கள்
ஆசிலாவெழுத்தைநோக்கியவையொக்குமென்றபின்னர்
மாசிலாமறையோரையாமற்றுங்கள் † பேரனார்தந்
தேசுடையெழுத்தேயாகிற்றெளியப்பார்த்தறிதியென்றார். ()

அந்தணர்கூறவின்னுமாளோலையிவனைக்காண்பான்
றந்தைதன்றந்தைதான்வேறெழுதுகைச்சாத்துண்டாகில்
இந்தவாவணத்தினோடுமெழுத்துநேரொப்புநோக்கி
வந்ததுமொழிமினென்றான்வலியவாட்கொள்ளும்வள்ளல். ()

திரண்டமாமறையோர்தாமுந்திருநாவலூரர்கோமுன்
மருண்டதுதெளியமற்றமறையவனெழுத்தாலோலை
யரண்டருகாப்பில்வேறொன்றழைத்துடனொப்புநோக்கி
இரண்டுமொத்திருந்ததென்னேயினிச்செயலில்லையென்றார். ()

---

† பேரன்-பாட்டன்.

நான்மறைமுனிவனார்க்குநம்பியாரூரர்தோற்றீர்
பான்மையினைவல்செய்தல்கடனென்றுபண்பின்மிக்க
மேன்மையோர்விளம்பநம்பிவிதிமுறையிதுவேயாகில்
யானிதற்கிசையேனென்னவிசையுமோவென்றுநின்றார். (௬௩)

திருமிகுமறையோர்நின்றசெழுமறைமுனியைநோக்கி
அருமுனிநீர்முன்காட்டுமாவணமதனிலெங்கள்
பெருமைசேர்பதியேயாகப்பேசியதுமக்கிவ்வூரில்
வருமுறைமனையுநீடுவாழ்க்கையுங்காட்டுகென்றார். (௬௪)

பொருவரும்வழக்கால்வென்றபுண்ணியமுனிவரென்னை
யொருவருமறியீராகிற்போதுமென்றுரைத்துச்சூழ்ந்த
பெருமறையவர்குழாமுநம்பியும்பின்புசெல்லத்
† திருவருட்டுறையேபுக்கார்கண்டிலர்திகைத்துநின்றார். (௬௫)

எம்பிரான்கோயினண்ணவிலங்குநூன்மார்பனெங்க
ணம்பர்தங்கோயில்புக்கதென்கொலோவென்றுநம்பி
தம்பெருவிருப்பினோடுதனிதொடர்ந்தழைப்பமாதோ
டும்பரின்விடைமேற்றோன்றியவர்தமக்குணர்த்தலுற்றார். ()

முன்புநீநமக்குத்தொண்டன்முன்னியவேட்கைகூரப்
பின்புநம்மேவலாலேபிறந்தனைமண்ணின்மீது
துன்புறுவாழ்க்கைநின்னைத்தொடர்வறத்தொடர்ந்துவந்து
நன்புலமறையோர்முன்னர்நாந்தடுத்தாண்டோமென்றார். ()

என்றெழுமோசைகேளாவீன்றவான்கனைப்புக்கேட்ட
கன்றுபோற்கதறிநம்பிகரசரணாதியங்கந்
துன்றியபுளகமாகத்தொழுதுகைதலைமேலாக
மன்றுளீர்செயலோவந்துவலியவாட்கொண்டதென்றார். (௬௮)

எண்ணியவோசையைந்தும்விசும்பிடைநிறையவெங்கும்
விண்ணவர்பொழிபூமாரிமேதினிநிறைந்துவிம்ம
மண்ணவர்மகிழ்ச்சிபொங்கமறைகளுமுழங்கியார்ப்ப
அண்ணலையோலைகாட்டியாண்டவரருளிச்செய்வார். (௬௯)

மற்றுநீவன்மைபேசிவன்றொண்டனென்னுநாமம்
பெற்றனைநமக்குமன்பிற்பெருகியசிறப்பின்மிக்க
அர்ச்சனைபாட்டேயாகுமாதலான்மண்மேனம்மைச்
சொற்றமிழ்பாடுகென்றார்தூய்மறைபாடும்வாயார். (௭0)

† திருவருட்டுறையென்பது-அந்தத்தலத்திலிருக்கும் ஆலயத்தின்பெயர்.

தேடியவயனுமாலுந்தெளிவுறாவைந்தெழுத்தும்
பாடியபொருளாயுள்ளான்பாடுவாய்நம்மையென்ன
நாடியமனத்தராகிநம்பியாரூரர்மன்றுள்
ஆடியசெய்யதாளையஞ்சலிகூப்பிநின்று. (எக)

வேதியனாகியென்னைவழக்கினால்வெல்லவந்த
ஊதியமறியாதேனுக்குணர்வுதந்துய்யக்கொண்ட
கோதிலாவமுதேயின்றுன்குணப்பெருங்கடலைநாயேன்
யாதினையறிந்தென்சொல்லிப்பாடுகேனெனமொழிந்தார். எ௨

அன்பனையருளினோக்கியங்கணரருளிச்செய்வார்
முன்பெனைப்பித்தனென்றேமொழிந்தனையாதலாலே
என்பெயர்பித்தனென்றேபாடுவாயென்றார்நின்ற
வன்பெருந்தொண்டராண்டவள்ளலைப்பாடலுற்றார். (எ௩)

வேறு.

கொத்தார்மலர்க்குழலாளொருகூறாயடியவர்பால்
மெய்த்தாயினுமினியானையவ்வியனாவலர்பெருமான்
பித்தாபிறைசூடியெனப்பெரிதாந்திருப்பதிகம்
இந்தாரணிமுதலாவுலகெல்லாமுய்யவெடுத்தார். (எச)

முறையால்வருமதுரத்துடன்மொழியிந்தளமுதலிற்
குறையாநிலைமும்மைப்படிகூடுங்கிழமையினா
னிறைபாணியினிசைகோள்புணர்நீடும்புகல்வகையால்
இறையான்மகிழிசைபாடினனெல்லாநிகரில்லான். (எரு)

---

திருச்சிற்றம்பலம்.

சொல்லார்தமிழிசைபாடியதொண்டன்றனையின்னும்
பல்லாறுலகினினம்புகழ்பாடென்றுறுபரிசி
னல்லார்வெண்ணெய்நல்லூரருட்டுறைமேவியநம்பன்
எல்லாவுலகுய்யப்புரமெய்தானருள்செய்தான். (எசு)

அயலோர்தவமுயல்வார்பிறரன்றேமணமழியுஞ்
செயலானிகழ்புத்தூர்வருசிவவேதியன்மகளும்
உயர்நாவலர்தனிநாதனையொழியாதுணர்வழியிற்
பெயராதுயர்சிவலோகமுமெளிதாம்வகைபெற்றாள். (எஎ

வேறு.

நாவலர்கோனாரூரன்றனைவெண்ணெய்நல்லூரின்
மேவுமருட்டுறையமர்ந்தவேதியராட்கொண்டதற்பின்
பூவலருந்தடம்பொய்கைத்திருநாவலூர்ப்புகுந்து
தேவர்பிரான்றனைப்பணிந்துதிருப்பதிகம்பாடினார். (எஅ)

திருச்சிற்றம்பலம்.

சிவனுறையுந்திருத்துறையூர்ச்சென்றணைந்துதீவினையால்
அவநெறியேசெல்லாமேதடுத்தாண்டாயடியேற்குத்
தவநெறிதந்தருளென்றுதம்பிரான்முன்னின்று
பவநெறிக்குவிலக்காகுந்திருப்பதிகம்பாடினார். (எகூ)

---

திருச்சிற்றம்பலம்.

புலனொன்றும்படிதவத்திற்புரிந்தநெறிகொடுத்தருள
அலர்கொண்டநறுஞ்சோலைத்திருத்துறையூரமர்ந்தருளு
நிலவுந்தண்புனலுமொளிர்நீள்சடையோன்றிருப்பாத
மலர்கொண்டுபோற்றிசைத்துவந்தித்தார்வன்றொண்டர். (அ0

திருத்துறையூர்தனைப்பணிந்துசிவபெருமானமர்ந்தருளும்
பொருத்தமாமிடம்பலவும்புக்கிறைஞ்சிப்பொற்புலியூர்
நிருத்தனார்திருக்கூத்துத்தொழுவதற்குநினைவுற்று
வருத்தமிகுகாதலினால்வழிக்கொள்வான்மனங்கொண்டார் ()

மலைவளர்சந்தகில்பீலிமலர்பரப்பிமணிகொழிக்கும்
அலைதருதண்புனற்பெண்ணையாறுகடந்தேறியபி
னிலவுபசும்புரவிநெடுந்தேரிரவிமேல்கடலிற்
செலவணையும்பொழுதணையத்திருவதிகைப்புறத்தணைந்தார்.

உடையவரசுலகேத்துமுழவாரப்படையாளி
விடையவர்க்குக்கைத்தொண்டுவிரும்புபெரும்பதியைமிதித்
தடையுமதற்கஞ்சுவனென்றந்நகரிற்புகுதாதே
மடைவளர்தண்புறம்பணையிற்சித்தவடமடம்புகுந்தார். (அ௩)

வரிவளர்பூஞ்சோலைசூழ்மடத்தின்கண்வன்றொண்டர்
விரிதிரைநீர்க்கெடிலவடவீரட்டானத்திறைதாள்
புரிவுடையமனத்தினராய்ப்புடையெங்குமிடைகின்ற
பரிசனமுந்துயில்கொள்ளப்பள்ளியமர்ந்தருளினார். (அ௪)

அது கண்டுவீரட்டத்தமர்ந்தருளுமங்கணரு
முதுவடிவின்மறையவராய்முன்னொருவரறியாமே
பொதுமடத்தினுட்புகுந்துபூந்தாரான்றிருமுடிமேற்
பதமலர்த்தாள்வைத்துப்பள்ளிகொள்வார்போற்பயின்றார்.

அந்நிலையாரூரனுணர்ந்தருமறையோயுன்னடியென்
சென்னியில்வைத்தனையென்னத்திசையறியாவகைசெய்த
தென்னுடையமூப்புக்காணென்றருளவதற்கிசைந்து
தன்முடியப்பால்வைத்தேதுயிலமர்ந்தான்றமிழ்நாதன் (௮௫)

அங்குமவன்றிருமுடிமேன்மீட்டுமவர்தாணீட்டச்
செங்கயல்பாய்தடம்புடைசூழ்திருநாவலூராளி
யிங்கென்னைப்பலகாலுமிதித்தனையாரென்னக்
கங்கைசடைக்கரந்தபிரானறிந்திலையோவெனக்கரந்தான். ( )

செம்மாந்திங்கியானறியாதென்செய்தேனெனத்தெளிந்து
தம்மானையறியாதசாதியாருளரோயென்
றம்மானைத்திருவதிகைவீரட்டானத்தமர்ந்த
கைம்மாவினுரியானைக்கழல்பணிந்துபாடினார். (௮௮)

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரளுமணித்திரளும்பொருகரிவெண்கோடுகளு
மின்றிரண்டவெண்முத்தும்விரைமலருநறுங்குறடும்
வன்றிரைகளாற்கொணர்ந்துதிருவதிகைவழிபடலாற்
றென்றிசையிற்கங்கையெனுந்திருக்கெடிலந்திளைத்தாடி.. ௮௯.

அங்கணரையடிபோற்றியங்ககன்றுமற்றந்தப்
பொங்குநதித்தென்கரைபோய்ப்போர்வலித்தோண்மாவலி
மங்கலவேள்வியிற்பண்டுவாமனனாய்மண்ணிரந்த [தன்
செங்கணவன்வழிபட்ட திருமாணிகுழியடைந்தார். (௯0)

பரம்பொருளைப்பணிந்துதாள்பரவிப்போய்ப்பணிந்தவர்க்கு,
வரந்தருவான்றினைநகரைவணங்கினர்வண்டமிழ்பாடி
நரம்புடையாழொலிமுழவினாதவொலிவேதவொலி
யரம்பையர்தங்கீதவொலியறாத்தில்லைமருங்கணைந்தார். (௯௧)

(வேறு. இது முதல் (௰) செய்யுள் சிதம்பரத்தலவருணனை)

தேமலங்கலணிமாமணிமார்பிற்செம்மலங்கயல்கள் செங்கமலத்
தண், பூமலங்கவெதிர்பாய்வனமாடேபுள்ளலம்புதிரைவெள்ளை
வாவித், தாமலங்குகடம்பணைசூழ்ந்தன்மருங்குதொழுவார்கட
மும்மை, மாமலங்களறவீடருடில்லைமல்லலம்பதியினெல்லைவணங்கி.

நாகசூதவகுளஞ்சாளஞ்சூழ்நாளிகேரமிலவங்கநாரந்தம், [ங்கி
பூகஞாழல்குளிர்வாழைமாதுளங்கம்பொதுளும்வஞ்சிபலவெங்குநெரு
மேகசாலமலிசோலைகளாகிமீதுகோகிலமிடைந்துமிழற்றப்,
போகபூமியினுமிக்குவிளங்கும்பூம்புறம்பணைகடந்துபுகுந்தார். கூங

வன்னிகொன்றைவழைசண்பகமாரமலர்ப்பலாசொடுசெருந்தி
மந்தாரங், கன்னிகாரங்குரவங்கமழ்புன்னைகற்பபாடலங்கூவிளமோ
ங்கித், துன்னுசாதிமருமாலதிமௌவறுதைந்தநந்திகாவீரமிடைந்த,
பன்மலர்ப்புனிதநந்தவனங்கள் பணிந்துசென்றனன் மணங்கமழ்தா
ரான், (கூச)

இடமருங்குதனிநாயகிகாணவேழ்பெரும்புவனமுய்யவெடுத்து
நடநவின்றருள் சிலம்பொலிபோற்று நான்மறைப்பதியைநாளும்
வணங்கக், கடல்வலங்கொள்வதுபோற் புடைசூழுங்காட்சிமேவி
மிகுசேட்செலவோங்குந், தடமருங்குவளர்மஞ்சிவரிஞ்சித்தண்கிடங்
கையெதிர்கண்டுமகிழ்ந்தார். (கூரு)

மன்றுளாடுமதுவின்னசைபாலேமறைச் சுரும்பறைபுறத்தின்
மருங்கே, குன்றுபோலுமணிமாமதில்சூழுங்குண்டகழ்க்கமலவண்
டலர்கைதை' துன்றுநீறுபுனைமேனியவாகித்தூயநீறுபுனைதொண்
டர்களென்னச், சென்றுசென்றுமுரல்கின்றனகண்டு சிந்தையன்
பொடுதிளைத்தெதிர்சென்றார், (கூசு)

பார்விளங்கவளர்நான்மறைநாதம்பயின்றபண்புமிகவெண்கொ
டியாடுஞ், சீர்விளங்குமணி நாவொலியாலுந்திசைகணான்கெதிர்புற
ப்படலாலுந், தார்விளங்குவரைமார்பினயன்போற்சதுர்முகங்களெ
னவாயினதில்லை, ஊர்விளங்குதிருவாயில்கணான்கினுத்தரத்திசை
யின்வாயின்முனெய்தி. (கூஎ)

அன்பின்வந்தெதிர்கொண்ட சீரடியாரவர்களோ நம்பியாரூரர்
தாமோ, முன்பிறைஞ்சினரியாவரொன்றறியாமுறைமையாலெதிர்
வணங்கிமகிழ்ந்து, பின்புகும்பிடும்விருப்பினிறைந்துபெருகுநாவ
னகரார்பெருமானும், பொன்பிறங்குமணிமாளிகைநீடும்பொருவி
றந்ததிருவீதிபுகுந்தார். (கூஅ)

அங்கண்மாமறை முழங்குமருங்கேபாடரம்பையராங்குமுழங்
கு; மங்குல்வானின்மிசையைந்துமுழங்கும்வாசமாலைகளின்வண்டு
முழங்கும், பொங்குமன்பருவிகண்பொழிதொண்டர்போற்றிசைக்
குமொலியெங்குமுழங்குந், திங்கடங்குசடைகங்கைமுழங்குந்தே
வதேவர்புரியுந்திருவீதி. (கூகூ)

போக நீடுநிதி மன்னவன் மன்னும் புரங்களொப்பின வரம்பில வோங்கி, மாகமுன்பருகுகின்றனபோலுமாளிகைக்குலமிடைந்த பதாகை, யோகசிந்தைமறையோர்கள்வளர்க்குமோமதூமமுயர்வானிலடுப்ப, மேகபந்திகளின்மீதிடையெங்குமின்னுடங்குவனவென்னவிளங்கும். (௧௦௦)

ஆடுதோகைபுடை நாசிகடோறுமரணிதந்தசுடராகுதிதோறு மாடுதாமமணிவாயில்கடோறுமங்கலக்கலசம் வேதிகைதோறுஞ், சேடுகொண்ட வொளிதேர் நிரைதோறுஞ் செந்நெலன்னமலை சாலைகடோறு, நீடுதண்புனல்கள்பந்தர்கடோறுநிறைந்ததேவர்கணநீளிடைதோறும். (௧௦௧)

எண்ணில்பேருலகனைத் திலுமுள்ளவெல்லையில்லழகுசொல்லியவெல்லா, மண்ணிலிப்பதியில்வந்தனவென்னமங்கலம்பொலிவளத்தனவாகிப், புண்ணியப்புனிதவன்பர்கண்முன்புபுகழ்ந்துபாடல்புரிபொற்பின்விளங்கும், அண்ணலாடுதிருவம்பலஞ்சூழ்ந்தவம்பொன்வீதியினைநம்பிவணங்கி. (௧௦௨)

மாலயன்சதமகன் பெருந்தேவர்மற்றுமுள்ளவர்கண்முற்றுநெருங்கிச், சீலமாமுனிவர்சென்றுமுன்றுன்னித்திருப்பிரம்பினடிகொண்டு திளைத்துக், காலநேர்படுதல்பார்த்தயனிற்பக்காதலன்பர்கணநாதர்புகும்பொற், கோலநீடுதிருவாயிலிறைஞ்சிக்குவித்தசெங்கைதலைமேற்கொடுபுக்கார். (௧௦௩)

வேறு.

பெருமகிழ்சிறந்தசெம்பொன் மாளிகைமின் பிறங்குபேரம்பல மேரு, வருமுறைவலங்கொண்டிறைஞ்சியபின்னர்வணங்கியமகிழ்வொடும்புகுந்தார், அருமறைமுதலினடுவினிற்கடையிலன்பர்தஞ் சிந்தையிலலர்ந்த, திருவளரொளிசூழ்திருச்சிற்றம்பலமுன்றிருவணுக்கன்றிருவாயில். (௧௦௪)

வையகம்பொலியமறைச்சிலம்பார்ப்பமன்றுளேமாலயன்றேட ஐயர்தாம்வெளியேயாடுகின்றாரையஞ்சலிமலர்த்திமுன்குவித்த, கைகளோதிளைத்தகண்களோவந்தக்கரணமோகலந்தவன்புந்தச், செய்தவம்பெரியோன்சென்று தாழ்ந்தெழுந்தான்றிருக்களிற்றுப் படிமருங்கு. (௧௦௫)

ஐந்துபேரறிவுங் கண்களேகொள்ளவளப் பருங்கரணங்கணான்குஞ், சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்துசாத்துவிதமேயாக, இந்துவாழ்சடையானாடுமானந்தவெல்லையிறனிப்பெருங்கூத்தின், வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். (௧௦௬)

தெண்ணிலா மலர்ந்தவேணியாயுன்றன் றிருநடங்கும்பிடப்பெ
ற்று, மண்ணிலேவந்தபிறவியேயெனக்குவாலிதாமின்பமாமென்று,
கண்ணிலானந்தவருவி நீர்சொரியக்கைம்மலருச்சி மேற்குவித்துப்,
பண்ணினுணீடியறிவரும்பதிகம்பாடினார்பாவினார்பணிந்தார். (௧0௭)

தடுத்துமுன்னாண்டதொண்டனார் முன்புதனிப் பெருந்தாண்
டவம்புரிய, எடுத்தசேவடியாரருளினாற்றரளமெறிபுனன்மறிதிரைப்
பொன்னி, மடுத்தநீள்வண்ணப்பண்ணையாரூரில் வருகநம்பாலெ
னவானில், அடுத்தபோதினில்வந்தெழுந்ததோர்நாதங்கேட்டலுமம
துவுணர்ந்தெழுந்தார். (௧0௮)

ஆடுகின்றவர் பேரருளினாலிகழ்ந்தவப்பணிசென்னிமேற்கொ
ண்டு, சூடுதங்கரங்களஞ்சலிகொண்டு தொழுந்தொறும் புறவிடை
கொண்டு, மாடுபேரொளியின்வளரும்பலத்தைவலங்கொண்டுவ
ணங்கினர்போந்து, நீடுவான்பணியவுயர்ந்தபொன்வரைபோனிலை
யெழுகோபுரங்கடந்து. (௧0௯)

நின்றுகோபுரத்தைநிலமுறப்பணிந்து நெடுந்திருவீதியைவண
ங்கி, மன்றலார்செல்வ மறுகினூடேகி மன்னியதிருப்பதியதனிற்,
றென்றிசைவாயில் கடந்துமுன்போந்து சேட்படுதிருவெல்லையிறை
ஞ்சிக், கொன்றைவார்சடையானருளையேநினைவார்கொள்ளிடத்திரு
நதிகடந்தார். (௧௧0)

வேறு.

புறந்தருவார்போற்றிசைப்பப்புரிமுந்நூலணிமார்பர்
அறம்பயந்தாடிருமுலைப்பாலமுதுண்டுவளர்ந்தவர்தாம்
பிறந்தருளும்பெரும்பேறுபெற்றதெனமுற்றுலகிற்
சிறந்தபுகழ்க்கழுமலமாந்திருப்பதியைச்சென்றணைந்தார். ( )

பிள்ளையார் திருவவதாரஞ்செய்தபெரும்புகலி
யுள்ளுநான்மிதியேனென் றாரெல்லைப்புறம்வணங்கி
வள்ளலார்வலமாகவரும்பொழுதுமங்கையிடங்
கொள்ளுமால்விடையானுமெதிர்காட்சிகொடுத்தருள. (௧௧௨)

மண்டியபோன்பினால்வன்றொண்டர்நின்றிறைஞ்சித்
தெண்டிரைவேலையின்மிதந்ததிருத்தோணிபுரத்தாரைக்
கண்டுகொண்டேன்கயிலையினில்வீற்றிருந்தபடியென்று
பண்டருமின்னிசைபயின்றதிருப்பதிகம்பாடினார். (௧௧௩)

இருக்கோலமிடும்பெருமானெதிர்நின்றுமெழுந்தருள
வெருக்கோளுற்றதுநீங்கியாரூர்மேற்செலவிரும்பிப்
பெருக்கோதஞ்சூழ்புறவப்பெரும்பதியைவணங்கிப்போய்த்
திருக்கோலக்காவணங்கிச்செந்தமிழ்மாலைகள்பாடி. (கக௪)

தேனார்க்குமலர்ச்சோலைத்திருப்புன்கூர்நம்பர்பால்
ஆனாப்பேரன்புமிகவடிபணிந்துதமிழ்பாடி
மானார்க்குங்கரதலத்தார்மகிழ்ந்தவிடம்பலவணங்கிக்
கானார்க்குமலர்த்தடஞ்சூழ்காவிரியின்கரையணைந்தார். (கக௫)

வம்புலாமலாலையமணிகொழித்துவந்திழியும்
பைம்பொன்வார்கரைப்பொன்னிப்பயினீர்த்தம்படிந்தாடித்
தம்பிரான்மயிலாடுதுறைவணங்கித்தாவில்சீ
ரம்பர்மாகாளத்தினமர்ந்தபிரானடிபணிந்தார். (கக௬)

மின்னார்செஞ்சடையண்ணல்விரும்புதிருப்புகலூரை
முன்னாகப்பணிந்தேத்திமுதல்வன்றனருணினைந்து
பொன்னாருமுத்தரியப்புரிமுந்நூலணிமார்பர்
தென்னாவலூராளிதிருவாரூர்சென்றணைந்தார். (கக௭)

தேராருநெடுவீதித்திருவாரூர்வாழ்வாருக்
காராதகாதலினம்மாரூரனுமழைக்க
வாராநின்றானவனைமகிழ்ந்தெதிர்கொள்வீரென்று
நீராருஞ்சடைமுடிமேனிலவணிந்தாரருள்செய்தார். (கக௮)

தம்பிரானருள்செய்யத்திருத்தொண்டரதுசாற்றி
யெம்பிரானாருடனிருந்த பரிசித்தவாறு
னம்பிரானாராவாரவரன்றேயெனுநலத்தால்
உம்பர்நாடிருந்ததெனவெதிர்கொள்ளவுடனெழுந்தார். (கக௯)

மாளிகைகண்மண்டபங்கண்மருங்குபெருங்கொடிநெருங்கத்
தாளினெடுந்தோரணமுந்தழைக்கமுகுங்குழைத்தொடையு
நீளிலையகதலிகளுநிறைந்தபசும்பொற்றசும்பும்
ஒளிநெடுமணிவிளக்குமுயர்வாயிறொறுநிரைத்தார். (க௨0)

சோதிமணிவேதிகைகடோய்நறுஞ்சாந்தணிநீவிக்
கோதில்பொரிபொற்சுண்ணங்குளிர்தரளமணிபரப்பித்
தாதவிழ்பூந்தொடைமாலைத்தண்பந்தர்களுஞ்சமைத்து
வீதிகணுண்டுகளடங்கவிரைப்பனிநீர்மிகத்தெளித்தார். ()

மங்கலகீதப்பாடமழைநிகர் தூரியமுழங்கச்
செங்கயற்கண்முற்றிழையார்தெற்றிதொறுநடம்பயில
நங்கள்பிரான்றிருவாரூர்நகர்வாழ்வார்நம்பியைமுன்
பொங்கெயினீடிருவாயிற்புறமுறவந்தெதிர்கொண்டார். ()

## வேறு.

வந்தெதிர்கொண்டுவணங்குவார்முன்வன்றொண்டரஞ்சலிகூப்
பிவந்து, சிந்தைகளிப்புறவீதியூடுசெல்வார் திருத்தொண்டர் தம்மை
நோக்கி, (யெந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீரெ
ன்னுஞ், சந்தவிசைப்பதிகங்கள்பாடித்தம்பெருமான்றிருவாயில்
சார்ந்தார். (கஉ௩

## திருச்சிற்றம்பலம்

வானுறநீடிருவாயினோக்கிமண்ணுறவைந்துறுப்பால்வணங்கித்,
தேனுறைகற்பகவாசமாலைத்தேவாசிரியன்றொழுதிறைஞ்சி
யூனுமுயிருமுருக்குமன்பாலுச்சிகுவித்தசெங்கைகளோடுங், (கார்
தூநறுங்கொன்றையன்மூலட்டானஞ்சூழ்திருமாளிகைவாயில்புக்

புற்றிடங்கொண்டபுராதனனைப்பூங்கோயின்மேயபிரானையார்க்
கும், பற்றிடமாயபரம்பொருளைப்பார்ப்பதிபாகனைப்பங்கயத்தாள்,
அர்ச்சனை செய்யவருள்புரிந்த வண்ணலைமண்மிசைவீழ்ந்திறைஞ்சி
நற்றமிழ் நாவலர்கோனுடம்பானன்மையின்றன்மையை மெய்ம்மை
பெற்றார். (கஉ௫)

அன்புபெருகவுருகியுள்ளமலையவட்டாங்கபஞ்சாங்கமாக,
முன்புமுறைமையினால்வணங்கிமுடிவிலாக்காதன்முதிரவோங்கி,
நன்புலனாகியவைந்துமொன்றிநாயகன்சேவடியெய்தப்பெற்ற,
இன்பவெள்ளத்திடைமூழ்கிநின்றேயின்னிசைவண்டமிழ்மாலைபாட

வாழியமாமறைப்புற்றிடங்கொண்மன்னவனாருளாலோர்வா
க்குத், தோழமையாகவுனக்குநம்மைத்தந்தனநாமுன்புதொண்டு
கொண்ட, வேள்வியிலன்றுநீகொண்டகோலமென்றும்புனைந்துநின்
வேட்கைதீர, வாழிமண்மேல்விளையாடுவாயென்றாரூரர்கேட்கவெ
ழுந்ததன்றே. (கஉ௭

கேட்கவிரும்பி வன்றொண்டரென்றுங்கேடிலாதானையிறைஞ்சி
நின்றே, யாட்கொளவந்தமறையவனேயாரூரமர்ந்தவருமணியே,
வாட்கயல்கொண்டகண்மங்கைபங்காமற்றுன்பெரியகருணையன்றே,
நாட்கமலப்பதந்தந்ததின்றுநாயினேனைப்பொருளாகவென்றார். ()

என்றுபலமுறையால்வணங்கிவெய்தியவுள்ளக்களிப்பினோடும்
வென்றியடல்விடைபோனடந்து வீதிவிடங்கப்பெருமான்முன்பு
சென்றுதொழுதுதுதித்துவாழ்ந்து திருமாளிகைவலஞ்செய்துபோ
அன்றுமுதலடியார்களெல்லாந்தம்பிரான்றோழனென்றேயறைந்தார் |

மைவளர்கண்டரருளினாலே வண்டமிழ்நாவலர்தம்பெருமான்
சைவவிடங்கினணிபுனைந்துசாந்தமுமாலையுந்தாருமாகி,
மெய்வளர்கோலமெலாம்பொலியமிக்கவிழுத்தவவேந்தரென்னத்
தெய்வமணிப்புற்றுளாரைப்பாடித்திளைத்துமகிழ்வொடுசெல்லா
|நின்றார். ()

வேறு. இது முதல் (௫௰௨) கவி பரவைநாச்சியார் கதை.

இதற்குமுன்னெல்லையில்லாத்திருநகரிதனுள்வந்து
முதற்பெருங்கயிலையாதிமுதல்வர்தம்பங்கினாட்குப்
பொதுக்கடிந்துரிமைசெய்யும்பூங்குழற்சேடிமாரிற்
கதித்தபூணேந்துகொங்கைக்கமலினியவதரித்தாள். (௧௩௧)

கதிர்மணிபிறந்ததென்னவுருத்திரகணிகைமாராம்
பதியிலார்குலத்திற்றோன்றிப்பரவையாரென்னுநாமம்
விதியுளிவிளக்கத்தாலேமேதகுசான்றோரான்ற
மதியணிபுனிதனன்னாண்மங்கலவணியாற்சாற்றி. (௧௩௨)

பரவினர்காப்புப்போற்றிப்பயில்பெருஞ்சுற்றந்திங்கள்
விரவியபருவந்தோறும்விழாவணியெடுப்பமிக்கோர்
வரமலர்மங்கையிங்குவந்தனளென்றுசிந்தை
தரவருமகிழ்ச்சிபொங்கத்தளர்நடைப்பருவஞ்சேர்ந்தார். (௧௩௩)

மானிளம்பிணையோதெய்வவள்ளிளமுகையோவாசத்
தேனிளம்பதமோவேலைத்திரையிளம்பவளவல்லிக்
கானிளங்கொடியோதிங்கட்கதிரிளங்கொழுந்தோகாமன்
றானிளம்பருவங்கற்குந்தனியிளந்தனுவோவென்ன. (௧௩௪)

நாடுமின்பொற்புவாய்ப்புநாளுநாள்வளர்ந்துபொங்க
ஆடுமென்கழங்கும்பந்துமம்மனையூசலின்ன
பாடுமின்னிசையுந்தங்கள்பனிமலைவல்லிபாதங்
கூடுமன்புருகப்பாடுங்கொள்கையோர்குறிப்புத்தோன்ற ()

பிள்ளைமைப்பருவமீதாம்பேதைமைப்பருவநீங்கி
யள்ளுதற்கமைந்தபொற்பாலனங்கன்மெய்த்தனங்களீட்டங்
கொள்ளுமிக்குயர்வபோன்றுகொங்கைகோங்கரும்பைவீழ்ப்ப
உள்ளமெய்த்தன்மைமுன்னையுண்மையுந்தோன்றவுய்ப்பார்.

பாங்கியர்மருங்குசூழப்படரொளிமறுகுசூழத்
தேங்கமழ்குழலின்வாசந்திசையெலாஞ்சென்றுசூழ
ஓங்குபூங்கோயிலுள்ளாரொருவரையன்பினோடும்
பூங்கழல்வணங்கவென்றும்போதுவாரொருநாட்போந்தார். ()

அணிசிலம்படிகள்பார்வென்றடிப்படுத்தனமென்றார்ப்ப
மணிவளர்காஞ்சியல்குல்வரியரவுலகைவென்ற
துணிவுகொண்டார்ப்பமஞ்சுசூரிகுழற்கழியவிண்ணும்
பணியுமென்றினவண்டார்ப்பப்பரவைபார்போதும்போதில்.

புற்றிடம்விரும்பினாரைப்போற்றவென்றொழுதுசெல்வார்
சுற்றியபரிசனங்கள்சூழவாரூடையநம்பி
நற்பெரும்பான்மைகூட்டநகைபொதிந்திலங்குசெவ்வாய்
விற்புரைநுதலின்வேற்கண்விளங்கிழையவரைக்கண்டார். ()

வேறு. இது முதல் (உ) கவி பரவைநாச்சியாரது உருவத்தைப் பார்த்து நாயனார் வியப்புறுதல்.

கற்பகத்தின்பூங்கொம்போகாமன்றன்பெருவாழ்வோ
பொற்புடையபுண்ணியத்தின்புண்ணியமோபுயல்சுமந்து
விற்குவளைபவளமலர்மதிபூத்தவிரைக்கொடியோ
அற்புதமோசிவனருளோவறியேனென்றதிசயித்தார். (௧௪0)

ஓவியநான்முகனெழுதவொண்ணாமையுள்ளத்தான்
மேவியதன்வருத்தமுறவிதித்ததொருமணிவிளக்கோ
மூவுலகின்பயனாகிமுன்னின்றதெனநினைந்து
நாவலர்காவலர்நின்றார்நடுநின்றார்படைமதனார். (௧௪௧)

இது முதல் (ரு) கவி பரவைநாச்சியார் நாயனார் உருவத்தைப் பார்த்து வியப்புற்று ஆலயத்துட்செல்லல்.

தண்டாளமணித்தோடுந்தகைத்தோடுங்கடைபிறழுங்
கெண்டைநெடுங்கண்வியப்பக்கிளரொளிப்பூணாரவனை
யண்டர்பிரான்றிருவருளாலய *லறியாமணம்விரும்பிப்
பண்டைவிதிகடைகூட்டப்பரவையாருங்கண்டார். (௧௪௨)

கண்கொள்ளாக்கவின்பொழிந்ததிருமேனிகதிர்விரிப்ப
விண்கொள்ளாப்பேரொளியானெதிர்நோக்குமெல்லியலுக்
கெண்கொள்ளாக்காதலின்முன்பெய்தாததொருவேட்கை
மண்கொள்ளாநாண்மடமச்சம்பயிர்ப்பைவலிந்தெழலும். ()

முன்னேவந்தெதிர்தோன்றுமுருகனோபெருகொளியாற்
றன்னேரின்மாரனோதார்மார்பின்விஞ்சையனோ
மின்னேர்செஞ்சடையண்ணன்மெய்யருள்பெற்றுடையவனோ
என்னேயென்மனந்திரித்தவிவன்யாரோவெனநினைந்தார். ()

* அண்டர்பிரான்றிருவருளலறியாமல் மணம்விரும்பி, என்றும்பாடம்

அண்ணலவன் றன்மருங்கேயளவிறந்தகாதலினால்
உண்ணிறையுங்குணநான்குமொருபுடைசாய்ந்தனவெனினும்
வண்ணமலர்க்கருங்கூந்தன்மடக்கொடியைவலிதாக்கிக்
கண்ணுதலைத்தொழுமன்பேகைக்கொண்டுசெலவுய்ப்ப. (௧

பாங்கோடிச்சிலைவளைத்துப்படையனங்கன்விடுபாணந்
தாங்கோலிமெம்மருங்குந்தடைசெய்யமடவாலுந்
தேங்கோதைமலர்க்குழன்மேற்சிறைவண்டுகலந்தார்ப்பப்
பூங்கோயிலமர்ந்தபிரான்பொற்கோயில்போய்ப்புக்காள். (௧௪௬)

இது முதல் (௪) கவி நாயனுர் பரவைநாச்சியார் பெருமையைக் கேள்வியுற்று மயங்கிக் கடவுளைப் பிரார்த்தல்.

வன்றொண்டாதுகண்டென்மனங்கொண்டமயிலியலின்
இன்றொண்டைச்செங்கனிவாயிளங்கொடிதான்யாரென்ன
அன்றங்குமுன்னின்றாவர்நங்கைபரவையார்
சென்றும்பர்தரத்தார்க்குஞ்சேர்வரியாரெனச்செப்ப. (௧௪௭)

பேர்பரவைபெண்மையினிற்பெரும்பரவைவிரும்பல்கு
லார்பரவையணிதிகழுமணிமுறுவலரும்பரவை
சீர்பரவையாயினுடிருவுருவின்மென்சாயல்
ஏர்பரவையிடைப்பட்டவென்னுசைபெழுபரவை. (௱௪௮)

(இதன் பொருள்.)

பெயர் பரவையென்றுசொல்லப்படுவது அவளுடைய அழகு முதலியவைகளாற் குறிக்குமிடத்து பெரிய தேவர்கூட்டம் விரும்புகின்ற திலோத்தமைமுதலிய ரம்பாஸ்திரிகள் துதிசெய்யத்தக்க தெய்வமாம். அழகு விளங்குகின்ற, பற்கள் முல்லைபரும்புகளை யொப்பானவை சீருள்ள பரவையென்னுங் கூத்தினை யுடையவளாகிய இலக்குமியினுடைய சௌந்தரியம்பொருந்திய வடிவம்போன்ற மென்சாயலுள்ள அந்தப் பரவை யென்பவளது அழகாகிய சமுத்திரத்தினிடத்திற்பொருந்திய என்னுசையானது ஏழுசமுத்திரங்களையு 'மொப்பாயிருக்கின்றது. சீர்பரவை அடிநோக்கிமிகாதுநின்றது— என்றவாறு. (௱௪௮)

ஏன்றினையபலவுநினைந்தெம்பெருமானருள்வகையான்
முன்றொடர்ந்துவருங்காதன்முறைமையினுற்றொடக்குண்டு
நன்றினையாடகொண்டவர்பானண்ணுவனென்றுண்மகிழ்ந்து
சென்றுடையநம்பியும்போய்த்தேவர்பிரான்கோயில்புக (௧௪௯)

பரவையார்வலங்கொண்டுபணிந்தேத்திமுன்னரே
புரவலனுர்கோயிலினின்றொருமருங்குபுறப்பட்டார்
விரவுபெருங்காதலினுன்மெல்லியலார்தமைவேண்டி
யாவினாம்புனைந்தாரடிபணிந்தாராரூரர். (௧௫௦)

அவ்வாறுபணிந்தேத்தியணியாரூர்மணிப்புற்றின்
மைவாழுந்திருமிடற்றுவானவன்பானின்றும்போந்
தெவ்வாறுசென்றாளென்னின்னுயிராமன்னமெனச்
செவ்வாய்வெண்ணகைக்கொடியைத்தேடுவாராயினர். (௫௧)

## இதுமுதல் (௫) செய்யுள்-சுந்தரமூர்த்தி நாயனார் பரவைநாச்சியாரை ஆலயத்திற்றேடிவருந்துதல்.

### வேறு.

பாசமாம்வினைப்பற்றறுப்பான்மிகும்
ஆசைமேலுமொராசையளிப்பதோர்
தேசின்மன்னியென்சிந்தைமயக்கிய
ஈசனாருளெந்நெறிச்சென்றதே. (௫௨)

உம்பர்நாயகர்தங்கழலல்லது
நம்புமாறறியேனைநடுக்குற
வம்புமால்செய்துவல்லியினொல்கியின்
றெம்பிரானருளெந்நெறிச்சென்றதே. (௫௩)

பந்தம்வீடுதரும்பரமன்கழல்
சிந்தையாரவுமுன்னுமென்சிந்தையை
வந்துமால்செய்துமாழைனவேவிழித்
தெந்தையாருளெந்நெறிச்சென்றதே. (௫௪)

என்றுசாலவுமாற்றலரென்னுயிர்
நின்றதெங்கெனநித்திலப்பூண்முலை
மன்றல்வார்குழல்வஞ்சியைத்தேடுவான்
சென்றுதேவாசிரியனைச்சேர்ந்தபின். (௫௫)

காவிநேர்வருங்கண்ணியைநண்ணுவான்
யாவரோடுமுரையியம்பாதிருந்
தாவில்நல்குவாரூரையாண்டவர்
பூவின்மங்கையைத்தந்தெனும்போழ்தினில். (௫௬)

### சூரியன் அஸ்தமனமாதல்.

நாட்டுநல்லிசைநாவலூரன்சிந்தை
வேட்டமின்னிடையின்னமுதத்தினைக்
காட்டுவன்கடலைக்கடந்தென்பபோற்
பூட்டுமேழ்பரித்தேரோன்கடல்புக. (௫௭)

## மாலைக்காலம்.

எய்துமென்பெடையோடிரைதேர்ந்துண்டு
பொய்கையிற்பகல்போக்கியபுள்ளினம்
வைகுசேக்கைகண்மேற்செலவந்தது
பையுண்மாலைதமியோர்பனிப்புற. (௧௫௮)

## இருள்தோன்றல்.

பஞ்சின்மெல்லடிப்பாவையருள்ளமும்
வஞ்சமாக்கடம்வல்வினையும்மான்
அஞ்செழுத்துமுணராவறிவிலோர்
நெஞ்சுமென்னவிருண்டதுநீண்டவான். (௧௫௯)

## நிலவுவெளிப்படல்.

மறுவில்சிந்தைவன்றொண்டர்வருந்திநல்
இறுமருங்குலார்க்கியார்பிழைப்பாரென்று
நறுமலர்க்கங்குனங்கைமுன்கொண்டபுன்
முறுவலென்னமுகிழ்த்ததுவெண்ணிலா. (௧௬௦)

## ஆம்பல் மலர்தல்.

அரந்தைசெய்வார்க்கழுங்கித்தம்மாருயிர்
வான்கைநீண்டமலர்குலமாதர்போற்
பரந்தவெம்பகற்கொல்கிப்பனிமதிக்
கரங்கடீண்டவலர்ந்தகயிரவம். (௧௬௧)

## நிலவின் ஒளி.

தோற்றுமன்னுயிர்கட்கெலாந்தூய்மையே
சாற்றுமின்பமுந்தண்மையுந்தந்துபோ
யாற்றவண்டமெலாம்பரந்தண்ணல்வெண்
ணீற்றின்பேரொளிபோன்றதுநீணிலா. (௧௬௨)

## நாயனார் தனித்திருத்தல்.

வாவியுள்ளொளிமாற்றியமாலையி
னாவலூரருநங்கைபரவையாம்
பாவைதந்தபடர்பெருங்காதலு
மாவிசூழ்ந்ததனிமையுமாயினார். (௧௬௩)

## மதனைப்பழித்தல்.

தந்திருக்கண்ணெரிதழலிற்பட்டு
வெந்தகாமன்வெளியேயுருச்செய்து
வந்தென்முன்னின்றுவாளிதொடுப்பதே
யெந்தையாரருளிவ்வண்ணமோவென்பார். (௧௬௪)

நிலவைப்பழித்தல்.

ஆர்த்திகண்டுமேன்மேனின்றழற்கதிர்
தூர்ப்பதேயெனைத்தொண்டுகொண்டாண்டவர்
நீர்த்தரங்கநெடுங்கங்கைநீண்முடி
சாத்தும்வெண்மதிபோறன்றிலைதண்மதி. (௧௬௫)

கடலைப்பழித்தல்.

அடுத்துமேன்மேலலைத்தெழுமாழியே
தடுத்துமுன்னெனையாண்டவர்தாமுணக்
கடுத்தநஞ்சுன்றரங்கக்கரங்களால்
எடுத்துநீட்டுநீயென்னையின்றென்செயாய். (௧௬௬)

தென்றலைப்பழித்தல்.

பிறந்ததெங்கள்பிரான்மலயத்திடை
சிறந்தணைந்ததுதெய்வநீர்நாட்டணி
புறம்பணைத்தடம்பொங்கழல்வீசிட
மறம்பயின்றதெங்கோதமிழ்மாருதம். (௧௬௭)

இன்னதன்மையயின்னுமியம்புவான்
மன்னுகாதலனாகியவள்ளல்பாற்
றன்னரும்பெறனெஞ்சுதயங்கப்போம்
அன்னமன்னவள்செய்கையறைகுவாம். (௧௬அ)

இதுமுதல் (௬) செய்யுள் பரவை நாச்சியார் சுந்தரமூர்த்தி நாயனாரை நினைத்து வருந்துதல்.

கனங்கொண்டமணிகண்டர்கழல்வணங்கிக் கணவனைமுன்பெறுவாள்போல, இனங்கொண்டசேடியர்கள்புடைசூழவெய்துபெருங்காதலோடுந், தனங்கொண்டுதளர்மருங்குற்பாவையும்வன்றொண்டர்பாற்றனித்துச்சென்ற,மனங்கொண்டுவரும்பெரியமயல்கொண்டுதன்மணிமாளிகையைச்சார்ந்தாள். (௧௬௯)

சீறடிமேனூபுரங்களறிந்தனபோற்சிறிதளவேயொலிப்பமுன்னர், வேறொருவருடன்பேசாண்மெல்லவடியொதுங்கிமாளிகையின்மேலால், ஏறிமாகதத்தூணத்திலங்குமணிவேதிகையினலங்கொள்பொற்கான், மாறின்மலர்ச்சேக்கைமிசைமணிநிலாமுன்றின்மருங்கிருந்தாள்வந்து. (௧௭0)

அவ்வளவிலருகிருந்தசேடிதனைமுகநோக்கியாரூராண்ட
மைவிரவுகண்டனைநாம்வணங்கப்போமறுகெதிர்வந்தவரரென்ன,
இவ்வுலகிலந்தணராயிருவர்தேடொருவர்தாமெதிர்நின்றாண்ட
சைவமுதற்றிருத்தொண்டர்தம்பிரான்றோழனார்நம்பியென்றாள். ()

என்றவுரைகேட்டலுமேமெய்யெம்பிரான்றமரேயோவென்னாமுன்னம்,
வன்றொண்டர்பால்வைத்தமனக்காதலளவின்றிவளர்ந்துபொங்க,
நின்றநிறைநாண்முதலாங்குணங்களுடனீங்கவுயிரொன்றுந்தாங்கி,
மின்றயங்குநுண்ணிடையாள் வெய்துயிர்த்து மெல்லணைமேல்
வீழ்ந்தபோது. (௧௭௨)

ஆரநறுஞ்சேறாட்டியரும்பனிநீர்நறுந்திவலையருகுவீசி
யீரவிளந்தளிர்குளிரிபடுத்துமடவார்செய்தவிவையுமெல்லாம்
பேரழலினெய்சொரிந்தாலொத்தனமற்றதன்மீதுசமிதையென்ன
மாரனுந்தன்பெருஞ்சிலையின்வலிகாட்டிமலர்வாளிசொரிந்தான்வந்து

மலரமளித்துயிலாற்றாள்வருந்தென்றன்மருங்காற்றாண்மங்குல்
வாணி, னிலவுமிழுந்தழலாற்றாணிறையாற்றும்பொறையாற்றாணீர்
மைபோடுங், கலவமயிலெனவெழுந்துகருங்குழலின்பாரமாற்றாக்கை
யளாகி, யிலவவிதழ்ச்செந்துவர்வாய்நெகிழ்ந்தாற்றாமையின்வறிதே
யின்னசொன்னாள். (௧௭௪)

வேறு.

கந்தங்கமழ்மென்குழலீரிதுவென்கலைவாண்மதியங்கனல்வா
னெனையிச், சந்தின்றழலைப்பனிநீரளவித்தடவுங்கொடியீர்தவிரீர்
தவிரீர், வந்திங்குலவுந்நிலவும்விரையார்மலயானிலமுமெரியாய்வரு
மால், அந்தண்புனலுமரவும்விரவுஞ்சடையானருள்பெற்றுடையார
ருளார். (௧௭௫)

புலரும்படியன்றிரவென்னளவும்பொறையுநிறையுமிறையுந்த
ரியா, உலருந்தனமுமனமும்வினையேனொருவேனளவோபெருவாழ்
வுரையீர், பலரும்புரியுந்துயர்தானிதுவோபடைமன்மதனார்புடை
நின்றகலார், அலரும்நிலவுமலீருமுடியாரருள்பெற்றுடையாரவரோ
வறியார். (௧௭௬)

தேருங்கொடியுமிடையுமறுகிற்றிருவாரூரர்நீரேயல்லால்
ஆரென்றுயரமறிவாரடிகளடியேனயரும்படியோவிதுதா [யே
னீரும்பிறையும்பொறிவாளரவினிரையுநிரைவெண்டலையின்புடை
யூருஞ்சடையீர்விடைமேல்வருவீருமதன்பிலர்போலியானேவுறு
வேன். (௧௭௭)

என்றின்னனவேபலவும்புகலுமிருளாரளகச்சுருளோதியையும் வன்றொண்டனையும்படிமேல்வரமுன்பருள்வானருளும் வகையார் நினைவார், சென்றும்பர்களும்பணியுஞ்செல்வத்திருவாரூர்வாழ்பெருமானடிகள், அன்றங்கவர்மன்றலைநீர்செயுமென்றடியாரறியும்படியாலருளி. (௧௭௮)

மன்னும்புகழ்நாவலர்கோன்மகிழுமங்கைபரவைதன்னைத்தந்தோம், இன்னவகைநம்மடியாரறியும்படியேயுரைசெய்தனமென்றருளிப், பொன்னின்புரிபுன்சடையன்விடையன்பொருமாகரியினுரிவைபுனைவான், அன்னந்நடையாள்பரவைக்கணியஃதாரூரன்பான் மணமென்றருள. (௧௭௯)

## பரவைநாச்சியார் விவாகம்.

காமத்துயரிற்கவல்வார்நெஞ்சிற்கரையில்லிருளுங்கங்குற்கழிபோம், யாமத்திருளும்புலரக்கதிரோனெழுகாலையில்வந்தடியார்கூடிச், சேமத்துணையாமவர்பேரருளைத்தொழுதேதிருநாவலர்கோன்மகிழத், தாமக்குழலாள்பரவைவதுவைதகுநீர்மையினானிகழச்செய்தார். (௧௮0)

## வேறு. சுந்திரமூர்த்தி நாயனார் இன்பநுகர்தல்.

தென்னாவலூர்மன்னன்றேவர்பிரான்றிருவருளான்
மின்னாருங்கொடிமருங்குற்பரவையெனுமெல்லியறன்
பொன்னாருமுலையோங்கற்புணர்குவடேசார்வாகப்
பன்னாளும்பயில்யோகபரம்பரையின்விரும்பினார். (௧௮௧)

தன்னையாளுடையபிரான்சரணாரவிந்தமலர்
சென்னியினுஞ்சிந்தையினுமலர்வித்துத்திருப்பதிகம்
பன்னுதமிழ்த்தொடைமாலைபலசாத்திப்பரவையெனு
மின்னிடையாளுடன்கூடிவிளையாடிச்செல்கின்றார். (௧௮௨)

## வேறு.

மாதுடன்கூடவைகிமாளிகைமருங்குசோலைப்
போதலர்வாவிமாடுசெய்குன்றின்புடையோர்தெற்றிச்
சீதளத்தரளப்பந்தற்செழுந்தவிசிழிந்துதங்க
ளாதர்பூங்கோயினண்ணிக்கும்பிடும்விருப்பானம்பி. (௧௮௩)

அந்தரத்தமரர்போற்றுமணிகிளராடைசாத்திச்
சந்தனத்தளறுதோய்ந்தகுங்குமக்கலவைசாத்திச்
சுந்தரச்சுழியஞ்சாத்திச்சுடர்மணிக்கலன்கள்சாத்தி
இந்திரத்திருவின்மேலாமெழின்மிகவிளங்கித்தோன்ற. (௧௮௪)

கையினிற்புனைபொற்கோலுங்காதினிலிலங்குதோடு
மெய்யினிற்றுவளநூலுநெற்றியின்விளங்குநீறும்
ஐயனுக்கழகிதாமென்றுயிழைமகளிர்போற்றச்
சைவமெய்த்திருவின்கோலந்தழைப்பவீதியினைச்சார்ந்தார். ()

நாவலூர்வந்தசைவநற்றவக்களிறேயென்றும்
மேவலர்புரங்கள்செற்றவிடையவர்க்கன்பவென்றுந்
தாவில்சீர்ப்பெருமையாரூர்மறையவர்தலைவவென்றும்
மேவினரிரண்டுபாலும்வேறுவேறயம்போற்ற. (௧௮௬)

கைக்கடாகுரங்குகோழிசிவல்கவுதாரிபற்றிப்
பக்கமுன்போதுவார்கள்பயின்மொழிபயிற்றிச்செல்ல
மிக்கபூம்பிடகைகொள்வோர்விரையடைப்பையோர்சூழ
மைக்கருங்கண்ணினார்கண்மறுகநீண்மறுகில்வந்தார். (௧௮௭)

பொலங்கலப்புரவிபண்ணிப்போதுவார்பின்புபோத
இலங்கொளிவலயப்பொற்றோளிடையிடைமிடைந்துதொங்க
னலங்கிளர்நீழல்சூழநான்மறைமுனிவரோடும்
அலங்கலந்தோளினான்வந்தணைந்தனனண்ணல்கோயில். ()

கண்ணுதல்கோயிற்றேவாசிரியனுங்காவணத்து
விண்ணவரொழியமண்மேன்மிக்கசீரடியார்கூடி
எண்ணிலாரிருந்தபோதிலிவர்க்கியானடியேனாகப்
பண்ணுநாளெந்நாளென்றுபரமர்தாள்பரவிச்சென்றார். ()

அடியவர்க்கடியனாவேனென்னுமாதரவுகூரக்
கொடிநெடுங்கொற்றவாயில்பணிந்துகைகுவித்துப்புக்கார்
கடிகொள்பூங்கொன்றைவேய்ந்தாரவர்க்கெதிர்காணக்காட்டும்
படியெதிர்தோன்றிநிற்கப்பாதங்கள்பணிந்துபூண்டு. (௧௯௦)

வேறு.

மன்பெருந்திருமாமறைவண்டுசூழ்ந்
தன்பர்சிந்தையலர்ந்தசெந்தாமரை
நன்பெரும்பரமானந்தநன்மது
என்றூத்துமளித்தெதிர்நின்றன. (௧௯௧)

ஞாலமுய்யநடமன்றுளாடின
காலனாருயிர்மாளக்கறுத்தன
மாலைதாழ்குழன்மாமலையாள்செங்கை
சீலமாகவருடச்சிவந்தன. (௧௯௨)

நீதிமாதவர் நெஞ்சிற் பொலிந்தன
வேதியாதவர் தம்மை வேதிப்பன
சோதியாயெழுஞ் சோதியுட் சோதிய
ஆதிமாலயன் காணுவளவின. (௧௯௩)

வேதவாரணமேற்கொண்டிருந்தன
பேதையேன் செய்பிழைபொறுத்தாண்டன
ஏதமானவை தீர்க்கவிசைந்தன
பூதநாதனின் புண்டரீகப்பதம். (௧௯௪)

வேறு.

இன்னவாறேத்து நம்பிக்கேறுசேவகனார் தாமும்
அந்நிலையவர் தாம்வேண்டு மதனையே யருளவேண்டி
மன்னுசீரடியார் தங்கள் வழித்தொண்டை யுணரநல்கிப்
பின்னையுமவர் கடங்கள் பெருமையை யருளிச்செய்வார். (௧௯௫)

பெருமையாற் றம்மை யொப்பார் பேணலா லெம்மைப் பெற்றார்
ஒருமையா லுலகை வெல்வா ரூனமே லொன்று மில்லார்
அருமையா நிலையினின்றா ரன்பினா லின்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்றா ரிவரை நீ யடைவா யென்று. (௧௯௬)

நாதனா ரருளிச்செய்ய நம்பியாரூரர் நானிங்
கேதந்தீர் நெறியைப் பெற்றே னென்றெதிர் வணங்கிப் போற்ற
நீதியா லவர்கட் டம்மைப் பணிந்து நீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மையாலே பாடென வண்ணல் கூற (௧௯௭)

தன்னையா ளுடைய நாதன் றானருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடிநாடர்
இன்னவா றின்ன பண்பென் றேத்துகே னதற்கி யானார்
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய் யென்ன. ()

வேறு

தொல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்
அல்லறீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்காற்
றில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேனென்
றெல்லையில் வண்புகழாரை யெடுத்திசைப்பா மொழியென்றான்.

மன்னுசீர் வயலாரூர் மன்னவரை வன்றொண்டர்
சென்னியுற வடிவணங்கித் திருவருண் மேற்கொள் பொழுதின்
முன்னமா லயனறியா முதல்வர் தா மெழுந்தருள
அந்நிலை கண்டடியவர்பாற் சார்வதனுக் கணைகின்றார். (௨௦௦)

தூரத்தேதிருக்கூட்டம்பலமுறையாற்றொழுதன்பு
சேரத்தாழ்ந்தெழுந்தருகுசென்றெய்திநின்றழியா
வீரத்தாரெல்லார்க்குந்தனித்தனிவேறடியேனென்
றூர்வத்தாற்றிருத்தொண்டத்தொகைப்பதிகமருள்செய்வார். ()

தம்பெருமான்கொடுத்தமொழிமுதலாகத்தமிழ்மாலைச்
செம்பொருளாற்றிருத்தொண்டத்தொகையானதிருப்பதிகம்
உம்பர்பிரான்றானருளுமுணர்வுபெறவுலகேத்த
எம்பெருமான்வன்றொண்டர்பாடியவரெதிர்பணிந்தார். (உ0உ)

---

### திருத்தொண்டத் தொகையின் மகத்துவம்.

சேக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த பெரியபுராணத்திற்குமுதனூலாகவும்-அப்புராணத்தைப்பதினொருசருக்கமாகவகுத்தற்கு ஆதாரமாகவும்-விறல்மிண்டநாயனார் காரணார்த்தமாகவும்-தியாகராசப்பெருமான் அடியெடுத்துக்கொடுக்க-சுந்தரமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளிய.

### திருத்தொண்டத்தொகையென்னும்-தேவாரத்திருப்பதிகம்

### பண்கொல்லி-கௌவாணம்.

#### க-வது தில்லைவாழ்ந்தணர் சருக்கம்—நாயனார் எழுவர்.

தில்லைவாழ்ந்தணர்தமடியார்க்குமடியேன்றிருநீலகண்டத்துக்குயவனார்க்கடியே, னில்லையேயென்னாதவியற்பகைக்குமடியேனிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன், வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டர்க்கடியே, னல்லிமென்முல்லையந்தாரமர்நீதிக்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (க)

#### உ-வது இலைமலிந்த சருக்கம்—நாயனார் எழுவர்.

இலைமலிந்தவேனம்பியெறிபத்தர்க்கடியேனேனாதிநாதன்றனடியார்க்குமடியேன், கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பர்க்கடியேன் கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன், மலைமலிந்ததோள்வள்ளல் மானக்கஞ்சாற னெஞ்சாதவாட்டாயனடியார்க்குமடியேன், அலைமலிந்தபுனன்மங்கையானாயர்க்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே

௩-வது மும்மையா லுலகாண்ட சருக்கம்—நாயனார் அறுவர்,

மும்மையா லுலகாண்டமூர்த்திக்குமடியேன் முருகனுக்குமுருத்திரபசுபதிக்குமடியேன், செம்மையேதிருநாளைப்போவார்க்குமடியேன் றிருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்குமடியேன், மெய்ம்மையே திருமேனிவழிபடாநிற்க வெகுண்டெழுந்ததாதை தாள்மழுவினலெறிந்த, வம்மையானடித்தண்டிப்பெருமானுக்கடியே னூரானூரிலம்மானுக்காளே (௩)

௪-வது திருநின்ற சருக்கம்—நாயனார் எழுவர்.

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன், பெருநம்பிகுலச்சிறைதனடியார்க்குமடியேன் பெருமிழலைக்குறும்பர்க்கும்பேயார்க்குமடியேன், ஒருநம்பியப்பூதியடியார்க்குமடியே னொலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கர்க்கடியேன், அருநம்பிநமிநந்தியடியார்க்குமடியே னூரானூரிலம்மானுக்காளே. (௪)

௫-வது வம்பறாவரிவண்டுச் சருக்கம்—நாயனார் அறுவர்.

வம்பறாவரிவண்டுமணநாறமலருமதுமலர்நற் கொன்றையானடியலாற்பேணா, வெம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியே னேயர்கோன் கலிக்காமனடியார்க்குமடியே, னம்பிரான்றிருமூலனடியார்க்குமடியே னாட்டமிகுதண்டிக்கு மூர்க்கர்க்குமடியேன், ‡ அம்பரான்சோமாசிமாறனுக்குமடியே னூரானூரிலம்மானுக்காளே (௫)

௬-வது வார்கொண்டவன்முலையாள் சருக்கம்—நாயனார் அறுவர்.

வார்கொண்டவன்முலையாளுமைபங்கன்கழலே மறவாதுகல்லெறிந்தசாக்கியர்க்குமடியேன், சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன் செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டர்க்கடியேன், கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன் கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியேன், ஆர்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியே னூரானூரிலம்மானுக்காளே. (௬)

௭-வது பொய்யடிமையில்லாத சருக்கம்—நாயனார் எண்மர்.

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழற்கடியேன், மெய்யடியனரசிங்கமுனையரையற்கடியேன் விரிதிரைசூழ்கடனாகைஅதிபத்தர்க்கடியேன், கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்கழற்சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியேன், ஐயடிகள்காடவர்கோனடியார்க்குமடியே னூரானூரிலம்மானுக்காளே. (௭)

---

‡ அம்பர்-என்பது-ஒரு-சிவஸ்தலம்.

அ-வது கறைக்கண்டன் சருக்கம்—நாயனார் ஐவர்.

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்த கணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியேன், நிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன், றுறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித் தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியேன், அறைக்கொண்டவேனம்பிமுனையடுவார்க்கடியே னாரூரனாரூரிலம்மானுக்காளே. (அ)

கூ-வது கடல்சூழ்ந்த சருக்கம்—நாயனார் ஐவர்.

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான் காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன், மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சைமன்னவனாஞ்செருத்துணைதனடியார்க்குமடியேன், புடைசூழ்ந்தபுலியதண்மேலராவாடவாடி பொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியேன், அடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியே னாரூரனாரூரிலம்மானுக்காளே. (கூ)

ய-வது பத்தராய்ப்பணிவார் சருக்கம்—நாயனார் எழுவர்.

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன் பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன், சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன் திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன், முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன் முழுநீறுபூசியமுனிவர்க்குமடியேன், அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியே னாரூரனாரூரிலம்மானுக்காளே. (க0)

யக-வது மன்னியசீர்ச் சருக்கம்—நாயனார் எழுவர்.

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல் வரிவளையாண்மானிக்கு நேசனுக்குமடியேன், றென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன் றிருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே, னென்னவனாமரனடியேயடைந்திட்டசடைய னிசைஞானிகாதலன்றிருநாவலூர்க்கோ, னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா ராரூரிலம்மானுக்கன்பராவாரே.

நம்பியாண்டார்-நம்பி அருளிச்செய்த-திருத்தொண்டத்தொகைப்

பதிகத்தேவாரங்களின்-முதற்குறிப்பு.

பணிந்தநற்றொண்டத்தொகைமுத*ற்றில்லை*யிலைமலிந்த
வணித்திகழ்*மும்மை*திருநின்ற*வம்பறு*வார்கொண்ட,தோ
ரிணைத்திகழ்*பொய்யடிமை*க்கறைக்கண்டன்*கடல்சூழ்*ந்தபின்
மணித்திகழ்சொற்*பத்தர்*மன்னியசீர்மறைநாவனோடே.

இந்நாயன்மார் எழுபத்திரண்டில்- தொகையடியார்கள் (௯). இவற்றுள்- சரியையர்-கிரியையர்-யோகத்தினர்-ஞானவியல்பினர்- இல்லறத்துவழாதவர்-துறவறம்நின்றோர்-பிரமசரியநிலைநின்றோர் சிவவேடத்தைப்பொருளெனநம்பினோர் என்னும்பாகுபாடுடையோர்களென்று பொருள்கொள்க.

இதில் மாயறியாதவர்- எழுவர்-பொய்யடிமையில்லாதபுலவர்- பத்தராய்ப்பணிவார்- பாமனையேபாடுவார்- சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார்-திருவாரூர்பிறந்தார்- முழுநீறுபூசியமுனிவர்- அப்பாலுமடிச்சார்ந்தார்.

உம்பர்நாயகரடியார்பேருவகைதாமெய்த
நம்பியாரூரர்திருக்கூட்டத்தினடுவணைந்தார்
தம்பிரான்றோழரவர்தாமொழிந்ததமிழ்முறையே
யெம்பிரான்றமர்கள்திருத்தொண்டேத்தலுறுகின்றேன். (௨௦௩.)

தடுத்தாட்கொண்டபுராணமுற்றுப்பெற்றது.

ஆக்கவி பாயிரம் உள்பட, ௨௱௩.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணம்.

இப்புராணம் கவி (௪௱௰)ல் இந்நாயனாருக்காக ஏற்பட்டுள்ள கவிகள் முதலிலிருந்து கவி(௮,ம், இறுதியில் (௩௱௮௪)வது கவியிலிருந்து கவி (௪௱௰) வரையினும் படித்து முடிக்க, மற்றும் இடையிலுள்ள கவிகள்யாகவும் சுந்தரமூர்த்திநாயனார்சரித்திரமென்றுணர்க, இதில் தடுத்தாட்கொண்ட புராணம் கவி (௨௱௧)ல் இருந்து இப்புராணம் (௩௱௮௧) வதுகவி வரையினும் படித்து பார்த்து முடிக்க.

நீடுவண்புகழ்ச்சோழர்நீர்நாட்டிடைநிலவு
மாடுபொன்பொழிகாவிரிவடகரைக்கீழ்பா
லாடுபூங்கொடிமாடநீடியவணிநகர்தான்
பீடுதங்கியதிருப்பெருமங்கலப்பெயர்த்தால். (௧)

இஞ்சிசூழ்வனவெந்திரப்பந்திசூழ்ஞாயின்
மஞ்சுசூழ்வனவரையெனவுயர்மணிமாட
நஞ்சுசூழ்வனநயனியர்நளினமெல்லடிச்செம்
பஞ்சுசூழ்வனகாளையர்குஞ்சியின்பரப்பு. (௨)

விழவறாதனவிளங்கொளிமணிநெடுவீதி
முழவறாதனமொய்குழலியர்நடவரங்க
மழவறாதனமங்கலம்பொலிமணிமுன்றி
லுழவறாதனவளத்தனவோங்கிருங்குடிகள். (௩)

நீரினிற்பொலிசடைமுடிநெற்றிநாட்டத்துக்
காரினிற்றிகழ்கண்டர்தங்காதலோர்குழுமிப்
பாரின்மிக்கதோர்பெருமையாற்பரமர்தாள்பரவுஞ்
சீரின்மிக்கதுசிவபுரியெனத்தகுஞ்சிறப்பால். (௪)

இன்னவாழ்பதியதனிடையேயர்கோக்குடிதான்
மன்னிநீடியவளவர்சேனாபதிக்குடியாந்
தொன்மைமேவியதொடர்ச்சியானிகழ்வதுதூய
பொன்னிநாட்டுவேளாண்மையிலுயர்ந்தபொற்பின்தால். (௫)

அங்கண்மிக்கவக்குடியினிலவதரித்துள்ளார்
கங்கைவாழ்முடியார்தொண்டர்கலிக்காமரென்பார்
தங்கணாபகரடிபணிவாரடிச்சார்ந்து
பொங்குகாதலினவர்பணிபோற்றுதல்புரிந்தார். (௬)

புதியநாண்மதிச்சடைமுடியார்திருப்புன்கூர்க்
கதிகமாயினதிருப்பணியனேகமுஞ்செய்து
நிதியமாவனநீறுவந்தார்கழலென்று
துதியினாற்பாவித்தொழுதின்புறுகின்றார். (௭)

நாவலூர்மன்னர்நாதனைத்தூதுவிட்டதனுக்
கியாவரிச்செயல்புரிந்தனரென்றவரிழிப்பத்
தேவர்தம்பிரானவர்திறந்திருத்தியவதற்கு
மேவவந்தவச்செயலினைவிளம்புவானுற்றேன் (௮)

இதுமுதல் சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரம் இரண்டாந்தொடர்பு.

திருத்தொண்டத்தொகையருளித்திருநாவலூராளி
கருத்தொன்றுகாதலினாற்கனகமதிற்றிருவாரூ
ரொருத்தர்கழன்முப்பொழுதுமுருகியவன்பொடுபணிந்து
பெருத்தெழுமெய்யன்பினாற்பிரியாதங்குறையுநாள் (௯)

வேறு.

தாளாண்மையுழவுதொழிற்றன்மைவளந்தலைசிறந்த
வேளாளர்குண்டையூர்க்கிழவரெனுமேதக்கோர்
வாளார்வெண்மதியணிந்தார்மறையவனாய்வழக்கினில்வென்
றாளாகக்கொண்டவர்தாளடைந்தன்பாலொழுகுவார். (௧௦)

செந்நெல்லும்பொன்னன்னசெழும்பருப்புந்தீங்கரும்பி
னின்னல்லவமுதுமுதலெண்ணில்பெரும்பலவளங்கண்
மன்னியசீர்வன்றொண்டர்க்கமுதாகவழுவாமற்
பன்னெடுநாள்பரவையார்மாளிகைக்குப்படிசமைத்தார். (௧௧)

ஆனசெயலன்பின்வருமார்வத்தான்மகிழ்ந்தாற்ற
வானமுறைவழங்காமன்மாநிலத்துவளஞ்சுருங்கப்
போனகநெற்படிநிரம்பவெடுப்பதற்குப்போதாமை
மானமழிகொள்கையினான்மனமயங்கிவருந்துவார். (௧௨)

வன்றொண்டர்திருவாரூர்மாளிகைக்குநெல்லெடுக்க
இன்றுகுறையாகின்றதென்செய்கேனெனநினைந்து
துன்றுபெருங்கவலையினாற்றுயரெய்தியுண்ணாதே
யன்றிரவுதுயில்கொள்ளவங்கணர்வந்தருள்புரிவார். (௧௩)

ஆரூரன்றனக்குன்பாலனெற்றந்தோமென்றருளி
நீரூருஞ்சடைமுடியார்நிதிக்கோமான்றனையேவப்
பேரூர்மற்றதனெல்லையுடங்கவுநென்மலைபிறங்கக்
காரூருநெடுவிசும்புங்கரக்கநிறைந்தோங்கியதால். (௧௪)

அவ்விரவுபுலர்காலையுணர்ந்தெழுவாரதுகண்டே
யெவ்வுலகினினென்மலைதானிதுவென்றேயதிசயித்துச்
செவ்வியபொன்மலைவளைத்தார்திருவருளின்செயல்போற்றிக்
கொவ்வைவாய்ப்பரவையார்கொழுநனையேதொழுதெழுவார். (௧௫)

வேறு

நாவலூர்மன்னனார்க்குநாயனாரளித்தநெல்லிங்
கியாவராலெடுக்கலாகுமிச்செயலவர்க்குச்சொல்லப்
போவன்யானென்றுபோந்தார்புகுந்தவாறருளிச்செய்து
தேவர்கள்பெருமானேவநம்பியுமெதிரேசென்றார். (௧௬)

குண்டையூர்க்கிழவர்தாமுமெதிர்கொண்டுகோதில்வாய்மைத்
தொண்டனார்பாதந்தன்னிற்றொழுதுவீழ்ந்தெழுந்துநின்று
பண்டெலாமடியேன்செய்தபணியெனக்கின்றுமுட்ட
அண்டர்தம்பிரானார்தாமேநென்மலையளித்தாரொன்று. (௧௭)

மனிதராலெடுக்குமெல்லைத்தன்றுநென்மலையிதுக்க
மினியெனாற்செய்யலாகும்பணியன்றிதென்னக்கேட்டுப்
பனிமதிமுடியாரன்றேயுமக்குநெல்லளித்தாரொன்றே
யினியனமொழிந்துதாமுங்குண்டையூரெய்தவந்தார். (௧௮)

விண்ணினையளக்குநெல்லின்வெற்பினைநம்பிநோக்கி
யண்ணலைத்தொழுதுபோற்றியதிசயமிகவுமெய்தி
யெண்ணில்சீர்ப்பரவையில்லத்திந்நெல்லையெடுக்கவாளுந்
தண்ணிலவணிந்தார்தாமேதரிலன்றியொண்ணாதென்று. (௧௯)

ஆளிடவேண்டிக்கொள்வா ரருகுதிருப் பதியான
கோளிலியிற்றம்பெருமான் கோயிலினை வந்தெய்தி
வாளனகண்மடவாள் வருந்தாமே யெனும்பதிக
மூளவருங்காதலுடன் முன்றொழுது பாடுதலும். (௨0)

திருச்சிற்றம்பலம்.

பகற்பொழுதுகழிந்ததற்பின்பரவைமனையளவன்றி
மிகப்பெருகுநெல்லுலகில்விளங்கியவாரூர்நிறையப்
புகப்பெய்துதருவனநம்பூதங்களெனவிசும்பி
னிகர்ப்பரிய தொருவாக்கு நிகழ்ந்ததுநின்மலனருளால். (௨௧)

தம்பிரானருள்போற்றித்தரையின்மிசைவிழுந்தெழுந்தே
யும்பராலுணர்வரியதிருப்பாதந்தொழுதேத்திச்
செம்பொனேர்சடையாரைப்பிறபதியுந்தொழுதுபோய்
நம்பராரூரணைந்தார்நாவலூர்நாவலனார். (௨௨)

பூங்கோயின்மகிழ்ந்தருளும்புராதனரைப்புக்கிறைஞ்சி
நீங்காதபெருமகிழ்ச்சியுடனேத்திப்புறம்போந்து
பாங்கானார்புடைசூழ்ந்துபோற்றிசைக்கப்பரவையா
ரோங்குதிருமாளிகையினுள்ளணைந்தாராரூரர். (௨௩)

கோவைவாய்ப்பரவையார்தாமகிழும்படிகூறி
மேவியவர்தம்மோடுமிகவின்புற்றிருந்தற்பின்
சேவின்மேலுமையோடும்வருவார்தந்திருவருளி
னேவலினாலவ்விரவுபூதங்கண்மிக்கெழுந்து. (௨௪)

குண்டையூர்நென்மலையைக்குறட்பூதப்படைகவர்ந்து
வண்டுலாங்குழற்பரவைமாளிகையைநிறைவித்தே
யண்டர்பிரான்றிருவாரூரடங்கவுநென்மலையாக்கிக்
கண்டவாற்புதமெய்துங்காட்சிபெறவமைத்தனவால். (௨௫)

அவ்விரவுபுலர்காலையாரூரில்வாழ்வார்கண்
டெவ்வுலகில்விளைந்தனநென்மலையிவையென்றதிசயித்து
நவ்விமதர்த்திருநோக்கிநங்கைபுகழ்ப்பரவையார்க்
கிவ்வுலகுவாழவருநம்பியளித்தனவென்பார். (௨௬)

நீக்கரியநெற்குன்றுதனைநோக்கிநெறிபலவும்
போக்கரிதாயிடக்கண்டுமீண்டுந்தம்மில்புகுவார்
பாக்கியத்தின்றிருவடிவாம்பரவையார்க்கிந்நெல்லும்
போக்குமிடமரிதாகுமெனப்பலவும்புகல்கின்றார். (௨௭)

வன்றொண்டர்தமக்களித்தநெற்கண்டுமகிழ்சிறப்பார்
* இன்றுங்கண்மனையெல்லைக்குட்படுநெற்குன்றெல்லாம்
பொன்றங்குமாளிகையிற்புகப்பெய்துகொள்கவென
வென்றிமுரசறைவித்தார்மிக்கபுகழ்ப்பரவையார். (௨௮)

---

* இந்தத் திருவிருத்தத்தின்கருத்து உங்கள் வீட்டு முன்றிலின் எல்லையெழுதுவரைக்குமோ அதுவரையிலிருக்கும் நெல் அம்பாரத்தை உங்கள் வீட்டுக்குள்சேர்த்துக் கொள்ளுங்களென்று பறைசாற்றும்படி பரவைநாச்சியார் உத்தரவுசெய்தருளினர் என்பதாம்.

அணியாரூர்மறுகதனிலாளியங்கப்பறையறைந்த
பணியாலேமனைநிறைத்துப்பாங்கெங்குநெற்கூடு
கணிபாமற்கட்டிநகர்களிகூரப்பரவையார்
மணியாரம்புனைமார்பின்வன்றொண்டர்தமைப்பணிந்தார். (உகூ)

நம்பியாரூர்திருவாரூரினயந்துறைநாட்
செம்பொற்புற்றிடங்கொண்டுவீற்றிருந்தசெழுந்தேனைத்
தம்பெரியவிருப்பினொடுந்தாழ்ந்துணர்விற்பரவி
யிம்பருடனும்பர்களுமதிசயிப்பவேவந்தினார். (ங0)

குலவுபுகழ்க்கோட்புலியார்குறையிரந்துதம்பதிக்க
ணலகில்புகழாரூரரெழுந்தருளவடிவணங்கி
நிலவியவன்றொண்டரதுவிசைந்ததற்பினேரிறைஞ்சிப்
பலர்புகழும்பண்பினார்மீண்டுந்தம்பதியணைந்தார். (ஙக)

வேறு.

தேவரொதுங்கத்திருத்தொண்டர்மிடையுஞ்செல்வத்திருவாரூர்
காவல்கொண்டுதனியாளுங்கடவுட்பெருமான்கழல்வணங்கி
நாவலூராருள்பெற்றுநம்பர்பதிகள்பிறநண்ணிப்
பாவைபாகர்தமைப்பணிந்துபாடும்விருப்பிற்சென்றணைவார். (ஙஉ)

மாலுமயனுமுணர்வரியார்மகிழும்பதிகள்பலவணங்கி
ஞானநிகழ்கோட்புலியார்தந்நாட்டியத்தான்குடிநண்ண
ஏலும்வகையாலலங்கரித்தங்கவருமெதிர்கொண்டினிதிறைஞ்சிக்
கோலமணிமாளிகையின்கணார்வம்பெருகக்கொடுபுக்கார். (ஙங)

ஆண்டநம்பியுடன்வந்தவன்பரோடும்புறத்தணைந்து
நீண்டமதிற்கோபுரங்கடந்துநிரைமாளிகைவீதியிற்போந்து
பூண்டகாதன்மிகுதியினாற்புனைமங்கலதூரியமொலிப்ப
ஈண்டுபுகழ்க்கோட்புலியார்மாளிகையெய்தியுள்ளணைந்தார். (ஙச)

தூயமணிப்பொற்றவிசிலெழுந்தருளியிருக்கத்தூநீராற்
சேயமலர்ச்சேவடிவிளக்கித்தெளித்துக்கொண்டசெழும்புனலான்
மேயசுடர்மாளிகையெங்கும்விளங்கவீசியுளங்களிப்ப
ஏயசிறப்பிலர்ச்சனைகளெல்லாமியல்பின்முறைபுரிவார். (ஙரு)

பூந்தண்பனிநீர்கொடுசமைத்தபொருவில்விரைச்சந்தனமெனவே
வாய்ந்தவகிலினறுஞ்சாந்துவாசநிறைமான்மதச்சேறு
தோய்ந்தபுகைநாவியினறுநெய்தூயபசுங்கர்ப்பூரமுதல்
ஏய்ந்தவடைக்காயமுதினையவெண்ணின்மணிப்பாசனத்தேந்தி. ()

வேறு.

வேறுவேறுதிருப்பள்ளித்தாமப்பணிகண்மிகவெடுத்து
மாறிலாதமணித்திருவாபரணவருக்கம்பலதாங்கி
யீறில்விதத்துப்பரிவட்டமுழினிரைத்தேயெதிரிறைஞ்சி
யாறுபுனைந்தாரடித்தொண்டாளவில்பூசைகொளவளித்தார். (௩௭)

செங்கோலரசனருளுரிமைச்சேனாபதியாங்கோட்புலியார்
நங்கோமானைநாவலூர்நகரார்வேந்தைநண்பினாற்
றங்கோமனையிற்றிருவமுதுசெய்வித்திறைஞ்சித்தலைசிறந்த
பொங்கோதம்போற்பெருங்காதல்புரிந்தார்பின்னும்போற்றுவார்.

ஆனவிருப்பின்மற்றவர்தாமருமையான்முன்பெற்றெடுத்த
தேனார்கோதைச்சிங்கடியார்தமையுமவர்பின்றிருவுயிர்த்த
மானார்நோக்கின்வனப்பகையார்தமையுங்கொணர்ந்துவன்றொண்டர்
தூநாண்மலர்த்தாள்பணிவித்துத்தாமுந்தொழுதுசொல்லுவார். ()

அடியேன்பெற்றமக்களிவரடிமையாகக்கொண்டருளிக்
கடிசேர்மலர்த்தாடொழுதுய்யக்கருணையளிக்கவேண்டுமெனத்
தொடிசேர்தளிர்க்கையிவரெனக்குத்தூயமக்களெனக்கொண்டப்
படியேமகண்மையாக்கொண்டார்பரவையார்தங்கொழுநனார். (௪௦)

கோதைசூழ்ந்தகுழலாரைக்குறங்கின்வைத்துக்கொண்டிருந்து
காதனிறைந்தபுதல்வியராங்கருத்துட்கசிவாலணைத்துச்சி
மீதுகண்ணீர்விழமோந்துவேண்டுவனவுங்கொடுத்தருளி
நாதர்கோயில்சென்றடைந்தார்நம்பிதம்பிரான்றோழர். (௪௧)

வென்றிவெள்ளேறுயர்த்தருளும்விமலர்திருக்கோபுரமிறைஞ்சி
யொன்றுமுள்ளத்தொடுமன்பாலுச்சிகுவித்தகரத்தோடுஞ்
சென்றுபுக்குப்பணிந்துதிருப்பதிகம்பூணாணென்றெடுத்துக்
கொன்றைமுடியாரருளுரிமைசிறப்பித்தார்கோட்புலியாரை. (௪௨)

திருச்சிற்றம்பலம்

சிறப்பித்தருளுந்திருக்கடைக்காப்பதனினிடைச்சிங்கடியாரைப்
பிறப்பித்தெடுத்தபிதாவாகத்தம்மைநினைந்தபெற்றியினான்
மறப்பில்வகைச்சிங்கடியப்பனென்றேதம்மைவைத்தருளி
நிறப்பொற்புடையவிசைபாடிநிறைந்தவருள்பெற்றிறைஞ்சுவார். ()

அங்குநின்றுமெழுந்தருளியளவிலன்பினுண்மகிழச்
செங்கணுதலார்மேவுதிருவலிவலத்தைச்சேர்ந்திறைஞ்சி
மங்கைபாகர்தமைப்பதிகம்வலிவலத்தைக்கண்டேனென்
றெங்குநிகழ்ந்ததமிழ்மாலையெடுத்துத்தொடுத்தவிசைபுனைவார். ()

திருச்சிற்றம்பலம்

நன்றுமகிழுஞ்சம்பந்தர்நாவுக்கரசர்பாட்டுவந்தீ
ரென்றுசிறப்பித்திறைஞ்சிமகிழ்ந்தேத்தியருள்பெற்றெழுந்தருளி
மன்றினிடையேநடம்புரிவார்மருவுபெருமைத்திருவாரூர்
சென்றுகுறுகிப்பூங்கோயிற்பெருமாள்செம்பொற்கழல்பணிந்து. ()

இறைஞ்சிப்போந்துபரவையார்திருமாளிகையிலெழுந்தருளி
நிறைந்தவிருப்பின்மேவுநாணீடுசெல்வத்திருவாரூர்ப்
புறம்பூருணியகோயில்களும்பணிந்துபோற்றிப்புற்றிடமா
யுறைந்தபெருமான்கழல்பிரியாதோவாவின்பமுற்றிருந்தார். (சசு)

செறிபுன்சடையார்திருவாரூர்த்திருப்பங்குனியுத்திரத்திருநாள்
குறுகவாலும்பரவையார்கொடைக்குவிழாவிற்குறைவறுக்க
நிறையும்பொன்கொண்டணைவதற்குநினைந்துநம்பிதிருப்புகலூ
ரிறைவர்பாதம்பணியவெழுந்தருளிச்சென்றங்கெய்தினார். (சஎ)

சென்றுவிரும்பித்திருப்புகலூர்த்தேவர்பெருமான்கோயின்மணி
முன்றில்பணிந்துவலங்கொண்டுமுதல்வர்முன்புவீழ்ந்திறைஞ்சித்
தொன்றுமரபினடித்தொண்டுதோய்ந்தவன்பிற்றுதித்தெழுந்து
நின்றுபதிகவிசைபாடிநினைத்தகருத்துநிகழ்விப்பார். (சஅ)

சிறிதுபொழுதுகுப்பிட்டுச்சிந்தைமுன்னமங்கொழிய
வறிதுபுறம்போந்தருளியயன்மடத்திலணையார்வன்றொண்ட
ரறிவுகூர்ந்தவன்பருடனணிமுன்றிலினோருகிருப்ப
மறிவண்கையாரருளேபோமலர்க்கண்டுயில்வந்தெய்தியதால். (சகூ)

துயில்வந்தெய்தத்தம்பிரான்றோழராங்குத்திருப்பணிக்குப்
பயிலுஞ்சுடுமட்பலகைபலகொணர்வித்துயரம்பண்ணித்தேன்
அயிலுஞ்சுரும்பார்மலர்ச்சிகழிமுடிமேலணியாவுத்தரிய
வெயிலுந்தியவெண்பட்டதன்மேல்விரித்துப்பள்ளிமேவினார். (ருo)

சுற்றுமிருந்ததொண்டர்களுந்துயிலுமளவிற்றுணைமலர்க்கண்
பற்றுந்துயினீங்கிடப்பள்ளியுணர்ந்தார்பரவைகேள்வனார்
வெற்றிவிடையாரருளாலேவேமண்கல்லேவிரிசுடர்ச்செம்
பொற்றிண்கனகமாக்கண்டுபுகலூரிறைவரருள்போற்றி. (ருக)

தொண்டருணரமகிழ்ந்தெழுந்துதுணைக்கைக்கமலமுகைதலைமேற்
கொண்டுகோயிலுட்புக்குக்குறிப்பிலடங்காப்பேரன்பு
மண்டுகாதலுறவணங்கிவாய்த்தமதுரமொழிமாலை
பண்டங்கிசையிற்றம்மையேபுகழ்ந்தென்றெடுத்துப்பாடினார். (ருஉ)

திருச்சிற்றம்பலம்

பதிகம்பாடித்திருக்கடைக்காப்பணிந்துபரவிப்புறம்புபோந்
தெதிரிலின்பமிம்மையேதருவாரருள்பெற்றெழுந்தருளி
நிதியின்குவையுமுடன்கொண்டுநிறையுநதியுங்குறைமதியும்
பொதியுஞ்சடையார்திருப்பனையூர்புகுவார்புரிநூன்மணிமார்பர். ()

செய்யசடையார்திருப்பனையூர்ப்புறத்துத்திருக்கூத்தொடுங்காட்சி
யெய்தவருளவெதிர்சென்றங்கெழுந்தவிருப்பால்விழுந்திறைஞ்சி
யையராங்கிலாடுமாவல்லாரவரேயழகியரென்
றுய்யவுலகுபெறும்பதிகம்பாடியருள்பெற்றுடன்போந்தார். (ருச)

திருச்சிற்றம்பலம்

வளமல்கியசீர்த்திருப்பனையூர்வாழ்வாரேத்தவெழுந்தருளி
யளவில்செம்பொனிட்டிகைகளாலமைந்தநெருங்கியணியாரூர்த்
தளவமுறுவற்பரவையார்தம்மாளிகையிற்புகத்தாமு
முளமன்னியதம்பெருமானார்தம்மைவணங்கியுவந்தணைவார். (ருரு)

வந்துபரவைப்பிராட்டியார்மகிழவைகிமருவுநா
ளந்தணூர்மருங்கணியகோயில்பலவுமணைந்திறைஞ்சிச்
சிந்தைமகிழவிருப்பினொடுந்தெய்வப்பெருமாடிருவாரூர்
முந்திவணங்கியினிதிருந்தார்முனைப்பாடியர்தங்காவலனார். (ருசு)

பலநாளமர்வார்பரமர்திருவருளாலிங்குநின்றும்போய்ச்
சிலைமாமேருவீரனார்திருநன்னிலத்துச்சென்றெய்தி
வலமாவந்துகோயிலினுள்வணங்கிமகிழ்ந்துபாடினார்
தலமார்கின்றதண்ணியல்வெம்மையினானென்னுந்தமிழ்மாலை. (ருஎ)

திருச்சிற்றம்பலம்

பாடியங்குவைகியபின்பரமர்வீழிமிழலையினி
னீடுமறையாண்மேம்பட்டவந்தணாளர்நிறைந்தீண்டி
நாடுமகிழவவ்வளவுநடைக்காவணம்பாவாடையுடன்
மாடுகதலிபூகநிரைமல்கமணித்தோரணநிரைத்து. (ருஅ)

வந்துநம்பிதம்மையெதிர்கொண்டுபுக்கார்மற்றவருஞ்
சிந்தைமலர்ந்துதிருவீழிமிழலையிறைஞ்சிச்சேண்விசும்பின்
முந்தையிழிந்தமொய்யொளிசேர்கோயிறன்னைமுன்வணங்கிப்
பந்தமறுக்குநம்பெருமான்பாதம்பரவிப்பணிகின்றார். (ருகூ)

படங்கொளரவிற்றுயில்வோனும்பதுமத்தோனும்பரவரிய
விடங்கன்விண்ணோர்பெருமானைவிரவும்புளகமுடன்பரவி
யடங்கல்வீழிகொண்டிருந்தீரடியேனுக்குமருளுமெனத்
தடங்கொள்செஞ்சொற்றமிழ்மாலைசாத்தியங்குச்சாருநாள். (சுo)

திருச்சிற்றம்பலம்

வாசியறிந்துகாசளிக்கவல்லமிழலைவாணர்பாற்
றேசுமிக்கதிருவருண்முன்பெற்றுத்திருவாஞ்சியத்தடிகள்
பாசமறுத்தாட்கொள்ளுந்தாள்பணிந்துபொருவனரென்னு
மாசில்பதிகம்பாடியமர்ந்தரிசிற்கரைப்புத்தூரணைந்தார். (௬௧)

திருச்சிற்றம்பலம்

செழுநீர்நறையூர்நிலவுதிருச்சித்தீச்சரமும்பணிந்தேத்தி
விழுநீர்மையினிற்பெருந்தொண்டர்விருப்பினோடுமெதிர்கொள்ள
மழுநீடிளமான்கரதலத்திலுடையார்திருப்புத்தூர்வணங்கித்
தொழுநீர்மையினிற்றுதித்தேத்தித்தொண்டர்சூழவுறையுநாள். ()

திருச்சிற்றம்பலம்

புனிதனார்முன்புகழ்த்துணையார்க்கருளுந்திறமும்போற்றிசைத்து
முனிவர்போற்றவெழுந்தருளிமுரிவெள்ளக்கங்கையினிற்
பனிவெண்டிங்களணிசடையார்பதிகள்பலவும்பணிந்துபோந்
தினியநினைவிலெய்தினாரிறைவர்திருவாவடுதுறையில் (௬௩)

திருச்சிற்றம்பலம்

விளங்குந்திருவாவடுதுறையின்மேயார்கோயில்புடைவலங்கொண்
டுளங்கொண்டுருகுமன்பினுடனுள்புக்கிறைஞ்சியேத்துவார்
வளங்கொள்பதிகமறையவனென்றெடுத்துவளவன்செங்கணான்
றுளங்கொள்பிறப்புஞ்சிறப்பித்துத்தமிழ்ச்சொன்மாலைசாத்தினார். ()

திருச்சிற்றம்பலம்

சாத்தியங்குவைகுநாட்டயங்குமன்பருடன்கூடப்
பேர்த்துமிறைஞ்சியருள்பெற்றுப்பெண்ணோர்பாகத்தண்ணலார்
தீர்த்தப்பொன்னித்தென்கரைமேற்றிகழும்பதிகள்பலபணிந்து
மூர்த்தியார்தம்மிடைமருதையடைந்தார்முனைப்பாடித்தலைவர். ()

மன்னுமருதினமர்ந்தவரைவணங்கிமதுரச்சொன்மலர்கள்
பன்னிப்புனைந்துபணிந்தேத்திப்பரவிப்போந்துதொண்டருடன்
அந்நற்பதியிலிருந்தகல்வாரானார்திருநாகேச்சரத்தை
முன்னிப்புக்குவலங்கொண்டுமுதல்வர்திருத்தாள்வணங்குவார். ()

திருச்சிற்றம்பலம்

பெருகும்பதிகம்பிறையணிவாணுதலாள்பாடிப்பெயர்ந்துநிறை
திருவின்மலியுஞ்சிவபுரத்துத்தேவர்பெருமான்கழல்வணங்கி
யுருகுஞ்சிந்தையுடன்போந்தேயுமையோர்பாகர்தாமகிழ்ந்து
மருவும்பதிகள்பிறபணிந்துகலையநல்லூர்மருங்கணைந்தார். (௬௭)

திருச்சிற்றம்பலம்

செம்மைமறையோர்திருக்கலையநல்லூரிறைவர்சேவடிக்கீழ்
மும்மைவணக்கம்பெறவிறைஞ்சிமுன்புபரவித்தொழுதெழுவார்
கொம்மைமருவுகுரும்பைமுலையுமையாளென்னுந்திருப்பதிக
மெய்ம்மைப்புராணம்பலவுமிகச்சிறப்பித்திசையின்விளம்பினார் ()

திருச்சிற்றம்பலம்

அங்குநின்றுதிருக்குடமூக்கணைந்துபணிந்துபாடிப்போய்
மங்கைபாகர்வலஞ்சுழியைமருவிப்பெருகுமன்புருகத்
தங்குகாதலுடன்வணங்கித்தமிழாற்பரசிபரசினுக்குத்
திங்கண்முடியாரடியளித்ததிருநல்லூரைச்சென்றணைந்தார். (சுகூ)

நல்லூரிறைவர்கழல்போற்றிநவின்றுநடுவுநம்பர்பதி
யெல்லாமிறைஞ்சியேத்திப்போற்றிசையாற்பரவுந்தம்முடைய
சொல்லூதியமாவணிந்தவர்தாஞ்சோற்றுத்துறையின்மருங்கெய்தி
யல்லூர்கண்டர்கோயிலினுளடைந்துவலங்கொண்டடிபணியார். ()

அழனீரொழுகியனையவெனுமஞ்சொற்பதிகமெடுத்தருளிக்
கழனீடியவன்பினிற்போற்றுங்காதல்கூரப்பரவியபின்
கெழுநீர்மையினிலருள்பெற்றுப்போந்துபரவையார்கேள்வர்
முழுநீறணிவாரமர்ந்தபதிபலவும்பணிந்துமுன்னுவார். (எக)

திருச்சிற்றம்பலம்

தேவர்பெருமான்கண்டியூர்பணிந்துதிருவையாறதனை
மேவிவணங்கிப்பூந்துருத்திவிமலர்பாதந்தொழுதிறைஞ்சிச்
சேவில்வருவார்திருவாலம்பொழிலிற்சேர்ந்துதாழ்ந்திரவு
பாவுசயனத்தமர்ந்தருளிப்பள்ளிகொள்ளக்கனவின்கண். (எஉ)

மழபாடியினில்வருவதற்குநினைக்கமறந்தாயோவென்று
குழகாகியதங்கோலமெதிர்காட்டியருளக்குறித்துணர்ந்து
நிழலார்சோலைக்கரைப்பொன்னிவடபாலேறிநெடுமாட
வழகார்வீதிமழபாடியணைந்தார்நம்பியாரூரர். (எ௩)

அணைந்துதிருக்கோபுரமிறைஞ்சியன்பர்சூழவுடன்புகுந்து
பணங்கொளரவமணிந்தார்முன்பணிந்துவீழ்ந்துபரங்கருணை
குணங்கொளருளின்றிறம்போற்றிக்கொண்டபுளகத்துடனுருகிப்
புணர்ந்தவிசையாற்றிருப்பதிகம்பொன்னார்மேனியென்றெடுத்து. ()

திருச்சிற்றம்பலம்

அன்னேயுன்னையல்லாலியானாரைநினைக்கேனெனவேத்தித்
தன்னேரில்லாப்பதிகமலர்சாத்தித்தொழுதுபுறம்பணைந்து
மன்னும்பதியிற்சிலநாள்கள்வைகித்தொண்டருடன்மகிழ்ந்து
பொன்னிக்கரையினிருமருங்கும்பணிந்துமேல்பாற்போதுவார். ()

செய்யசடையார்திருவானைக்காவிலணைந்துதிருத்தொண்ட
ரெய்தமுன்வந்தெதிர்கொள்ளவிறைஞ்சிக்கோயிலுடன்புகுந்தங்
கையர்கமலச்சேவடிக்கீழார்வம்பெருகவீழ்ந்தெழுந்து
மெய்யுமுகிழ்ப்பக்கண்பொழிநீர்வெள்ளம்பரப்பிவிம்முவார். (எசு)

மறைகளாயநான்குமெனமலர்ந்தசெஞ்சொற்றமிழ்ப்பதிக
நிறையுங்காதலுடனெடுத்துநிலவுமன்பர்தமைநோக்கி
யிறையும்பணிவாரொரம்ஞமையுமாளுடையாரொன்றென்றேத்துவா
ருறையூர்ச்சோழன்மணியாரஞ்சாத்துந்திறத்தையுணர்ந்தருளி. ()

திருச்சிற்றம்பலம்

வளவர்பெருமான்றிருவாரஞ்சாத்திக்கொண்டுவரும்பொன்னிக்
கிளருந்திரைநீர்மூழ்குதலும்வழிப்போகக்கேதமுற
வளவிறிருமஞ்சனக்குடத்துளதுபுக்காட்டவணிந்தருளித்
தளருமவனுக்கருள்புரிந்ததன்மைசிறக்கச்சாற்றினார். (எஅ)

சாற்றியங்குத்தங்குநாட்டயங்கும்பவளத்திருமேனி
நீற்றர்கோயிலெம்மருங்குஞ்சென்றுதாழ்ந்துநிறைவிருப்பாற்
போற்றியங்குநின்றும்போய்ப்பொருவிலன்பர்மருவியதொண்
டாற்றும்பெருமைத்திருப்பாச்சிலாச்சிராமஞ்சென்றடைந்தார். ()

சென்றுதிருக்கோபுரமிறைஞ்சித்தேவர்மலிந்ததிருந்துமணி
முன்றில்வலங்கொண்டுள்ளணைந்துமுதல்வர்முன்னம்வீழ்ந்தி
நன்றுபெருகும்பொருட்காதனயப்புப்பெருகநாதரெதிர் [றைஞ்சி
நின்றும்பாவிநினைந்தபொருளருளாதொழியநேர்நின்று. (அ0)

அன்புநீங்காவச்சமுடனடுத்ததிருத்தோழமைப்பணியாற்
பொன்பெறாததிருவுள்ளம்புழுங்கவழுங்கிப்புறம்பொருபான்
முன்புநின்றதிருத்தொண்டர்முகப்பேமுறைப்பாடுடையார்போ
லென்புகரைந்துபிரானார்மற்றில்லையென்னவெடுக்கின்றார். (அக)

திருச்சிற்றம்பலம்

வேறு.

நித்தமுநீங்காநிலைமையினீங்கிநிலத்திடைப்புலங்கெழும்பிறப்
பா, லுய்த்தகாரணத்தையுணர்ந்துநொந்தடிமையொருமையாமெழு
மையுமுணர்த்தி,]யெத்தனையருளாதொழியினும்பிரானாரிவரலாதி
ல்லையேயென்பார், [வைத்தனன்றனக்கேதலையுமென்னாவுமெனவழு
த்தினார்வழித்தொண்டர். (அஉ)

இவ்வகைபாவித்திருக்கடைக்காப்புமேசினவலவென்றிசைப்ப
மெய்வகைவிரும்புதம்பெருமானார்விழுநிதிக்குவையளிதருள
மைவளர்கண்டர்கருணையேபரவிவணங்கியப்பதியிடைவைகி
யெவ்வகைமருங்குமிறைவர்தம்பதிகளிறைஞ்சியங்கிருந்தனர்
சிலநாள். (அங)

அப்பதிநீங்கியருளினாற்போகியாவினஞ்சாடுவார்நீடு [யெய்திப்
மெய்ப்பெயர்ப்பதியுமிருமருங்கிறைஞ்சியிறைவர்பைஞ்ஞீலியை[ண்டு
மைப்பணியணிவார்கோபுரமிறைஞ்சிப்பாங்கமர்புடைவலங்கொ
துப்புறழ்வேணியார்கழறொழுவார்தோன்றுகங்காளரைக்கண்டார்.

கண்டவர்கண்கள்காதனீர்வெள்ளம்பொழிதரக்கைகுவித்திறைஞ்சி
வண்டறைகுழலார்மனங்கவர்பலிக்குவருந்திருவடிவுகண்டவர்கள்
கொண்டதோர்மயலால்வினவுகூற்றாகக்குலவுசொற்கருலாவியவெ
றண்டர்நாயகரைப்பரவியாரணியவிடங்காமருந்தமிழ்புனைந்தார்.[ன்

திருச்சிற்றம்பலம்.

பரவியப்பதிகத்திருக்கடைக்காப்புச்சாத்திமுன்பணிந்தருள்
பெற்றுக், கரவிலன்பர்கடங்கூட்டமுந்தொழுதகலந்தினிதிருந்து
போந்தருளி, விரவியவீங்கோய்மலைமுதலாகவிமலர்தம்பதிபலவணை
ங்கிக், குரவலர்சோலையணிதிருப்பாண்டிக்கொடுமுடியணைந்தனர்
கொங்கில். (அசு)

கொங்கினிற்பொன்னித்தென்கரைக்கறையூர்க்கொடுமுடிக்
கோயின்முன்குறுகிச், சங்கவெண்குழையருழைவலஞ்செய்துசார்
ந்தடியன்பினிற்றாழ்ந்து, பொங்கியவேட்கைபெருகிடத்தொழுது
புனிதர்பொன்மேனியைநோக்கி, யிங்கிவர்தம்மைமறக்கவொண்ணு
தென்றெழுந்தமெய்க்குறிப்பினிலெடுப்ப. (அஎ)

அண்ணலாரடிகண்மறக்கினுநாமவஞ்செழுத்தறியவெப்பொ
ழுது, மெண்ணியநாவேயின்சுவைபெருகவிடையறாதியம்புமென்றி
தனைத், திண்ணியவுணர்விற்கொள்பவர்மற்றுப்பற்றிலேனெனச்செ
ழுந்தமிழா, னண்ணியவன்பிற்பிணிப்புறநவின்றார்நமச்சிவாயத்திரு
ப்பதிகம். (அஅ)

திருச்சிற்றம்பலம்

உலகெலாமுய்யவுறுதியாம்பதிகமுரைத்துமெய்யுணர்வுறு
வொருமை, நிலவியசிந்தையுடன்றிருவருளானீங்குவார்பாங்குநற்
பதிகள், பலவுமுன்பணிந்துபரமர்தாள்போற்றிப்போந்துதண்பனி
மலர்ப்படப்பைக், குலவுமிக்கொங்கிற்காஞ்சிவாய்ப்பேரூர்குறுகினு
ர்முறுகுமாதரவால். (அகூ)

அத்திருப்பதியையணைந்துமுன்றம்மையாண்டவர்கோயிலுட்
புகுந்து, மெய்த்தவர்சூழவலங்கொண்டுமுன்புமேவுவார்தம்மெதிர்
விளங்கி, நித்தனார்தில்லைமன்றுணின்றுடனீடியகோலநேர்காட்டக்,
கைத்தலங்குவித்துக்கண்களானந்தக்கலுழிநீர்பொழிதரக்கண்டார்

கண்டலுந்தொழுதுவீழ்ந்துடனெழுந்துகளையில்லன்பெனும்பி
னையுருக்கப், பூண்டவைம்புலனிற்புலப்படாவின்பம்புணர்ந்துமெய்
யுணர்வினிற்பொங்கத், தாண்டவம்புரியுந்தம்பிரானுரைத்தலைப்பட
க்கிடைத்தபின்சைவ,வாண்டகையாருக்கடுத்தவந்நிலைமைவிளைவை
யாரளவறிந்துரைப்பார். (கூக)

அந்நிலைநிகழ்ந்தவாரருள்பெற்றவன்பனாரின்பவெள்ளத்து
மன்னியபாடன்மகிழ்ந்துடன்பரவிவளம்பதியதனிடைமருவிப்
பொன்மணிமன்றுளெடுத்தசேவடியார்புரிநடங்கும்பிடப்பெற்றா
லென்னினிப்புறம்போயெய்துவதென்றுமீண்டெழுந்தருளுதற்
கெழுவார். (௩௨)

ஆயிடைநீங்கியருளினாற்செல்வாரருவரைச்சுரங்களும்பிறவும்,
பாயுநீர்நதியும்பலபலகடந்துபரமர்தம்பதிபலபணிந்து, மேயவண்ட
மிழால்விருப்பொடும்பரவிவெஞ்சமாக்கூடலும்பணிந்து, சேயிடை
கழியப்போந்துவந்தடைந்தார்தென்றிசைக்கற்குடிமலையில். (௩௩)

திருச்சிற்றம்பலம்

வேறு.

வீடுதருமிக்கற்குடியில்விழுமியாரைப்பணிந்திறைஞ்சி
நீடுவிருப்பிற்றிருப்பதிகநிறைந்தசிந்தையுடன்பாடிப்
பாடும்விருப்பிற்றொண்டருடன்பதிகள்பலவுமணைந்திறைஞ்சித்
தேடுமிருவர்காண்பரியார்திருவாறைமேற்றளிசென்றணைந்தார். ()

திருச்சிற்றம்பலம்

செம்பொன்மேருச்சிலைவளைத்தசிவனாராறைமேற்றளியி
னம்பர்பாதம்பணிந்திறைஞ்சிநாளுமகிழ்வார்க்கருள்கூட
வும்பர்போற்றுந்தானங்கள்பலவும்பணிந்துபோந்தணைவா
ரிம்பர்வாழவின்னம்பர்நகரைச்சேரவெய்தினார். (௩௫)

ஏரின்மருவுமின்னம்பர்மகிழ்ந்தவீசர்கழல்வணங்கி
யாருமன்பிற்பணிந்தேத்தியாராவருளாலங்கமர்வார்
போரின்மலியுங்கரியுரித்தார்மருவும்புறம்பயம்போற்றிச்
சேருமுள்ளமிக்கெழமெய்ப்பதிகம்பாடிச்செல்கின்றார். (௩௬)

வேறு.

அங்கமோதியோராறைமேற்றளியென்றெடுத்தமர்காதலிற்
பொங்குமின்றமிழால்விரும்புபுறம்பயந்தொழப்போதுமென்
றெங்குமன்னியவின்னிசைப்பதிகம்புனைந்துடனெய்தினார்
திங்கள்சூடியசெல்வர்மேவுதிருப்புறம்பயஞ்சேரவே. (௩௭)

அப்பதிக்கணமர்ந்ததொண்டருமன்றுவெண்ணெய்நல்லூரினி
லொப்பருந்தனிவேதியன்பழவோலைகாட்டிநின்றாண்டவ
ரிப்பதிக்கண்வந்தெய்தவென்னதவங்களென்றெதிர்கொள்ளவே
முப்புரங்களெரித்தசேவகர்கோயில்வாயிலின்முன்னினார். (௩௮)

நீடுகோபுரமுன்பிறைஞ்சிநிலாவுதொண்டரொடுள்ளணைந்
தாடன்மேவியவண்ணலாரடிபோற்றியஞ்சலிகோலிநின்
றேடுலாமலர்தூவியெட்டினொடைந்துமாகுமுறுப்பினாற்
பீடுநீடுநிலத்தின்மேற்பெருகப்பணிந்துவணங்கினார். (௩௯)

அங்குநீடருள்பெற்றுளார்வமிகப்பொழிந்தெழுமன்பினாற்
பொங்குநாண்மலர்ப்பாதமுன்பணிந்தேத்திமீண்டுபுறத்தணைந்
தெங்குமாகிநிறைந்துநின்றவர்தாமகிழ்ந்தவிடங்களிற்
றங்குகோலமிறைஞ்சுவாரருட்டாவிலன்பரோடெய்தினார். (௧00)

வேறு.

வம்புநீடலங்கன்மார்பின்வன்றொண்டர்வன்னிகொன்றை
தும்பைவெள்ளடம்புதிங்கடேயநீறணிந்தசென்னித்
தம்பிரானமர்ந்ததானம்பலபலசார்ந்துதாழ்ந்து
கொம்பனாராடனீடுகூடலையாற்றூர்சார. (௧0௧)

செப்பரும்பதியிற்சேரார்திருமுதுகுன்றநோக்கி
யொப்பரும்புகழாற்செல்லுமொருவழியுமையாளோடு
மெய்ப்பரம்பொருளாயுள்ளார்வேதியராகிநின்றார்
முப்புரிநூலுந்தாங்கிநம்பியாரூரர்முன்பு. (௧0௨)

நின்றவர்தம்மைநோக்கிநெகிழ்ந்தசிந்தையராய்த்தாழ்வா
ரின்றியாமுதுகுன்றெய்தவழியெமக்கியம்புமென்னக்
குன்றவில்லாளியாருங்கூடலையாற்றூரேறச்
சென்றதிவ்வழிதானென்றுசெல்வழித்துணையாச்செல்ல. (௧0௩)

கண்டவர்கைகள்கூப்பித்தொழுதுபின்றொடர்வார்காணார்
வண்டலர்கொன்றையாரைவடிவுடைமழுவென்றேத்தி
யண்டர்தம்பெருமான்போந்தவதிசயமறியேனென்று
கொண்டெழுவிருப்பினோடுங்கூடலையாற்றூர்புக்கார். (௧0௪)

திருச்சிற்றம்பலம்

கூடலையாற்றூர்மேவுங்கொன்றைவார்சடையினார்தம்
பீடுயர்கோயில்புக்குப்பெருகியவார்வம்பொங்க
வாடகப்பொதுவிலாடுமறைகழல்வணங்கிப்போற்றி
நீடருள்பெற்றுப்போந்துதிருமுதுகுன்றினேர்ந்தார். (௧0௫)

தடநிலைக்கோபுரத்தைத்தாழ்ந்துமுன்னிறைஞ்சிக்கோயில்
புடைவலங்கொண்டுபுக்குப்போற்றினர்தொழுதுவீழ்ந்து
நடநவில்வாரைநஞ்சியிடையெனுஞ்செஞ்சொன்மாலைத்
தொடைநிகழ்பதிகம்பாடித்தொழுதுகைசுமந்துநின்று. (௧0௬)

திருச்சிற்றம்பலம்

நாதர்பாற்பொருடாம்வேண்டிநண்ணியவண்ணமெல்லாங்
கோதறுமனத்துட்கொண்டகுறிப்பொடும்பரவும்போது
தாதவிழ்கொன்றைவேய்ந்தார்தரவருள்பெறுவார்சைவ
வேதியர்தலைவர்மீண்டுமெய்யில்வெண்பொடியும்பாட. (௧0௭)

பனிமதிச்சடையார்தாமும்பன்னிரண்டாயிரம்பொன்
னனியருள்கொடுக்குமாற்றுனல்கிடவுடையநம்பி
தனிவருமகிழ்ச்சிபொங்கத்தாழ்ந்தெழுந்தருகுசென்று
கனிவிடமிடற்றிஞர்முன்பின்னென்றுகமுறலுற்றார். (௧0அ)

அருளுமிக்கனகமெல்லாமடியனேற்கரூருள்ளோர்
மருளுறவியப்பவங்கேவரபெறவேண்டுமென்னத்
தெருளுறவெழுந்தவாக்காற்செழுமணிமுத்தாற்றிட்டிப்
பொருளினைமுழுதுமாரூர்க்குளத்திற்போய்க்கொள்கவென்றார். ()

என்றுதம்பிரானர்நல்குமின்னருள்பெற்றபின்னர்
வன்றொண்டர்மச்சம்வேண்டிக்கைக்கொண்டுமணிமுத்தாற்றிற்
பொன்றிரளெடுத்துநீருட்புகவிடப்போதுகின்று
ரன்றெனைவலிந்தாட்கொண்டவருளிதிலறிவேனென்று. (௧௧0)

மேவியகாதற்றொண்டுவிரவுமெய்விருத்திபெற்றார்
ஆவியின்விருத்தியானவந்தணர்புலியூர்மன்றிற்
காவிங்கண்டர்கூத்துக்கண்டுகும்பிடுவதென்று
வாவிசூழ்தில்லைமூதூர்வழிக்கொள்வான்வணங்கிப்போந்தார் (௧௧௧)

மாடுளபதிகள்சென்றுவணங்கிப்போய்மங்கைபாகர்
நீடியகடம்பூர்போற்றிநிறைந்தவானந்தக்கூத்த
ராடியதில்லைமூதூரணைந்தணிவாயில்புக்குச்
சேடியர்மாடமன்னுஞ்செழுந்திருவீதிசார்ந்தார் (௧௧௨)

பொற்றிருவீதிதாழ்ந்துபுண்ணியவிளைவாயோங்கு
நற்றிருவாயினண்ணிநலமலியலங்கன்மார்பர்
மற்றதன்முன்புமண்மேல்வணங்கியுள்புகுந்துபைம்பொற்
சுற்றுமாளிகைசூழ்வந்துதொழுதுகைதலைமேற்கொள்வார். (௧௧௩)

ஆடியதிருமுன்பானவம்பொனின்கோபுரத்தி
னூடுபுக்கிறைஞ்சியோங்குமொளிவளர்கனகமன்றி
னடிச்செய்யதாளைநண்ணுறவுண்ணிறைந்து
நீடுமானந்தவெள்ளக்கண்கணீர்நிரந்துபாய. (௧௧௪)

பாவுவாய்குளறிக்காதல்படிதிருப்படியைத்தாழ்ந்து
விரவுமெய்யங்கமைந்துமெட்டினும்வணங்கும்வேட்கை
பரவுறுதிருக்கூத்துள்ளமார்தரப்பெருகிநெஞ்சிற்
காவிலாதவனைக்கண்டுநிறைவுதங்கருத்திற்கொள்ள. (௧௧௫)

வேறு.

மடித்தாடுமடிமைக்கணன்றெடுத்துமன்னுயிர்கட்கருளுமாற்று
லடுத்தாற்றுநன்னெறிக்கணின்று லும்வழுவினர்களணையாவண்ணந்
தடுப்பானைப்பேரூரிற்கண்டநிலைசிறப்பித்துத்தனிக்கூத்தென் று
நடிப்பானைநாமனமேபெற்றவாறெனுங்களிப்பானயந்துபாடி. (ககசு)

திருச்சிற்றம்பலம்

மீளாதவருள்பெற்றுப்புறம்போந்துதிருவீதிமேவித்தாழ்ந்தே
யாளானவன்றொண்டரந்தணர்கடாம்போற்றவமர்ந்துவைகி
மாளாதபோன்பாற்பொற்பதியைவணங்கிப்போய்மறலிவீழத்
தாளாண்மைகொண்டவர்தங்கருப்பறியலூர்வணங்கிச்சென்று
தாழ்ந்தார். (ககஎ)

கூற்றுதைத்தார்திருக்கொகுடிக்கோயினண்ணிக்கோபுரத்தை
த்தொழுதுபுகுந்தன்பர்சூழ,வேற்றபெருங்காதலினாலிறைஞ்சியேத்
தியெல்லையிலாப்பெருமகிழ்ச்சிமனத்திலெய்தப்,போற்றிசைத்துப்
புறத்தணைந்தப்பதியின்வைகிப்புனிதரவர்தமைநினையுமின்பங்கூறிச்
சாற்றியமெய்த்திருப்பதிகஞ்சிம்மாந்தென்னுந்தமிழ்மாலைபுனைந்
தங்குச்சாருநாளில். (ககஅ)

கண்ணுதலார்விரும்புகருப்பறியலூரைக்கைதொழுதுநீக்கிப்
போய்க்கயல்கள்பாயு,மண்ணிவளம்படிக்கரையைநண்ணியங்குமா
தொருபாகத்தவர்தாள்வணங்கிப்போற்றி,யெண்ணில்புகழ்ப்பதிக
முமுன்னவனென்றேத்தியேகுவார்வாழ்கொளிபுத்தூரெய்தாது,பு
ண்ணியனார்போம்பொழுதுநினைந்துமீண்டுபுகுகின்றார்தலைக்கலனெ
ன்றெடுத்துப்போற்றி. (ககசு)

திருச்சிற்றம்பலம்

திருப்பதிகம்பாடியேசென்றங்கெய்தித்தேவர்பெருமானார்தங்கோ
யில்வாயி,லுருப்பொலியுமயிர்ப்புளகம்விரவத்தாழ்ந்தேயுள்ளணைந்
துபணிந்தேத்தியுருகுமன்பாற்,பொருப்பரையன்மடப்பாவையிட
ப்பாலானைப்போற்றிசைத்துப்புறம்போந்துதங்கிப்பூமென்,கருப்பு
வயல்வாழ்கொளிபுத்தூரைநீங்கிக்கானாட்டுமுள்ளூரிற்கலந்த
போது. (கஉ0)

கானாட்டுமுள்ளூரைச்சாரும்போதுகண்ணுதலாரெதிர்காட்சிகொடு
ப்பக்கண்டு,தூநாண்மென்மலர்க்கொன்றைச்சடையார்செய்யதுணை
ப்பாதமலர்கண்டுதொழுதேனென்று,வானாளுந்திருப்பதிகம்வள்வா
யென்னும்வண்டமிழின்றொடைமாலைமலரச்சாத்திச்,தேனாருமலர்
ச்சோலைமருங்குசூழ்ந்ததிருவெதிர்கொள்பாடியிணையெய்தச்செல்
வார். (கஉக)

திருச்சிற்றம்பலம்

எத்திசையுந்தொழுதேத்தமுக்கயானையெடுத்தெதிர்கொள்பாடியி
னையடைவோமென்னுஞ்,சித்தநிலைத்திருப்பதிகம்பாடிநைந்துசெ
ல்வமிகுசெழுங்கோயிலிறைஞ்சிநண்ணி,யத்தர்தமையடிவணங்கி
யங்குவைகியருள்பெற்றுத்திருவேள்விக்குடியிலெய்தி,முத்திதரும்
பெருமானைத்துருத்திகூடமூப்பதிலையெனுப்பதிகமொழிந்துவாழ்
ந்தார், (௧௨௨)

திருச்சிற்றம்பலம்

வேறு

காட்டுநீல்வேள்விக்கோலங்கருத்துறவணங்கிக்கா
ஞட்டியவுள்ளத்தோடுநம்பியாரூரர்போற்றி
யீட்டியதவத்தோர்சூழவங்குநின்றேகிபன்பு
பூட்டியாட்கொண்டார்மன்னுந்தானங்களிறைஞ்சிப்போந்து (௧௨௩)

வேறு.

எஞ்சாதபேரன்பிற்றிருத்தொண்டருடனெய்தி
நஞ்சாருங்கறைமிடற்றரிடம்பலவுநயந்தேத்தி
மஞ்சாரும்பொழிலுடுத்தமலர்த்தடங்கள்புடைசூழுஞ்
செஞ்சாலிவயன்மருதத்திருவாரூர்சென்றடைந்தார். (௧௨௪)

செல்வமலிதிருவாரூர்த்தேவரொடுமுனிவர்களு
மல்குதிருக்கோபுரத்துவந்திறைஞ்சியுள்புக்கங்
கெல்லையிலாக்காலமிகவெடுத்தமலர்க்கைகுவித்துப்
பல்குதிருத்தொண்டருடன்பரமர்திருமுன்னணைந்தார். (௧௨௫)

மூவாதமுதலாகிநடுவாகிமுடியாத
சேவாருங்கொடியாரைத்திருமூலட்டானத்து
ளோவாதபெருங்காதலுடனிறைஞ்சிப்புறம்போந்து
தாவாதபுகழ்ப்பரவையார்திருமாளிகைச்சார்ந்தார். (௧௨௬)

பொங்குபெருவிருப்பினொடுபுரிகுழலார்பலர்போற்றப்
பங்கயக்கட்செங்கனிவாய்ப்பரவையாரடிவணங்கி
யெங்களையுநினைந்தருளிற்றெனவியம்பவினிதளித்து
மங்கைநல்லாரவரோடுமகிழ்ந்துறைந்துவைகுவார். (௧௨௭)

நாயனார்முதுகுன்றர்நமக்களித்தநன்னிதியந்
தூயமணிமுத்தாற்றிற்புகவிட்டேந்துணைவரவர்
கோயிலின்மாளிகைமேல்பாற்குளத்திலவரருளாலே
போயெடுத்துக்கொடுபோதப்போதுவாயெனப்புகல. (௧௨௮)

என்னவதிசயமிதுதானென்சொன்னவாறென்று
மின்னிடையார்சிறுமுறுவலுடன்விளம்பமெய்புணர்ந்தார்
நன்னுதலாயென்னுடையநாதனருளாற்குளத்திற்
பொன்னடையவெடுத்துனக்குத்தருவதுபொய்யாதென்று. (௧௨௯)

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS-90

22997

ஆங்கவருமுடன்போதவளவிறந்தவிருப்பினுடன்
பூங்கோயிலுண்மகிழ்ந்தபுனிதர்கழல்புக்கிறைஞ்சி
யோங்குதிருமாளிகையைவலம்வந்தங்குடன்மேலைப்
பாங்குதிருக்குளத்தணைந்தார்பரவையார்தனித்துணைவர். (நங.0)

மற்றதனின்வடகீழ்பாற்கரைமீதுவந்தருளி
முற்றிழையார்தமைநிறுத்திமுனைப்பாடித்திருநாடர்
கற்றைவார்சடையாரைக்கைதொழுதுகுளத்திலிழிந்
தற்றைநாளிட்டெடுப்பார்போலங்குத்தடவுதலும். (கங.க)

நீற்றழகர்பாடிவந்துதிருவிளையாட்டினினின்று
மாற்றறுசெம்பொன்குளத்துவருவியாதொழிந்தருள
வாற்றினிலிட்டுக்குளத்திற்றேடுவாரருளிதுவோ
சாற்றுமெனக்கோற்றொடியார்மொழிந்தருளத்தனித்தொண்டர். ()

முன்செய்தவருள்வழியேமுருகலர்பூங்குழற்பரவை
தன்செய்யவாயினகைதாராமேதாருமென
மின்செய்தநூன்மார்பின்வேதியர்தாமுதுகுன்றிற்
பொன்செய்தமேனியனேயெனப்பதிகம்போற்றிசைத்து. (கங.ங)

திருச்சிற்றம்பலம்

முட்டவிமையோரறியமுதுகுன்றிற்றந்தபொருள்
சட்டநான்பெறுதொழிந்ததளர்வினூற்கையறவா
யிட்டளத்தையிவளெதிரேகெடுத்தருளுமெனுந்திருப்பாட்
டெட்டளவும்பொன்காட்டாதொழிந்தருளவேத்துவார். (கங.ச)

ஏத்தாதேயிருந்தறியேனெனுந்திருப்பாட்டெவ்வுலகுங்
காத்தாடுமம்பலத்துக்கண்ணுளனுங்கண்ணுதலைக்
கூத்தாதந்தருளாயிக்கோமளத்தின்முன்னென்று
நீத்தாருந்தொடர்வரியநெறியினின்றார்பரவுதலும். (கங.ரு)

கொந்தவிழ்பூங்கொன்றைமுடிக்கூத்தனார்திருவருளால்
வந்தெழுபொன்றிரளெடுத்துவருமுறையாற்கரையேற்ற
வந்தரத்துமலர்மாரிபொழிந்திழிந்ததவனியுள்ளோ
ரிந்தவதிசயமென்னேயார்பெறுவாரெனத்தொழுதார். (கங.கூ)

ஞாலம்வியப்பெய்தவருநற்கனகமிடையெடுத்து
மூலமெனக்கொடுபோந்தஆணியின்முன்னுரைப்பிக்க
நீலமிடற்றவாருளாலுரைதாழப்பின்னுநெடு
மாலயனுக்கரியகழல்வழுத்தினார்வன்றொண்டர் (கங.எ)

மீட்டுமவர்பரவுதலுமெய்யன்பரன்பில்வரும்
பாட்டுவந்துகூத்துவந்தார்படு*வாசிமுடிவெய்து
0ஓட்டறுசெம்பொன்னொக்கவொருமாவுங்குறையாமல்
காட்டுதலுமகிழ்ந்தெடுத்துக்கொண்டுகரையேறினார். (௧௩௮)

கரையேறிப்பரவையாருடன்கனகமானதெலா
நிரையாளிற்சுமையேற்றிநெடுநிலைமாளிகைபோக்கித்
திரையேறும்புனற்சடிலத்திருமூலட்டானத்தார்
விரையேறுமலர்ப்பாதந்தொழுதணைந்தார்வீதியினில். (௧௩௯)

வந்துதிருமாளிகையினுட்புகுந்துமங்கலவாழ்த்
தந்தமிலாவகையேத்துமளவிறந்தாரொலிசிறப்ப
சிந்தைநிறைமகிழ்ச்சியுடன்சேயிழையாருடனமர்ந்தார்
கந்தமலிமலர்ச்சோலைநாவலர்தங்காவலனார். (௧௪0)

அணியாரூர்மணிப்புற்றினமர்ந்தருளும்பரம்பொருளைப்
பணிவாரங்கொருநாளிற்பாராட்டுந்திருப்பதிகந்
தணியாதவானந்தந்தலைசிறப்பத்தொண்டருடன்
றுணிவாய்போருள்வினவித்தொழுதாடிப்பாடுவார். (௧௪௧)

பண்ணிறையும்வகைபாறுதூங்கியெனவெடுத்தருளி
புண்ணிறையுமனக்களிப்பாலுறுபுளகமயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும்புனல்பொழியக்கரையிகந்தவானந்த
மெண்ணிறைந்தபடிதோன்றவேத்திமகிழ்ந்தின்புற்றார். (௧௪௨)

திருச்சிற்றம்பலம்.

இன்புற்றங்கமர்நாளிலீறிலருமறைபரவும்
வன்புற்றிலரவணிந்தமன்னவனருள்பெற்ற
அன்புற்றகாதலுடனளவிறந்தபிறபதியும்
பொன்புற்கென்றிடவொளிருஞ்சடையாரைத்தொழப்போவார். ()

பரிசனமுமுடன்போதப்பாங்கமைந்தபதிகடொறுங்
கரியுரிவையுரித்தார்தங்கழறொழுதுமகிழ்ந்தேத்தித்
துரிசறுநற்பெருந்தொண்டர்நள்ளாறுதொழுவதற்குப்
புரிவுறுமெய்த்திருத்தொண்டரெதிர்கொள்ளப்புக்கணைந்தார். ()

விண்டடவுகோபுரத்தைப்பணிந்துகரமேற்குவித்துக்
கொண்டுபுகுந்தண்ணலார்கோயிலினைவலஞ்செய்து
மண்டியபேரன்பினொடுமன்னுதிருநள்ளாறர்
புண்டரிகச்சேவடிக்கீழ்ப்பொருந்தநிலமிசைப்பணிந்தார். (௧௪௫)

* வாசி என்பது-வட்டம்.

0 ஓட்டறுசெம்பொன் என்பது-மாற்றுயர்ந்தபொன் ஓடவிட்ட செம்பொன் என்றும் வழங்குகின்றது.

அங்கணரைப்பணிந்தேத்தியருளினாற்றொழுதுபோய்
மங்குலணிமணிமாடத்திருக்கடவூர்வந்தெய்தித்
திங்கள்வளர்முடியார்தந்திருமயானமும்பணிந்து
பொங்குமிசைப்பதிகமருவார்கொன்றையெனப்போற்றி. (௧௪௬)

திருச்சிற்றம்பலம்

திருவீரட்டானத்துத்தேவர்பிரான்சினக்கூற்றின்
பொருவீரந்தொலைத்தகழல்பணிந்துபொடியார்மேனி
மருவீரத்தமிழ்மாலைபுனைந்தேத்திமலைவளைத்த
பெருவீரர்வலம்புரத்துப்பெருகார்வத்தொடுஞ்சென்றார். (௧௪௭)

திருச்சிற்றம்பலம்

வரையோடுநிகர்புரிசைவலம்புரத்தார்கழல்வணங்கி
யுரைபோசைப்பதிகமெனக்கினியோதிப்போய்ச்சங்க
நிரையோடுமித்தூபமணித்தீபநித்திலப்பூந்
திரையோதங்கொண்டிறைஞ்சுந்திருச்சாய்க்காடெய்தினார். (௧௪௮)

திருச்சிற்றம்பலம்

தேவர்பெருமான்றன்னைத்திருச்சாய்க்காட்டினிற்பணிந்து
பாவலர்செந்தமிழ்மாலைத்திருப்பதிகம்பாடிப்போய்
மேவலர்தம்புரமெரித்தார்வெண்காடுபணிந்தேத்தி
நாவலர்காவலரடைந்தார்நனிபள்ளித்திருநகரில். (௧௪௯)

நனிபள்ளியமர்ந்தபிரான்கழல்வணங்கிநற்றமிழின்
புனிதநறுந்தொடைபுனைந்துதிருச்செம்பொன்பள்ளிமுதற்
பனிமதிசேர்சடையார்தம்பதிபலவும்பணிந்துபோய்த்
தனிவிடைமேல்வருவார்தந்திருநின்றியூர்சார்ந்தார். (௧௫௦)

திருச்சிற்றம்பலம்

நின்றியூர்மேயாரைநேசத்தாற்புக்கிறைஞ்சி
யொன்றியவன்புள்ளுருகிப்பாடுவாருடையவர
சென்றுமுலகிடர்நீங்கப்பாடியவேழெழுநூறு
மன்றுசிறப்பித்தஞ்சோற்றிருப்பதிகமருள்செய்தார். (௧௫௧)

திருச்சிற்றம்பலம்

அப்பதியிலன்பருடனமர்ந்தருள்வாரகலிடத்திற்
செப்பரியபுகழ்நீடூர்பணியாதுசெல்பொழுதி
லொப்பரியவுணர்வினானினைந்தருளித்தொழுதுறுவார்
மெய்ப்பொருள்வண்டமிழ்மாலைவிளம்பியேமீண்டணைந்தார் (௧௫௨)

மடலாரும்புனனீடூர்மருவினர்தாள்வணங்காது
விடலாமேயெனுங்காதல்விருப்புறுமத்திருப்பதிகம்
அடலார்சூலப்படையூர்தமைப்பாடியடிவணங்கி
யுடலாருமயிர்ப்புளகமிகப்பணிந்தங்குறைகின்றார். (கருங)

திருச்சிற்றம்பலம்

அங்கணினிதமர்ந்தருளாற்றிருப்புன்கூரணைந்திறைஞ்சிக்
கொங்கலருமலர்ச்சோலைத்திருக்கோலக்காவணையக்
கங்கைசடைக்கரந்தவர்தாமெதிர்காட்சிகொடுத்தருளப்
பொங்குவிருப்பாற்றொழுதுதிருப்பதிகம்போற்றிசைப்பார், (கருச)

திருஞானசம்பந்தர் திருக்கைகளாலொத்திப்
பெருகார்வத்துடன்பாடப்பிஞ்ஞகனார் கண்டிரங்கி
யருளாலேதிருத்தாளமளித்தபடிசிறப்பித்துப்
பொருண்மாலைத்திருப்பதிகம்பாடியேபோற்றிசைத்தார். (கருரு)

திருச்சிற்றம்பலம்

மூவாதமுழுமுதலார்முதற்கோலக்காவகன்று
தாவாதபுகழ்ச்சண்பைவலங்கொண்டுதாழ்ந்திறைஞ்சி
நாவார்முத்தமிழ்விரகர்நற்பதங்கள்பரவிப்போய்
மேவார்தம்புரஞ்செற்றார்குருகாவூர்மேவுவார். (கருசு)

உண்ணீரின்வேட்கையுடனுறுபசியான்மிகவருந்திப்
பண்ணீர்மைமொழிப்பரவையார்கொழுநர்வரும்பாங்கர்க்
கண்ணீடுதிருநுதலார்காதலவர்கருத்தறிந்து
தண்ணீரும்பொதிசோறுங்கொண்டுவழிச்சார்கின்றார். (கருஎ)

வேனிலுறுவெயில்வெம்மைதணிப்பதற்குவிரைகுளிர்மென்
பானன்மலர்த்தடம்போலும்பந்தரொருபாலமைத்தே
யானமறைவேதியராயருள்வேடங்கொண்டிருந்தார்
மானமருந்திருக்கரத்தார்வன்றொண்டர்தமைப்பார்த்து. (கருஅ)

குருகாவூரமர்ந்தருளுங்குழகர்வழிபார்த்திருப்பத்
திருவாரூர்த்தம்பிரான்றோழர் திருத்தொண்டருடன்
வருவாரப்பந்தரிடைப்புகுந்துதிருமறையவர்பாற்
பெருகார்வஞ்செலவிருந்தார்சிவாயநமவெனப்பேசி. (கருகூ)

ஆலநிழற்கீழிருந்தாரவர்தம்மையெதிர்நோக்கிச்
சாலமிகப்பசித்தீரிப்பொதிசோறுதருகின்றேன்
காலமினித்தாழாமேகைக்கொண்டிங்கினிதருந்தி
யேலநறுங்குளிர்தண்ணீர்குடித்திளைப்புத்தீருமென. (கசுo)

வுன்றொண்டராதுகேட்டுமறைமுனிவர் தரும்பொதிசோ
றின்றுநமக்கெதிர் விலக்கலாகாதென் றிசைந்தருளிப்
பொன்றங்குநூன்மார்பர் தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்றதிருத்தொண்டருடன் றிருவமுதுசெய்தருளி. (ககூக)

எண்ணிறைந்தபரிசனங்களெல்லாருமினிதருந்தப்
பண்ணியபின்னம்மருங்குபசித்தணைந்தார்களுமருந்த
உண்ணிறைந்தவாரமுதாயொருகாலுமுலவாதே
புண்ணியனார் தாமளித்தபொதிசோறுபொலிந்ததால். (ககூஉ)

சங்கரனார் திருவருள்போற்றண்ணீரின்சுவையார்ந்து
பொங்கிவருமாதவராலவர்நாமம்புகழ்ந்தேத்தி
பங்கயர்வாற்பள்ளியமர்ந்தருகணைந்தார்களுந்துயிலக்
கங்கைசடைக்கரந்தாரப்பந்தரொடுந் தாங்கரந்தார். (ககூங)

சித்தநிலைதிரியாததிருநாவலூர்மன்ன
ரத்தகுதியினிற்பள்ளியுணர்ந்தவரைக்காணாமை
யித்தனையாமாற்றமறிந்திலேனெனவெடுத்து
மெய்த்தகையதிருப்பதிகம்விளம்பியேசென்றடைந்தார். (ககூச)

திருச்சிற்றம்பலம்

குருகாவூரமர்ந்தருளுங்குழகனார்கோயிலினுக்
கருகார்பொற்கோபுரத்தையணைந்திறைஞ்சியுள்புக்கு
வருகாதல்கூரவலங்கொண்டுதிருமுன்வணங்கிப்
பருகாவின்னமுதத்தைக்கண்களாற்பருகினார். (ககூரு)

கண்ணார்ந்தவின்னமுதைக்கையாரத்தொழுதிறைஞ்சி
பண்ணார்ந்ததிப்பதிகம்பாடியேபணிந்தேத்தி
யுண்ணாடும்பெருங்காதலுடையவர்தாம்புறத்தெய்தி
நண்ணார்வத்தொண்டருடனங்கினிதுநயந்திருந்தார். (ககூகூ)

அந்நாளிற்றம்பெருமானருள்கூரப்பணிந்தகன்று
மின்னார்செஞ்சடைமுடியார்விரும்புமிடம்பலவணங்கிக்
கண்ணாடுமெயில்புடைசூழ்கழிப்பாலைதொழுதேத்தித்
தென்னாவலூர்மன்னர் திருத்தில்லைவந்தடைந்தார். (ககூஎ)

சீர்வளருந்திருத்தில்லைத்திருவீதிபணிந்துபுகுந்
தேர்வளர்பொற்றிருமன்றுளெடுத்தசேவடியிறைஞ்சி
பார்வளர்மறைவள்ளர்க்கும்பதியதனிற்பணிந்துறைவார்
போர்வளர்மேருச்சிலையார் திருத்தினைமாநகர்புகுந்தார் (ககூஅ)

திருத்தினைமாநகர்மேவுஞ்சிவக்கொழுந்தைப்பணிந்துபோய்
நிருத்தனாரமர்ந்தருளுநிறைபதிகள்பலவணங்கிப்
பொருத்தமிகுந்திருத்தொண்டர்போற்றுதிருநாவலூர்
கருத்தில்வருமாதரவாற்கைதொழச்சென்றெய்தினார். (௧௬௯)

திருநாவலூர்மன்னர்சேர்கின்றாரெனக்கேட்டுப்
பெருநாமப்பதியோருந்தொண்டர்களும்பெருவாழ்வு
வருநாளென்றலங்கரித்துவந்தெதிர்கொண்டுள்ளணையச்
செருநாகத்துரிபுனைந்தார்செழுங்கோயிலுள்ளணைந்தார். (௧௭௦)

மேவியவத்தொண்டர்குழாமிடைந்தாரவென்றெழுமோசை
மூவுலகும்போயொலிப்பமுதல்வனார்முன்பெய்தி
ஆவியினுமடைவுடையாரடிக்கமலத்தருள்போற்றிக்
கோவலனான்முகனெடுத்துப்பாடியேகும்பிட்டார். (௧௭௧

திருச்சிற்றம்பலம்

நலம்பெருகுமப்பதியினுடையவன்பொடுபணிந்து
குலம்பெருகுந்திருத்தொண்டர்குழாத்தோடுமினிதமர்ந்து
சலம்பெருகுஞ்சடைமுடியார்தாள்வணங்கியருள்பெற்றுப்
பொலம்புரிநூன்மணிமார்பர்புறபதியுந்தொழப்போவார். (௧௭௨)

தண்டகமாந்திருநாட்டுத்தனிவிடையார்மகிழ்விடங்க
டொண்டரெதிர்கொண்டணையத்தொழுதுபோய்த்தூயநதி
வண்டறைபூம்புறவுமலைவளமருதம்பலகடந்தே
யெண்டிசையோர்பரவுதிருக்கழுக்குன்றையெய்தினார். (௧௭௩)

தேனார்ந்தமலர்ச்சோலைத்திருக்கழுக்குன்றத்தடியா
ரானாதவிருப்பினொடுமெதிர்கொள்ளவடைந்தருளித்
தூநாள்வெண்மதியணிந்தசுடர்க்கொழுந்தைத்தொழுதிறைஞ்சிப்
பாநாடுமின்னிசையின்றிருப்பதிகம்பாடினார். (௧௭௪)

திருச்சிற்றம்பலம்

பாடியவப்பதியின்கணினிதமர்ந்துபணிந்துபோய்
நாடியநல்லுணர்வினொடுந்திருக்கச்சூர்தனைநண்ணி
யாடகமாமதில்புடைசூழாலக்கோயிலின்னமுதைக்
கூடியமெய்யன்புருகக்கும்பிட்டுப்புறத்தணைந்தார். (௧௭௫)

அணைந்தருளுமவ்வேலையமுதுசெய்யும்பொழுதாகக்
கொணர்ந்தமுதுசமைத்தளிக்கும்பரிசனமுங்குறுகாமைத்
தணந்தபசிவருத்தத்தாற்றம்பிரான்றிருவாயிற்
புணர்ந்தமதிற்புறத்திருந்தார்முனைப்பாடிப்புரவலனார். (௧௭௬)

வன்றொண்டர்பசிதீர்க்கமலையின்மேன்மருந்தானார்
மின்றங்குவெண்டலையோடொழிந்தொருவேற்றோடேந்தி
யன்றங்குவாழ்வாரோரந்தணராய்ப்புறப்பட்டுச்
சென்றன்பர்முகநோக்கியருள்கூரச்செப்புவார் (௧௭௭)

மெய்ப்பசியான்மிகவருந்தியிளைத்திருந்தீர்வேட்கைவிட
விப்பொழுதேசோறிரந்திங்கியானுமக்குக்கொணர்கின்றே
னப்புறநீரகலாதேசிறிதுபொழுதமருமெனச்
செப்பியவர்திருக்கச்சூர்மனைதோறுஞ்சென்றிரப்பார். (௧௭௮)

வெண்டிருநீற்றணிதிகழவிளங்குநூலொளிதுளங்கக்
கண்டவர்கண்மனமுருகக்கடும்பகற்போதிடும்பலிக்குப்
புண்டரிகக்கழல்புவிமேற்பொருந்தமனைதொறும்புக்குக்
கொண்டுதாம்விரும்பியாட்கொண்டவர்முன்கொடுவந்தார். (௧௭௯)

இரந்துதாங்கொடுவந்தவின்னடிசிலுங்கறியு
மரந்தைதரும்பசிதீரவருந்துமெனவளிப்பப்
பெருந்தகையார்மறையவர்தம்பேரருளின்றிறம்பேணி
நிரந்தபெருங்காதலினானேர்தொழுதுவாங்கினார். (௧௮0)

வாங்கியவத்திருவமுதுவன்றொண்டர்மருங்கணைந்த
வோங்குதவத்தொண்டருடனுண்டருளியுவந்திருப்ப
ஆங்கருகுநின்றார்போலவர்தம்மையறியாமே
நீங்கினாரெப்பொருளுந்நீங்காதநிலைமையினார். (௧௮௧)

திருநாவலூராளிசிவயோகியார்நீங்க
வருநாமமறையவனாரிறையவனாமெனமதித்தே
பெருநாதச்சிலம்பணிசேவடிவருந்தப்பெரும்பகற்கண்
ணுருநாடியெழுந்தருளிற்றென்பொருட்டாமெனவுருகி. (௧௮௨)

வேறு.

முதுவாயோரியென்றெடுத்துமுதல்வனார்தம்பெருங்கருணை
யதுவாமிதுவென்றதிசயம்வந்தெய்தக்கண்ணீர்மழையருவிப்
புதுவார்புனலின்மயிர்ப்புளகம்புதையப்பதிகம்போற்றிசைத்து
மதுவாரிதழிமுடியாரைப்பாடிமகிழ்ந்துவணங்கினார். (௧௮௩

திருச்சிற்றம்பலம்

வந்தித்திறைவாருளாற்போய்மங்கைபாகர்மகிழ்ந்தவிட
முந்தித்தொண்டரெதிர்கொள்ளப்புக்குமுக்கட்பெருமானைச் |ந்தே
சிந்தித்திடவந்தருள்செய்கழல்பணிந்துசெஞ்சொற்றொடைபுனை
யந்திச்செக்கர்ப்பெருகொளியாரமருங்காஞ்சிமருங்கணைந்தார். ()

அன்றுவெண்ணெய்நல்லூரிலரியுமயனுந்தொடர்வரிய
வென்றிமழவெள்விடையுயர்த்தார்வேதமுதல்வராய்வந்து [தாம்
நின்றுசபைமுன்வழக்குரைத்துநேரேதொடர்ந்தாட்கொண்டவர்
இன்றிங்கெய்தப்பெற்றோமென்றெயில்சூழ்காஞ்சிநகர்வாழ்வார். ()

மல்குமகிழ்ச்சிமிகப்பெருகமறுகுமணித்தோரணநாட்டி
யல்குதீபநிறைகுடங்களகிலின்றூபங்கொடியெடுத்துச்
செல்வமனைகளலங்கரித்துத்தெற்றியாடன்முழவதிரப்
பலகுதொண்டருடன்கூடிப்பதியின்புறம்போயெதிர்கொண்டார். ()

ஆண்டநம்பியெதிர்கொண்டவடியார்வணங்கவெதிர்வணங்கி
நீண்டமதிட்கோபுரங்கடந்துநிரைமாளிகைவீதியிற்போந்து
பூண்டகாதல்வாழ்த்தியுடன்புனைமங்கலதூரியமொலிப்ப
ஈண்டுதொண்டர்பெருகுதிருவேகாம்பரஞ்சென்றெய்தினார். ()

ஆழிநெடுமாலயன்முதலாமமரர்நெருங்குகோபுரமுன்
பூழியுறமண்மிசைமேனிபொருந்தவணங்கிப்புகுந்தருளிச்
சூழுமணிமாளிகைபலவுந்தொழுதுவணங்கிவலங்கொண்டு
வாழிமணிப்பொற்கோயிலினுள்வந்தாரணுக்கவன்றொண்டர். ()

கைகள்கூப்பிமுன்னணைவார்கம்பையாறுபெருகிவர
வையர்தமக்குமிகவஞ்சியாரத்தழுவிக்கொண்டிருந்த
மையுலாவுங்கருநெடுங்கண்மலையாளென்றும்வழிபடுபூஞ்
செய்யகமலச்சேவடிக்கீழ்த்திருந்துகாதலுடன்வீழ்ந்தார். (௧௮௯)

வீழ்ந்துபோற்றிப்பரவசமாய்விம்மியெழுந்துமெய்யன்பால்
வாழ்ந்தசிந்தையுடன்பாடிமாறாவிருப்பிற்புறம்போந்து
சூழ்ந்ததொண்டருடன்மருவுநாளிற்றொல்லைக்கச்சிநகர்த்
தாழ்ந்தசடையாராலயங்கள்பலவுஞ்சார்ந்துவணங்குவார். (௧௯௦)

சீரார்காஞ்சிமன்னுதிருக்காமக்கோட்டஞ்சென்றிறைஞ்சி
நீரார்சடையாரமர்ந்தருளுநீடுதிருமேற்றளிமேவி
யாராவன்பிற்பணிந்தேத்துமளவில்நொந்தாவொண்சுடராம்
பாரார்பெருமைத்திருப்பதிகம்பாடிமகிழ்ந்துபரவினார். (௧௯௧)

திருச்சிற்றம்பலம்

ஓணகாந்தன்றளிமேவுமொருவர்தம்மையுரிமையுடன்
பேணியமைந்ததோழமையாற்பெருகுமடிமைத்திறம்பேசி
காணமோடுபொன்வேண்டிநெய்யும்பாலுங்கலைவிளங்கும்
யாணர்ப்பதிகமெடுத்தேத்தியெண்ணினிதிபெற்றினிதிருந்தார். ()

திருச்சிற்றம்பலம்

அங்கணமர்வாரனேகதங்காவதத்தையெய்தியுள்ளணைந்து [தமிழ்
செங்கண்விடையார்தமைப்பணிந்துதேனெய்புரிந்தென்றெடுத்த
தங்குமிடமாமெனப்பாடித்தாழ்ந்துபிறவுந்தானங்கள்
பொங்குகாதலுடன்போற்றிப்புரிந்தப்பதியிற்பொருந்துநாள். ()

திருச்சிற்றம்பலம்

பாடலிசையும்பணியினாற்பரவைதழுவக்குழைகம்பர்
ஆடன்மருவுஞ்சேவடிகள்பரவிப்பிரியாதமர்கின்றார்
நீடமூதூர்ப்புனற்புறத்தினிலவும்பதிகடொழுவிருப்பான்
மாடநெருங்குவன்பார்த்தான்பனங்காட்டூரில்வந்தடைந்தார். (௧௯௪)

செல்வமல்குதிருப்பனங்காட்டூரிற்செம்பொற்செழுஞ்சுடரை
யல்லலறுக்குமருமருந்தைவணங்கியன்புபொழிகண்ணீர்
மல்கநின்றுவிடையின்மேல்வருவாரெனும்வண்டமிழ்ப்பதிக
நல்லவிசையினுடன்பாடிப்போந்துபுறம்புநண்ணுவார். (௧௯௫)

திருச்சிற்றம்பலம்

மன்னுதிருமாற்பேறணைந்துவணங்கிப்பரவித்திருவல்லந்
தன்னுளெய்தியிறைஞ்சிப்போய்ச்சாருமேல்பாற்சடைக்கற்றைப்
பின்னன்முடியாரிடம்பலவும்பேணிவணங்கிப்பெருந்தொண்டர்
சென்னிமுகிறோய்தருங்குவட்டுத்திருக்காளத்திமலைசேர்ந்தார் ()

தடுக்கலாகாப்பெருங்காதற்றலைநின்றருளுங்கண்ணப்பர்
இடுக்கண்களைந்தாட்கொண்டருளுமிறைவர்மகிழ்ந்தகாளத்தி
யடுக்கல்சேரவணைந்துபணிந்தருளாலேறியன்பாறு
மடுப்பத்திருமுன்சென்றெய்திமலைமேன்மருந்தைவணங்கினார் ()

வணங்கியுள்ளங்களிகூரமகிழ்ந்துபோற்றிமதுரவிசை
யணங்குசெண்டாடெனும்பதிகம்பாடியன்பாற்கண்ணப்பர்
மணங்கொள்மலர்ச்சேவடிபணிந்துவாழ்ந்துபோந்துமன்னுபதி
யிணங்குதொண்டருடன்கெழுமியின்புற்றிருக்குமந்நாளில் (௧௯௮)

திருச்சிற்றம்பலம்

வடமாதிரத்துப்பருப்பதமுந்திருக்கேதாரமலைமுதலா
இடமாவரனார்தாமுவந்தவெல்லாமிங்கேயிருந்திறைஞ்சி
நடமாடியசேவடியாரைநண்ணினார்போலுண்ணிறைந்து
திடமாங்கருத்திற்றிருப்பதிகம்பாடிக்காதல்சிறந்திருந்தார் (௧௯௯)

திருச்சிற்றம்பலம்

அங்குச்சிலநாள்வைகிப்பின்னருளாற்போந்துபொருவிடையார்
தங்குமிடங்களெனைப்பலவுஞ்சார்ந்துதாழ்ந்துதமிழ்பாடிப்
பொங்குபுணரிக்கரைமருங்குபுவியும்சிவலோகமும்போலத்
திங்கண்முடியாரமர்ந்ததிருவொற்றியூரைச்சென்றடைந்தார் (௨௱)

அண்ணல்தொடர்ந்தாவணங்காட்டியாண்டநம்பியெழுந்தருள
வெண்ணில்பெருமையாதிபுரியிறைவரடியாரெதிர்கொள்வார்
வண்ணவீதிவாயிறோறும்வாழைகமுகுதோரணங்கள்
சுண்ணநிறைபொற்குடந்தூபதீபமெடுத்துத்தொழவெழுங்கால் ()

வரமங்கலநல்லியமுழங்கவாசமாலையணியரங்கிற்
புரமங்கையர்கணடமாடப்பொழியும்வெள்ளப்பூமாரி
அரமங்கையருமமரர்களும்வீசவன்பருடன்புகுந்தார்
பிரமன்றலையிற்பலியுவந்தபிரானார்விரும்புபெருந்தொண்டர். ()

ஒற்றியூரினுமையோடுங்கூடநின்றாருயர்தவத்தின்
பற்றுமிக்கதிருத்தொண்டர்பரந்தகடல்போல்வந்தீண்டிச்
சுற்றுமணைந்துதுதிசெய்யத்தொழுதுதம்பிரானன்பர்
கொற்றமழவேறுடையவர்தங்கோயில்வாயிலெய்தினார். (௨௦௩)

வானையளக்குங்கோபுரத்தைவந்துபணிந்துபுகுந்துவளர்
கூனலிளவெண்பிறைச்சடையார்கோயில்வலங்கொண்டெதிர்
ஊனுமுயிருங்கரைந்துருகவுச்சிகுவித்தகையினுட [குறுகி
னானகாதலுடன்வீழ்ந்தாராராவன்பினாரூரர். (௨௦௪)

எட்டுவரியிலொற்றியூர்நீங்கலென்னுமெழுத்தறியு
நாட்டமலருந்திருநுதலார்நறும்பொற்கமலச்சேவடியிற்
கூட்டுமுணர்வுங்கொண்டெழுந்துகோதிலமுதவிசைகூடப்
பாட்டும்பாடிப்பரவியெனும்பதிகமெடுத்துப்பாடினார். (௨௦௫)

திருச்சிற்றம்பலம்.

பாடியறிவுபரவசமாம்பரிவுபற்றப்புறம்போந்து
நீடுவிருப்பிற்பெருங்காதனிறைந்தவன்பர்பலர்போற்றத்
தேடுமயனுந்திருமாலுமறிதற்கரியதிருப்பாதங்
கூடுங்காலங்களிலணைந்துபரவிக்கும்பிட்டினிதிருந்தார். (௨௦௬)

இதுமுதல் கூரு-கவி சங்கிலி நாச்சியார் கதை

இந்தநிலைமையாரிவரிங்கிருந்தார்முன்பேயிவர்க்காக
அந்தண்கயிலைமலைநீங்கியருளாற்போந்தவநிந்திதையார்
வந்துபுவிமேலவதரித்துவளர்ந்துபின்புவன்றொண்டர்
சந்தவிரைசூழ்புயஞ்சேர்ந்தபரிசுதெரியச்சாற்றுவாம். (௨௦௭)

நாலாங்குலத்திற்பெருகுநலமுடையார்வாழுஞாயிற்றின்
மேலாங்கொள்கைவேளாண்மைமிக்கதிருஞாயிறுகிழவர்
பாலாதரவுதருமகளாராகிப்பார்மேலவதரித்தார்
ஆலாலஞ்சேர்கறைமிடற்றாரருளான்முன்னையநிந்திதையார். ()



MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY

மலையான்மடந்தைமலர்ப்பாதமறவாவன்பால்வந்தநெறி
தலையாமுணர்வுவந்தணையத்தாமேயறிந்தசங்கிலியார்
அலையார்வேற்கட்சிறுமகளிராயத்தோடும்விளையாட்டு
நிலையாயினவப்பருவங்கடோறுநிகழநிரம்புவார். (உ0௯)

சீர்கொண்மரபில்வருஞ்செயலேயன்றித்தெய்வநிகழ்தன்மை
பாரிலெவருமதிசயிக்கும்பண்பில்வளரும்பைந்தொடியார்
வாருமணியவணியவாய்வளர்மென்முலைகளிடைவருத்தச்
சாரும்பதத்திற்றந்தையார்தங்கண்மனைவியார்க்குரைப்பார். (உக0)

வடிவுங்குணமுநம்முடையமகட்குமண்ணுளோர்க்கிசையும்
படிவமன்றிமேற்பட்டபரிசாம்பான்மையறிகிலோங்
கடிசேர்மணமுமினிநிகழுங்காலமென்னக்கற்புவளர்
கொடியேயனையமனைவியாரேற்குமாற்றாற்கொடுமென்றார். (உகக)

தாயாரோடுந்தந்தையார்பேசக்கேட்டசங்கிலியா
ரேயுமாற்றமன்றிதுவெம்பெருமானீசன்றிருவருளே
மேயவொருவர்க்குரியதியான்வேறென்விளையுமெனவெருவுற்
றாயவுணர்வுமயங்கிமிகவயர்ந்தேயவனிமேல்விழுந்தார். (உகஉ)

பாங்குநின்றதந்தையார்தாயார்பதைத்துப்பரிந்தெடுத்தே
யேங்குமுள்ளத்தினராகியிவளுக்கென்னோவுற்றதெனத்
தாங்கிச்சீதவிரைப்பனிநீர்தெளித்துத்தைவந்ததுநீங்க
வாங்குசிலைநன்னுதலாரைவந்ததுனக்கிங்கென்னென்றார். (உகங)

என்றுதம்மையீன்றெடுத்தார்வினவமறைவிட்டியம்புவா
ரின்றென்றிறத்துநீர்மொழிந்தவிதுவென்பரிசுக்கிசையாது
வென்றிவிடையாரருள்செய்தாரொருவர்க்குரியன்யானினிமேற்
சென்றுதிருவொற்றியூரணைந்துசிவனாரருளிற்செல்வனென. ()

அந்தமாற்றங்கேட்டவர்தாமயர்வும்பயமுமதிசயமும்
வந்தவுள்ளத்தினராகிமற்றமாற்றமறைத்தொழுகப்
பந்தநீடுமிவர்குலத்துநிகராமொருவன்பரிசறியான்
சிந்தைவிரும்பிமகட்பேசவிடுத்தார்சிலருஞ்சென்றிசைத்தார். ()

தாதையாருமதுகேட்டுத்தன்மைவிளம்பத்தகாமையினா
லேதமெய்தாவகைமொழிந்துபோக்கவவராங்கெய்தாமுன்
றீதங்கிழைத்தேயிறந்தான்போற்செல்லவிடுத்தாருடன்சென்றான்
மாதாரைப்பெற்றார்மற்றதனைக்கேட்டுமனமருண்டார். (உக௬)

தையலார்சங்கிலியார்தந்திறத்துப்பேசதகாவார்த்தை
யுய்யவேண்டுநினைவுடையாருரையாரென்றங்குலகறியச்
செய்யவிதிபோலதுநிகழச்சிறந்தார்க்குள்ளபடிசெப்பி
னையுமுள்ளத்துடனஞ்சிநங்கைசெயலேயுடன்படுவார். (உகஎ)

அணங்கேயாகுமிவள்செய்கையறிந்தோர்பேசவஞ்சுவரால்
வணங்குமீசர்திறமன்றிவார்த்தையறியாண்மற்றொன்றுங்
குணங்களிவையாமினியிவடான்குறித்தபடியேயொற்றிநகர்ப்
பணங்கொளரவச்சடையார்தம்பாற்கொண்டணைவோமெனப்பகர்வார் (உகஅ)

பண்ணார்மொழிச்சங்கிலியாரைநோக்கிப்பயந்தாரொடுங்கிளைஞர்
தெண்ணீர்முடியார்திருவொற்றியூரிற்சேர்ந்துசெல்கதியுங்
கண்ணார்நுதலார்திருவருளாலாகக்கன்னிமாடத்துத்
தண்ணார்தடஞ்சூழ்நகரிற்றங்கிப்புரிவீர்தவமென்று. (உககூ)

பெற்றதாதைசுற்றத்தார்பிறைசேர்முடியாரருளாலே
மற்றுச்செயலொன்றறியாதுமங்கையார்சங்கிலியார்தாஞ் [கள்
சொற்றவண்ணஞ்செயத்துணிந்துதுதைந்தசெல்வத்தொடும்புரங்
செற்றசிலையார்திருவொற்றியூரிற்கொண்டுசென்றணைந்தார். ()

சென்னிவளர்வெண்பிறையணிந்தசிவனார்கோயிலுட்புகுந்து
துன்னுஞ்சுற்றத்தொடும்பணிந்துதொல்லைப்பதியோரிசைவினாற்
கன்னிமாடமருங்கமைத்துக்கடிசேர்முறைமைக்காப்பியற்றி
மன்னுஞ்செல்வந்தகவகுத்துத்தந்தையார்வந்தடிவணங்கி. (உஉக)

யாங்களுமக்குப்பணிசெய்யவீசற்கேற்றபணிவிரும்பி
யோங்குகன்னிமாடத்திலுறைகின்றீரென்றுரைக்கின்றார்
தாங்கற்கரியகண்கணீர்த்தாரையொழுகத்தரியாதே
யேங்குசுற்றத்தொடுமிறைஞ்சிப்போனாரெயில்சூழ்தம்பதியில். ()

காதல்புரிந்துதவம்புரியுங்கன்னியாரங்கமர்கின்றார்
பூதநாதர்கோயிலினிற்காலந்தோறும்புக்கிறைஞ்சி
நீதிமுறைமைவழுவாதுதமக்குநேர்ந்தபணிசெய்யச்
சீதமலர்ப்பூமண்டபத்துத்திரைசூழொருபாற்சென்றிருந்து. ()

பண்டுகயிலைத்திருமலையிற்செய்யும்பணியின்பான்மைமனங்
கொண்டவுணர்வுதலைநிற்பக்குலவும்மலர்மென்கொடியனையார்
வண்டுமருவுந்திருமலர்மென்மாலைகாலங்களுக்கேற்ப
அண்டர்பெருமான்முடிச்சாத்தவைத்துவணங்கியமருநாள். ()

அந்திவண்ணத்தொருவர் திருவருளால்வந்தவாரூரர்
சந்தமாலைச்சங்கிலியார் தம்மைக்காதன்மணம்புணர
வந்தபருவமாதலால்வகுத்ததன்மைவழுவாத
முந்தைவிதியால்வந்தொருநாண்முதல்வர்கோயிலுட்புகுந்தார். ()

அண்டர்பெருமானந்தணராயாண்டநம்பியங்கணரைப்
பண்டைமுறைமையாற்பணிந்துபாடிப்பரவிப்புறம்போந்து
தொண்டுசெய்வார் திருத்தொழில்கள்கண்டுதொழுதுசெல்கின்றார்
புண்டரீகத்தடநிகர்பூந்திருமண்டபத்தினுட்புகுந்தார். (௨௨)

அன்புநாரா வஞ்செழுத்துநெஞ்சுதொடுக்கவலர்தொடுத்தே
யென்புள்ளுருக்குமடியாரைத்தொழுதுநீங்கிவேறிடத்து
முன்புபோலத்திரைநீக்கிமுதல்வர்சாத்தும்பணிகொடுத்து
மின்போன்மறையுஞ்சங்கிலியார்தம்மைவிதியாற்கண்ணுற்றார். ()

கோவாமுத்துஞ்சுரும்பேறுக்கொழுமென்முகையுமனையாரைச்
சேவார்கொடியார் திருத்தொண்டர்கண்டபோதுசிந்தைநிறை
காவாதவர்பாற்போய்வீழத்தம்பாற்காமனார்துரந்த
பூவாளிகள்வந்துறவீழத்தரியார்புறமேபோந்துரைப்பார், (௨௨)

இன்னபரிசென்றறிவரிதாலீங்கோர்மருங்குதிரைக்குள்ளார்
பொன்னுமணியுமலர்ந்தவொளியமுதிலாவிப்புதியமதி (வாள்)
தன்னுணீர்மையாற்குழைத்துச்சமைத்தமின்னுக்கொடிபோல
வென்னையுள்ளந்திரிவித்தாள்யார்கொலென்றங்கியம்புதலும். ()

அருகுநின்றார்விளம்புவாரவர்தாநங்கைச்சங்கிலியார்
பெருகுந்தவத்தாலீசர்பணிபேணுங்கன்னியாரென்ன
திருவாலிப்பிறவியையெம்பெருமானருளாலெய்துவித்தார்
மருவும்பரவையொருத்தியிவண்மற்றையவளாமெனமருண்டார் ()

மின்னார்சடையார்தமக்காளாம்விதியால்வாழுமெனைவருத்தித்
தன்னாரருளால்வரும்பேறுதவத்தாலணையாவகைதடுத்தே
யென்னாருயிருமெழின்மலருங்கூடப்பிணைக்குமிவடன்னைப்
பொன்னாரிதழிமுடியார்பாற்பெறுவேனென்றுபோய்ப்புக்கார் ()

மலர்மேலயனுநெடுமாலும்வானுநிலனுங்கிளைத்தறியா
நிலவுமலருந்திருமுடியுநீடுங்கழலுமுடையாரை
யுலகமெல்லாந்தாமுடையாராயுமொற்றியூரமர்ந்த
விலகுசோதிப்பரம்பொருளையிறைஞ்சிமுன்னின்றேத்துவார். ()

மங்கையொருபான்மகிழ்ந்ததுவுமன்றிமணிநீண்முடியின்கட்
கங்கைதன்னைக்கரந்தருளுங்காதலுடையீரடியேனுக்
கிங்குறுமக்குத்திருமாலைதொடுத்தெனுள்ளத்தொடையவிழ்த்த
திங்கள்வதனச்சங்கிலியைத்தந்தென்வருத்தந்தீருமென. (உ௩௩)

அண்ணலார்முன்பலவுமவரறியவுணர்த்திப்புறத்தணைந்தே
யெண்ணமெல்லாமுமக்கடிமையாமாறெண்ணுமென்னெஞ்சிற்
றிண்ணமெல்லாமுடைவித்தாள்செய்வதொன்றுமறியேன்யான்
றண்ணிலாமின்னொளிர்பவளச்சடையீரருளுமெனத்தளர்வார். ()

மதிவாழ்முடியார்மகிழ்கோயிற்புறத்தோர்மருங்குவந்திருப்பக்
கதிரோன்மேலைக்கடல்காணமாலைக்கடலைக்கண்டயர்வார்
முதிராமுலையார்தம்மைமணம்புணர்க்கவேண்டி ௦ முளரிவளை
நிதியானன்பர்தமக்கருளுநண்பானினைந்துநினைந்தழிய. (உ௩௫)

உம்பருய்யவுலகுய்யவோலவேலைவிடமுண்ட
தம்பிரானார்வன்றொண்டர்தம்பாலெய்திச்சங்கிலியை
யிம்பருலகில்யாவருக்குமெய்தவொண்ணாவிருந்தவத்துக்
கொம்பையுனக்குத்தருகின்றோங்கொண்டகவலையொழிகென்ன. ()

அன்றுவெண்ணெய்நல்லூரில்வலியவாண்டுகொண்டருளி
யொன்றுமறியாநாயேனுக்குறுதியளித்தீருயிர்காக்க
வின்றுமிவளைமணம்புணர்க்கவென்றுநின்றீரெனப்போற்றி [டர்
மன்றன்மலர்ச்சேவடியிணைக்கீழ்வணங்கிமகிழ்ந்தார்வன்றொண்

ஆண்டுகொண்டவந்தணனாரவருக்கருளிக்கருணையினா
னீண்டகங்குல்யாமத்துநீங்கிவானினின்றமதியந்
தீண்டுகன்னிமாடத்துச்சென்றுதிகழ்சங்கிலியாராந்
தூண்டுசோதிவிளக்கனையார்தம்பாற்கனவிற்றோன்றினார். (உ௩௭)

தோற்றும்பொழுதிற்சங்கிலியார்தொழுதுவிழுந்துபரவசமா
யாற்றவன்புபொங்கியெழுந்தடியேனுய்யவெழுந்தருளும்
பேற்றுக்கென்யான்செய்வதெனப்பெரியகருணைபொழிந்தணைய
நீற்றுக்கோலவேதியருநேர்நின்றருளிச்செய்கின்றார். (உ௩௯)

சாருந்தவத்துச்சங்கிலிகேள்சாலவென்பாலன்புடையான்
மேருவரையின்மேம்பட்டதவத்தான்வெண்ணெய்நல்லூரி
லியாருமறியயானாளவுரியானுன்னையெனையிரந்தான்
வார்கொண்முலையாய்நீயவனைமணத்தாலணைவாய்மகிழ்ந்தென்றார்.

---

௦ முளரிவளைநிதியான் அன்பர், பதுமநிதிசங்கநிதியுள்ளகுபேரனுக்கன்
பராகியபரமசிவனெனக்கொள்க.

ஆதிதேவர்முன்னின்றங்கருளிச்செய்தபொழுதின்கண்
மாதரார்சங்கிலியாருமாலுமயனுமறிவரிய
சீதமலர்த்தாமரையடிக்கீழ்ச்சேர்ந்துவீழ்ந்துசெந்நின்று
வேதமுதல்வர்முன்னடுக்கமெய்தித்தொழுதுவிளம்புவார் (உசக)

எம்பிரானேநீரருளிச்செய்தார்க்குரியேன்யானிமையோர்
தம்பிரானேயருடலைமேற்கொண்டேன்றக்கவிதிமணத்தா
னம்பியாரூரர்க்கென்னைநல்கியருளும்பொழுதிமயக்
கொம்பினுகங்கொண்டேர்க்குக்கூறுந்திறமொன்றுளதென்பார். ()

பின்னும்பின்னன்முடியார்முன்பெருகநாணித்தொழுதுரைப்பார்
மன்னுந்திருவாரூரின்கணவர்தாமிகவுமகிழ்ந்துறைவ
தென்னுந்தன்மையறிந்தருளுமெம்பிராட்டிதிருமுலைதோய்
மின்னும்புரிநூலணிமார்பீரென்றார்குன்றாவிளக்கனையார். (உசங)

வேறு.

மற்றவர்தம்முரைகொண்டுவன்றொண்டர்நிலைமையினை
யொற்றிநகரமர்ந்தபிரானுணர்ந்தருளியுரைசெய்வார்
பொற்றொடியாயுனையிகந்துபோகாமைக்கொருசபத
மற்றமுறுநிலைமையினாலவன்செய்வானெனவருளி. (உசச)

வேயனையதோளியார்பானின்றுமீண்டருளித்
தூயமனமகிழ்ந்திருந்ததோழனார்பாலணைந்து
நீயவளைமணம்புணருநிலையுரைத்தோமதற்கவள்பா
லாயதொருகுறையுன்னாலமைப்பதுளதென்றருளி. (உசரு)

வன்றொண்டர்மனங்களித்துவணங்கியடியேன்செய்ய
நின்றகுறையாதென்னநீயவளைமணம்புணர்தற்
கொன்றியுடனேநிகழ்வதொருசபதமவண்முன்பு
சென்றுகிடைத்தவ்விரவேசெய்கவெனவருள்செய்தார். (உசசு)

என்செய்தாலிதுமுடியுமதுசெய்வன்யானதற்கு
மின்செய்தபுரிசடையீரருள்பெறுதல்வேண்டுமென
முன்செய்தமுறுவலுடன்முதல்வரவர்முகநோக்கி
யுன்செய்கைதனக்கினியென்வேண்டுவதென்றுரைத்தருள (உசஎ)

வம்பணிமென்முலையவர்க்குமணங்கொடுத்தவன்றொண்டர்
நம்பரிவர்பிறபதியும்நயந்தகோலஞ்சென்று
கும்பிடவேகடவேனுக்கிதுவிலக்காமெனக்குறிப்பாற்
றம்பெருமான்றிருமுன்புதாம்வேண்டுங்குறையுரைப்பார். (உசஅ)

சங்கரர்தாள்பணிந்திருந்து தமிழ்வேந்தர்மொழிகின்றார்
மங்கையவடனைப்பிரியாவகைசபதஞ்செய்வதனுக்
கங்கவளோடியான்வந்தாலப்பொழுதுகோயில்விடத்
தங்குமிடந்திருமகிழ்கீழ்க்கொளவேண்டுமெனத்தாழ்ந்தார். ()

தம்பிரான்றோழரவர் தாம்வேண்டிக்கொண்டருள
வும்பர்நாயகருமதற்குடன்பாடுசெய்வாராய்
நம்பிநீசொன்னபடிநாஞ்செய்துமென்றருள
வெம்பிரானேயரியதினியெனக்கென்னெனவேத்தி. (உருo)

அஞ்சலிசென்னியின்மன்னியருள்பெற்றுப்புறம்போதச்
செஞ்சடையாரவர்மாட்டுத்திருவிளையாட்டினைமகிழ்ந்தோ
வஞ்சியிடைச்சங்கிலியார்வழியடிமைப்பெருமையோ
துஞ்சிருண்மீளவுமணைந்தாரவர்க்குறுதிசொல்லுவார். (உருக)

சங்கிலியார்தம்மருங்குமுன்போலச்சார்ந்தருளி
நங்கையுனக்காரூரனபந் ருசூளுறக்கடவ
னங்குநமக்கெதிர்செய்யுமதற்குநீயிசையாதே
கொங்கலர்பூமகிழின்கீழ்க்கொள்வதெனக்குறித்தருள. (உருஉ)

மற்றவருங்கைகுவித்துமாலயனுக்கறிவரியீ
ரற்றமெனக்கருள்புரிந்தவதனிலடியேனுகப்
பெற்றதியானெனக்கண்க பெருந்தாரைபொழிந்திழிய
வெற்றிமழவிடையார்தஞ்சேவடிக்கீழ்வீழ்ந்தெழுந்தார். (உருங)

தையலார்தமக்கருளிச்சடாமகுடரெழுந்தருள
வெய்தியபோததிசயத்தாலுணர்ந்தெழுந்தவ்விரவின்கட்
செய்யசடையாரருளின்றிறநினைந் தகண்டுயிலா
ரையமுடனருகுதுயில்சேடியரையணைந்தெழுப்பி (உருச)

நீங்குதுயிற்பாங்கியர்க்குநீங்கலெழுத்தறியுமவர்
தாங்கனவிலெழுந்தருளித்தமக்கருளிச்செய்ததெல்லாம்
பாங்கறியமொழியவவர்பயத்தினுடனதிசயமுந்
தாங்குமகிழ்ச்சியுமெய்தச்சங்கிலியார்தமைப்பணிந்தார். (உருரு)

சேயிழையார்திருப்பள்ளியெழுச்சிக்குமலர்தொடுக்குந்
தூயபணிப்பொழுதாகத்தொழில்புரிவாருடன்போதக்
கோலின்முன்காலமதுவாகவேகுறித்தணைந்தா
ராயசபதஞ்செய்யவரவுபார்த்தாரூரர். (உருசு)

நின்றவரங்கெதிர்வந்தநேரிழையார்தம்மருங்கு
சென்றணைந்துதம்பெருமான்றிருவருளின்றிறங்கூற
மின்றியங்குநுண்ணிடையார்விதியுடன்பாட்டெதிர்விளம்பார்
ரொன்றியநாணொடுமடவாருடனொதுங்கியுட்புகுந்தார். (உருஎ)

அங்கவர்தம்பின்சென்றவாரூராயிழையீ
ரிங்குநான்பிரியாமையுமக்கிசையும்படியியம்பத்
திங்கண்முடியார்திருமுன்போதுவீரெனச்செப்பச்
சங்கிலியார்கனவுரைப்பக்கேட்டதாதியர்மொழிவார். (உருஅ)

எம்பெருமானிதற்காகவெழுந்தருளியிமையவர்கள்
தம்பெருமான்றிருமுன்புசாற்றுவதுதகாதென்ன
நம்பெருமான்வன்றொண்டர்நாதர்செயலறியாதே
கொம்பனையீர்யான்செய்வதெங்கென்றுகூறுதலும். (உருகூ)

மாதரவர்மகிழ்க்கீழேயமையுமெனமனமருள்வா
ரீதலராகிலுமாகுமிவர்சொன்னபடிமறுக்கி
லாதலினாலுடன்படவேயமையுமெனத்துணிந்தாகிற்
போதுவீரெனமகிழ்க்கீழவர்போதப்போயணைந்தார். (உசு0)

தாவாதபெருந்தவத்துச்சங்கிலியாருங்காண
மூவாததிருமகிழைமுக்காலும்வலம்வந்து
மேவாதிங்கியானகலேனெனநின்றுவிளம்பினார்
பூவார்தண்புனற்பொய்கைமுனைப்பாடிப்புரவலனார். (உசுக)

மேவியசீராரூரர்மெய்ச்சபதவினைமுடிப்பக்
காவியினேர்கண்ணாருங்கண்டுமிகமனங்கலங்கிப்
பாவியேனிதுகண்டேன்றம்பிரான்பணியாலென்
றாவிசோர்ந்தழிவாரங்கொருமருங்குமறைந்தயர்ந்தார். (உசுஉ)

திருநாவலூராளிதம்முடையசெயன்முற்றிப்
பொருநாகத்துரிபுனைந்தார்கோயிலினுட்புகுந்திறைஞ்சி
யருணளுந்தரவிருந்தீர்செய்தவாறழகிதெனப்
பெருநாமமெடுத்தேத்திப்பெருமகிழ்ச்சியுடன்போந்தார். (உசுங)

வார்புனையும்வனமுலையார்வன்றொண்டர்போனதற்பின்
றார்புனையுமண்டபத்துத்தம்முடையபணிசெய்து
கார்புனையுமணிகண்டர்செயல்கருத்திற்கொண்டிறைஞ்சி
யேர்புனையுங்கன்னிமாடம்புகுந்தாரிருள்புலர. (உசுச)

அன்றிரவேயாதிபுரியொற்றிகொண்டாராட்கொண்ட
பொன்றிகழ்பூண்வன்றொண்டர்புரிந்தவினைமுடித்தருள
நின்றபுகழ்த்திருவொற்றியூர்நிலவுதொண்டர்க்கு.
மன்றல்வினைசெய்வதற்குமனங்கொள்ளவுணர்த்துவார். (௨௬௫)

நம்பியாரூரனுக்குநங்கைசங்கிலிதன்னை.
யிம்பர்ஞாலத்திடைநம்மேவலினான்மணவினைசெய்
தும்பர்வாழுலகறியவளிப்பீரென்றுணர்த்துதலுந்
தம்பிரான்றிருத்தொண்டரருடலைமேற்கொண்டெழுவார். (௨௬௬)

மண்ணிறைந்தபெருஞ்செல்வத்திருவொற்றியூர்மன்னும்
எண்ணிறைந்ததிருத்தொண்டரெயிற்பதியோருடனீண்டி
யுண்ணிறைந்தமகிழ்ச்சியுடனும்பர்பூமழைபொழியக்
கண்ணிறைந்தபெருஞ்சிறப்பிற்கல்யாணஞ்செய்தளித்தார். ()

பண்டிகழ்ப[illegible]தென்னநாளிலே
வண்டமர்பூங்குழல[illegible]மணம்புணர்ந்தவன்றொண்டர்
புண்டரிகத்த[illegible]னைப்பைம்புறங்கண்டதூநலத்தைக்
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றுணர்ந்திருந்தார்காதலினால். (௨௬௮)

யாழின்மொழியெழின்முறுவலிருகுழைமேற்கடைபிறழு
மாழைவிழியனமுலையார்மணியல்குற்றுறைபடிந்து
வீழுமவர்க்கின[illegible]நா[illegible]லவி[illegible]புணர்ச்சிக்கண்
ஊழியாமொருகணந்தா[illegible]வூழியொருகணமாம் (௨௬௯)

இந்நிலையிற்பேரின்பமினிதமர்வாரிறையுறையு
மன்னுபுகழொற்றியூரதனின்மகிழ்சிறப்பினாற்
சென்னிமதிபுனைவார்தந்திருப்பாதந்தொழுதிருந்தார்
முன்னியகாலங்கள்பலமுறைமையினால்வந்தகல. (௨௭௦)

பொங்குதமிழ்ப்பொதியமலைப்பிறந்துபூஞ்சந்தனத்தின்
கொங்கணைந்துகுளிர்சாரலிடை[illegible]வளர்ந்தகொழுந்தென்றல்
அங்கணையத்திருவாரூர[illegible]ரிவீதிபழகியவர்
மங்கலநாள்வசந்தமெதிர்கொண்டருளும்வகைநினைந்தார். (௨௭௧)

வெண்மதியின்கொழுந்தணிந்தவீதிவிடங்கப்பெருமான்
ஒண்ணுதலார்புடை[illegible]பரந்தவோலக்கமதனிடையே
பண்ணமருமொழிப்பரவையார்பாடலாடறனைக்
கண்ணுறமுன்கண்டுகொண்டார்போலக்கருதினார். (௨௭௨)

பூங்கோயிலமர்ந்தாரைப்புற்றிடங்கொண்டிருந்தாரை
நீங்காதகாதலினானினைந்தாரைநினைவாரைப்
பாங்காகத்தாமுன்புபணியவரும்பயனுணர்வார்
ஈங்குநான்மறந்தேனென்றேசறவான்மிகவழிவார். (உஎங)

மின்னொளிச்சஞ்சடையானைவேதமுதலானானை
மன்னுபுகழ்த்திருவாரூர்மகிழ்ந்தானைமிகநினைந்து
பன்னியசொற்பத்திமையுமடிமையையுங்கைவிடுவா
னென்னுமிசைத்திருப்பதிகமெடுத்தியம்பியிரங்கினார். (உஎச)

திருச்சிற்றம்பலம்.

பின்னொருநாடிருவாரூர்தனைப்பெருகநினைந்தருளி
யுன்னவினியார்கோயில்புகுந்திறைஞ்சியொற்றிநகர்
தன்னையகலப்புக்கார்த்தாஞ்செய்தசபதத்தான்
முன்னடிகடோன்றாதுகண்மறையமூர்ச்சித்தார். (உஎரு)

செய்வதனையறியாதுதிகைத்தருளிநெடிதுயிர்ப்பார்
மைவிரவுகண்ணார்பாற்சூளுறவைமறுத்ததனால்
இவ்வினைவந்தெய்தியதாமெனநினைந்தெம்பெருமானை
யெய்தியவித்துயர்நீங்கப்பாடுவேனெனநினைந்து. (உஎசா)

வேறு.

அழுக்குமெய்கொடென்றெடுத்தசொற்பதிக மாதிநீள்புரியண்ணலையோதி, வழுத்துநெஞ்சொடுதாழ்ந்துநின்றுரைப்பார் மாதோர்பாகனார்மலர்ப்பதமுன்னி, யிழுக்குநீக்கிடவேண்டுமென்றிரந்தேயெய்துவெந்துயர்க்கையறவிறுக்கும், பழிக்கும்வெள்கி நல்லிசைகொடுபரவிப்பணிந்துசாலவும்பலபலநினைவார். (உஎஎ)

திருச்சிற்றம்பலம்.

அங்குநாதர்செய்பருளதுவாகவங்கைகூப்பியாரூர்தொழநினைந்தே, பொங்கு[illegible]நிலைமையினாற்போதுவார்வழிகாட்ட முன்போந்து, [illegible]யார்திருமுல்லைவாயில்சென்றிறைஞ்சிநீடியதிருப்பதிகஞ், சங்கிலிக்காகவென்கணைமறைத்தீரென்றுசாற்றியதன்மையிற்பாடி. (உஎஅ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைமானுக்கன்றருள்கொடுத்தருளுந்தொல்லைவண்புகழ்முல்லைநாயகரைக், கொண்டவெந்துயர்களைகெனப்பரவிக் குறித்தகாதலினெறிகொளவருவார், வண்டுலாமலர்ச்சோலைகள்சூழ்ந்துமாடமாளிகைநீடுவெண்பாக்கங், கண்டதொண்டர்களெதிர்கொளவணங்கிக்காயுநாகத்தர்கோயிலையடைந்தார். (உஎகூ)

அணைந்ததொண்டர்களுடன் வலமாகவங்கணாயகர்கோயின்முன்
னெய்திக்குணங்களேத்தியே பரவியஞ் சலியாற்குவித்தகைதலை
மேற்கொண்டுநின்றுவணங்கிநீர்மகிழ்கோயிலுளீரேயென்ற வன்
றொண்டர்க்கூன்றுகோலருளிப்பிணங்கிலாமொழியாலுளேம்போகீ
ரென்றியம்பினரேதிலார்போல. (உஅய)

திருச்சிற்றம்பலம்.

பிழையுளனபொறுத்திடுவரென்றெடுத்துப்பெண்பாகம்
விழைவடிவிற்பெருமானைவெண்பாக்கமகிழ்ந்தானை
யிழையெனமாசுணமணிந்தவிறையானைப்பாடினார்
மழைதவழுநெடும்புரிசைநாவலூர்மன்னவனார். (உஅக)

முன்னின்றுமுறைப்பாடுபோன்மொழிந்தமொழிமாலைப்
பன்னுமிசைத்திருப்பதிகம்பாடியபின்பற்றாய
என்னுடையபிரானருளிங்கித்தனைகொலாமென்று
மன்னுபெருந்தொண்டருடன்வணங்கியேவழிக்கொள்வார். (உஅஉ

அங்கணர்தம்பதியதனையகன்றுபோயன்பருடன்
பங்கயப்பூந்தடம்பணைசூழ்பழையனூருழையெய்தித்
தங்குவாரம்மைதிருத்தலையாலேவலங்கொள்ளுந்
திங்கண்முடியாராடுந்திருவாலங்காட்டினயல். (உஅங)

முன்னின்றுதொழுதேத்திமுத்தாவென்றெடுத்தருளிப்
பன்னுமிசைத்திருப்பதிகம்பாடிமகிழ்ந்தேத்துவார்
அந்நின்றுவணங்கிப்போய்த்திருவூறலமர்ந்திறைஞ்சிக்
கன்னிமதின்மணிமாடக்காஞ்சிமாநகரணைந்தார். (உஅச)

திருச்சிற்றம்பலம்.

தேனிலவுபொழிற்கச்சித்திருக்காமக்கோட்டத்தில்
ஊனில்வளருயிர்க்கெல்லாமொழியாதகருணையினால்
ஆனதிருவறம்புரக்குமம்மைதிருக்கோயிலின்முன்
வானில்வளர்திருவாயில்வணங்கினார்வன்றொண்டர். (உஅரு)

தொழுதுவிழுந்தெழுந்தருளாற்றுதித்துப்போய்த்தொல்லுலக
முழுதுமளித்தழித்தாக்குமுதல்வர்திருவேகம்பம்
பழுதிலடியார்முன்புபுகப்புக்குப்பணிகின்றார்
இழுதையேன்றிருமுன்பேயென்மொழிவேனென்றிறைஞ்சி. ()

விண்ணாள்வாரமுதுண்ணமிக்கபெருவிடமுண்ட
கண்ணாளாகச்சியேகம்பனேகடையானேன்
எண்ணாதபிழைபொறுத்தின்றியான்காணவெழிற்பவள
வண்ணாகண்ணளித்தருளாயெனவீழ்ந்துவணங்கினார். (உஅஎ)

பங்கயச்செங்கைத்தளிராற்பணிமலர்கொண்டர்ச்சித்துச்
செங்கையற்கண்மலைவல்லிபணிந்தசேவடிநினைந்து
பொங்கியவன்பொடுபரவிப்போற்றியவாரூரருக்கு
மங்கைதழுவக்குழைந்தார்மறைந்தவிடக்கண்கொடுத்தார். (உஅஅ)

ஞாலந்தானிடந்தவனும்விசும்புகடந்தவனு
மூலந்தானறிவரியார்கண்ணளித்துமுலைச்சுவட்டுக்
கோலந்தான்காட்டுதலுங்குறிவிழுந்தெழுந்துகளித்
தாலந்தானுகந்தவனென்றெடுத்தாடிப்பாடினார். (உஅகூ)

திருச்சிற்றம்பலம்.

பாடிமிகப்பரவசமாய்ப்பணிவார்க்குப்பாவையுட
னீடியகோலங்காட்டநிறைந்தவிருப்புடனிறைஞ்சிச்
சூடியவஞ்சலியினராய்த்தொழுதுபுறம்போந்தன்பு
கூடியமெய்த்தொண்டருடன்கும்பிட்டங்கினிதமர்வார். (உகூ௰)

மாமலையாண்முலைச்சுவடும்வளைத்தழும்புமணிந்தமதிப்
பூமலிவார்சடையாரைப்போற்றியருளதுவாகத்
தேமலர்வார்பொழிற்காஞ்சித்திருநகரங்கடந்தகல்வார்
பாமலர்மாலைப்பதிகந்திருவாரூர்மேற்பரவி. (உகூக)

அந்தியுநண்பகலுமெனவெடுத்தார்வத்துடனசைவால்
எந்தைபிரான்றிருவாரூரென்றுகொலெய்துவதென்று
சந்தவிசைபாடிப்போய்த்தாங்கரியவாதரவு
வந்தணையவன்பருடன்மகிழ்ந்துவழிக்கொள்கின்றார். (உகூஉ)

மன்னுதிருப்பதிகடொறும்வன்னியொடுங்கூவிளமுஞ்
சென்னிமிசைவைத்தவர்தாங்கோயிலின்முன்சென்றிறைஞ்சிப்
பன்னுதமிழ்த்தொடைசாத்திப்பரவியேபோந்தணைந்தார்
அன்னமலிவயற்றடங்கள்சூழ்ந்ததிருவாமாத்தூர். (உகூங)

அங்கணையாமாத்தூரழகர்தமையடிவணங்கித்
தங்குமிசைத்திருப்பதிகம்பாடிப்போய்த்தாரணிக்கு
மங்கலமாம்பெருந்தொண்டைவளநாடுகடந்தணைவார்
செங்கண்வளவன்பிறந்தசீர்நாடுநீர்நாடு. (உகூச)

அந்நாட்டின்மருங்குதிருவரத்துறையிற்சென்றெய்தி
மின்னாரும்படைமழுவார்விரைமலர்த்தாள்பணிந்தெழுந்து
சொன்மாலைமலர்க்கல்வாயகிலென்னுந்தொடைசாத்தி
மன்னார்வத்திருத்தொண்டருடன்மகிழ்ந்துவைகினார். (உகூரு)

பரமர்திருவரத்துறையைப்பணிந்துபோய்ப்பலபதிகள்
விரவிமழவிடையுயர்த்தார்விரைமலர்த்தாடொழுதேத்தி
யுரவுநீர்த்தடம்பொன்னியடைந்தன்பருடனாடி
யரவணிந்தாரமர்ந்ததிருவாவடுதண்டுறையணைந்தார். (௨௯௬)

அங்கணைவார்தமையடியாரெதிர்கொள்ளப்புக்கருளிப்
பொங்குதிருக்கோயிலினைப்புடைவலங்கொண்டுள்ளணைந்து
கங்கைவாழ்சடையாயோர்கண்ணிலேனெனக்கவல்வார்
இங்கெனக்காருறவென்னுந்திருப்பதிகமெடுத்திசைத்தார். (௨௯௭

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகங்கொடுபரவிப்பணிந்துதிருவருளாற்போய்
விருப்புனொடுந்திருத்துருத்திதனைமேவிவிமலர்கழல்
அருத்தியினாற்புக்கிறைஞ்சியடியேன்மேலுற்றபிணி
வருத்தமெனையொழித்தருளவேண்டுமெனவணங்கிவார். (௨௯௮)

பரவியேபணிந்தவர்க்குப்பரமர்திருவருள்புரிவார்
விரவியவிப்பிணியடையத்தவிர்ப்பதற்குவேறாக
வரமலர்வண்டறைதீர்த்தவடகுளத்துக்குளியென்னக்
கரவிறிருத்தொண்டர்தாங்கைதொழுதுபுறப்பட்டார். (௨௯௯)

மிக்கபுனற்றீர்த்தத்தின்முன்னணைந்துவேதமெல்லாந்
தொக்கவடிவாயிருந்ததுருத்தியார்தமைத்தொழுது
புக்கதனின்முழுகுதலும்புதியபிணியதுநீங்கி
யக்கணமேமணியொளிசேர்திருமேனியாயினார். (௩௱)

கண்டவர்களதிசயிப்பக்கரையேறியுடைபுனைந்து
மண்டுபெருங்காதலினாற்கோயிலினைவந்தடைந்து
தொண்டரெதிர்மின்னுமாமேகமென்னுஞ்சொற்பதிகம்
எண்டிசையுமறிந்துய்யவேழிசையாலெடுத்திசைத்தார். (௩௱௧)

திருச்சிற்றம்பலம்.

பண்ணிறைந்ததமிழ்பாடிப்பரமர்திருவருண்மறவார்
எண்ணிறைந்ததொண்டருடன்பணிந்தங்கணுறைந்தேகி
யுண்ணிறைந்தபதிபிறவுமுடையவர்தாள்வணங்கிப்போய்க்
கண்ணிறைந்ததிருவாரூர்முன்றோன்றக்காண்கின்றார். (௩௱௨)

அன்றுதிருநோக்கொன்றாலாரக்கண்டின்புற்றார்
நின்றுநிலமிசைவீழ்ந்துநெடிதுயிர்த்துநேரிறைஞ்சி
வன்றொண்டர்திருவாரூர்மயங்குமாலையிற்புகுந்து
துன்றுசடைத்தூவாயார்தமைமுன்னந்தொழவணைந்தார். (௩௱௩)

திருச்சிற்றம்பலம்.

பொங்குதிருத்தொண்டருடனுள்ளணைந்துபுக்கிறைஞ்சித்
துங்கவிசைத்திருப்பதிகந்தூவாயாவெனவெடுத்தே
யிங்கெமதுதுயர்களைந்துகண்காணக்காட்டாயென்
றங்கணர்தமுன்னின்றுபாடியருந்தமிழ்புனைந்தார். (௩௱௪)

ஆரணியுஞ்சடையாரைத்தொழுதுபுறம்போந்தங்கண்
வேறிருந்துதிருத்தொண்டர்விரவுவாருடன்கூடி
யேறுயர்த்தார்திருமூலத்தானத்துளிடைதெரிந்து
மாறிறிருவத்தயாமத்திறைஞ்சவந்தணைந்தார். (௩௱௫)

ஆதிதிருவன்பரெதிரணையவவர்முகநோக்கிக்
கோதிலிசையாற்குருகுபாயவெனக்கோத்தெடுத்தே
ஏதிலார்போல்வினவியேசறவாற்றிருப்பதிகங்
காதல்புரிகைக்கிளையாற்பாடியேகலந்தணைவார். (௩௱௬)

திருச்சிற்றம்பலம்.

சீர்பெருகுந்திருத்தேவாசிரியனைமுன்சென்றிறைஞ்சிக்
கார்விரவுகோபுரத்தைக்கைதொழுதேயுட்புகுந்து
தார்பெருகுபூங்கோயிறனைவணங்கிச்சார்ந்தணைவார்
ஆர்வமிகுபெருங்காதலாலவனிமேல்வீழ்ந்தார். (௩௱௭)

வீழ்ந்தெழுந்துகைதொழுதுமுன்னின்றுவிம்மியே
வாழ்ந்தமலர்க்கண்ணொன்றுலாராமன்மனமழிவார்
ஆழ்ந்ததுயர்க்கடலிடைநின்றடியேனையெடுத்தருளித்
தாழ்ந்தகருத்தினைநிரப்பிக்கண்டாருமெனத்தாழ்ந்தார். (௩௱௮)

திருநாவலூர்மன்னர்திருவாரூர்வீற்றிருந்த
பெருமானைத்திருமூலத்தானஞ்சேர்பிஞ்ஞகனைப்
பருகாவின்னமுதத்தைக்கண்களாற்பருகுதற்கு
மருவார்வத்துடன்மற்றைக்கண்டாரீரெனவணங்கி. (௩௱௯)

வேறு

மீளாவடிமையெனவெடுத்துமிக்கதேவர்குலமெல்லா
மாளாமேநஞ்சுண்டருளிமன்னியிருந்தபெருமானைத்
தாளாதரிக்குமெய்யடியார்தமக்காமிடர்நீர்தரியீரென்
றாளாந்திருத்தோழமைத்திறத்தாலஞ்சொற்பதிகம்பாடினார். [illegible]

திருச்சிற்றம்பலம்

பூதமுதல்வர்புற்றிடங்கொண்டிருந்தபுனிதர்வன்றொண்டர்
காதல்புரிவேதனைக்கிரங்கிக்கருணைத்திருநோக்களித்தருளிச்
சீதமலர்க்கண்கொடுத்தருளச்செவ்வேவிழித்துமுகமலர்ந்து
பாதமலர்கண்மேற்பணிந்துவீழ்ந்தாருள்ளம்பரவசமாய். (௩கக)

விழுந்துமெழுந்தும்பலமுறையான்மேவிப்பணிந்துமிகப்பரவி
யெழுந்தகளிப்பினாலாடிப்பாடியின்பவெள்ளத்தில்
அழுந்தியிரண்டுகண்ணாலுமம்பொற்புற்றினிடையெழுந்த
செழுந்தண்பவளச்சிவக்கொழுந்தினருளைப்பருகித்திளைக்கின்றார்.

காதநிரம்பத்தொழுதேத்திக்கனகமணிமாளிகைக்கோயின்
ஞாலமுய்யவருநம்பிநலங்கொள்விருப்பால்வலங்கொண்டு
மாலுமயனுமுறையிருக்கும்வாயில்கழியப்புறம்போந்து
சீலமுடையவன்பருடனேறவாசரியன்மருங்கணைந்தார். (௩க௩)

இதுமுதல் 3-கவி

சுந்தரமூர்த்திநாயனார்பிரிவாற்றாமைக்குபரவைநாச்சியார்வருந்துதல்.

நங்கைபரவையார்தம்மைநம்பிபிரிந்துபோனதற்பின்
றங்குமணிமாளிகையின்கட்டணிமைகூரத்தனார்வார்க்குக்
கங்குல்பகலாய்ப்பகல்கங்குலாகிக்கழியாநாளெல்லாம்
பொங்குகாதன்மீதூரப்புலர்வார்சிலநாள்போனதற்பின். (௩கச)

செம்மைநெறிசேர்திருநாவலூரரொற்றியூர்சேர்ந்து
கொம்மைமுலையார்சங்கிலியார்தம்மைக்குலவுமணம்புணர்ந்த
மெய்ம்மைவார்த்தைதாமவர்பால்விட்டார்வந்துகட்டுரைப்பத்
தம்மையறியாவெகுளியினாற்றரியாநெஞ்சினொடுந்தளர்வார். ()

மென்பூஞ்சயனத்திடைத்துயிலுமேவார்விழித்துமினிதமரார்
பொன்பூந்தவிசின்மிசையிரார்நில்லார்சொல்லார்புறம்பொழியார்
மனபூவாளிமழைகழியார்மறவார்நினையாரென்செய்வார்
என்பூடுருக்கும்புலவியாபிரிவோவிரண்டினிடைப்பட்டார். ()

ஆனகவலைக்கையறவாலழியுநாளிலாரூரர்
கூனலிளவெண்பிறைக்கண்ணிமுடியார்கோயின்முன்குறுகப்
பானல்விழியார்மாளிகையிற்பீண்டுசெல்லும்பரிசினுற
போனபெருமைப்பரிசனங்கள்புகுதப்பெறாதுபுறநின்றார். (௩கள)

நின்றநிலைமையவர்களிற்சிலர்நிலவுதிருவாரூரரெதிர்
சென்றுமொழிவார்திருவொற்றியூரினிகழ்ந்தசெய்கையெல்லாம்
ஒன்றுமொழியாவகையறிந்தங்குள்ளார்தள்ளமாளிகையில்
இன்றுபுறமுஞ்சென்றெய்தப்பெற்றிலோமென்றிறைஞ்சினார். ()

## இதுமுதல் 4-கவி

### சுந்தரமூர்த்திநாயனாரால் அனுப்பியதூதிற்கு பரவைநாச்சியார் இணங்காமையால் நாயனார் வருந்துதல்.

மற்றமாற்றங்கேட்டொழிந்தமனத்தராகிவன்றொண்டர்
உற்றவிதனுக்கினியென்னோசெயலென்றுணர்வாருலகியல்பு
கற்றமாந்தர்சிலர்தம்மைக்காதற்பரவையாற்கொண்ட
செற்றநிலைமையறிந்தவர்க்குத்தீர்வுசொல்லச்செலவிட்டார். ()

நம்பியருளாற்சென்றவருநங்கைபரவையார்தமது
பைம்பொன்மணிமாளிகையணைந்துபண்புபுரியும்பாங்கினால்
வெம்புபுலவிக்கடலழுந்துமின்னேரிடையாண்முன்னெய்தி
யெம்பிராட்டிக்கிதுதகுமோவென்றுபலவுமெடுத்துரைப்பார். ()

பேதநிலைமைநீதியினாற்பின்னும்பலவுஞ்சொன்னவர்முன்
மாதரவருமறுத்துமனங்கொண்டசெற்றமாற்றாரா
யேதமறுவுமவர்திறத்திலிந்தமாற்றமியம்பிலுயிர்
போதலொழியாதெனவுரைத்தாரவருமஞ்சிப்புறம்போந்தார். ()

போந்துபுகுந்தபடியெல்லாம்பூந்தண்பழனமுனைப்பாடி
வேந்தர்தமக்குவிளம்புதலும்வெருவுற்றயர்வார்துயர்வேலை
நீந்தும்புணையாந்துணைகாணார்நிகழ்ந்தசிந்தாகுலநெஞ்சிற்
காந்தவழிந்துதோய்ந்தெழார்கங்குலிடையாமக்கடலுள் (௱௨௨)

அருகுசூழ்ந்தார்துயின்றுதிருவத்தையாமம்பணிமடங்கிப்
பெருகுபுவனஞ்சலிப்பின்றிப்பேயுமுறங்கும்பிறங்கிருள்வாய்
முருகுவிரியுமலர்க்கொன்றைமுடிமேலரவுமிளமதியுஞ்
செருகுமொருவர்தோழர்தனிவருந்தியிருந்துசிந்திப்பார். (௱௨௩)

முன்னைவினையாலிவ்வினைக்குமூலமானாள்பாலணைய
என்னையுடையாய்நினைந்தருளாயிந்தயாமத்தெழுந்தருளி
யன்னமனையாள்புலவியினையகற்றிலுய்யலாமன்றிப்
பின்னையில்லைச்செயலென்றுபெருமானடிகடமைநினைந்தார். ()

அடியாரிடுக்கண்டரியாதாராண்டுகொண்டதோழர்குறை
முடியாதிருக்கவல்லரேமுற்றுமளித்தாள்பொற்றளிர்க்கைத்
தொடியார்தழும்புமுலைச்சுவடுமுடையார்தொண்டர்தாங்காணும்
படியாலணைந்தார்நெடியோனுங்காணாவடிகள்படிதோய (௱௨௫)

தம்பிரானாரெழுந்தருளத்தாங்கற்கரியமகிழ்ச்சியினாற்
கம்பியாநின்றவயவங்கள்கலந்தபுளகமயிர்மகிழ்ப்ப
நம்பியாரூரருமெதிரேநளினமலர்க்கைதலைக்குவிப
அம்பிகாவல்லவர்செய்யவடித்தாமரையின்கீழ்வீழ்ந்தார். (௱௨௬)

விழுந்துபரவிமிக்கபெருவிருப்பினோடுமெதிர்போற்றி
யெழுந்தநண்பர்தமைநோக்கியென்னீயுற்றதென்றருளத் [பட்
தொழுந்தங்குறையைவிளம்புவார்யானேதொடங்குந்துரிசிடைப்
டழுந்துமென்னையின்னமெடுத்தாளவேண்டுமுமக்கென்று.(௩௨௭

அடியேனுக்குத்திருவொற்றியூரினீரேயருள்செய்ய
வடிவேலொண்கட்சங்கிலியைமணஞ்செய்தணைந்ததிறமெல்லாங்
கொடியேரிடையாள்பரவைதானறிந்துதன்பால்யான்குறுகின்
முடிவேனென்றுதுணிந்திருந்தாளென்னாஞ்செய்வதென
மொழிந்து (௩௨௮)

நாயனீரேநானுமக்கிங்கடியேனாகினீரெனக்குத்
தாயினல்லதோழருமாந்தம்பிரானாரேயாகி
லாயவறிவுமிழந்தழிவேனயர்வுநோக்கியவ்வளவும்
போயிவ்விரவேபரவையுறுபுலவிதீர்த்துத்தாருமென. (௩௨௯)

அன்புவேண்டுந்தம்பெருமானடியார்வேண்டிற்றேவேண்டி
முன்புநின்றுவிண்ணப்பஞ்செய்தநம்பிமுகநோக்கித்
துன்பமொழிநீயாமுனக்கோர்தூதனாகியிப்பொழுதே [தார்
பொன்செய்மணிப்பூண்பரவைபாற்போகின்றோமென்றருள்செய்

எல்லையில்லாக்களிப்பினாலிறைவர்தாளில்வீழ்ந்தெழுந்து
வல்லபரிசெல்லாந்துதித்துவாழ்ந்துநின்றவன்றொண்டர்
முல்லைமுகைவெண்ணகைப்பரவைமுகில்சேர்மாடத்திடைசெல்ல
நில்லாதீண்டவெழுந்தருளிநீக்கும்புலவியெனத்தொழுதார்.(௩௩௧

இதுமுதல் ௫௨-கவி

சுந்தரமூர்த்திநாயனாருக்கும், பரவைநாச்சியாருக்கும் ஏற்பட்டுள்ள
ஊடலைச்சிவபெருமான் தூதுசென்று உடன்படுவித்தது.

அண்டர்வாழக்கருணையினாலாலகாலமமுதாக
உண்டநீலக்கோலமிடற்றொருவரிருவர்க்கறிவரியார்
வண்டுவாழுமலர்க்கூந்தற்பரவையார்மாளிகைநோக்கித்
தொண்டனார்தக்துயர்நீக்கத்தூதனாராயெழுந்தருள. (௩௩௨)

தேவாசிரியன்முறையிருக்குந்தேவரெல்லாஞ்சேவித்துப்
போவார்தம்மில்வேண்டுவார்போதவொழிந்தார்புறத்தொழிய
ஓவாவணுக்கச்சேவகத்திலுள்ளோர்பூதகணநாதர்
மூவாமுனிவர்யோகிகளின்முதலானார்கண்முன்போத. (௩௩௩)

அருகுபெரியதேவருடனணைந்துவருமவ்விருடிகளு
மருவுநண்புநிதிக்கோனுமுதலாயுள்ளோர்மகிழ்ந்தேத்தத்
தெருவும்விசும்புநிரைத்துவிரைச்செழும்பூமாரிபொழிந்தலையப்
பொருவிலன்பர்விடுந்தூதர்புனிதவீதியினிற்போத. (௩௩௪)

மாலுமயனுங்காணாதார்மலர்த்தாள்பூண்டுவந்திறைஞ்சுங்
காலமிதுவென்றங்கவரையழைத்தாலென்னக்கடல்விளைத்த
ஆலமிருண்டகண்டத்தானடித்தாமரைமேற்சிலம்பொலிப்ப
நீலமலர்க்கட்பரவையார்திருமாளிகையைநேர்நோக்கி. (௩௩௫)

இறைவர்விரைவினெழுந்தருளவெய்துமவர்கள்பின்றொடர
அரைகொடிரைநீர்தொடர்சடையிலரவுதொடரவரியவிளம்
புறைகொளருகுநறையிதழிப்பிணையல்சுரும்புதொடரவுடன்
மறைகடொடரவன்றொண்டர்மனமுந்தொடரவரும்பொழுது, ()

பெருவீரையினுமிகமுழங்கிப்பிறங்குமதகுஞ்சரமுரித்து
மருவீருரிவைபுனைந்தவர்தம்மருங்குசூழ்வார்நெருங்குதலாற்
றிருவீதியினிலழகரவர்திகழுஞ்செல்வத்திருவாரூர்
ஒருவீதியிலேசிவலோகமுழுதுங்காணவுளதாமால். (௩௩௭)

ஞாலமுய்யவெழுந்தருளுநம்பிதூதர்பரவையார்
கோலமணிமாளிகைவாயில்குறுகுவார்முன்கூடத்தம்
பாலங்கணைந்தார்புறநிற்பப்பண்டேதம்மையர்ச்சிக்குஞ்
சீலமுடையமுறைமுனிவராகித்தனியேசென்றணைந்தார். (௩௩௮)

சென்றுமணிவாயிற்கதவஞ்செறியவடைத்தவதன்முன்பு
நின்றுபாவாய்திறவாயென்றழைப்பநெறிமென்குழலாரும்
ஒன்றுந்துயிலாதுணர்ந்தயர்வாருடையபெருமான்பூசனைசெய்
துன்றும்புரிநூன்மணிமார்பர்போலுமழைத்தாரெனத்துணிந்து.

பாதிமதிவாழ்சடையாரைப்பயில்பூசனையின்பணிபுரிவார்
பாதியிரவிலிங்கணைந்ததென்னோவென்றுபயமெய்திப்
பாதியுமையாடிருவடிவிற்பரமராவதறியாதே
பாதிமதிவாணுதலாரும்படைத்துவந்துகடைதிறந்தார். (௩௪௰)

மன்னுமுரிமைவன்றொண்டர்வாயிற்றூதர்வாயிலிடை
முன்னின்றாரைக்கண்டிறைஞ்சிமுழுதுமுறங்கும்பொழுதின்கண்
என்னையாளும்பெருமானிங்கெய்தியருளிற்றென்ன
பின்னுமணிநூலணிமார்பரெய்தவேண்டிற்றென்னென்றார். ௩௪௧

கங்கைநீர்கரந்தவேணிகரந்தவரருளிச்செய்வார்
நங்கைநீமறாதுசெய்யினுன்வந்ததுரைப்பதென்ன
அங்கையல்விழியினாருமதனைநீரருளிச்செய்தால்
இங்கெனக்கிசையுமாகிலிசையலாமென்றுசொல்லி. (௩௪௨)

என்னினைந்தணைந்ததென்பாலின்னதென்றருளிச்செய்தாற்
பின்னையதியலுமாகிலாமெனப்பிரானார்தாமு
மின்னிடைமடவாய்நம்பிவரவிங்குவேண்டுமென்ன
நன்னுதலாருஞ்சாலநன்றுநம்பெருமையென்பார். (௩௪௩)

பங்குனித்திருநாளுக்குப்பண்டுபோல்வருவாராகி
யிங்கெனைப்பிரிந்துபோகியொற்றியூரெய்தியங்கே
சங்கிலித்தொடக்குண்டாருக்கிங்கொருசார்வுண்டோநீர்
கங்குலின்வந்துசொன்னகாரியமழகிதென்றார். (௩௪௪)

நாதருமதனைக்கேட்டுநங்கைநீநம்பிசெய்த
வேதங்கண்மனத்துக்கொள்ளாதெய்தியவெகுளிநீங்கி
நோதகவொழிதற்கன்றேநுன்னையான்வேண்டிக்கொண்ட
தாதலின்மறுத்தல்செய்யவடாதெனவருளிச்செய்தார். (௩௪௫)

அருமறைமுனிவரானவையனைத்தையலார்தாங்
கருமமீதாக்நீரிக்கடைத்தலைவருகைமற்றும்
பெருமைக்குத்தகுவதன்றாலொற்றியூருறுதிபெற்றார்
வருவதற்கிசையெனீரும்போமெனமறுத்துச்சொன்னார். (௩௪௬)

நம்பர்தாமதனைக்கேட்டுநகையுட்கொண்டுமெய்ம்மைத்
தம்பரிசரியக்காட்டார்தனிப்பெருந்தோழனார்தம்
வெம்புறுவேட்கைகாணுந்திருவிளையாட்டின்மேவி
வம்பலர்குழலினார்தாமறுத்ததேகொண்டுமீண்டார். (௩௪௭)

தூதரைப்போகவிட்டுவரவுபார்த்திருந்ததொண்டர்
நாதரையறிவிலாதேநன்னுதல்புலவிநீக்கிப்
போதரத்தொழுதேனென்றுபுலம்புவார்பரவையாரைக்
காதலிலிசைவுகொண்டுவருவதேகருத்துட்கொள்வார். (௩௪௮)

போயவன்மனையினண்ணும்புண்ணியரென்செய்தாரோ
நாயனார்தம்மைக்கண்டானன்னுதன்மறுக்குமோதா
னாயவென்னயர்வுதன்னையறிந்தெழுந்தருளினார்தாஞ்
சேயிழைதுனிதீர்த்தன்றிமீள்வதுஞ்செய்யாரென்று. (௩௪௯)

வழியெதிர்கொள்ளச்செல்வர்வரவுகாணாதுமீள
அழிவுறமயங்கிநிற்பரசைவுடனிருப்பர்நெற்றி
விழிவர்தாழ்த்தாரென்றுமீளவுமெழுவர்மாரன்
பொழிமலர்மாரிவீழவொதுங்குவார்புன்கணுற்றார். (௩௫௰)

பரவையார்தம்பானம்பிதூதராம்பாங்கிற்போன
அரவணிசடையார்மீண்டேயறியுமாறணையும்போதில்
இரவுதான்பகலாய்த்தோன்றவெதிரெழுந்தணையைவிட்ட
உரவுநீர்வெள்ளம்போலவோங்கியகளிப்பிற்சென்றார். (௩௫௧)

சென்றுதம்பிரானைத்தாழ்ந்துதிருமுகமுறுவல்செய்ய
ஒன்றியபணிளையாட்டோராருறுதிசெய்தணைந்தாரென்றே
யன்றுநீராண்டுகொண்டவனுக்குத்தகவேசெய்தீர்
இன்றிவள்வெகுளியெல்லாந்தீர்த்தெழுந்தருளியென்றார். (௩௫௨)

அம்மொழிவிளம்புநம்பிக்கையர்தாமருளிச்செய்வார்
நம்மைநீசொல்லநாம்போய்ப்பரவைதன்னில்லநண்ணிக்
கொம்மைவெம்முலையினாட்குன்றிரமெலாங்கூறக்கொள்ளாள்
வெம்மைதான்சொல்லிநாமேவேண்டவுமறுத்தாளென்றார்.(௩௫௩

அண்ணலாரருளிச்செய்யக்கேட்டவாரூரர்தாமுந்
துண்ணெனநடுக்கமுற்றேதொழுதுநீரருளிச்செய்த
வண்ணமுமடியாளானபரவையேமறுப்பார்நாங்கள்
எண்ணலாரடிமைக்கென்பதின்றறிவித்தீரென்று. (௩௫௪)

வானவருய்யவேண்டிமறிகடனஞ்சையுண்டீர்
தானவர்புரங்கள்வேவமூவரைத்தவிர்த்தாட்கொண்டீர்
நான்மறைச்சிறுவர்க்காகக்காலனைக்காய்ந்தூட்டீர்
யான்மிகையுமக்கின்றானாலென்செய்வீர்போதாதென்றார். (௩௫௫)

ஆவதேசெய்தீரென்றெனடிமைநீர்வேண்டாவிட்டாற்
பாவியேன்றன்னையன்றுவலியவாட்கொண்டபற்றென்
னோவுமென்னழிவுங்கண்டீர்நுடங்கிடையவள்பாலின்று
மேவுதல்செய்யீராகில்விடுமுயிரென்றுவீழ்ந்தார். (௩௬௬)

தம்பிரானதனைக்கண்டுதரியாதுதளர்ந்துவீழ்ந்த
நம்பியையருளானோக்கிநாமின்னமவள்பாற்போயக்
கொம்பினையிப்போதேநீகுறுகுமாகூறுகின்றோம்
வெம்புறுதுயர்நீங்கென்றார்வினையெல்லாம்விளைக்கவல்லார். ௩௫௭

மயங்கியநண்பருய்யவாக்கெனுமதுரவாய்மை
நயங்கிளரமுதநல்கநாவலூர்மன்னர்தாமும்
உயங்கியகலக்கநீங்கியும்மடித்தொழும்பனேனைப்
பயங்கெடுத்திவ்வாறன்றோபணிகொள்வதென்றுபோற்ற. (௩௫௮)

அன்பர்மேற்கருணைகூரவாண்டவர்மீண்டுஞ்செல்லப்
பின்புசென்றிறைஞ்சிநம்பிபேதுறவோடுமீண்டார்
முன்புடன்போதாதாருமுறைமையிற்சேவித்தேகப்
பொன்புரிசடையூர்மாதர்புனிதர்மாளிகையிற்சென்றார். (௩௫௯)

மதிநுதற்பரவையார்தாமறையவர்போனபின்பு
முதிர்மறைமுனியாய்வந்தாராளுடைமுதல்வராகும்
அதிசயம்பலவுந்தோன்றவறிவுற்றேயஞ்சிக்கெட்டேன்
எதிர்மொழியெம்பிரான்முன்னென்செயமறுத்தேனென்பார். ( )

கண்டுயிலெய்தார்வெய்யகையறவெய்தியேங்கின்
றண்டர்தம்பிரானார்தோழர்க்காகவர்ச்சிப்பார்கோலங்
கொண்டணைந்தவரையானுட்கொண்டிலேன்பாவியேனென்
றொண்சுடர்வாயிலேபார்த்துழையரோடழியும்போதில். (௩௬௧)

வெறியுறுகொன்றைவேணிவிமலருந்தாமாந்தன்மை
யறிவுறுகோலத்தோடுமளவில்பல்பூதநாதர்
செறிவுறுதேவர்யோகமுனிவர்கள்சூழ்ந்துசெல்ல
மறுவில்சீர்ப்பரவையார்தம்மாளிகைபுகுந்தார்வந்து (௩௬௨)

பாரிடத்தலைவர்முன்னும்பல்கணநாதர்தேவர்
நேர்வுறுமுனிவர்சித்தரியக்கர்கணிறைதலாலே
பேரருளாளரெய்தப்பெற்றமாளிகைதான்றென்பாற்
சீர்வளர்கயிலைவெள்ளித்திருமலைபோன்றதன்றே. (௩௬௩)

ஐயரங்கணைந்தபோதிலகிலலோகத்துள்ளாரும்
எய்தியேசெறிந்துசூழவெதிர்கொண்டபரவையார்தா
மெய்யுறநடுக்கத்தோடுமிக்கெழுமகிழ்ச்சிபொங்கச்
செய்யதாளிணைமுன்சேரவிரைவினுற்சென்றுவீழ்ந்தார். (௩௬௪)

அரியயற்கரியார்தாமுமாயிழையாரைநோக்கி
யுரிமையாலூரனேவமீளவுமுன்பால்வந்தோ
முருகலர்குழலாயின்னமுன்புபோன்மறாதேநின்பாற்
பிரிவுறவருந்துகின்றான்வரப்பெறவேண்டுமென்றார். (௩௬௫)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

பெருந்தடங்கண்ணினாநம்பிரான்முன்புமிகவுமஞ்சி
வருந்தியவுள்ளத்தோடுமலர்க்கரங்குழன்மேற்கொண்டே
யருந்திருமறையோராகியணைந்தீர்முன்னடியேன்செய்த
இருந்தவப்பயனாமென்னவெய்தியநீரோவென்பார். (௩௬௬)

துளிவளர்கண்ணீர்வாரத்தொழுதுவிண்ணப்பஞ்செய்வார்
ஒளிவளர்செய்யபாதம்வருந்தவோரிரவுமாறு
தளிவருமன்பர்க்காகவங்கொடிங்குழல்வீராகி
யெளிவருவீருமானாலென்செய்கேனிசையாதென்றார். (௩௬௭)

நங்கைநின்றன்மைக்கேற்குநண்மையேமொழிந்தாயென்று
மங்கையோர்பாகம்வைத்தவள்ளலார்விரைந்துபோகத்
திங்கள்வாணுதலினாருஞ்சென்றுபின்னிறைஞ்சிமீண்டார்
எங்களையாளுநம்பிதூதர்மீண்டேகுகின்றார். (௩௬௮)

வேறு.

ஆதியுமேலுமாலயனாடற்கருளாதார்
தூதினிலேகித்தொண்டரையாளுந்தொழில்கண்டே
வீதியிலாடிப்பாடிமகிழ்ந்தேதமிடைகின்றார்
பூதியினீடும்பல்கணநாதர்புகழ்வீரர் (௩௬௯)

அன்னவர்முன்னும்பின்னுமருங்குமணைவெய்த
மின்னிடையாள்பாலன்பரையுய்க்கும்விரைவோடுஞ்
சென்னியினீடுங்கங்கைததும்பத்திருவாரூர்
மன்னவனாரம்மையவனார்பால்வந்துற்றார். (௩௭௰)

அன்பருமென்பாலாவியளிக்கும்படிபோனார்
என்செய்துமீள்வாரின்னமுமென்றேயிடர்கூறப்
பொன்புரிமுந்நூன்மார்பினர்செல்லப்பொலிவீதி
முன்புறநேருங்கண்ணிணைதானுமுகிழாரால். (௩௭௧)

அந்நிலைமைக்கண்மன்மதன்வாளிக்கழிவார்தம்
மன்னுயிர்நல்குந்தம்பெருமானார்வந்தெய்த
முன்னெதிர்சென்றேழுவுலகுஞ்சென்றடையுந்தாள்
சென்னியில்வைத்தென்சொல்லுவரென்றேதெளியாதார். (௩௭௨)

எம்பெருமானீரென்னுயிர்காவாதிடர்செய்யுங்
கொம்பனையார்பாலென்கொடுவந்தீர்குறையென்னத்
தம்பெருமானுந்தாழ்குழல்செற்றந்தணிவித்தோம்
நம்பியினிப்போய்மற்றவடன்பானணுகென்ன. (௩௭௩)

நந்திபிரானார்வந்தருள்செய்பகலமெய்துஞ்
சிந்தையுளார்வங்கூர்களியெய்தித்திகழ்கின்றார்
பந்தமும்வீடுநீரருள்செய்யும்படிசெய்தீர்
எந்தைபிரானேயென்னினியென்பாலிடரென்றார். (௱எச)

என்றடிவீழுநண்பர்தமன்புக்கெளிவந்தார்
சென்றணைநீயச்சேயிழைபாலென்றருள்செய்து
வென்றுயர்சேமேல்வீதிவிடங்கப்பெருமாள்தம்
பொன்றிகழ்வாயிற்கோயில்புகுந்தார்புவிவாழ. (௱எரு)

வேறு.

தம்பிரானார்பின்சென்றுதாழ்ந்தெழுந்தருளான்மீள்வார்
எம்பிரான்வல்லவாறென்றெய்தியமகிழ்ச்சியோடும்
வம்பலர்குழலார்செம்பொன்மாளிகைவாயினோக்கி
நம்பியாரூரர்காதலையங்கெழுந்தருளும்போது. (௱எசு)

முன்றுயிலுணர்ந்துசூழ்ந்தபரிசனமருங்குமொய்ப்ப
மின்றிகழ்பொலம்பூமாரிவிண்ணவர்பொழிந்துவாழ்த்த
மன்றல்செய்மதுரசீதசீகரங்கொண்டுமந்தத்
தென்றலுமெதிர்கொண்டெய்துஞ்சேவகமுன்புகாட்ட (௱எஎ)

மாலைதண்கலவைச்சேறுமான்மதச்சாந்துபொங்குங்
கோலநற்பசுங்கர்ப்பூரங்குங்குமமுதலாயுள்ள
சாலுமெய்க்கலங்கள்கூடச்சாத்தும்பூணாரவர்க்கம்
பாலனபிறவுமேந்தும்பரிசனமுன்புசெல்ல (௱எஅ)

இவ்வகையிவர்வந்தெய்தவெய்தியவிருப்பினோடு
மைவளர்நெடுங்கண்ணாருமாளிகையடையமன்னுஞ்
செய்வினையலங்காரத்துச்சிறப்பணிபலவுஞ்செய்து
நெய்வளர்விளக்குத்தூபநிறைகுடநிரைத்துப்பின்னும். (௱எகூ)

பூமலிநறும்பொற்றாமம்புனைமணிக்கோவைநாற்றிக்
காமர்பொற்சுண்ணம்வீசிக்கமழ்நறுஞ்சாந்துநீவித்
தூமலர்வீதிசூழ்ந்ததோகையர்வாழ்த்தத்தாமு
மாமணிவாயின்முன்புவந்தெதிரேற்றுநின்றார். (௱அய)

வண்டலர்குழலார்முன்புவன்றொண்டர்வந்துகூடக்
கண்டபோதுள்ளக்காதல்வெள்ளத்தின்கரைகாணாது
கொண்டநாணச்சங்கூரவணங்கவக்குரிசிலாருந்
தண்டளிர்ச்செங்கைபற்றிக்கொண்டுமாளிகையுட்சார்ந்தார். ()

இருவரும் தம்பிரானார் தாமிடையாடிச்செய்த
திருவருட்கருணைவெள்ளத்திறத்தினைப்போற்றிச்சிந்தை
மருவியவின்பவெள்ளத்தழுந்தியபுணர்ச்சிவாய்ப்ப
ஒருவருளொருவர்மேவுநிலைமையிலுயிரொன்றானார். (௩௮௨)

ஆரணக்கமலக்கோயின்மேவிப்புற்றிடங்கொண்டாண்ட
நீரணிவேணியாரைநிரந்தரம்பணிந்துபோற்றிப்
பாரணிவிளக்குஞ்செஞ்சொற்பதிகமாலைகளுஞ்சாத்தித்
தாரணிமணிப்பூண்மார்பர்தாமகிழ்ந்திருந்தநாளில். (௩௮௩)

ஏயர்கோன்கலிக்காமநாயனார்சரித்திரம் இரண்டாந்தொடர்பு—
முதல் அ-வது கவி தொடுத்து இக்கவியிலிருந்து படித்து முடிக்கவும்

வேறு.

நம்பியாரூரர்நெஞ்சினடுக்கமொன்றின்றிநின்று
தம்பிரானாரைத்தூதுதையல்பால்விட்டாரென்னும்
இம்பரின்மிக்கவார்த்தையேயர்கோனார்தாங்கேட்டு
வெம்பினார்திசயித்தார்வெருவினார்விளம்பலுற்றார். (௩௮௪)

நாயனையடியானேவுங்காரியநன்றுசால
வேயுமென்றிதனைச்செய்வான்றொண்டனாமென்னேபாவம்
பேயனேன்பொறுக்கவொண்ணாப்பிழையினைச்செவியாற்கேட்ப
தாயினபின்னுமாயாதிருந்ததென்னுவியென்பார். (௩௮௫)

காரிகைதன்பாற்செல்லுங்காதலாலொருவனேவப்
பாரிடைநடந்துசெய்யபாததாமரைகணோவத்
தேரணிவீதியூடுசெல்வதுவருவதாகி
யோரிரவெல்லாந்தூதுக்குழல்வராமொருவரென்று. (௩௮௬)

நம்பர்தாமடிமையற்றாராகியநண்ணினாரேல்
உம்பரார்கோனுமாலுமயனுநேருணரவொண்ணா
எம்பிரானிசைந்தாலேவப்பெறுவதேயிதனுக்குள்ளங்
கம்பியாதவனையான்முன்காணுநாளென்றென்று, (௩௮௭)

அரிவைகாரணத்தினாலேயாளுடைப்பரமர்தம்மை
யிரவினிற்றூதுபோகவேவியங்கிருந்தான்றன்னை
வரவெதிர்காண்பேனாகில்வருவதென்னாங்கொலென்று
விரவியசெற்றம்பற்றிவிள்ளுமுள்ளத்தராகி. (௩௮௮)

ஈரிலாப்புகழினோர்க்குமேயர்கோனார்தமெண்ணப்
பேறிதுபெற்றார்கேட்டுப்பிழையுடன்படுவாராகி
வேறினியிதற்குத்தீர்வுவேண்டுவார்விரிபூங்கொன்றை
யாறிடுசடையனார்க்கதனைவிண்ணப்பஞ்செய்து, (௩௮௯)

நாடொறும்பணிந்துபோற்றநாதருமதனைக்கேட்டு
நீடியதொண்டர்தம்முளிருவருமேவுநீர்மை
கூடுதல்புரிவாரேயர்குரிசிலார்தம்பான்மேனி
வாடுறுசூலைதன்னையருளினார்வருந்துமாற்றால். (ஙகூ௰)

ஏதமில்பெருமைச்செய்கையேயர்தம்பெருமான்பக்கல்
ஆதியாரேவுஞ்சூலையனல்செய்வேல்குடைவதென்ன
வேதனைமேன்மேற்செய்யமிகவதற்குடைந்துவீழ்ந்து
பூதநாயகர்தம்பொற்றாள்பற்றியேபோற்றுகின்றார். (ஙகூக)

சிந்தையால்வாக்காலன்பர்திருந்தடிபோற்றிசெய்ய
எந்தமையாளுமேயர்காவலர்தம்பாலீசர்
வந்துனைவருத்துஞ்சூலைவன்றொண்டன்றீர்க்கிலன்றி
முந்துறவொழியாதென்றுமொழிந்தருள்செய்யக்கேட்டு. (ஙகூஉ)

எம்பிரானெந்தைதந்தைதந்தையெங்கூட்டமெல்லாந்
தம்பிரானீரேயென்றுவழிவழிசார்ந்துவாழும்
இம்பரின்மிக்கவாழ்க்கையென்னைநின்றீருஞ்சூலை
வம்பெனவாண்டுகொண்டானொருவனேதீர்ப்பான்வந்து. (ஙகூங)

மற்றவன்றீர்க்கிற்றீராதொழிந்தெனைவருத்தனன்றாற்
பெற்றமேலுயர்த்தீர்செய்யும்பெருமையையறிந்தார்யாரே
யுற்றவன்றொண்டர்க்கேயாமுறுதியேசெய்தீரென்னக்
கற்றைவார்சடையார்தாமுமவர்முன்புகரந்தாரன்றே. (ஙகூச)

வன்றொண்டர்தம்பாற்சென்றுவள்ளலாரருளிச்செய்வார்
இன்றுநம்மேவலாலேயேயர்கோனுற்றசூலை
சென்றுநீதீர்ப்பாயாகென்றருள்செயச்சிந்தையோடு
நன்றுமெய்மகிழ்ந்துபோற்றிவணங்கினார்நாவலூரர். (ஙகூரு)

அண்ணலாரருளிச்செய்துநீங்கவாரூரர்தாமும்
விண்ணவர்தம்பிரானாரேவலால்விரைந்துசெல்வார்
கண்ணியமனத்தின்மேவுங்காதலாற்கலிக்காமற்குத்
திண்ணியசூலைதீர்க்கவருதிறஞ்செப்பிவிட்டார். (ஙகூசா)

நாதர்தம்மருளாலண்ணுஞ்சூலையுமவர்பாற்கேட்ட
கேதமும்வருத்தமீண்டும்வன்றொண்டர்வரவுகேட்டுத்
தூதனையெம்பிரானையேவினான்சூலைதீர்க்கும்
ஏதமிங்கெய்தவெய்தில்யான்செய்வதென்னாமென்பார். (ஙகூஎ)

மற்றவனிங்குவந்துதீர்ப்பதன்முன்னான்மாயப்
பற்றிநின்றென்னைநீங்காப்பாதகச்சூலைதன்னை
யுற்றவிவ்வயிற்றினோடுங்கிழிப்பனென்றுடைவாடன்னாற்
செற்றிடவுயிரினோடுஞ்சூலையுந்தீர்ந்ததன்றே. (௩௯௮)

கருதரும்பெருமைநீர்மைக்கலிக்காமர்தேவியாரும்
பொருவருங்கணவரோடுபோவதுபுரியுங்காலை
மருவியிங்கணைந்தார்நம்பியென்றுமுன்வந்தார்கூற
ஒருவருமழுதல்செய்யாதொழிகவென்றுரைத்துப்பின்னர். (௩௯௯

கணவர்தஞ்செய்கைதன்னைக்கரந்துகாதலைநம்பி
யணைவுறும்பொழுதுசாலவலங்கரித்தெதிர்போமென்னப்
புணர்நிலைவாயிற்றீபம்பூரணகும்பம்வைத்துத்
துணர்மலர்மாலைதூக்கித்தொழுதெதிர்கொள்ளச்சென்றார். (௪௱)

செம்மைசேர்சிந்தைமாந்தர்சென்றெதிர்கொண்டுபோற்ற
நம்மையாளுடையநம்பிநகைமுகமவர்க்குநல்கி
மெய்ம்மையாம்விருப்பினோடுமேவியுட்புகுந்துமிக்க
மொய்ம்மலர்த்தவிசின்மீதுமுகமலர்ந்திருந்தபோது. (௪௱௧)

பான்மையர்ச்சனைகளெல்லாம்பண்பினில்வழாமையேய்ந்த
நான்மறைதொடர்ந்தவாய்மைநம்பியாரூரர்கொண்டிங்
கியான்மிகவருந்துகின்றேனேயர்கோனார்தாமுற்ற
வூனவெஞ்சூலைநீக்கியுடனிருப்பதனுக்கென்றார். (௪௱௨)

மாதர்தமேவலாலேமனைத்தொழின்மாக்கண்மற்றிங்
கேதமொன்றில்லையுள்ளேபள்ளிகொள்கின்றாரென்னத்
தீதணைவில்லையேனுமென்மனந்தெருளாதின்ன
மாதலாலவரைக்காணவேண்டுமென்றருளிச்செய்தார். (௪௱௩)

வன்றொண்டர்பின்னுங்கூறமற்றவர்தம்மைக்காட்டத்
துன்றியகுருதிசோரத்தொடர்குடர்சொரிந்துளாவி
பொன்றியேகிடந்தார்தம்மைக்கண்டபின்புகுந்தவாறு
நன்றெனமொழிந்துநானுநண்ணுவேனிவர்முன்பென்பார். (௪௱௪)

கோளுறுமனத்தராகிக்குற்றுடைவாளைப்பற்ற
ஆளுடைத்தம்பிரானாரருளினாலவருமுய்ந்து
கேளிரேயாகிக்கெட்டேனெனவிழுந்தவர்தங்கையில்
வாளினைப்பிடித்துக்கொள்ளவன்றொண்டர்வணங்கிவீழ்ந்தார். ( )

மற்றவர்வணங்கிவீழவாளினைமாற்றியேயர்
கொற்றவருநம்பிகுரைகழல்பணிந்துவீழ்ந்தார்
அற்றைநாணிகழ்ந்தவிந்தவதிசயங்கண்டுவானோர்
பொற்றடமலரின்மாரிபொழிந்தனர்புவனம்போற்ற. (௪௱௬)

இருவருமெழுந்துபுல்லி யின்புறவிடாநண்பினாலே
பொருவருமகிழ்ச்சிபொங்கத்திருப்புன்கூர்ப்புனிதர்பாத
மருவினர்போற்றிநின்றுவன்றொண்டர்தம்பிரானார்
அருளினைநினைந்தேயந்தணாளனென்றெடுத்துப்பாடி. (௪௱௭)

சிலபகல்கழிந்தபின்புதிருமுனைப்பாடிநாடர்
மலர்புகழ்திருவாரூரின்மகிழ்ந்துடன்வந்தவேயர்
குலமுதற்றலைவனாருங்கூடவேகுளிர்பூங்கோயி
னிலவினார்தம்மைக்கும்பிட்டுறைந்தனர்நிறைந்தநண்பால். (௪௱௮)

அங்கினிதமர்ந்துநம்பியருளினான்மீண்டும்போந்து
பொங்கியதிருவின்மிக்கதம்பதிபுகுந்துபொற்பிற்
றங்குநாளேயர்கோனார்தமக்கேற்றதொண்டுசெய்தே
செங்கண்மால்விடையார்பாதஞ்சேர்ந்தனர்சிறப்பினோடும். (௪௱௯)

நள்ளிருணாயனாரைத்தூதுவிட்டவர்க்கேநண்பாம்
வள்ளலாரேயர்கோனார்மலரடிவணங்கிப்புக்கேன்
உள்ளுணர்வானஞானமுதலியவொருநான்குண்மை
தெள்ளுதீந்தமிழாற்கூறுந்திருமூலர்பெருமைசெப்ப. (௪௱௰)

திருச்சிற்றம்பலம்.

ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணம்
முற்றிற்று.

இப்புராணத்துள் அடங்கிய கவி-௪௱௰ ல்—
இந்நாயனாருக்காக ஏற்பட்டுள்ள ஆதியந்தம் கவி (௩௰௫)
சங்கிலிநாச்சியார்கதை (கவி) (௬௰௫)
சுந்தரமூர்த்திநாயனார் பரவைநாச்சியாருக்கு நேரில்
தூதுவிட்டது கவி (௪)
பரவைநாச்சியாருக்காகச்சிவபெருமான்தூதுச்சிறப்புகவி (௫௰௨)
மற்றுமுள்ள (கவிகள்) (௨௪௪)ம் சுந்தரமூர்த்திநாயனார்
தலயாத்திரையின் சிறப்புக்கூறப்பட்டது.

உ

சிவமயம்.

சேரமான்பெருமாணாயனாரென்னும்

# கழறிற்றறிவார் நாயனார்புராணம்.

கழறிற்றறிவாரென்பதற்குப் பொருள் இப்புராணம் ௰௪-வது கவியிற் கண்டுகொள்க.

இது முதல் (௪௰௩) (கவி) இந்நாயனாரது தனிச்சரித்திரம் கூறப்பட்டது.

மாவீற்றிருந்தபெருஞ்சிறப்பின்மன்னுந்தொன்மைமலைநாட்டுப்
பாவீற்றிருந்தபல்புகழார்பயிலுமியல்பிற்பழம்பதிதான்
சேவீற்றிருந்தார்திருவஞ்சைக்களமுநிலவிச்சேரர்குலக்
கோவீற்றிருந்துமுறைபுரியுங்குலக்கோமூதூர்கொடுங்கோளூர்.

காலையெழும்பல்கலையினொலிகளிற்றுக்கன்றுவடிக்குமொலி
சோலையெழுமென்சுரும்பினொலிதுரகச்செருக்காற்சுலவுமொலி
பாலைவிபஞ்சிபயிலுமொலிபாடலாடன்முழவினொலி
வேலையொலியைவிழுங்கியெழவிளங்கியோங்கும்வியப்பினதால். ௨

மிக்கசெல்வமனைகடொறும்விழையுமின்பம்விளங்குவன
பக்கநெருங்குசாலைதொறும்பயில்சட்டறங்கள்பல்குவன
தக்கவணிகொண்மடங்கடொறுஞ்சைவமேன்மைசாற்றுவன
தொக்கவளங்கொளிடங்கடொறுமடங்காநிதியந்துவன்றுவன. (௩)

வேதநெறியின்முறைபிறழாமிக்கவொழுக்கந்தலைநின்ற
சாதிநான்குநிலைதழைக்குந்தன்மைத்தாகித்தடமதில்சூழ்
சூதவகுளசாளநிரைதுதையுஞ்சோலைவளநகர்தான்
கோதையரசர்மகோதையெனக்குலவும்பெயருமுடைத்துலகில். (௪)

முருகுவிரியுமலர்ச்சோலைமூதூரதன்கண்முறைமரபின்
அருகியழியுங்கலிநீக்கியறங்கொள்சைவத்திறந்தழைப்பத்
திருகுசினவெங்களியானைச்சேரர்குலமுமுலகுஞ்செய்
பெருகுதவத்தாலரனருளாற்பிறந்தார்பெருமாக்கோதையார். (௫)

திருமாநகரந்திருவவதாரஞ்செய்விழவின்சிறப்பினால்
வருமாகளிகூர்நெய்யாடலெடுப்பார்வானமலர்மாரி
தருமாவிசும்பின்மிகநெருங்கத்தழங்குமொலிமங்கலந்தழைப்பப்
பெருமாநிலத்திலெவ்வுயிரும்பெருகுமகிழ்ச்சிபிறங்கினவால். (௬)

மண்மேற்சைவநெறிவாழவளர்ந்தமுன்னைவழியன்பாற்
கண்மேல்விளங்குநெற்றியினார்கழலேபேணுங்கருத்தினரா
யுண்மேவியவன்பினராகியுரிமையரசர்தொழில்புரியார் [வார்.
தெண்ணீர்முடியார்திருவஞ்சைக்களத்திற்றிருத்தொண்டேபுரி

உலகினியல்புமரசியல்புமுறாதியல்லவெனவுணர்வார்
புலரியெழுந்துபுனன்மூழ்கிப்புனிதவெண்ணீற்றினுமுழுகி
நிலவுதிருநந்தனவனத்துநீடும்பணிகள்பலசெய்து
மலருமுகையுங்கொணர்ந்துதிருமாலைசாத்தமகிழ்ந்தமைத்து. (௮)

திருமஞ்சனமுங்கொணர்ந்துதிருவலகுமிட்டுத்திருமெழுக்கு
வருமன்புடனின்புறச்சாத்திமற்றுமுள்ளதிருப்பணிகள் [டும்
பெருமைபிறங்கச்செய்தமைத்துப்பேணும்விருப்பிற்றிருப்பாட்
ஒருமைநெறியினுணர்வுவரவோதிப்பணிந்தேயொழுகுநாள். (௯)

நீரின்மலிந்தகடலகழிநெடுமால்வரையின்கொடிமதில்சூழ்
சீரின்மலிந்ததிருநகரயதனிற்செங்கோற்பொறையென்னுங்
காரின்மலிந்தகொடைநிழன்மேற்கவிக்குங்கொற்றக்குடைநிழற்
தாரின்மலிந்தபுயத்தரசன்றரணிநீத்துத்தவஞ்சார்ந்தான். [கீழ்த்

வந்தமரபினரசளிப்பான்வனஞ்சார்தவத்தின்மருவியபின்
சிந்தைமதிநூலோரமைச்சர்சிலநாளாய்ந்துதெளிந்தநெறி
முந்தைமரபின்முதல்வர்திருத்தொண்டுமுயல்வார்முதற்றுக
இந்துமுடியார்திருவஞ்சைக்களத்திலவர்பாலெய்தினார். (௰௧)

எய்தியவர்தமெதிரிறைஞ்சியிருந்தண்சாரன்மலைநாட்டிச்
செய்திமுறைமையாலுரிமைச்செங்கோலரசுபுரிவதற்கு
மைதீர்நெறியின்முடிசூடியருளுமரபால்வந்ததெனப்
பொய்தீர்வாய்மைமந்திரிகள்போற்றிப்புகன்றபொழுதின்கண். ()

இன்பம்பெருகுந்திருத்தொண்டுக்கிடையூறுகவிவர்மொழிந்தார்
அன்புநிலைமெய்வழுவாமையரசுபுரக்குமருளுண்டேல்
என்புமரவும்புனைந்தாரையிடைபெற்றறிவேனெனப்புக்கு
முன்புதொழுதுவிண்ணப்பஞ்செய்தார்முதல்வரருளினால். (௰௨)

மேவுமுரிமையரசளித்தே விரும்புகாதல்வழிபாடும்
யாவும்யாருங்கழறினவுமறியுமுணர்வுமீறில்லாத்
தாவில்விறலுந்தண்டாதகொடையும்படைவாகனமுதலாங்
காவன்மன்னர்க்குறியனவுமெல்லாங்கைவந்துறப்பெற்றார். (௰௪)

ஆனவருள்கொண்டஞ்சலிசெய்திறைஞ்சிப்புறம்போந்தரசளித்
ஊனமாகுந்திருத்தொண்டுக்கேகினுமுடையானருளாலே [தால்
மேன்மைமகுடந்தாங்குதற்குவேண்டுமமைச்சர்க்குடன்படலு
மானவமைச்சர்தாம்பணிந்தவ்வினைமேற்கொண்டுமகிழ்ந்தெழுந்
தார். (௰௫)

உரிமைநாளிலோரைநலனெய்தமிக்கவுபகரணம்
பெருமைசிறக்கவேண்டுவனவெல்லாம்பிறங்கமங்கலஞ்செய்
திருமையுலகுக்கொருமைமுடிகவித்தாரெல்லாவுயிருமகிழ்ந்
தருமைநிலைமையறிந்துபுவிதாங்குங்கழறிற்றறிவார்தாம். (௰௬)

தம்பிரானார்கோவில்வலங்கொண்டுதிருமுன்றாழ்ந்தெழுந்து
கும்பயானைமேல்கொண்டுகொற்றக்குடையுஞ்சாமரையு
நம்புமுரிமையவர்தாங்கநலங்கொள்நகர்சூழ்வலங்கொள்வார் [டார்.
மொய்ம்பிலுவரின்பொதிசுமந்தேதார்வண்ணான்முன்னேவரக்கண்

மழையிற்கரைந்தங்குவருநீறுமேனிவெளுத்தவடிவிறல்
உழையிற்பொலிந்ததிருக்கரத்தாரடியார்வேடமென்றுணர்ந்தே
யிழையிற்சிறந்தவோடைநுதல்யானைக்கழுத்தினின்றிழிந்து
விழைவிற்பெருகுங்காதலினால்விரைந்துசென்றுகைதொழுதார். ()

சேரர்பெருமான்றொழக்கண்டுசிந்தைகலங்கிமுன்வணங்கி
யாரென்றடியேனைக்கொண்டதடியேனடிவண்ணானென்னச்
சேரர்பிரானுமடிச்சேரனடியேனென்றுதிருநீற்றின்
வாரவேடநினைப்பித்தீர்வருந்தாதேகுமெனமொழிந்தார். (௰௯)

மன்னர்பெருமான்றிருத்தொண்டுகண்டுமதிநீடமைச்சரெலாஞ்
சென்னிமிசையஞ்சலிசெய்துபோற்றச்சினமால்களிறேறி
மின்னுமணிப்பூண்கொடிமாடவீதிசூழ்தார்வலங்கொண்டு
பொன்னின்மணிமாளிகைவாயில்புக்கார்புனைமங்கலம்பொலிய. ()

யானைமிசைநின்றிழிந்தருளியிலங்குமணிமண்டபத்தின்கண்
மேன்மையரியாசனத்தேறிவிளங்குங்கொற்றக்குடைநிழற்றப்
பானல்விழியார்சாமரைமுன்பணிமாறப்பன்மலர்தூவி
மானவரசர்போற்றவீற்றிருந்தார்மன்னர்பெருமானார். (௨௧)

உலகுபுரக்குங்கொடைவளவனுரிமைச்செழியருடன்கூட
நிலவுபெருமுக்கோக்களாய்நீதிமனுநூனெறிநடத்தி
யலகிலரசர்திறைகொணரவகத்தும்புறத்தும்பகையறுத்து
மலருந்திருநீற்றொளிவளரமறைகள்வளரமண்ணளிப்பார். (௨௨)

நீடுமுரிமைப்பேரரசாளிகழும்பயனுநிறைதவமுந்
தேடும்பொருளும்பெருந்துணையுந்தில்லைத்திருச்சிற்றம்பலத்துள்
ஆடுங்கழலேயெனத்தெளிந்தவறிவாலெடுத்ததிருப்பாதங்
கூடுமன்பிலர்ச்சனைமேற்கொண்டார்சேரர்குலப்பெருமாள். (௨௩)

வாசத்திருமஞ்சனம்பள்ளித்தாமஞ்சாந்தமணித்தூபந்
தேசிற்பெருகுஞ்செழுந்தீபமுதலாயினவுந்திருவமுதும்
ஈசர்க்கேற்றபரிசினலர்ச்சித்தருளவெந்நாளும்
பூசைக்கமர்ந்தபெருங்கூத்தர்பொற்பார்சிலம்பினொலியளித்தார்.

நம்பர்தாளின்வழிபாட்டானாளுமின்புற்றமர்கின்றார்
இம்பருலகிலிரவலர்க்கும்வறியோரெவர்க்குமீகையினாற்
செம்பொன்மழையாமெனப்பொழிந்துதிருந்துவென்றியுடன்பொ
யும்பர்போற்றத்தம்பெருமாற்குரியவேள்விபலசெய்தார். [ருந்தி

இன்னவண்ணமிவரொழுகவெழில்கொள்பாண்டிநன்னாட்டு
மன்னுமதுரைத்திருவாலவாயிலிறைவர்வருமன்பாற்
பண்ணுமிசைப்பாடலிற்பரவும்பாணனார்பத்திரனார்க்கு
நன்மைநீடுபெருஞ்செல்வநல்கவேண்டியருள்புரிவார். (௨௬)

இரவுகனவிலெழுந்தருளியென்பாலன்பாலெப்பொழுதும்
பரவுசேரன்றனக்குனக்குப்பைம்பொன்காணம்பட்டாடை
விரவுகதிர்செய்நவமணிப்பூண்வேண்டிற்றெல்லாங்குறைவின்றித்
தரநம்மோலைதருகின்றேந்தாழாதேகிவருகென்று. (௨௭)

வேறு

அதிர்கழலுதியர்வேந்தற்கருள்செய்தபெருமையாலே
எதிரில்செல்வத்துக்கேற்றவிருநிதிகொடுக்கவென்று
மதிமலிபுரிசையென்னும்வாசகம்வரைந்தவாய்மை
கதிரொளிவிரிந்ததோட்டுத்திருமுகங்கொடுத்தார்காண. (௨௮)

சேரமான்பெருமாணாயனார் - ? 

சொக்கநாதசுவாமி - திருமுகப்பாசுரம்.

திருச்சிற்றம்பலம்.

மதிமலிபுரிசைமாடக்கூடற், பதியிலைசவிலவுபாணிறவரிச்சிறை
யன்னம்பயில்பொழிலாலவாயின், மன்னியசிவன்யாமொழிதருமாற்றம்
பருவக்கொண்மூப்படியெனப்பாவலர்க், குரிமையினுரிமையினுதவியொ
ளிதிகழ்குருமாமதிபுரைநிலவியகுடைக்கீழ்ச்,செருமாவுகைக்குஞ்சேரலன்
காண்க,பண்பால்யாழ்பயில்பாணபத்திரன், தன்போ லென்பாலன்பன்றன்பால்,மாண்பொருள்கொடுத்துவரவிடுப்பது
[வே,

திருச்சிற்றம்பலம்.

சங்கப்புலவர்திருமுகந்தந்தலைமேற்கொண்டுபத்திரனார்
அங்கப்பொழுதேபுறப்பட்டுமலைநாடணையவந்தெய்தித்
துங்கப்புரிசைக்கொடுங்கோளூர் தன்னிற்புகுந்துதுன்னுகொடி
மங்குற்றொடக்குமாளிகைமுன்வந்துமன்னர்க்கறிவித்தார். (௨௬)

கேட்டபொழுதேதகைதலைமேற்கொண்டுகிளர்ந்தபேரன்பா
னோட்டம்பொழிநீர்வழிந்திழியவெழுந்துநடுக்கமிகவெய்தி
யோட்டத்தம்பொன்மாளிகையின்புறத்திலுருகுஞ்சிந்தையுடன்
பாட்டின்றலைமைப்பாணனார்பாதம்பலகாற்பணிகின்றார். (௩௰)

அடியேன்பொருளாத்திருமுகங்கொண்டணைந்த தென்னவவர்தா
மும், கொடிசேர்விடையார் திருமுகங்கைக் கொடுத்து வணங்கக்
கொற்றவனார், முடிமேற்கொண்டு கூத்தாடி மொழியுங்குழறிப்
பொழிகண்ணீர், பொடியார்மார்பிற்பரந்துவிழப்புவிமேற்பலகால்
வீழ்ந்தெழுந்தார். (௩௧)

பரிவிற்போற்றித்திருமுகத்தைப்பலகாற்றொழுதுபடியெடுக்க
உரியவகையாலெடுத்தோதியும்பர்பெருமானருள்போற்றி
விரிபொற்சுடர்மாளிகைபுக்குமேவுமுரிமைச்சுற்றமெல்லாம்
பெரிதுவிரைவிற்கொடுபோந்துபேணுமமைச்சர்க்கருள்செய்வார்.

நங்கள்குலமாளிகையிதனுணலத்தின்மிக்கநிதிக்குவையாய்ப்
பொங்கிநிறைந்தபலவேறுவகையிற்பொலிந்தபண்டாரம்
அங்கணொன்றுமொழியாமையடையக்கொண்டுபுறப்பட்டுத்
தங்கும்பொதிசெய்தாளின்மேற்சமையவேற்றிக்கொணருமென,

சேரர்பெருமானருள்செய்யத்திருந்துமதிநூன்மந்திரிகள்
சாருமணிமாளிகையுள்ளாற்றனங்களெல்லாநிறைந்தபெருஞ்
சீர்கொணிதியமெண்ணிறந்தவெல்லாம்பொதிசெய்தாளின்மேற்
பாரினெருங்கமிசையேற்றிக்கொண்டுவந்துபணிந்தார்கள். (௩௰௪)

பரந்தநிதியின்பரப்பெல்லாம்பாணனார்பத்திரனார்க்கு
நிரந்ததனங்கள்வெவ்வேறுநிறைத்துக்காட்டிமற்றிவையும்
உரந்தங்கியவெங்கரிபரிகண்முதலாவுயிருள்ளனதனமும்
புரந்தவரசுங்கொள்ளுமெனமொழிந்தார்பொறையர்புரவலனார். ()

பாணனார்பத்திரனாரும்பைம்பொன்மௌலிச்சேரலனார்
காணக்கொடுத்தவிவையெல்லாங்கண்டுமகிழ்வுற்றதிசயித்துப்
பேணவெனக்குவேண்டுவனவடியேன்கொள்ளப்பிஞ்ஞகனார்
ஆணையரசுமரசுறுப்புங்கைக்கொண்டருளுமெனவிறைஞ்ச. (௩௰௬)

இறைவராணைமறுப்பதனுக்கஞ்சியிருந்தாரிகல்வேந்தர்
நிறையுநிதியின்பரப்பெல்லாநிலத்தைநெளியவுடன்கொண்டே
யுறைமும்மதத்துக்களிறுபரியுள்ளிட்டனவேண்டுவகொண்டோர்
பிறைவெண்கோட்டுக்களிற்றுமேல்கொண்டுபோந்தார்பெரும்பா
[ணர். (௩௰௭)

பண்புபெருகும்பெருமாளும்பாணனார்பத்திரனார்பின்
கண்கள்பொழிந்தகாதனீர்வழியக்கையாற்றொழுதணைய
நண்புசிறக்குமவர்தம்மைநகரின்புறத்துவிடைகொண்டு
திண்பொற்புரிசைத்திருமதுரைபுக்கார்திருந்துமிசைப்பாணர் ()

வானவரம்பர்குலம்பெருக்குமன்னனாருமறித்தேகிக்
கூனலிளவெண்பிறைக்கண்ணிமுடியாரடிமைகொண்டருளும்
பான்மையருளின்பெருமையினைநினைந்துபலகாற்பணிந்தேத்தி
மேன்மைவிளங்குமாளிகைமண்டபத்துளாகவீற்றிருந்தார். (௩௰௯)

அளவில்பெருமையகிலயோனிகளுங்கழறிற்றறிந்தவற்றின்
உளமன்னியமெய்யுறுதுயரமொன்றுமொழியாவகையகற்றிக்
களவுகொலைகண்முதலானகடந்துகழறிற்றறிவார்தாம்
வளவர்பெருமானுடன்செழியர்மகிழுங்கலப்பில்வைகுநாள். (௪௰)

வானக்கங்கைநதிபொதிந்தமல்குசடையார்வழிபாட்டுத்
தூநற்சிறப்பினர்ச்சனையாந்தொண்டுபுரிவார்தமக்கொருநாட்
டேனக்கலர்ந்தகொன்றையினாராடற்சிலம்பினொலிமுன்போன்
மானப்பூசைமுடிவின்கட்கேளாதொழியமதிமயங்கி. (௪௰௧)

பூசைகடிதுமுடித்தடியேனென்னோபிழைத்ததெனப்பொருமி
யாசையும்பான்மற்றினிவேறடையுமின்பமியாதென்று
தேசின்விளங்குமுடைவாளையுருவித்திருமார்பினினூட்ட
வீசர்விரைந்துதிருச்சிலம்பினோசைமிகவுமிசைப்பித்தார். (௬௨)

ஆடற்சிலம்பினொலிகேளாவுடைவாளகற்றியங்கைமலர்
கூடத்தலைமேற்குவித்தருளிக்கொண்டுவிழுந்துதொழுதெழுந்து
நீடப்பரவிமொழிகின்றார்நெடுமால்பிரமனருமறைமுன்
றேடற்கரியாய்திருவருண்முன்செய்யாதொழிந்ததென்னென்றார்.

என்றபொழுதிலிறைவர்தாமெதிர்நின்றருளாதெழுமொலியால்
மன்றினிடைநங்கூத்தாடல்வந்துவணங்கிவன்றொண்டன்
ஒன்றுமுணர்வானமைப்போற்றியுரைசேர்பதிகம்பாடுதலா
னின்றுகேட்டுவரத்தாழ்ந்தோமென்றாரவரைநினைப்பிப்பார். (௬௪)

நடராசப்பெருமான்சேரமான்பெருமாணாயனாருக்கு
சுந்தரமூர்த்திநாயனாரைநினைக்கும்படியருளியது.

என்னேயடியார்க்கிவரருளுங்கருணையிருந்தவாறென்று
பொன்னேர்சடையார்திருநடஞ்செய்புலியூர்ப்பொன்னம்பலமி
றைஞ்சித், தன்னேரில்லாவன்றொண்டர்தமையுங்காண்பனென
விரும்பி, நன்னீர்நாட்டுச்செலநயந்தார்நாமச்சேரர்கோமானார். ()

பொன்னார்மௌலிச்சேரலனார்போற்றுமமைச்சர்க்கியம்பி
நன்னாட்கொண்டுபெரும்பயணமெழுகவென்றுநலஞ்சாற்ற
மின்னாரயில்வேற்குலமறவர்வென்றிநிலவுஞ்சிலைவீரர்
அந்நாட்டுள்ளாரடையநிரந்தணைந்தார்வஞ்சியகநகர்வாய். (௬௬)

இடனன்னாளோரையினிலிறைவர்திருவஞ்சைக்களத்து |ய்ப்
மட்டுவிரிபூங்கொன்றையினார்தம்மைவலங்கொண்டிறைஞ்சிப்போ
பட்டநுதல்வெங்களியானைப்பிடர்மேற்கொண்டுபனிமதியந்
தொட்டகொடிமாளிகைமூதூர்கடந்தாருதியர்தோன்றலார். (௬௭)

யானையணிகள்பரந்துவழியெங்குநிரந்துசெல்லுவன
மானமலைநாட்டினின்மலிந்தமலைகளுடன்போதுவபோன்ற
சேனைவீரர்புடைபரந்துசெல்வாரங்கண்மலைசூழ்ந்த
கானமடையவுடன்படர்வபோலுங்காட்சிமேவினதால். (௬அ)

புரவித்திரள்கள்யோகப்பொலிவினசைவிற்போதுவன
அரவச்சேனைக்கடற்றரங்கமடுத்துமேன்மேலடர்வனபோல்
விரவிப்படர்ந்துசென்றனவான்மிசையும்அவனுமொன்றாக
நிரவிப்படர்ந்தநெடுஞ்சேனைநேமிநெளியச்சென்றனவால். (௬௯)

அந்நாட்டெல்லைகடந்தணையவமைச்சர்க்கெல்லாம்விடையருளி
மின்னார்மணிப்பூண்மன்னவனார்வேண்டுவாரையுடன்கொண்டு
கொன்னாரயில்வேன்மறவர்பயில்கொங்கர்நாடுகடந்தருளிப்
பொன்னாட்டவருமணைந்தாடும்பொன்னிநீர்நாட்டிடைப்போவார்.

சென்றதிசையிற்சிவனடியார்சிறப்பினோடுமெதிர்கொள்ளக்
குன்றுங்கானுமுடைக்குறும்பரிடங்கடோறுங்குறைவறுப்பத்
துன்றுமுரம்புங்கானியாறுந்துறுகற்சுரமும்பலகடந்து
வென்றிவிடையாரிடம்பலவுமேவிப்பணிந்துசெல்கின்றார். (௫௧)

பொருவில்பொன்னித்திருநதியின்கரைவந்தெய்திப்புனிதநீர்
மருவுதீர்த்தமகிழ்ந்தாடிமருங்குவடபாற்கரையேறித்
திருவிற்பொலியுந்திருப்புலியூர்ச்செம்பொன்மன்றுணடம்போற்ற
உருகுமனத்தினுடன்சென்றாரொழியாவன்பின்வழிவந்தார். (௫௨)

வந்துதில்லைமூதூரினெல்லைவணங்கிமகிழ்ச்சியினால்
அந்தணாளர்தொண்டர்குழாமணைந்தபோதினெதிர்வணங்கிச்
சந்தவிரைப்பூந்திருவீதியிறைஞ்சித்தலைமேற்கரமுகிழ்ப்பச்
சிந்தைமகிழவெழுநிலைக்கோபுரத்தையணைந்தார்சேரலனார். (௫௩)

நிலவும்பெருமையெழுநிலைக்கோபுரத்தின்முன்னர்நிலத்திறைஞ்சி
மலருங்கண்ணீர்துளிததும்பப்புகுந்துமணிமாளிகைவலங்கொண்
டுலகுவிளக்குந்திருப்பேரம்பலத்தைவணங்கியுள்ளணைந்தார்
அலகிலண்டமளித்தவர்நின்றாடுந்திருச்சிற்றம்பலமுன். (௫௪)

அளவிலின்பப்பெருங்கூத்தாடவெடுத்தகழல்காட்ட
உளமும்புலனுமொருவழிச்சென்றுருகப்போற்றியுய்கின்றார்
களனில்விடம்வைத்துலகளித்தவமுதன்மன்றிற்கழல்வைத்து
வளருந்திருக்கூத்தமுதுலகுக்களித்தகருணைவழுத்தினார். (௫௫)

ஆராவாசையானந்தக்கடலுட்டிளைத்தேதயமார்ந்தருளாற்
சீரார்வண்ணப்பொன்வண்ணத்திருவந்தாதிதிருப்படிக்கீழ்ப்
பாராதரிக்கவெடுத்தேத்திப்பணிந்தார்பருவமழைபொழியுங்
காராணிகர்க்கவரியகொடைக்கையார்கழறிற்றறிவார்தாம். (௫௬)

திருச்சிற்றம்பலம்.

தம்பிரானார்க்கெதிர்நின்றுதமிழ்ச்சொன்மாலைகேட்பிக்க
உம்பர்வாழநடமாடுமொருவராதற்குப்பரிசிலெனச்
செம்பொன்மணிமன்றினிலெடுத்தசெய்யபாதத்திருச்சிலம்பின்
இம்பர்நீடவெழுந்தவொலிதாமுமெதிரேகேட்பித்தார். (௫௭)

ஆடற்சிலம்பினொலிகேட்டாரளவிலின்பவானந்தங்
கூடப்பெற்றபெரும்பேற்றின்கொள்கைவாய்ப்பக்கும்பிடுவார்
நீடப்பணியுங்காலமேலாநின்றதொழுதுபுறம்போந்து
மாடத்திருமாளிகைவீதிவணங்கிப்புறத்துவைகினார். (௫அ)

பரவுந்தில்லைவட்டத்துப்பயில்வார்பைம்பொனம்பலத்துள்
அரவும்புனலுஞ்சடையாடவாடுவார்கூத்தாராமை
விரவுங்காதன்மிக்கோங்கவேதம்படியுந்திருப்படிக்கீழ்
இரவும்பகலும்பணிந்தேத்தியின்பஞ்சிறக்குமந்நாளில். (௫௯)

ஆடும்பெருமான்பாடல்கேட்டருளித்தாழ்த்தபடிதமக்குக்
கூடும்பரிசான்முன்பருளிச்செய்தநாவலூர்க்கோவை
நீடும்பெருங்காதலிற்காணநிறைந்தநினைவுநிரம்பமா
றேடும்பாதரருளினாற்றிருவாரூர்மேற்செலவெழுந்தார். (௬௰)

அறிவினெல்லையாயதிருத்தில்லையெல்லையமர்ந்திறைஞ்சிப்
பிறிவிலாததிருவடியைப்பெருகுமுள்ளத்தினிற்பெற்றுச்
செறியுஞானம்போனகர்வந்தருளும்புகலிசென்றிறைஞ்சி
மறிசேர்கரத்தார்கோயில்பலவணங்கிமகிழ்ந்துவழிக்கொள்வார். ()

வழியிற்குழியிற்செழுவயலின்மதகின்மலர்வாவிகளின்மடுச்
சுழியிற்றரளந்திரைசொரியுந்துறைநீர்ப்பொன்னிகடந்தேறி
விழியிற்றிகழுந்திருநுதலார்விரும்புமிடங்களிறைஞ்சியுகக்
கழியிற்பெருவெள்ளமுங்கொள்ளாக்கழனியாரூர்கண்ணுற்றார். ()

நம்பிதாமுமுன்னாட்போய்நாகைக்காரோணம்பாடி
அம்பொன்பணிப்பூணவமணிகளாடைசாந்தமடற்பரிமா
பைம்பொற்சுரிகைமுதலானபெற்றுமற்றும்பலபதியிற்
றம்பிரானைப்பணிந்தேத்தித்திருவாரூரிற்சார்ந்திருந்தார். (௬௩)

வந்துசேரர்பெருமானார்மன்னுந்திருவாரூரெய்த
அந்தணாளர்பெருமானுமரசர்பெருமான்வரப்பெற்றுச்
சிந்தைமகிழ்வெதிர்கொண்டுசென்றுகிடைத்தார்சேரலனார்
சந்தவிரைத்தார்வன்றொண்டர்முன்புவிருப்பினுடன்றாழ்ந்தார். ()

### சேரமான்பெருமானாயனார் திருவாரூரிற்சென்று சுந்தரமூர்த்திநாயனாரைக்கண்டுநண்புற்றது.

முன்புபணிந்தபெருமானைத்தாமும்பணிந்துமுகந்தெடுத்தே
அன்புபெருகத்தழுவவிரைந்தவருமார்வத்தொடுதழுவ
இன்பவெள்ளத்திடைநீந்தியேறமாட்டாதலைவார்போல்
என்புமுருகியுயிரொன்றியுடம்புமொன்றாமெனவிசைந்தார். (௬௫)

ஆனநிலைமைகண்டதிருத்தொண்டர்ளவின்மகிழ்வெய்த
மானச்சேரர்பெருமானார்தாமும்வன்றொண்டருங்கலந்த
பான்மைநண்பாற்சேரமான்றோழரென்றுபார்பரவு
மேன்மைநாமமுனைப்பாடிவேந்தர்க்காகிவிளங்கியதால். (௬௬)

இதுமுதல்இவ்விருவர்களின்சரித்திரம்
வெள்ளானைச்சருக்கம்இறுதிவரையினும்கலந்துவருகின்றது.

ஒருவரொருவரிற்கலந்தவுணர்வாலின்பமொழியுரைத்து
மருவவினியார்பாற்செய்வதென்னாமென்னுமகிழ்ச்சியினாற்
பருவமழைச்செங்கைபற்றிக்கொண்டுபரமர்தாள்பணியத்
தெருவுநீங்கிக்கோயிலினுட்புகுந்தார்சேரமான்றோழர். (௬௭)

சென்றுதேவாசிரியனைமுன்னிறைஞ்சித்திருமாளிகைவலங்கொண்
டொன்றுமுள்ளத்தொடும்புகுவாருடையநம்பிமுன்னாக
நின்றுதொழுதுகண்ணருவிவீழநிலத்தின்மிசைவீழ்ந்தே
யென்றுமினியதம்பெருமான்பாதமிறைஞ்சியேத்தினார். (௬௮)

தேவர்முனிவர்வந்திறைஞ்சுந்தெய்வப்பெருமான்கழல்வணங்கி
மூவர்தமக்குமுதலாகுமவரைத்திருமும்மணிக்கோவை
நாவலூரர்தம்முன்புநன்மைவிளங்கக்கேட்பித்தார்
தாவில்பெருமைச்சேரலனார்தம்பிரானார்தாங்கொண்டார். (௬௯)

அங்கணருள்பெற்றெழுவாரைக்கொண்டுபுறம்போந்தாரூரர்
நங்கைபரவையார்திருமாளிகையினண்ணநன்னுதலார்
பொங்குவிளக்குநிறைகுடமும்பூமாலைகளும்புகையகிலும்
எங்குமடவாரெடுத்தேந்தவணைந்துதாழுமெதிர்கொண்டார். (௭௰)

சோதிமணிமாளிகையின்கட்சுடரும்பசும்பொற்காலமளி
மீதுபெருமாடமையிருத்திநம்பிமேவியுடனிருப்பக்
கோதில்குணத்துப்பரவையார்கொழுநனார்க்குந்தோழற்கு
நீதிவழுவாவொழுக்கத்துநிறைபூசனைகண்முறையளித்தார். (௭௧)

தாண்டுபுரவிச்சேரர்குலப்பெருமாடமக்குத்திருவமுது
தூண்டுசோதிவிளக்கனையாரமைக்கத்துணைவர்சொல்லுதலும்
வேண்டும்பரிசுவெவ்வேறுவிதத்துக்கறியும்போனகமும்
ஈண்டச்சமைப்பித்துடன்வந்தார்க்கெல்லாமியல்பின்விருந்தமைத்
தார். (௭௨)

அரசர்க்கமைத்தசிறப்பினுமேலடியார்க்கேற்கும்படியாக
விரவிப்பெருகுமன்பினுடன்விரும்புமமுதுசமைத்ததற்பின்
புரசைக்களிற்றுச்சேரலனார்புடைசூழ்ந்தவரோடமுதுசெய்யப்
பரவைபிறந்ததிருவனையபரவையார்வந்தமைவித்தார். (௭௩)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

சேரர்பெருமானெழுந்தருளியமுதுசெய்யச்செய்தவத்தால்
தாரின்மலிபூங்குழன்மடவாய்தாழாதமுதுசெய்வியெனப்
பாரின்மலிசீர்வன்றொண்டரருளிச்செய்யப்பரிகலங்கள்
வரின்விளங்கத்திருக்கரத்திலிரண்டுபடியாமேற்றுதலும். (எச)

ஆண்டநம்பிபெருமானையுடனேயமுதுசெய்தருள
வேண்டுமென்னவாங்கவரும்விரைந்துவணங்கிவெருவுறலும்
நீண்டதடக்கைபிடித்தருளிமீண்டுநேரேகுறைகொள்ள
ஈண்டவமுதுசெய்வதனுக்கிசைந்தார்பொறையர்க்கிறையவனார். ()

ஒக்கவமுதுசெய்தருளவுயர்ந்ததவத்துப்பரவையார்
மிக்கவிருப்பிலமுதுசெய்வித்தருளிமேவும்பரிசனங்கள்
தக்கவகையாலறுசுவையுந்தாம்வேண்டியவாறினிதருந்தத்
தொக்கமகிழ்ச்சிகளிசிறப்பத்தூயவிருந்தின்கடன்முடித்தார். ()

பனிநீர்விரவுசந்தனத்தின்பசுங்கர்ப்பூரவிரைக்கலவை [தும்
வனிதையவர்கள்சமைத்தெடுப்பக்கொடுத்துமகிழ்மான்மதச்சாந்
புனிதநறும்பூமாலைகளும்போற்றிக்கொடுத்துப்பொற்கொடியார்
இனியபஞ்சவாசமுடனடைக்காயமுதுமேந்தினார். (எஎ)

ஆயசிறப்பிற்பூசனைகளளித்தவெல்லாமமர்ந்தருளித்
தூயநீறுதங்கடிருமுடியில்வாங்கித்தொழுதணிந்து
மேயவிருப்பினுடனிருப்பக்கழறிற்றறிவார்மெய்த்தொண்டின்
சேயநீர்மையடைந்தாராய்நம்பிசெம்பொற்கழல்பணிந்தார். (எஅ)

மலைநாட்டரசர்பெருமானார்வணங்கவணங்கியெதிர்தழுவிக்
கலைநாட்பெருகுமதிமுகத்துப்பரவையார்தங்கணவனார்
சிலைநாட்டியவெல்கொடியாரைச்சேரத்தந்தாரெனக்கங்கை
யலைநாட்கொன்றைமுடிச்சடையாரருளேபோற்றியுடனமர்ந்தார்..

செல்வத்திருவாரூர்மேவுஞ்செம்பொற்புற்றிலினிதமர்ந்த
வில்வெற்புடையார்கழல்வணங்கிவீதிவிடங்கப்பெருமானை
மல்லற்பவனிசேவித்துவாழ்ந்துநாளுமனமகிழ்ந்து
சொல்வித்தகர்தாமிருவர்களுந்தொடர்ந்தகாதலுடன்சிறந்தார். ()

இவ்வாறொழுகுநாளின்கணிலங்குமணிப்பூண்வன்றொண்டர்
மைவ்வாழ்களத்துமறையவனார்மருவுமிடங்கள்பலவணங்கச்
செய்வார்கன்னித்தமிழ்நாட்டுத்திருமாமதுரைமுதலான
மொய்வார்சடையார்மூதூர்களிறைஞ்சமுறைமையானினைந்தார்.

சேரர்பிரானுமாரூரர்தம்மைப்பிரியாச்சிறப்பாலும்
ஆர்வம்பெருகத்தமக்கன்றமதுரையாலவாயமர்ந்த
வீரரளித்ததிருமுகத்தால்விரும்புமன்பின்வணங்குதற்குச்
சாரவெழுந்தகுறிப்பினுந்தாமுமுடனேசெலத்துணிந்தார். (அஉ)

இருவர்திருவுள்ளமும்மியைந்தபொழுதிலெழுந்துதிருவாரூர்
ஒருவர்திருத்தாள்புக்கிறைஞ்சியுடன்பாட்டருளாற்போந்தருளி
மருவுமுரிமைப்பெருஞ்சுற்றம்வரம்பில்பணிகள்வாகனங்கள்
பொருவில்பண்டாரங்கொண்டுபோதுவார்களுடன்போத. (அங)

சேவித்தணையும்பரிசனங்கள்சூழ்ந்திருவாரூரிறைஞ்சிக்
காவிற்பயிலும்புறம்பணையைக்கடந்துபோந்துகீழ்வேளூர்
மேவிப்பரமர்கழல்வணங்கிப்போந்துவேலைக்கழிக்கானற்
பூவிற்றிகழும்பொழில்நாகைபுகுந்துகாரோணம்பணிந்தார். (அச)

திருக்காரோணத்திருப்பீரேயென்னுமன்பர்சிந்தையினை
யுருக்கார்வச்செந்தமிழ்மாலைசாத்திச்சிலநாளுறைந்துபோய்ப்
பெருக்காறலைவுசடைமுடியாரிடங்கள்பலவும்பணிந்தேத்தி
யருட்காரணர்தந்திருமறைக்காடணைந்தார்சேரராரூர். (அரு)

திருச்சிற்றம்பலம்.

முந்நீர்வலங்கொண்மறைக்காட்டுமுதல்வர்கோயில்சென்றிறைஞ்சிச்
செந்நீர்வாய்மைத்திருநாவுக்கரசும்புகலிச்சிவக்கன்றும்
அந்நேர்திறக்கவடைக்கவெனப்பாடுந்திருவாயிலையணைந்து
நன்னீர்பொழியும்விழியினராய்நாயன்மாரைநினைந்திறைஞ்சி. ()

நிறைந்தமறைகளர்ச்சித்தநீடுமறைக்காட்டருமணியை
யிறைஞ்சிவீழ்ந்துபணிந்தெழுந்துபோற்றியாழைப்பழித்தென்
அறைந்தபதிகத்தமிழ்மாலைநம்பிசாத்தவநட்சேரர் [னும்
சிறந்தவந்தாதியிற்சிறப்பித்தனவேயோதித்திளைத்தெழுந்தார். ()

திருச்சிற்றம்பலம்.

எழுந்துபணிந்துபுறத்தெய்தியிருவர்பெருந்தொண்டருஞ்சிலநாட்
செழுந்தண்பழனப்பதியதனுளமர்ந்துதென்பாற்றிரைக்கடனஞ்
சமுழ்ந்துமிடற்றாரகத்தியான்பள்ளியிறைஞ்சியவிர்மதியக்
கொழுந்துவளர்செஞ்சடைக்குழகர்கோடிக்கோயில்குறுகினார். ()

கோடிக்குழகர்கோயிலயற்குடிகளொன்றும்புறத்தெங்கு
நாடிக்காணாதுள்புக்குநம்பர்பாதந்தொழுதுள்ளம்
வாடிக்கடிதாய்க்கடற்காற்றென்றெடுத்துமலர்க்கண்ணீர்வாரப்
பாடிக்காடுகொள்புணர்ந்தபரிசும்பதிகத்திடைவைத்தார். (அகூ)

திருச்சிற்றம்பலம்.

அங்குவைகிப்பணிந்தருளாற்போவாரகன்சோணாட்டரனார்
தங்குமிடங்கள்வணங்கப்போய்ப்பாண்டிநாடுதனைச்சார்ந்து
திங்கண்முடியார்திருப்புத்தூரிறைஞ்சிப்போந்துசேண்விளங்கு
மங்குறவழுமணிமாடமதுரைமூதூர்வந்தணைந்தார். (௬௰)

வேறு

சேரமான்றோழருமச்சேரனாரும்பணிப்பூண்
ஆரமார்பரைமதுரையாலவாயினில்வணங்க
வாரமாவந்தணையவழுதியார்மனக்காதல்
கூரமாநகர்கோடித்தெதிர்கொண்டுகொடுபுக்கார். (௬௧)

தென்னவர்கோன்மகளாரைத்திருவேட்டுமுன்னரே
தொன்மதுரைநகரின்கணினிதிருந்தசோழனார்
அன்னவர்களுடன்கூடவணையவவருங்கூடி
மன்னுதிருவாலவாய்மணிக்கோயில்வந்தணைந்தார். (௬௨)

திருவாலவாயமர்ந்தசெஞ்சடையார்கோயில்வலம்
வருவார்முன்வீழ்ந்திறைஞ்சிவன்றொண்டர்வழித்தொண்டு
தருவாரைப்போற்றிசைத்துத்தாழ்ந்தெழுந்துவாழ்ந்ததமிழ்ப்
பெருவாய்மைமலர்புனைந்துபெருமகிழ்ச்சிபிறங்கினார். (௬௩)

படியேறுபுகழ்ச்சேரர்பெருமானும்பார்மிசைவீழ்ந்
தடியேனைப்பொருளாகவளித்ததிருமுகக்கருணை
முடிவேதென்றறிந்திலேனெனமொழிகடடுமாறக்
கடியேறுகொன்றையார்முன்பரவிக்களிகூர்ந்தார். (௬௪)

செம்பியனாருடன்செழியர்தாம்பணிந்துசேரருட
னம்பியுமுன்புறத்தணையநண்ணியபேருவகையால்
உம்பர்பிரான்கோயிலினின்றுடன்கொடுபோயிருவர்க்கும்
பைம்பொன்மணிமாளிகையிற்குறைவறுத்தார்பஞ்சவனார். (௬௫)

உளமகிழக்கும்பிட்டங்குறையுநாளுதியருடன்
கிளரொளிப்பூண்வன்றொண்டர்தாமிருந்தவிடங்கெழுமி
வளவனார்மீனவனார்வளம்பெருகமற்றவரோ
டளவளாவியவிருப்பானமர்ந்துகலந்தினிதிருந்தார். (௬௬)

அந்நாளின்மதுரைநகர்மருங்கரனாரமர்பதிகள்
பொன்னாரமணிமார்பிற்புரவலர்மூவரும்போதச்
செந்நாவின்முனைப்பாடித்திருநாடர்சென்றிறைஞ்சிச்
சொன்மாலைகளுஞ்சாத்தித்தொழத்திருப்பூவணத்தணைந்தார். ()

நீடுதிருப்பூவணத்துக்கணித்தாகநேர்செல்ல
மாடுவருந்திருத்தொண்டர்மன்னியவப்பதிகாட்டத்
தேடுமறைக்கரியாரைத்திருவுடையாரென்றெடுத்துப்
பாடிசையிற்பூவணமீதோவென்றுபணிந்தணைந்தார். (௬௮)

திருச்சிற்றம்பலம்.

சென்றுதிருப்பூவணத்துத்தேவர்பிரான்மகிழ்கோயின்
முன்றில்வலங்கொண்டிறைவர்முன்வீழ்ந்துபடிந்தெழுந்து
நின்றுபரவிப்பாடிநேர்நீங்கியுடன்பணிந்த
வென்றிமுடிவேந்தருடன்போந்தங்கண்மேவினார். (௬௯)

அப்பதியிலமர்ந்திறைஞ்சிச்சிலநாளிலாரூரர்
முப்பெருவேந்தர்களோடுமுதன்மதுரைநகரெய்தி
மெய்ப்பரிவிற்றிருவாலவாயுடையார்விரைமலர்த்தாள்
எப்பொழுதும்பணிந்தேத்தியின்புற்றங்கமர்கின்றார். (௭௦)

செஞ்சடையார்திருவாப்பனூர்திருவேடகமுதலா
நஞ்சணியுங்கண்டரவர்நயந்தபதிபலநண்ணி
யெஞ்சலிலாக்காதலினாலினிதிறைஞ்சிமீண்டணைந்து
மஞ்சணயுமதின்மதுரைமாநகரின்மகிழ்ந்திருந்தார். (௭௧)

பரமர்திருப்பரங்குன்றிற்சென்றுபார்த்திபரோடும்
புரமெரித்தார்கோயில்வலங்கொண்டுபுகுந்துள்ளிறைஞ்சிச்
சிரமலிமாலைச்சடையார்திருவடிக்கீழாட்செய்யும்
அருமைநினைந்தஞ்சுதுமென்றாரூரர்பாடுவார். (௭௨)

கோத்திட்டையெனவெடுத்துக்கோதிறிருப்பதிகவிசை
மூர்த்தியார்தமைவணங்கிமுக்கோக்களும்முன்பே
யேந்தியவண்டமிழ்மாலையின்னிசைபாடிப்பரவிச்
சாத்தினார்சங்கரனார்தங்குதிருப்பரங்குன்றில். (௭௩)

இறைவர்திருத்தொண்டுபுரியருமையினைப்பெருநிலத்து
முறைபுரியுமுதல்வேந்தர்மூவர்களுங்கேட்டிறைஞ்சி
மறைமூந்நான்மணிமார்பின்வன்றொண்டர்தமைபணிந்தார்
நிறைதவத்தோராரப்பாலுநிருத்தர்பதந்தொழநினைந்தார். (௭௪)

அந்நாட்டுத்திருப்பதிகள்பிறவுமணைந்திறைஞ்சிமலை
நன்னாட்டுவேந்தருடனம்பிதாமெழுந்தருள
பின்னாட்டும்பன்மணிப்பூண்வேந்தரிருவருமீள்வார்
தென்னாட்டுமேவண்டுவனசெய்தமைப்பார்தமைவிடுத்தார். (௭௫)

இருபெருவேந்தருமியல்பின்மீண்டதற்பினெழுந்தருளும்
பொருவருஞ்சீர்வன்றொண்டர்புகழ்ச்சேரருடன்புனிதர்
மருவியதானம்பலவும்பணிந்துபோய்மலைச்சாரற்
குருமணிகள்வெயிலெறிக்குங்குற்றாலஞ்சென்றடைந்தார். (௱௬)

குற்றாலத்திடையமர்ந்தகூத்தர்குரைகழல்வணங்கிச்
சொற்றாமமலர்புனைந்துகுறும்பலாத்தொழுதிப்பான்
முற்றாவெண்மதிமுடியார்பதிபணிந்துமூவெயில்கள்
செற்றார்மன்னியசெல்வத்திருநெல்வேலியையணைந்தார். (௱எ)

நெல்வேலிநீற்றழகர்தமைப்பணிந்துபாடிநிகழ்
பல்வேறுபதிபிறவும்பணிந்தன்பால்வந்தணைந்தார்.
வில்வேடராய்வென்றிவிசயனெதிர்பன்றிப்பின்
செல்வேதமுதல்வரமர்திருவிராமேச்சரத்து. (௱அ)

மன்னுமிராமேச்சரத்துமாமணியைமுன்வணங்கிப்
பன்னுதமிழ்த்தொடைசாத்திப்பயில்கின்றார்பாம்பணிந்த
சென்னியார்மாந்தோட்டத்துத்திருக்கேதீச்சரஞ்சார்ந்து
சொன்மலர்மாலைகள்சாத்தித்தூரத்தேதொழுதமர்ந்தார். (௱௯)

திருச்சிற்றம்பலம்.

திருவிராமேச்சரத்துச்செழும்பவளச்சுடர்க்கொழுந்தைப்
பரிவினாற்றொழுதகன்றுபரமர்பதிபிறபணிந்து
பெருவிமானத்திமையோர்வணங்குபெருந்திருச்சுழியல்
மருவினார்வன்றொண்டர்மலைவேந்தருடன்கூட. (௱௰)

திருச்சுழியலிடங்கொண்டசெம்பொன்மலைச்சிலையாரைக்
கருச்சுழியில்வீழாமைக்காப்பாரைக்கடல்விடத்தின்
இருட்சுழியுமிடற்றாரையிறைஞ்சியெதிரிதழிமலர்ப்
பருச்சுழியத்துடனூனையுயிரெனும்பாமலர்புனைந்தார். (௱௰௧)

திருச்சிற்றம்பலம்.

அங்கணரைப்பணிந்துறையுமாரூரர்க்கவ்வூரிற்
கங்குலிடைக்கனவின்கட்காளையாந்திருவடிவாற்
செங்கையினிற்பொற்செண்டுந்திருமுடியிற்சுழியமுடன்
எங்குமிலாத்திருவேடமென்புருகமுன்காட்ட. (௱௰௨)

கானப்பேர்யாமிருப்பதெனக்கழறிக்கங்கையெனும்
வானப்பேராறலவுமாமுடியார்தாமகல
ஞானப்பேராளருணர்ந்ததிசயித்துநாகமுடன்
ஏனப்பேரெயிறணிந்தாரருளிருந்தபரிசென்பார். (௱௰௩)

கண்டருளும்படிகழறிற்றறிவார்க்குமொழிந்தருளிப்
புண்டரிகப்புனற்சுழியற்புனிதர்கழல்வணங்கிப்போ
யண்டர்பிரான்றிருக்கானப்பேரணைவாராரூரர்
தொண்டரடிதொழலுமெனுஞ்சொற்பதிகத்தொடையெடுத்தார்.

திருச்சிற்றம்பலம்.

காளையார்தமைக்கண்டுதொழப்பெறுவதென்றென்று
தாளைநாளுநம்பரவத்தருவார்பாற்சார்கின்றார்
ஆளைநீளிடைக்காணவஞ்சியநீர்நாயயலே
வாளைபாய்துறைப்பழனமுனைப்பாடிவளநாடர். (௱௰௫)

மன்னுதிருக்கானப்பேர்வளம்பதியில்வந்தெய்திச்
சென்னிவளர்மதியணிந்தார்செழுங்கோயில்வலங்கொண்டு
முன்னிறைஞ்சியுள்ளணைந்துமுதல்வர்சேவடிதாழ்ந்து
பன்னுசெழுந்தமிழ்மாலைபாடினார்பரவினார். (௱௰௬)

ஆராதகாதலுடனப்பதியிற்பணிந்தேத்திச்
சீராருந்திருத்தொண்டர்சிலநாளங்கமர்ந்தருளிக்
காராருமலர்ச்சோலைக்கானப்பேர்கடந்தணைந்தார்
போராரேற்றார்கயிலைப்பொருப்பர்திருப்புனவாயில். (௱௰௭)

புனவாயிற்பதியமர்ந்தபுனிதராலயம்புக்கு
மனமார்வமுறச்சித்தநீடுமெனமென்றெடுத்து
வினவானதமிழ்பாடிவீழ்ந்திறைஞ்சியப்பதியிற்
சினவானையுரித்தணிந்தார்திருப்பாதந்தொழுதிருந்தார். (௱௰௮)

திருச்சிற்றம்பலம்.

திருப்புனவாயிற்பதியிலமர்ந்தசிவனார்மகிழும்
விருப்புடையகோயில்பலபணிந்தருளான்மேவினார்
பொருப்பினெடுகானகன்றுபுனற்பொன்னிநாடணைந்து
பருப்பதவார்சிலையார்தம்பாம்பணிமாநகர்தன்னில். (௱௰௯)

பாதாளீச்சரமிறைஞ்சியதன்மருங்குபலபதியும்
வேதாதிநாதர்கழல்வணங்கிமிகுவிரைவினுடன்
சூதாருந்துணைமுலையார்மணிவாய்க்குத்தோற்றிரவு
சேதாம்பல்வாய்திறக்குந்திருவாரூர்வந்தணைந்தார். (௱௨௰)

திருநாவலூர்வேந்தர்சேரர்குலவேந்தருடன்
வருவாரைத்திருவாரூர்வாழ்வார்களெதிர்கொள்ளத்
அருகாதலுடன்வணங்கித்தம்பெருமான்கோயிலினுட்
பெருகார்வத்தொடுவிரும்பும்பெரும்பேறுபெறப்புகுந்தார். (௱௨௧)

வாசமலர்க்கொன்றையார்மகிழ்கோயில்வலங்கொண்டு
நேசமுறமுன்னிறைஞ்சிநெடும்பொழுதெலாம்பரவி
யேசறவாற்றிருப்பதிகமெடுத்தேத்தியெழுந்தருளாற்
பாசவினைத்தொடக்கறுப்பார்பயில்கோயில்பணிந்தணைவார். (௱௨௨)

பரவையார்மாளிகையிற்பரிசனங்கண்முன்னெய்த
விரவுபேரலங்காரவிழுச்செல்வமிகப்பெருக
வரவெதிர்கொண்டடிவணங்கவன்றொண்டர்மலைநாட்டுப்
புரவலனையுங்கொண்டுபொன்னணிமாளிகைபுகுந்தார். (௱௨௩)

புரவியேபரவையார்பரிந்துடனேபணிந்தேத்தி
விரவியபோனகங்கறிகள்விதம்பலவாகச்சமைத்துப்
பரிகலமும்பாவாடைபகல்விளக்குமுடனமைத்துத்
திருவமுதுசெய்வித்தார்திருந்தியநன்மொழியினார். (௱௨௪)

மங்கலமாம்பூசனைகள்பரவையார்செயமகிழ்ந்து
தங்கியினிதமர்கின்றார்தம்பிரான்கோயிலினுட்
பொங்குபெருங்காலமெலாம்புக்கிறைஞ்சிப்புறத்தணைந்து
நங்கள்பிரான்றமரவர்களைவிளையாட்டினைநயந்தார். (௱௨௫)

நிலைச்செண்டும்பரிச்செண்டும்வீசிநிதமகிழ்வெய்தி
விலக்கரும்போர்த்தகர்ப்பாய்ச்சல்கண்டருளிவென்றிபெற
மலைக்குநெடுமுட்கணைக்கால்வாரணப்போர்மகிழ்ந்தருளி
யலைக்குமறப்பலபுள்ளினமர்விரும்பியமர்கின்றார். (௱௨௬)

வேறு.

விரவுகாதன்மீக்கூரமேவுநாள்கள்பலசெல்லக்
கரவிலீகைக்கேராளர்தங்கள்கடல்சூழ்மலைநாட்டுப்
பரவையார்தங்கொழுநனார்தம்மைப்பணிந்துகொண்டணைவான்
இரவும்பகலுந்தொழுதிரக்கவிசைந்தாரவருமெழுந்தருள. (௱௨௭)

நங்கைபரவையாருள்ளத்திசைவானம்பியெழுந்தருளத்
திங்கண்முடியார்திருவருளைப்பரவிச்சேரமான்பெருமான்
எங்குமுள்ளவடியாருக்கேற்றபூசைசெய்தருளிப்
பொங்குமுயர்ச்சியிருவரும்போய்ப்புக்கார்புனிதர்பூங்கோயில். ( )

தம்பிரானைத்தொழுதருளாற்போந்துதொண்டர்சார்ந்தணைய
நம்பியாரூரருஞ்சேரர்நன்னாட்டரசனாராய
பைம்பொன்மணிநீண்முடிக்கழறிற்றறிவார்தாமும்பயணமுடன்
செம்பொனீடுமழநிலனூர்தொழுதுமேல்பாற்செல்கின்றார். (௱௨௯)

வேறு.

பொன்பரப்பிமணிவரன்றிப்புனல்பரக்குங்காவேரித்
தென்கரைபோய்ச்சிவன்மகிழ்ந்தகோயில்பலசென்றிறைஞ்சி
மின்பரப்புஞ்சடையண்ணல்விரும்புதிருக்கண்டியூர்
அன்புருக்குஞ்சிந்தையுடன்பணிந்துபுறத்தணைந்தார்கள். (௱௩௰)

வடகரையிற்றிருவையாறெதிர்தோன்றமலர்க்கரங்கள்
உடலுருகவுள்ளுருகவுச்சியின்மேற்குவித்தருளிக்
கடல்பரந்ததெனப்பெருகுங்காவிரியைக்கடந்தேறிக்
தொடர்வுடையதிருவடியைத்தொழுவதற்குநினைவுற்றார். (௱௩௧)

வேறு.

ஐயாறதனைக்கண்டுதொழுதருளாரூரர்தமைநோக்கிச்
செய்யாள்பிரியாச்சேரமான்பெருமாளருளிச்செய்கின்றார்
மையார்கண்டர்மருவுதிருவையாறிறைஞ்சமனமுருகி
நையாநின்றதிவ்வாறுகடந்துபணிவோநாமென்ன. (௱௩௨)

ஆறுபெருகியிருகரையும்பொருதுவிசும்பிலெழுவதுபோல்
வேறுநாவாயோடங்கண்மீதுசெல்லாவகைமிகைப்ப
நீறுவிளங்குந்திருமேனிநிருத்தர்பாதம்பணிந்தன்பி
னூறுநெறியாச்செலவுரியார்தரியாதழைத்துப்பாடுவார். (௱௩௩)

பரவும்பரிசென்றெடுத்தருளிப்பாடுந்திருப்பாட்டின்முடிவில்
அரவம்புனைவார்தமையையாறுடையவடிகளோவென்று
விரவுவேட்கையுடனழைத்துவிளங்கும்பெருமைத்திருப்பதிக
நிரவுமிசையில்வன்றொண்டர்நின்றுதொழுதுபாடுதலும். (௱௩௪)

திருச்சிற்றம்பலம்.

மன்றினிறைந்துநடமாடவல்லார்தொல்லையையாற்றிற்
கன்றுதடையுண்டெதிரழைக்கக்கதறிக்கனைக்கும்புனிற்றாப்போல்
ஒன்றுமுணர்வாற்சராசரங்களெல்லாங்கேட்கவோலமென
நின்றுமொழிந்தார்பொன்னிமாநதியுநீங்கிநெறிகாட்ட. (௱௩௫)

விண்ணின்முட்டும்பெருக்காறுமேல்பாற்பளிங்குவெற்பென்ன
நண்ணிநிற்கக்கீழ்பானீர்வடிந்தநடுவுநல்லவழிப்
பண்ணிக்குளிர்ந்தமணற்பரப்புக்கண்டதொண்டர்பயின்மாரி
கண்ணிற்பொழிந்துமயிர்ப்புளகங்கலக்கக்கையஞ்சலிகுவித்தார். ()

நம்பிபாதஞ்சேரமான்பெருமாள்பணியநாவலூர்ச்
செம்பொன்முந்நூன்மணிமார்பர்சேரர்பெருமானெதிர்வணங்கி
யும்பர்நாதருமக்களித்ததன்றோவென்னவுடன்மகிழ்ந்து
தம்பிரானைப்போற்றிசைத்துத்தடங்காவேரிநடுவணைந்தார். ()

செஞ்சொற்றமிழ்நாவலர்கோனுஞ்சேரர்பிரானுந்தம்பெருமான்
எஞ்சலில்லாநிறையாற்றினிடையேயளித்தமணல்வழியிற்
றஞ்சமுடையபரிசனமுந்தாமுமேறித்தலைச்சென்று
பஞ்சநதிவாணரைப்பணிந்துவீழ்ந்தாரெழுந்தார்பரவினார். (௱௩௮)

அங்கணரனார்கருணையினையாற்றாதாற்றித்தினைத்திறைஞ்சித்
தங்கள்பெருமான்றிருவருளாற்றாழ்ந்துமீண்டுந்தடம்பொன்னிப்
பொங்குநதியின்முன்வந்தபடியேநடுவுபோந்தேறத்
துங்கவரைபோனின்றநீர்துரந்துதொடரப்பெருகியதால். (௱௩௯)

ஆயசெயலினதிசயத்தைக்கண்டக்கரையிலேயாறு
மேயபெருமானருள்போற்றிவீழ்ந்துதாழ்ந்துமேல்பாற்போய்த்
தூயமதிவாழ்சடையார்தம்பதிகள்பிறவுந்தொழுதேத்திச்
சேயகொங்கர்நாட்டணைந்தார்திருவாரூரர்சேரருடன். (௱௪௰)

கொங்குநாடுகடந்துபோய்க்குலவுமலைநாட்டெல்லையுற
நங்கள்பெருமான்றோழனார்நம்பிதம்பிரான்றோழர்
அங்கணுடனேயணையவெழுந்தருளாநின்றாரெனும்விருப்பால்
எங்குமந்நாட்டுள்ளவர்களெல்லாமெதிர்கொண்டின்புறுவார் (௱௪௧)

பதிகளெங்குந்தோரணங்கள்பாங்கரெங்கும்பூவணங்கள்
வதிகளெங்குங்குளிர்ப்பந்தர்மனைகளெங்குமகிற்புகைக்கார்
நதிகளெங்குமலர்ப்பிறங்கன்ஞாங்கரெங்குமோங்குவள
நிதிகளெங்குமுழவினொலிநிலங்களெங்கும்பொலஞ்சுடர்ப்பூ. ( )

திசைகடோறும்வரும்பெருமையமைச்சர்சேனைப்பெருவெள்ளங்
குசைகொள்வாசிநிரைவெள்ளங்கும்பயானையணிவெள்ள
மிசைகொள்பண்ணும்பிடிவெள்ளமேவுஞ்சோற்றுவெள்ளங்கண்
டசைவினின்பப்பெருவெள்ளத்தமர்ந்துகொடுங்கோளூரணைந்
[தார். (௱௪௨)

கொடுங்கோளூரின்மதில்வாயிலணிகோடித்துமறுகிலுடுத்
தொடுங்கோபுரங்கண்மாளிகைகள்சூளிகுளிர்ச்சாலைகடொற்றி
நெடுங்கோநகர்களாடரங்குநிரந்தமணித்தாமங்கமுகு
விடுங்கோதைப்பூந்தாமங்கணிரைத்துவெவ்வேறலங்கரித்து. ( )

நகரமாந்தரெதிர்கொள்ளநண்ணியெண்ணிலரங்குதொறு
மகரக்குழைமாதர்கள்பாடியாடிமணிவீதியிலணைவார்
சிகரநெடுமாளிகையணைவார்சென்றுதிருவஞ்சைக்களத்து
நிகரிறொண்டர்தம்மைக்கொண்டுபுகுந்தாருதியர்நெடுந்தகையார். ( )

இறைவர்கோயின்மணிமுன்றில்வலங்கொண்டிறைஞ்சியெதிர்
நிறையுங்காதலுடன்வீழ்ந்துபணிந்துநேர்நின்றாரூரர் [புக்கு
முறையில்விளம்புந்திருப்பதிகமுடிப்பதுகங்கையென்றெடுத்துப்
பிறைகொண்முடியார்தமைப்பாடிப்பரவிப்பெருமாளுடன்றொழு
[தார். (௱௪௬)

திருச்சிற்றம்பலம்.

தொழுதுதிளைத்துப்புறம்போந்துதோன்றப்பண்ணும்பிடிமேற்
முழுதுமேத்தநம்பியைமுன்பேற்றிப்பின்புதாமேறிப் [பார்
பழுதின்மணிச்சாமரைவீசிப்பைம்பொன்மணிமாளிகையில்வரும்
பொழுதுமறுகிலிருபுடையுமிடைந்தார்வாழ்த்திப்புகல்கின்றார். ()

நல்லதோழர்நம்பெருமாடமக்குநம்பியிவரென்பார்
எல்லையில்லாத்தவமுன்பென்செய்தோமிவரைத்தொழவென்பார்
செல்வமினியென்பெறுவதினிச்சிலம்புநாட்டுக்கெனவுரைப்பார்
சொல்லுந்தரமோபெருமாள்செய்தொழிலைப்பாரீரெனத்தொழு
[வார். (௱௪௮)

பூவும்பொரியும்பொற்றுகளும்பொழிந்துபணிவார்பொருவிலிவர்
மேவும்பொன்னித்திருநாடேபுவிக்குத்திலகமெனவியப்பார்
பாவுந்துதிகளொம்மருங்கும்பயிலவந்துமாளிகையின்
மாவுங்களிறுநெருங்குமணிவாயில்புகுந்துமருங்கிழிந்தார். (௱௪௯)

கழறிற்றறியுந்திருவடியுங்கலைநாவலர்தம்பெருமானார்
முழவிற்பொலியுந்திருநெடுந்தோண்முனைவர்தம்மையுடன்கொ
விழவிற்பொலியுமாளிகையில்விளங்குசிங்காசனத்தின்மிசை [ண்டு
நிழறிக்கொளிரும்பூணுரையிருத்தித்தாமுநேர்நின்று. (௱௫௰)

செம்பொற்கரகவாசநீர்தேவிமார்களெடுத்தேந்த
அம்பொற்பாதந்தாம்விளக்கியருளப்புகலுமாரூரர்
தம்பொற்றாளைவாங்கியிதுதகாதென்றருளத்தரணியில்வீழ்ந்
தெம்பெற்றிமையாற்செய்தனவிங்கெல்லாமிசையவேண்டுமென.

பெருமாள்வேண்டவெதிர்மறுக்கமாட்டாரன்பிற்பெருந்தகையார்
திருமாநெடுந்தோளுதியர்பிரான்செய்தவெல்லாங்கண்டிருந்தார்
அருமாினங்கொள்பூசனைகளடைவேயெல்லாமளித்ததற்பின்
ஒருமாமதிவெண்குடைவேந்தருடனேயமுதுசெய்துவந்தார். ()

சேரருடனேதிருவமுதுசெய்தபின்புகைகோட்டி
யாரநறுமென்கலவைமான்மதச்சாந்தாடையணிமணிப்பூண்
ஆரவிரைமென்மலர்ப்பணிகளினையமுதலாயினவருக்கஞ்
சாரவெடுத்துவன்றொண்டர்சாத்திமிக்கதமக்காக்கி. (௱௫௩)

பாடலாடலின்னியங்கள்பயிறன்முதலாம்பண்ணையினில்
நீடுமினியவினோதங்கள்நெருங்குகாலந்தொறுநிகழ
மாடுவிரைப்பூந்தருமணஞ்செய்யாராமங்கள்வைகுவித்துக்
கூடமுனைப்பாடியர்கோவைக்கொண்டுமகிழ்ந்தார்கோதையார். ( )

வேறு.

செண்டாடுந்தொழின்மகிழ்வுஞ்சிறுசோற்றுப்பெருஞ்சிறப்பும்
வண்டாடுமலர்வாவிமலிருபநீர்விளையாட்டுந்
தண்டாமும்மதகும்பத்தடமலைப்போர்சலமற்போர்
கண்டாராவிருப்பெய்தக்காவலனார்காதல்செய்நாள். (௩௫௫)

நாவலர்தம்பெருமானுந்திருவாரூர்நகராளுந்
தேவர்பிரான்கழலொருநாண்மிகநினைந்தசிந்தையரா
யாவியையாரூரானைமறக்கலுமாமேயென்னு
மேவியசொற்றிருப்பதிகம்பாடியேவெருவுற்றார். (௩௫௬)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்தனைநினைந்துசென்றுதொழுவேனென்று
மருவார்வத்தொண்டருடன்வழிக்கொண்டுசெல்பொழுதில்
ஒருவாநண்புறுஞ்சேரருடனெழுந்துகைதொழுது
பெருவானவரம்பனார்பிரிவாற்றார்பின்செல்வார். (௩௫௭)

வன்றொண்டர்முன்னெய்திமனமகிழ்ந்தவுணர்வினரா
யின்றுமதுபிரிவாற்றேனென்செய்கேன்யானென்ன
ஒன்றுநீர்வருந்தாதேயுமதுபதியின்கணிருந்
தன்றினார்முனைமுருக்கியரசாளுமெனமொழிந்தார். (௩௫௮)

ஆரூரர்மொழிந்தருளவதுகேட்டவருட்சேரர்
பாரோடுவிசும்பாட்சியெனக்குமதுபாதமலர்
தேரூருநெடுவீதித்திருவாரூர்க்கெழுந்தருளா
நேரூருமனக்காதனீக்கவுமஞ்சுவனென்றார். (௩௫௯)

மன்னவனாரதுமொழியவன்றொண்டரெதிர்மொழிவார்
என்னுயிருக்கின்னுயிராமெழிலாரூர்ப்பெருமானை
வன்னெஞ்சக்கள்வனேன்மறந்திரேன்மதியணிந்தார்
இன்னருளாலரசளிப்பீர்நீரிருப்பீரெனவிறைஞ்ச. (௩௬௰)

மற்றவரும்பணிந்திசைந்தேமந்திரிகடமையழைத்துப்
பொற்புநிறைதொன்னகரிலிற்றைக்குமுன்புகுந்த
நற்பெரும்பண்டாரநாவலருக்கமானவெலாம்
பற்பலவாமாளின்மிசையேற்றிவரப்பண்ணுமென. (௩௬௧)

ஆங்கவருமன்றவையாயமாகியதனங்க
ளோங்கியபொன்னவமணிகடொளிர்மணிப்பூண்டுகில்வருக்க
ஞாங்கர்நிறைவினையுறப்புவருக்கமுதனலஞ்சிறப்பத்
தாங்குபொதிவினைஞர்மேற்றலமலியக்கொண்டணைந்தார். (௧௬௨)

மற்றவற்றின்பரப்பெல்லாம்வன்றொண்டர்பரிசனத்தின்
முற்படவேசெலவிட்டுமுனைப்பாடித்திருநாடர்
பொற்பதங்கள்பணிந்தவரைத்தொழுதெடுத்துப்புனையலங்கல்
வெற்புயர்தோளுறத்தழுவிவிடையளித்தார்வன்றொண்டர். ()

ஆரூரரவர்தமக்குவிடையருளியங்ககன்று
காரூருமலைநாடுகடந்தருளிக்கற்சுரமு
நீரூருங்கான்யாறுநெடுங்கானும்பலகழியச்
சீரூருந்திருமுருகன்பூண்டிவழிச்செலவணைந்தார். (௧௬௪)

திருமுருகன்பூண்டியயற்செல்கின்றபோழ்தின்கட்
பொருவிடையார்நம்பிக்குத்தாமேபொன்கொடுப்பதலா
லொருவர்கொடுப்பக்கொள்ளவொண்ணுமைக்கதுவாங்கிப்
பெருகருளாற்றாங்கொடுக்கப்பெறுவதற்கோவதுவறியோம். ()

வென்றிமிகுபூதங்கள்வேடர்வடிவாய்ச்சென்று
வன்றொண்டர்பண்டாரங்கவரவருள்வைத்தருளா
வன்றினார்புரமெரித்தாரருளால்வேட்டுவப்படையாய்ச்
சென்றவர்தாம்வருவழியிலிருபாலுஞ்செயிர்த்தெழுந்து. (௧௬௬)

வில்வாங்கியலகம்புவிசைநாணிற்சந்தித்துக்
கொல்வோமிங்கிட்டுப்போமெனக்கோபத்தாற்குத்தி
பெல்லையில்பண்டாரமெலாங்கவர்ந்துகொளவிரைந்தோடி
யல்லலுடன்பறியுண்டாராரூரர்மருங்கணைந்தார். (௧௬௭)

ஆரூரர்தம்பாலவ்வேடுவர்சென்றணையாதே
நீரூருஞ்செஞ்சடையாரருளினானீங்கவவர்
சேரூராந்திருமுருகன்பூண்டியினிற்சென்றெய்திப்
போரூருமழவிடையார்கோயிலைநாடிப்புக்கார். (௧௬௮)

அங்கணர்தங்கோயிலினையஞ்சலிகூப்பித்தொழுது
மங்குலுறநீண்டதிருவாயிலினைவந்திறைஞ்சிப்
பொங்குவிருப்புடன்புக்குவலங்கொண்டுபுனிதநதி
திங்கண்முடிக்கணிந்தவர்தந்திருமுன்புசென்றணைந்தார். (௧௬௯)

உருகியவன்பொடுகைகள்குவித்துவிழுந்துமைபாக
மருவியதம்பெருமான்முன்வன்றொண்டர்பாடினார்
வெருவுறவேடுவர்பறிக்கும்வெஞ்சுரத்திலெத்துக்கிங்
கருகிருந்தீரெனக்கொடுகுவெஞ்சிலையஞ்சொற்பதிகம். (௧௭௰)

திருச்சிற்றம்பலம்

பாடியவர்பரவுதலும்பரம்பொருளாமவரருளால்
வேடுவர்தாம்பறித்தபொருளவையெல்லாம்விண்ணொருங்க
நீடுதிருவாயிலின்முன்குவித்திடலுநேரிறைஞ்சி
யாடுமவர்திருவருளாலப்படியேகைக்கொண்டார். (௧௭௧)

கைக்கொண்டுகொடுபோமக்கைவினைஞர்தமையேவி
மைக்கொண்டமிடற்றாரைவணங்கிப்போய்க்கொங்ககன்று
மெய்க்கொண்டகாதலினால்விரைந்தேகிமென்கரும்புஞ்
செய்க்கொண்டசாலியுஞ்சூழ்திருவாரூர்சென்றணைந்தார். (௧௭௨)

காவலர்மன்னவரருளால்விடைகொண்டநரபதியார்
ஆவியினொன்றாநண்பினாரூரர்தமைநினைந்து
மாவலருமலர்ச்சோலைமகோதையினின்மன்னிமலைப்
பூவலயம்பொதுநீக்கியரசுரிமைபுரிந்திருந்தார். (௧௭௩)

இந்நிலைமையுதியர்பிரானெம்பிரான்வன்றொண்டர்
பொன்னிவளநாடகன்றுமகோதையினின்மேற்புகுந்தால்
மன்னுதிருக்கயிலையினின்மதவரைமேலெழுந்தருள
முன்னர்வயப்பரியுகைக்குந்திருத்தொழில்பின்மொழிகின்றாம். ()

இதினின்றும் இந்நாயனார்சரித்திரத்தை வெள்ளானைச்சருக்கம் ௰௧-வது செய்யுள் முதல் இறுதிவரையினுங் கண்டுகொள்க.

மலைமலிந்ததிருநாட்டுமன்னவனார்மாகடல்போற்
சிலைமலிந்தகொடித்தானைச்சேரலனார்கழல்போற்றி
நிலைமலிந்தமணிமாடநீண்மறுகுமாளிகைசூழ்
கலைமலிந்தபுகழ்க்காழிக்கணநாதர்திறமுரைப்பாம். (௧௭௪)

# வெள்ளானைச்சருக்கம்.

இதில் முதலையுண்டபாலனை யழைத்ததும்,
ஆதி உலாப்பாடி அரங்கேற்றியதும்,
பரவைநாச்சியார் சங்கிலிநாச்சியார் பூர்வ பதவியடைந்ததும்,
சுந்தரமூர்த்திநாயனார் சேரமான்பெருமாணாயனார்,
இவ்விருவர்களும் கைலைக்குச் சென்றதுங் கூறப்பட்டது.

மூலமானதிருத்தொண்டத்தொகைக்குமுதல்வராயிருந்த
ஞாலமுய்யவெழுந்தருளுநம்பிதம்பிரான்றோழர்
காலைமலர்ச்செங்கமலக்கட்கழறிற்றறிவாருடன்கூட
ஆலமுண்டார்திருக்கயிலையணைந்ததறிந்தபடியுரைப்பாம். (க)

சுந்தரமூர்த்திநாயனார் கைலைக்குச்செல்லும் பக்குவமடைந்தமை;

படியினீடும்பத்திமுதலன்புநீரிற்பணைத்தோங்கி
வடிவுநம்பியாரூரர்செம்பொன்மேனிவனப்பாகக்
கடியவெய்யவிருவினையின்களைகட்டெழுந்துகதிர்பரப்பி
முடிவிலாதசிவபோகமுதிர்ந்தமுறுகிவிளைந்ததால். (உ)

ஆரமுரகமணிந்தபிரானன்பரணுக்கவன்றொண்டர்
ஈரமதுவார்மலர்ச்சோலையெழிலாரூரிலிருக்குநாட்
சேரர்பெருமாடனைநினைந்துதெய்வப்பெருமான்கழல்வணங்கிச்
சாரன்மலைநாடணைவதற்குத்தவிராவிருப்பினுடன்போந்தார். (ங)

நன்னீர்ப்பொன்னித்திருநாட்டுநாதர்மகிழுந்திருப்பதிகண்
முன்னியிறைஞ்சியகன்றுபோய்முல்லைப்படப்பைக்கொல்லைமான்
துன்னியுகைக்குங்குடக்கொங்கிலணைந்துதூயமதுவானீர்
சென்னிமிசைவைத்தார்செல்வத்திருப்புக்கொளியூர்சென்றடைந்
[தார். (ச)

மறையோர்வாழமப்பதியின்மாடவீதிமருங்கணைவார்
நிறையுஞ்செல்வத்தெதிர்மனைகளிரண்டினிகழ்மங்கலவியங்கள்
அறையுமொலியொன்றினிலொன்றிலழுகையொலிவந்தெழுதலும்
குறையுமறையோர்களையிரண்டுமுடனேநிகழ்வதென்னென்[றாரூ
[ரர். (ரு)

அந்தணாளர்வணங்கியரும்புதல்வரிருவரையாண்டு
வந்தபிராயத்தினர்குளித்தமடுவின்முதலைபொருமகவை
முந்துவிழுங்கப்பிழைத்தவனைமுந்நூலணியுங்கலியாணம்
இந்தமனைமற்றந்தமனையிழந்தாரழுகையென்றுரைத்தார். (சா)

இத்தன்மையினைக்கேட்டருளியிரங்குந்திருவுளத்தினரா [ஞ்ச
மொய்த்தமுகைத்தார்வன்றொண்டர்தம்மைமுன்னேகண்டுறை
வைத்தசிந்தைமறையோனுமனைவிதானுமகவிழந்த
சித்தசோகந்தெரியாமேவந்துதிருந்தாளிறைஞ்சினார். (௭)

துன்பமகலமுகமலர்ந்துதொழுவார்தம்மைநோக்கிபந்த
இன்பமைந்தன்றனையிழந்தீரோவென்னவெதிர்வணங்கி
முன்புபுகுந்துபோனததுமுன்னேவணங்கமுயல்கின்றேம்
அன்புபழுதாகாமலெழுந்தருளப்பெற்றேமெனத்தொழுதார். (௮)

மைந்தன்றன்னையிழந்ததுயர்மறந்துநான்வந்தணைந்ததற்கே
சிந்தைமகிழ்ந்தார்மறையோனுமனைவிதானுஞ்சிறுவனையான்
அந்தமுதலைவாய்நின்றுமழைத்துக்கொடுத்தேயவிநாசி
யெந்தைபெருமான்கழல்பணிவேனென்றார்சென்றாரிடர்களைவார்.

இவ்வாற்றருளிச்செய்தருளியிவர்கள்புதல்வன்றனைக்கொடிய
வெவ்வாய்முதலைவிழுங்குமடுவெங்கேயென்றுவினவிக்கேட்
டவ்வாழ்பொய்கைகரையிலெழுந்தருளியவனையன்றுகவர்
வைவ்வாயெயிற்றுமுதலைகொடுவருதற்கெடுத்தார்திருப்பதிகம்.()

உரைப்பாருரையென்றெடுத்ததிருப்பாட்டுமுடியாமுன்னுயர்ந்த
வரைப்பான்மையினீடடம்புயத்துமறலிமைந்தனுயிர்கொணர்ந்து
திரைப்பாய்புனலின்முதலைவயிற்றுடலிற்சென்றவாண்டுகளுந்
தரைப்பால்வளர்ந்ததெனநிரம்பமுதலைவாயிற்றருவித்தான். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பெருவாய்முதலைகரையின்கட்கொடுவந்துமிழந்தபிள்ளைதனை
யுருகாநின்றதாயோடியெடுத்துக்கொடுவந்துயிரளித்த
திருவாளன்றன்சேவடிக்கீழ்ச்சீலமறையோனொடுவீழ்ந்தாண்
மருவார்தருவின்மலர்மாரிபொழிந்தார்விசும்பிலவானோர்கள். (௧௨)

மண்ணினுள்ளாரதிசயித்தார்மறையோரெல்லாமுத்தரியம்
விண்ணிலேறவிட்டார்த்தார்வேதநாதமிக்கெழுந்த
தண்ணலாருமவிநாசிபரனார்தம்மையருமறைப்பான்
கண்ணின்மணியாம்புதல்வனையுங்கொண்டுபணிந்தார்காசினிமேல்.

பரவும்பெருமைத்திருப்பதிகம்பாடிப்பணிந்துபோந்தன்பு
விரவுமறையோன்காதலனைவெண்ணூல்பூட்டியண்ணலார்
முரசமியம்பக்கல்லியாணமுடித்துமுடிச்சேரலர்தம்பாற்
குரவமலர்ப்பூந்தண்சோலைக்குலவுமலைநாடணைகின்றார். (௧௪)

சென்றசென்றகுடபுலத்துச்சிவனடியார்பதிதொறு
நன்றுமகிழ்வுற்றின்புற்றுநலஞ்சேர்தலமுங்கானகமுந்
துன்றுமணிநீர்க்கானியாறுந் துறுகற்சுரமுங்கடந்தருளிக்
குன்றவளநாட்டகம்புகுந்தார்குலவுமடியேனகம்புகுந்தார். (௰௫)

சேரமான்பெருமாணாயனார்சரித்திரம் இரண்டாந்தொர்பு.

முன்னாண்முதலைவாய்ப்புக்கமைந்தன்முன்போல்வரமீட்டுத்
தென்னாரூரரெழுந்தருளாநின்றாரென்றுசேரர்பிரார்க்
கந்நாட்டரனடியார்கண்முன்னேயோடியறிவிப்பப்
பொன்னார்கிழியுமணிப்பூணுங்காசுந்தூசும்பொழிந்தளித்தார். ()

செய்வதொன்றுமறியாதுசிந்தைமகிழ்ந்துகளிகூர்ந்தே
னையனணைந்தானெனையாளுமண்ணலணைந்தானாரூரிற்
சைவனணைந்தானென்றனைபாந்தலைவனணைந்தான்றரணியெலா
முய்யவணைந்தானணைந்தானென்றேகைமுரசஞ்சாற்றுவித்தார் ()

பெருகுமதிநூலமைச்சர்களையழைத்துப்பெரியோரெழுந்தருளப்
பொருவினகரமலங்கரித்துப்பண்ணிப்பயணம்புறப்படுவித்
தருவிமதமால்பானையினையணைந்துநிசைகொண்டரசர்பெருந்
தெருவுகழியவெதிர்வந்தார்சேரர்குலமுய்ந்திடவந்தார். (க௮)

மலைநாட்டெல்லையுட்புகுதவந்தவன்றொண்டணாவனையிற்
சிலைநாட்டியவெல்கொடித்தானைச்சேரர்பெருமானெதிர்சென்று
தலைநாட்கமப்போதனையசரணம்பணியத்தாவில்பல
கலைநாட்டமுதவாரூரர்தாமுந்தொழுதுகலந்தனரால் (க௯)

சிந்தைமகிழுஞ்சேரலனார்திருவாரூரரெனுமிவர்க
டந்தமணிமேனிகள்வேறுமெனினுமொன்றுந்தன்மையராய்
முந்தவெழுங்காதலிற்றொழுது முயங்கியுதியர்முதல்வேந்த
ரெந்தைபெருமான்றிருவாரூர்ச்செல்வம்வினவியின்புற்றார். (உ௰)

ஒருவரொருவரிற்கலந்துகுறைபாடின்றியுயர்காத
லிருவர்நண்பின்செயல்கண்டவிரண்டுதிறத்துமாந்தர்களும்
பெருகுமகிழ்ச்சிகலந்தார்த்தார்பெருமாட்டமிழின்பெருமானை
வருகைவனையின்மிசையேற்றித்தாம்பின்மதிவெண்குடைகவித்
[தார் ()

உதியர்பெருமாள்பெருஞ்சேனையோதங்கிளர்ந்ததெனவார்ப்ப
கதிர்வெண்டிருநீற்றன்பர்குழாங்கங்கைகிளர்ந்ததெனவார்ப்ப
வெதிர்வந்திறைஞ்சுமமைச்சர்குழாமேபறுமிவுளித்துகளார்ப்ப
மதிதங்கியமஞ்சணியிஞ்சிவஞ்சிமணிவாயிலையணைந்தார். (உஉ)

வேறு

ஆரணமொழிகண்முழங்கிடவாடினர்குணலைகளந்தணர்
வாரணமதமழைசிந்தினவாசிகள்கிளரொளிபொங்கின
பூரணகலசமலிந்தனபூமழைமகளிர்பொழிந்திடுந்
தோரணமறுகுபுகுந்ததுதோழர்கணடவியகுஞ்சரம். (௨௩)

அரிவையர்தெருவினடம்பயிலணிகிளர்தளிரடிதங்கிய
பரிபுரவொலிகள்கிளர்ந்தனபணைமுரசொலிகள்பரந்தன
சுரிவளைநிரைகண்முரன்றனதுணைவர்களிருவரும்வந்தணி
விரிதருபவனநெடுங்கடைவிறன்மதகரியினிழிந்தனர். (௨௪)

தூநறுமலர்தரளம்பொரிதூவிமுனிருபுடையின்கணு
நான்மறைமுனிவர்கண்மங்கலநாமநன்மொழிகள்விளம்பிட
மேனிறைநிழல்செயவெண்குடைவீசியகவரிமருங்குற
வானவர்தலைவருநண்பருமாளிகைநடுவுபுகுந்தனர். (௨௫)

அரியணையதனின்விளங்கிடவடன்மழவிடையெனநம்பியை
வரிமலரமளியமர்ந்திடமலையர்கடலைவர்பணிந்துபி
னுரிமைநல்வினைகள்புரிந்தனவுளைமுடிவிலவெனமுன்செய்து
பரிசனமனமகிழும்படிபலபடிமணிநிதிசிந்தினர். (௨௬)

வேறு

இன்னதன்மையினுதியர்கடலைவர்தாமிடர்கெடமுனைப்பாடி
மன்னர்தம்முடன்மகிழ்ந்தினிதுறையுநாண்மலைநெடுநாட்டெங்கும்
பன்னகம்புனைபரமர்தந்திருப்பதிபலவுடன்பணிந்தேத்திப்
பொன்னெடுந்தடமூதெயின்மகோதையிற்புகுந்தனர்வன்றொண்
[டர். ()

ஆயசெய்கையினாள்பலகழிந்தபினரசர்கண்முதற்சேரர் [டர்
தூயமஞ்சனத்தொழிலினிற்றொடங்கிடத்துணைவராம்வன்றொண்
பாயகங்கைசூழ்நெடுஞ்சடைப்பரமனைப்பண்டுதாம்பிரிந்தெய்துஞ்
சேயநன்னெறிகுறுகிடக்குறுகினார்திருவஞ்சைக்களந்தன்னில் ()

கரியகண்டர்தங்கோயிலைவலங்கொண்டுகாதலாற்பெருகன்பு
புரியுமுள்ளத்தருள்ளணைந்திறைவர்தம்பூங்கழலிணைபோற்றி
யுரியசெய்கையில்விழுந்தெழுந்தலைப்புறுமனைவாழ்க்கை
சரியவேதலைக்குத்தலைமாலையென்றெடுத்தனர்தமிழ்மாலை (௨௯)

திருச்சிற்றம்பலம்.

எடுத்தவத்திருப்பதிகத்தினுட்குறிப்பிவ்வுலகினிற்பாசம்
அடுத்தவாழ்க்கையையறுத்திடவேண்டுமென்றன்பரன்பினிற்பா
கடுத்ததும்பியகண்டர்தங்கயிலையிற்கணத்தவருடன்கூடத் [புக்
தடுத்தசெய்கைதான்முடிந்திடத்தங்கழற்சார்புதந்தளிக்கின்றார்.

மன்றலந்தருமிடைந்தபூங்கயிலையின்மலைவல்லியுடன்கூட
வென்றிவெள்விடைப்பாகர்தாம்வீற்றிருந்தருளியபொழுதின்கண்
ஒன்றுசிந்தைநம்முரனையும்பர்வெள்ளானையினுடனேற்றிச்
சென்றுகொண்டிங்குவாருமென்றயன்முதற்றேவர்கட்கருள்செய்
[தார். (௩௧)

வானநாடர்களரியயன்முதலினோர்வணங்கிமுன்விடைகொண்டு
தூநலந்திகழ்சோதிவெள்ளானையுங்கொண்டுவன்றொண்டர்க்குத்
தேனலம்புதண்சோலைசூழ்மகோதையிற்றிருவஞ்சைக்களஞ்சே
கானிலங்கொளவலங்கொண்டுமேவினார்கடிமதிற்றிருவாயில். [ரக்
(௩௨)

தேவர்தங்குழாநெருங்கியவாய்தலிற்றிருநாவலூரார்தங்
காவன்மன்னரும்புறப்படவெதிர்கொண்டுகயிலைவீற்றிருக்கின்ற
பூவலம்புதண்புனற்சடைமுடியவரருளப்பாடெனப்போற்றி
யேவலென்றபின்செய்வதொன்றிலாதவர்பணிந்தெழுந்தெதிரே
ற்றார். (௩௩)

ஏற்றதொண்டரையண்டர்வெள்ளானையினெதிர்வலங்கொண்டேற்
நாற்றடங்கடன்முழக்கெனவைவகைநாதமீதெழுந்தார்ப்பப் [ற
போற்றிவானவர்பூமழைபொழிந்திடப்போதுவாருயிரெல்லாஞ்
சாற்றுமாற்றங்களுணர்பெருந்துணைவரைமனத்தினிற்கொடுசார்ந்
தார். (௩௪)

சேரர்தம்பிரான்றோழர்தஞ்செலவறிந்தப்போதே [ளஞ்சார
சாரநின்றதோர்பரியினைமிசைக்கொண்டுதிருவஞ்சைக்க [க்கண்டு
வீரவெண்களிறுகைத்துவிண்மேற்செலுமெய்த்தொண்டர்தமை
பாரினின்றிலர்சென்றதம்மனத்தொடுபரியுமுன்செலவிட்டார் ()

விட்டவெம்பரிச்செவியினிற்புவிமுதல்வேந்தர்தாம்விதியாலே
யிட்டமாஞ்சிவமந்திரமோதலினிருவிசும்பெழப்பாய்ந்து [தை
மட்டலர்ந்தபைந்தெரியல்வன்றொண்டர்மேலகொண்டமாதங்கத்
முட்டவெய்திமுன்வலங்கொண்டுசென்றதுமற்றதன்முன்னாக. ()

உதியர்மன்னவன்றம்பெருஞ்சேனையினுடன்சென்றபடைவீரர்
கதிகொள்வாசியிற்செல்பவர்தம்மைத்தங்கட்புலப்படுமெல்லை
யெதிர்விசும்பினிற்கண்டுபின்கண்டிலராதலினெல்லாரு
முதிருமன்பினிலுருவியசுரிகையான்முறைமுறையுடல்வீழ்த்தார்

வீரயாக்கையைமேல்கொண்டுசென்றுபோய்வில்லவர்பெருமானைச்
சாரமுன்சென்றுசேவகமேற்றனர்தனித்தொண்டர்மேல்கொண்
வாருமும்மதத்தருவிவெள்ளானைக்குவயப்பரிமுன்வைத்துச் [ட
சேரர்வீரருஞ்சென்றனர்மன்றவர்திருமலைத்திசைநோக்கி. (௩௮)

[னுங்
யானைமேல்கொண்டுசெல்கின்றபொழுதினிலிமையவர்குழாமென்
தானைமுன்செலத்தானெனைமுன்படைத்தானெனுந்தமிழ்மாலை
மானவன்றொண்டர்பாடிமுன்னணைந்தனர்மதிநதிபொதிவேணித்
தேனலம்புதண்கொன்றையார்திருமலைத்தென்றிசைத்திருவாயில்

திருச்சிற்றம்பலம்.

மாசில்வெண்மைசேர்பேரொளியுலகெலாமலர்ந்திடவளர்மெய்ம்
யாசிலன்பர்தஞ்சிந்தைபோல்விளங்கியவணிகிளர்மணிவாயிற் [மை
றேசுதங்கியயானையும்புரவியுமிழிந்துசேணிடைச்செல்வார்
ஈசர்வெள்ளிமாமலைத்தடம்பலகடந்தெய்தினர்மணிவாயில். ()

அங்கணெய்தியதிருவணுக்கன்றிருவாயிலினடற்சேரர்
தங்கள்காவலர்தடையுண்டுநின்றனர்தம்பிரானருளாலே [ந்த
பொங்குமாமதம்பொழிந்தவெள்ளானைபினும்பர்போற்றிடப்போ
நங்கள்நாவலூர்காவலர்நண்ணினாரண்ணலார்திருமுன்பு. ()

சென்றுகண்ணுதறிருமுன்புதாழ்ந்துவீழ்ந்தெழுந்துசேணிடைவி
கன்றுகோவினைக்கண்டணைந்ததுவெனக்காதலின்விரைந் [ட்ட
நின்றுபோற்றியதனிப்பெருந்தொண்டரைநேரிழைவலப் [தெய்தி
தோன்றுமேனியரானேவந்தனையென்றனருலகுய்ப. [பாகத் ()

அடியனேன்பிழைபொறுத்தனையாண்டுகொண்டத்தொடக்கினைநீக்
முடிவிலாநெறிதரும்பெருங்கருணையென்றராதம்தாவெனமு [கி
படியுநெஞ்சொடுபன்முறைபணிந்தெழும்பரம்பரையானந்த[ன்னர்
வடிவுநின்றதுபோன்றின்பவெள்ளத்துமலர்ந்தனர்வன்றொண் [ப்
[டர் ()

நின்றவன்றொண்டர்நீரணிவேணியர்நிறைமலர்க்கழல்சாரச்
சென்றுசேரலன்றிருமணிவாயிலின்புறத்தினனெனச்செப்பக்
குன்றவில்லியார்பெரியதேவரைச்சென்றுகொணர்கெனவவ்வெய்த
வென்றிவானவர்க்கருளப்பாடெனவவர்கழல்வீழ்ந்துவிரைந்தெய்
[தி. (௪௪)

மங்கைபாகர்தந்திருமுன்புசேய்த்தாகவந்திருந்துமகிழ்வெய்திப்
பொங்குமன்பினிற்சேரலர்போற்றிடப்புதுமதியலைகின்ற
கங்கைவார்சடைக்கயிலைநாயகர்திருமுறுவலின்கதிர்காட்டி
யிங்குநாமழையாமைநீயெய்தியதென்னெனவருள்செய்தார் (௪௫)

அரசரஞ்சலிகூப்பிநின்றடியனேனாரூரர்கழல்போற்றிப்
புரசையானைமுன்சேவித்துவந்தனனொழியுநின்கருணைத்தெண்
டிரைசெய்வெள்ளமுன்கொடுவந்துபுகுதலிற்றிருமுன்புதரப்பெ
விரைசெய்கொன்றைசேர்வேணியாயினியொருவிண்ணப் [ற்றேன்
பமுளதென்று (௪௬)

பெருகுவேதமுமுனிவருந்துதிப்பரும்பெருமையாயுனையன்பாற்
றிருவுலாப்புறம்பாடினேன்றிருச்செவிசாத்திடப்பெறவேண்டு
மருவுபாசத்தைபகன்றிடவன்றொண்டர்கூட்டம்வைத்தாயென்ன
அருளுமீசருஞ்சொல்லுகவென்றனரன்பருங்கேட்பித்தார். (சஎ)

சேரர்காவலர்பரிவுடன்கேட்பித்ததிருவுலாப்புறங்கொண்டு
நாரிபாகருநலமிகுதிருவருள்நயப்புடனருள்செய்வார்
ஊரனாகியவாலாலசுந்தரனுடனமர்ந்திருவீருஞ்
சாரநங்கணநாதராந்தலைமையிற்றங்குமென்றருள்செய்தார். (சஅ)

அன்னதன்மையிலிருவரும்பணிந்தெழுந்தருள்தலைமேற்கொண்டு
மன்னும்வன்றொண்டராலாலசுந்தரராகித்தாம்வழுவாத
முன்னைநல்வினைத்தொழிற்றலைநின்றனர்முதற்சேரர்பெருமானு
நன்மைசேர்கணநாதராயவர்செயுநயப்புறுதொழில்பூண்டார் (சகூ)

தலத்துவந்துமுன்னுதயஞ்செய்பரவையார்சங்கிலியாரென்னு
நலத்தின்மிக்கவர்வல்வினைத்தொடக்கறநாகியருளாலே
யலத்தமெல்லடிக்கயலினியாருடனனிந்திதையாராகி
மலைத்தனிப்பெருமான்மகள்கோயிலிற்றந்தொழில்வழிநின்றார் ()

வாழிமாதவராலாலசுந்தரர்வழியிடையருள்செய்த
ஏழிசைத்திருப்பதிகமிவ்வுலகினிலேத்திடவெறிமுந்நீர்
ஆழிவேந்தனும்வருணனுக்களித்திடவருணனுமருள்கூடி [தான்.
யூழியிற்றனிபொருவர்தந்திருவஞ்சைக்களத்திலுய்த்துணர்வித் ()

சேரர்காவலர்விண்ணப்பஞ்செய்தவத்திருவுலாப்புறமன்று
சாரல்வெள்ளியங்கயிலையிற்கேட்டமாசாத்தனார்தரித்திந்தப்
பாரில்வேதியர்திருப்பிடவூர்தனில்வெளிப்படப்பகர்ந்தெங்கு
நாரவேலைசூழுலகினில்விளங்கிடநாட்டினர்நலத்தாலே (ருஉ)

வேறு.

என்றுமின்பம்பெருகுமியல்பினா
லொன்றுகாதலினுள்ளமுமோங்கிட
மன்றுளாரடியாரவர்வான்புகழ்
நின்றதெங்குநிலவியுலகெலாம். (ருங)

வாழ்த்து.

வையநீடுகமாமழைமன்னுக
மெய்விரும்பியவன்பர்விளங்குக
சைவநன்னெறிதாந்தழைத்தோங்குக
தெய்வவெண்டிருநீறுசிறக்கவே. (ருச)

வெள்ளானைச் சருக்கம், கழறிற்றறிவார்நாயனார் புராணம்,
சுந்தரமூர்த்திநாயனார்புராணம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்புராணசாரம்.

தண்கயிலையதுநீங்கிநாவலூர்வாழ்சைவனார் சடையனார் தநயனாராய், மண்புகழவருட்டுறையானோலைகாட்டி மணம்விலக்கவன்றொண்டாயதிகைசேர்ந்து, நண்பினுடனருள்புரியவாரூர்மேவிநலங்கிளரும்பரவைதோணயந்துவைகித், திண்குலவும்விறன்மிண்டர்திறல்கண்டேத்துந்திருத்தொண்டத்தொகையருளாற்செப்பினாரே.

செப்பலருங்குண்டையூர்நெல்லழைத்துத்திருப்புகலூர்ச்செங்கல்செழும்பொன்னாச்செய்து, தப்பின்முதுகுன்றர்தரும்பொருளாற்றிட்டுத்தடத்தெடுத்துச் சங்கிலிதோள்சார்ந்துநாத, னைப்பிறணித்தூதுவந்தாறூடுகீறியுறுமுதலைசிறுமதலையுமிழநல்கி, மெய்ப்பெரியகளிறேறியருளாற்சேர வேந்தருடன்வடகயிலை மேவினாரே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்திநாயனார் பிதாவாகிய

## சடையநாயனார் புராணம்.

தம்பிரானைத்தோழமைகொண்டருளித்தமதுதடம்புயஞ்சேர்
கொம்பனார்பாலொருதூதுசெல்லவேவிக்கொண்டருளு
மெம்பிரானைச்சேரமான்பெருமாளிணையிற்றுணைவரா
நம்பியாரூரனைப்பயந்தார்ஞாலமெல்லாங்குடிவாழ. (௧)

திருநாவலூரிலே ஆதிசைவகுலத்திலே சடையனாரென்பவர் ஒருவர்இருந்தார்அவர்உலகமெல்லாம்மெய்ஞ்ஞானவொளியைப் பெற்றுய்யும்படி, சமயகுரவராகிய சுந்தரமூர்த்திநாயனாரைப் புத்திரராகப்பெற்றபெரும்பேற்றைஉடையவர்.

திருச்சிற்றம்பலம்.

சடையநாயனார்புராணம் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அவர் மாதாவாகிய

# இசைஞானியார் புராணம்.

ஒழியாப்பெருமைச்சடையனாருரிமைச்செல்வத்திருமனையார்
அழியாப்புரங்களெய்தழித்தாராண்டநம்பிதனைப்பயந்தார்
இழியாக்குலத்தினிசைஞானிப்பிராட்டியாரையென்சிறுபுன்
மொழியாற்புகழமுடியுமோமுடியாதெவர்க்குமுடியாதால். (க)

திருச்சிற்றம்பலம்.

சடையனாருடைய மனைவியார் இசைஞானியாரென்பவர் எம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்திநாயனாரைப் பெற்றருளிய அவருடைய பெரும்புகழைச் சிறியேனுடையபுன்மொழியினாலே புகழமுடியுமோ? முடியாது.

திருச்சிற்றம்பலம்.

இசைஞானியார்புராணம் முற்றியது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டத்தொகை பாடுவதற்குக் காரணமாயுள்ள

# விறன்மிண்டநாயனார்புராணம்.

விரைசெய்நறும்பூந்தொடையிதழிவேணியார்தங்கழல்பரவிப்
பரசுபெறுமாதவமுனிவன்பரசிராமன்பெறுநாடு
திரைசெய்கடலின்பெருவளனுந்திருந்துநிலனின்செழுவளனும்
வரையின்வளனுமுடன்பெருகிமல்குநாடுமலைநாடு. (க)

வாரிசொரியுங்கதிர்முத்தும்வயன்மென்கரும்பிற்படுமுத்தும்
வேரல்விளையுங்குளிர்முத்தும்வேழமருப்பினொளிர்முத்து
மூரலெனச்சொல்வெண்முத்தநகையார்தெரிந்துமுறைகோ
சேரர்திருநாட்டூர்களின்முன்சிறந்ததுதூர்செங்குன்றூர். [க்குஞ்

என்னும்பெயரின்விளங்கியுலகேறும்பெருமையுடையதுதான்
அன்னம்பயிலும்வயலுழவினமைந்தவளத்தாலாய்ந்தமறை
சொன்னநெறியின்வழியொழுகுந்தூயகுடிமைத்தலைநின்றார்
மன்னுங்குலத்தின்மாமறைநான்மரபிற்பெரியோர்வாழ்பதியாம்.

அப்பொற்பதியினிடைவேளாண்குலத்தைவிளக்கவவதரித்தார்
செப்பற்கரியபெருஞ்சீர்த்திச்சிவனார்செய்யகழல்பற்றி
எப்பற்றினையுமறவெறிவாரெல்லைதெரியவொண்ணாதார்
மெய்ப்பத்தர்கள்பாற்பரிவுடையாரெம்பிரானார்விறன்மிண்டர். (௪)

நதியும்மதியும்புனைந்தசடைநம்பர்விரும்பிநலஞ்சிறந்த
பதிகளெங்குங்கும்பிட்டுப்படருங்காதல்வழிச்செல்வார்
முதிருமன்பிற்பெருந்தொண்டர்முறைமைநீடுதிருக்கூட்டத்
தெதிர்முன்பரவுமருள்பெற்றேயிறைவர்பாதந்தொழப்பெற்றார். ()

பொன்றாழருவிமலைநாடுகடந்துகடல்சூழ்புவியெங்குஞ்
சென்றாளுடையாரடியவர்தந்திண்மையொழுக்கநடைசெலுத்தி
வன்றாண்மேருச்சிலைவளைத்துப்புரங்கள்செற்றவைதிகத்தேர்
நின்றாரிருந்ததிருவாரூர்பணிந்தார்நிகரொன்றில்லாதார். (௬)

திருவார்பெருமைதிகழ்கின்றதேவாசிரியனிடைப்பொலிந்து
மருவாநின்றசிவனடியார்தம்மைத்தொழுதுவந்தணையா
தொருவாறொதுங்கும்வன்றொண்டர்புறகென்றுரைப்பச்சிவனரு
பெருகாநின்றபெரும்பேறுபெற்றார்மற்றும்பெறநின்றார். [ளாற்

சேணார்மேருச்சிலைவளைத்தசிவனாரடியார்திருக்கூட்டம்
பேணாதேகுமூரனுக்கும்பிரானாந்தன்மைப்பிறைசூடிப்
பூணாரவம்புனைந்தார்க்கும்புறகென்றுரைக்கமற்றவர்பாற்
கோணாவருளைப்பெற்றார்மற்றினியார்பெருமைகூறுவார். (௮)

ஞாலமுய்யநாமுய்யநம்பிசைவநன்னெறியின்
சீலமுய்யத்திருத்தொண்டத்தொகைமுன்பாடச்செழுமறைகள்
ஓலமிட்டுமுணர்வரியாரடியாருடனுமுளதென்றால்
ஆலமுதுசெய்தபிரானடியார்பெருமையறிந்தாரார். (௯)

ஒக்கநெடுநாளிவ்வுலகி லுயர்ந்தசைவப்பெருந்தன்மை
தொக்கதலைமைநெறிபோற்றித்தொண்டுபெற்றவிறன்மிண்டர்
தக்கவகையாற்றம்பெருமானருளினாலேதாணிழற்கீழ்
மிக்ககணநாயகராருந்தன்மைபெற்றுவிளங்கினார் (௰)

வேறுபிறிதென்திருத்தொண்டத்தொகையாலுலகுவிளங்கவரும்
பேறுதனக்குக்காரணராம்பிரானார்விறன்மிண்டரைப்பெருமை
கூறுமளவென்னளவிற்றேயவர்தாள்சென்னிமேற்கொண்டே
யாறைவணிகரமர்நீதியன்பர்திருத்தொண்டறைகுவாம் (௰க)

திருச்சிற்றம்பலம்.

மலைநாட்டிலே, செங்குன்றூரிலே, வேளாளர்குலத்திலே பரமசிவனுடைய திருவடிகளை மனதில் இருத்தி உட்பற்று புறப்பற்றுக்களை அறுத்தவரும், அடியார்பத்தியிலே உயர்வொப்பிலாதவருமாகிய விறன்மிண்டநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் சிவதலத்துக்குப்போன பொழுதெல்லாம் முன் அடியார் திருக்கூட்டங்களுக்கு எதிரேபோய், அவர்களை வணங்கிக்கொண்டே, பின் சிவபெருமானை வணங்குகின்றவர் அவர் தாம் வசிக்கின்ற மலைநாட்டைநீங்கி பலதலங்களினுஞ் சஞ்சரித்து.

சிவனடியார்கள் ஒழுகும் ஒழுகத்தை அனுசரித்து, திருவாரூரையடைந்து சுவாமி தெரிசனஞ்செய்து கொண்டிருந்தார் ஒருநாள் சுந்தரமூர்த்திநாயனார், தேவாசிரிய மண்டபத்தில், எழுந்தருளியிருக்கின்ற சிவனடியார்களை அடைந்து வணங்காமல் ஒருபிரகாரம் ஒதுங்கிச்சென்றதை அவ்விறன்மிண்ட நாயனார்கண்டு, அடியார்களை வணங்காமற் செல்கின்றவன்றொண்டன் அவ்வடியார்களுக்குப்புறகு, அவனைவலிய ஆட்கொண்ட பரமசிவனும் புறகு என்றார். சுந்தரமூர்த்திநாயனார்.

அவ்விறன் மிண்டநாயனாரிடத்திலுள்ள சங்கமபத்தி வலிமையைக்கண்டு அவ்வடியார் கண்மேலே திருத்தொண்டத்தொகை என்னுந்திருப்பதிகத்தைப்பாடினார், அதைக்கேட்ட விறன்மிண்டநாயனார் மிகமகிழ்ந்து இவ்வன்றொண்டருடைய மனம் அடியாரிடத்திலே பதிந்திருக்கின்றது, என்று அருளிச்செய்தார், இந்தச்சங்கம பத்திவலிமையைக்கண்ட பரமசிவனார் அவ்விறன்மிண்டநாயனாரைத் தம்மைச்சேவிக்கின்ற கணங்களுக்குத் தலைவராக்கியருளினார்.

திருச்சிற்றம்பலம்.

விறன்மிண்டநாயனார்புராணம் முற்றிற்று.

இவர் இல்லறத்திலிருந்து சிவனடியாரை வழிப்பட்டு முத்தியடைந்தவர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் கைலைக்குச்செல்லுந்தினத்தைத் தெரிந்து
அதற்கு முதனாள் கைலையையடைந்த

# பெருமிழலைக் குறும்பநாயனார்புராணம்.

சூதநெருங்குகுலைத்தெங்குபலவுபூகஞ்சூழ்வுடைத்தாய்
வீதிதோறுநீற்றினொளிவிரியமேவிவிளங்குபதி
நீதிவழுவாநெறியினராய்நிலவுங்குடியானெடுநிலத்து
மீதுவிளங்குந்தொன்மையதுமிழலைநாட்டுப்பெருமிழலை. (௧)

அன்னதொன்மைத்திருப்பதிக்கணதிபர்மிழலைக்குறும்பனார்
சென்னிமதியம்வைத்தவர்தமடியார்க்கானசெய்பணிகள்
இன்னவண்ணமென்றவர்தாமுரையாமுன்னமெதிரேற்று
முன்னமுவந்துசெய்வாராய்முதிருமறிவின்பயன்கொள்வார். (௨)

தொண்டர்பலரும்வந்தீண்டியுண்ணத்தொலையாவமுதூட்டிக்
கொண்டுசெல்லவிருநிதியமுகந்துக்கொடுத்துக்குறைந்தடைவார்
வண்டுமருவுங்குழலுமையாள்கேள்வன்செய்யதாளென்னும்
புண்டரீகமகமலரில்வைத்துப்போற்றும்பொற்பினார். (௩)

இத்தன்மையராய்நிகழுநாளெல்லையில்லாத்திருத்தொண்டின்
மெய்த்தன்மையினையுலகறியவிதியால்வணங்கிமெய்யடியார்
சித்தநிலவுந்திருத்தொண்டத்தொகைபாடியநம்பியைப்பணிந்து
நித்தனருள்பெற்றவர்பாதநினைக்குநியமத்தலைநின்றார். (௪)

மையார்தடங்கட்பரவையார்மணவாளன்றன்மலர்க்கழல்கள்
கையாற்றொழுதுவாய்வாழ்த்திமனத்தானினைக்குங்கடப்பாட்டிற்
செய்யாள்கோனுநான்முகனுமறியாச்செம்பொற்றாளிணைக்கீழ்
உய்வான்சேரவுற்றநெறியிதுவேயென்றன்பினிலுய்த்தார். (௫)

நாளுநம்பியாரூரர்நாமநவின்றநலத்தாலே
யாளும்படியாலணிமாதிசித்தியானவணைந்ததற்பின்
மூளுங்காதலுடன்பெருகமுதல்வர்நாமத்தஞ்செழுத்துங்
கேளும்பொருளுமுணர்வுமாம்பரிசுவாய்ப்பக்கெழுமினார். (௬)

இன்னவாறேயிவரொழுகவேறுகொடிமேலுயர்த்தவர்தம்
பொன்னின்கழல்கண்மண்ணின்மேற்பொருதவந்துவழக்குரைத்து
மன்னுமோலையவைமுன்புகாட்டியாண்டவன்றொண்டர்
சென்னிமதிதோய்மாடமலிகொடுங்கோளூரைச்சேர்வுற்றார். (௭)

அஞ்சைக்களத்துநஞ்சுண்டவமுதைத்தப்பிரவியணைவுறுவார்
செஞ்சொற்றமிழ்மாலைகண்மொழியத்தேவர்பெருமானருளாலே
மஞ்சிற்றிகழும்வடகயிலைப்பொருப்பிலெய்தவரும்வாழ்வு
நெஞ்சிற்றெளியவிங்குணர்ந்தார்நீடுமிழலைக்குறும்பனார். (௮)

மண்ணிற்றிகழுந்திருநாவலூரில்வந்தவன்றொண்டர்
நண்ணற்கரியதிருக்கயிலைநாளையெய்தநான்பிரிந்து
கண்ணிற்கரியமணிகழியவாழ்வார்போலவாழேனென்
றெண்ணிச்சிவன்றாளின்றேசென்றடைவன்யோகத்தாலென்பார்.

நாலுகரணங்களுமொன்றாநல்லவறிவுமேற்கொண்டு
காலும்பிரமநாடிவழிக்கருத்துச்செலுத்தக்கபாலநடு
ஏலவேமுன்பயின்றநெறியெடுத்தமறைமூலந்திறப்ப
மூலமுதல்வர்திருப்பாதமடைவார்கயிலைமுன்னடைந்தார். (௰)

பயிலைச்செறிந்தயோகத்தார்பரவைகேள்வன்பாதமுறக்
கயிலைப்பொருப்பரடியடைந்தமிழலைக்குறும்பர்கழல்வணங்கி
மயிலைப்புறங்கொண்மென்சாயன்மகளிர்கிளவியாழினெடுங்
குயிலைப்பொருவுங்காரைக்காலம்மைபெருமைகூறுவாம். (௰௧)

மிழலைநாட்டிலே, பெருமிழலை யென்னும் ஊரிலே, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்த பெருமிழலைக் குறும்பநாயனார் என்பர் ஒருவர் இருந்தார், அவர் சிவனடியார்களைக் காணுந்தோறும் விரைந்தெதிர்கொண்டு வணங்கி, அவர்களுக்குக் குறிப்பறிந்து தொண்டு செய்வார், அவர்களை நாடோறுந் திருவமுது செய்வித்து, அவர்களுக்கு வேண்டுந் திரவியங்களைக்கொடுப்பவர், அவர் சுந்தரமூர்த்திநாயனாருடைய பெருமையை அறிந்து, அவருடைய திருவடிகளை மனம்வாக்குக் காயங்களினாலே.

சிந்தித்துத்துதித்து வணங்குதலே பரமசிவனுடைய திருவடிகளை அடைதற்கு உரியநெறியென்று அப்படிச்செய்துவந்தார், அதனால் அவர் அணிமா மகிமா இலகிமா கரிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என்னும் அட்டமகா சித்திகளையும்

அடைந்தார் அடைந்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை உச்சரித்து வந்தார்படி நிகழுங்காலத்திலே, திருவஞ்சைக் களத்திற்சென்று திருப்பதிகம்பாடுஞ் சுந்தரமூர்த்திநாயனாருக்குச் பரமசிவனுடைய திருவருளினாலே,

உத்தரகைலாசத்தை அடையும் வாழ்வுகிடைப்பதைத் தம்முடைய ஊரிலிருந்து கொண்டே யோகப்பிரத்தியக்ஷத்தால் அறிந்து சுந்தரமூர்த்திநாயனார் உத்தரகைலாசத்தை நாளைக்கு அடைய நான் பிரிந்து இங்கேவாழமாட்டேன், என்று நினைத்து; இன்றைக்கு யோகத்தினாலே சிவபிரானுடைய திருவடியை அடைவேன் என்று துணிந்து யோகமுயற்சியினாலே பிரமரந்திரந்திறப்ப உடலினின்றும் பிரிந்து, திருக்கைலாசத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடியை அடைந்நார்.

திருச்சிற்றம்பலம்.

பெருமிழலைக்குறும்பநாயனார்புராணம் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனாரது திருவடிகளை வங்கி முத்தியடைந்த

## சோமாசி மாறநாயனார் புராணம்.

சூதம்பயிலும்பொழிலம்பரிற்றூயவாய்மை
வேதம்பயிலும்மறையாளர்குலத்தின்மேலோ
ரேதம்புரியுமெயிலெய்தவர்க்கன்புர்வந்தாற்
பாதம்பணிந்தாரமுதூட்டுநற்பண்பின்மிக்கார் (க)

யாழின்மொழியாடனிப்பாகரைப்போற்றும்யாகம்
ஊழின்முறைமைவழுவாதுலகங்களான
வேழுமுவப்பப்புரிந்தின்புறச்செய்தபேற்றால்
வாழுந்திறமீசர்மலர்க்கழல்வாழ்த்தலென்பார். (உ)

எத்தன்மையராயினுமீசருக்கன்பரென்று
வத்தன்மையராம்நம்மையாள்பவரென்றுகொள்வார்
சித்தந்தெளியச்சிவனஞ்செழுத்தோதுவாய்மை
நித்தநியமமெனப்போற்றுநெறியினின்றார். (ஙு)

சீருந்திருவும்பொழியுந்திருவாரூரெய்தி
யாரந்திகழ்மார்பினனுக்கவன்றொண்டர்க்கன்பாற்
சாரும்பெருநண்புசிறப்பவடைந்துதங்கிப்
பாரும்விசும்பும்பணியும்பதம்பற்றியுள்ளார். (ச)

ஒன்றும்புலனைந்துடனாறுதொகுத்தகுற்றம்
வென்றிங்கிதுநன்னெறிசேரும்விளக்கமென்றே
வன்றொண்டர்பாதந்தொழுதனசிறப்புவாய்ப்ப
வென்றுநிலவுஞ்சிவலோகத்திலின்பமுற்றார். (ரு)

திருச்சிற்றம்பலம்.

சோழமண்டலத்திலே திருவம்பரிலே பிராமணகுலத்திலே சோமாசிமாற நாயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்பினோடு செவித்தலை, நித்தியநியம மெனக்கொண்டவர். எந்தக் குலத்தினராயினும், பரமசிவன்மேல் அன்புடையர்களாயின், அவ்வன்பர்கள் தம்முடைய வீட்டுக்கு எழுந்தருளினால், அவர்களை எதிர்கொண்டு வணங்கித், திருவமுது செய்விப்பர். பரமசிவனுக்குப் பிரீதியாகிய யாகங்களை புகழ், பயன், முதலியன கருதாது, நிஷ்காமியமாக வேதவிதிப்படி செய்பவர். அவர் திருவாரூரிற் சென்று, சைவசமையாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை அடைந்து, அவருடைய திருவடிகளிலே பத்திபண்ணி, அதனாலே சிவபதத்தைப் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

சோமாசிமாறநாயனார் புராணம் முற்றிற்று.

## நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த

# கலித்துறைத் திருவந்தாதியில்

### சுந்தரமூர்த்திநாயனார் தோத்திரங்கள் கவி கக.

துதிகவி.

பொன்னிவடகரைசேர்நாரையூரிற்புழைக்கைமுக
மன்னனறுபத்துமூவர்பதிதேமரவசெயல்
பன்னவத்தொண்டத்தொகைவகைபல்குமந்தாதிதனைச்
சொன்னமறைக்குலநம்பிபொற்பாதத்துணை துணையே.

க-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

தொழுதும்வணங்கியுமாலயன்றேடருஞ்சோதிசென்றுங்
கெழுந்தமிழ்ப்பழவாவணங்காட்டியெனக்குன்குடி
முழுதுமடிமைவந்தாட்செயெனப்பெற்றவன்முரேற
னெழுகுமலரினற்றாரெம்பிரானம்பியாரூரனே. (க)

உ-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

அருட்டுறையத்தர்க்கடிமைப்பட்டேனினியல்லனென்னும்
பொருட்டுறையாவதென்னேயென்னவல்லவன்பூங்குவளை
யிருட்டுறைநீர்வயனாவற்பதிக்கும்பிரானடைந்தோர்
மருட்டுறைநீக்கிநல்வான்வழிகாட்டிடவல்லவனே. (உ)

ங-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

நிதியார்துருத்திதென்வேள்விக்குடியாய்நினைமறந்த
மதியேற்கறிகுறிவைத்துப்புகர்பின்னைமாற்றிடென்று
துதியாவருள்சொன்னவாற்றிவாரிடைப்பெற்றவன்கா
ணதியார்புனல்வயனாவலர்கோனென்னுநற்றவனே (ங)

ச-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

நந்திக்குநம்பெருமாற்குநல்லாரூரினாயகற்குப்
பந்திப்பரியனசெந்தமிழ்பாடப்படார்புனலிற்
சிந்திப்பரியனசேவடிபெற்றவன்சேவடியே
வந்திப்பவன்பெயர்வன்றொண்டரென்பரிவ்வையகத்தே. (ச)

ரு-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

துணையுமளவுமில்லாதவன்றன்னருளேதுணையாக்
கணையுங்கதிர்நெடுவேலுங்கறுத்தகயலிணையும்
பிணையுநிகர்த்தகட்சங்கிலிபேரமைத்தோளிரண்டு
மணையுமவன்றிருவாரூரனாகின்றவற்புதனே. (ரு)

சு-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

கூற்றுக்கெவனோபுகறிருவாரூரன்பொன்முடிமே
லேற்றுத்தொடையவிழ்மின்னடைக்காயுமிடுதருமக்
கோற்றெருத்துகூனனுங்கூன்போய்க்குருடனுங்கண்பெற்றமை
சாற்றித்திரியும்பழமொழியாமித்தரணியிலே (சு)

எ-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

பல்லவைசெங்கதிரோனைப்பறித்தவன்பாதம்புகழ்
சொல்லவன்றென்புகலூரரன்பாற்றுய்யசெம்பொன்கொள்ள
வல்லவனட்டியத்தான்குடிமாணிக்கவண்ணனுக்கு
நல்லவன்றன்பதிநாவலூராகின்றநன்னகரே. (எ)

அ-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

கொடுத்தான்முதலைகொள்பிள்ளைக்குயிரன்றுபுக்கொளியூர்த்
தொடுத்தான்மதுரகவியவிநாசியைவேடர்சுற்றம்
படுத்தான்றிருமுருகன்பூண்டியினிற்பராபரத்தேன்
மடுத்தானவனென்பர்வன்றொண்டனாகின்றமாதவனே. (அ)

கூ-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

தருமகட்பேசினேன்வீயவேநூல்போனசங்கிலிபாற்
புகுமணக்காதலினாலொற்றியூருறைபுண்ணியன்றன்
மிகுமலர்ப்பாதம்பணிந்தருளாலிவ்வியனுலக
நகும்வழக்கேநன்மையாப்புணர்ந்தானவலூராரசே. (கூ)

ய-வது சருக்கத்தின் இறுதிச்செய்யுள்.

செழுநீர்வயன்முதுகுன்றினிற்செந்தமிழ்பாடிவெய்ய
மழுநீள்தடக்கையனீந்தபொன்னாங்குக்கொள்ளாதுவந்தப்
பொழினீடருதிருவாரூரில்வாசியும்பொன்னுங்கொண்டோன்
கெழுநீள்புகழ்த்திருவாரூரனென்றுநாங்கேட்பதுவே. (ய)

கக-வது மன்னியசீர்ச்சருக்கத்தின் இறுதிச்செய்யுள்:

ஞானவவ்வாரூரரசரையல்லதுநாமறியோ
மானவவ்வாக்கையொடும்புக்கவரைவளரொளிப்பூண்
வானவராலுமறிதற்கரியவடகயிலைக்
கோனவன்கோயிற்பெருந்தவத்தோர்தங்கள்கூட்டத்திலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தொண்டத்தொகை.

## கூட்ட அடியார்கள்—தனியடியார்கள்.

கூட்டமொன்பானொடு றுபத்துமூன்று தனிப்பெயரா
வீட்டும்பெருந்தவத்தோரெழுபத்திரண்டாம்வினையை
வாட்டுந்தவத்திருத்தொண்டத்தொகைபதினொன்றின்வகைப்
பாட்டுந்திகழ்திருநாவலூராளிபணித்தனனே.

பலனருள் கவி.

ஓடிடும்பஞ்சேந்திரியமொடுக்கியென்னுள்வினைகள்
வாடிடும்வண்ணநின்றெத்தவஞ்செய்தனன்வானிலுள்ளோர்
சூடிடுஞ்சீர்த்திருப்பாதத்தாதொண்டத்தொகையினுள்ள
சேடர்தஞ்செல்வப்பெரும்புகழந்தாநிசெப்பிடவே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குன்றத்தூர்

சேக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த

# பெரியபுராணச் சருக்கம்

பதினொன்றிற்கும் ஒவ்வொரு சருக்கங்களின் ஈற்றிலுள்ள

சுந்தரமூர்த்திநாயனார் தோத்திரங்கள் கவி கௗ.

க-வது தில்லைவாழ்ந்தணர் சருக்கத்தின் தோத்திரம்.

மலர்மிசையயனுமாலுங்காணுதற்கரியவள்ளல்
பலர்புகழ்வெண்ணெய்நல்லூராவணப்பழமைகாட்டி
உலகுய்யவாண்டுகொள்ளப்பெற்றவர்பாதமுன்னித்
தலைமிசைவைத்துவாழுந்தலைமைநந்தலைமையாகும். (க)

உ-வது இலைமலிந்த சருக்கத்தின் தோத்திரம்.

நீதுசெய்வினைக்குவாரோஞ்செஞ்சடைக்கூத்தர்தம்மைக்
காதுகொள்குழைகள்வீசுங்கதிர்நிலவிருள்கால்சீப்ப
மாதுகொள்புலவிநீக்கமனையிடையிருகாற்செல்லத்
தூதுகொள்பவராநம்மைத்தொழும்புகொண்டுரிமைகொள்வார். ()

ங-வது மும்மையாலுலகாண்ட சருக்கத்தின் தோத்திரம்.

நேசநிறைந்தவுள்ளத்தானீலநிறைந்தமணிகண்டத்
தீசனடியார்பெருமையினையெல்லாவுயிருந்தொழவெடுத்துத்
தேசமுய்யத்திருத்தொண்டத்தொகைமுன்பணித்ததிருவாளன்
வாசமலர்மென்கழல்வணங்கவந்தபிறப்பைவணங்குவாம். (ங)

ச-வது திருநின்ற சருக்கத்தின் தோத்திரம்.

நாட்டாரறியமுன்னாளினன்னாளிறந்தவைம்படையின்
பூட்டார்மார்பிற்சிறியமறைப்புதல்வன்றன்னைப்புக்கொளியூர்த்
தாட்டாமரைநீர்மடுவின்கட்டனிமாமுதலைவாயநின்று
மீட்டார்கழலேநினைவாரேமீளாவழியின்மீட்பனவே. (ச)

ரு-வது வம்பராவரிவண்டுச் சருக்கத்தின் தோத்திரம்.

பணையுந்தடமும்புடைசூழுமொற்றியூரிற்பாகத்தோர்
துணையுந்தாமும்பிரியார்தார்தோழத்தம்பிரானாரை [விக்க
யிணையுங்கொங்கைச்சங்கிலியாரெழின்மென்பணைத்தோள்வெய்து
வணையுமொருவர்சரணமேயரணமாகவடைந்தோமே. (ரு)

சு-வது வார்கொண்டவனமுலையாள் சருக்கத்தின் தோத்திரம்.

தேனுங்குழலும்பிழைத்ததிருமொழியாள்புலவிதீர்க்கமதி
தானும்பணியும்பகைதீர்க்குஞ்சடையார்தூதுதருந்திருநாட்
கூனுங்குருடுந்தீர்த்தேவல்கொள்வார்குலவுமலர்பாதம்
யானும்பரவிதீர்க்கின்றேனேழுபிறப்பின்முடங்குகூன். (சு)

எ-வது பொய்யடிமையில்லாத சருக்கத்தின் தோத்திரம்.

உளத்திலொருதுளக்கமிலோமுலகுய்யவிருண்டதிருக்
களத்துமுதுகுன்றர்தருகனகமாற்றினிலிட்டு
வளத்தின்மலிந்தேழுலகம்வணங்குபெருந்திருவாரூர்க்
குளத்திலெடுத்தார்வினையின்குழிவாய்நின்றெனையெடுத்தார். (எ)

அ-வது கறைக்கண்டன் சருக்கத்தின் தோத்திரம்.

செறிவுண்டென்றுதிருத்தொண்டிற்சிந்தைசெல்லும்பயனுக்குங்
குறியுண்டன்றாகிலுங்குறையொன்றில்லோநிறையுங்கருணையி
வெறியுண்சோலைத்திருமுருகன்பூண்டிவேடர்வழிபறிக்கப் [னால்
பறியுண்டவரெம்பழவினைநோய்பறிப்பாரென்னும்பற்றாலே. (அ)

கூ-வது கடல்சூழ்ந்த சருக்கத்தின் தோத்திரம்.

மேவரியபெருந்தவம்யான்முன்விளைத்தனவென்றோ
யாவதுமோர்பொருளல்லாவென்மனத்துமன்றியே
நாவலர்காவலர்பெருகுநதிகழியவழிநடந்த
சேவடிப்போதெப்போதுஞ்சென்னியினுமலர்ந்தனவால். (கூ)

ய-வது பத்தராய்ப்பணிவார் சருக்கத்தின் தோத்திரம்.

செற்றார்தம்புரமெரித்தசிலையார்செல்வத்திருமுருகன்பூண் டியினிற்செல்லும்போதிற், சுற்றருஞ்சிலைவேடர்கவர்ந்துகொண் டதொகுநிதியின்பரப்பெல்லாஞ்சுமந்துகொண்டு, முற்றுதமுலையு மையாள்பாகன் பூதமுதற்கணமேயுடன் செல்லமுடியாப்பேறு, பெற்றார் தங்கழல்பரவ வடியேன்முன்னைப் பிறவியினிற்செய்த தவம்பெரியவாறே. (ய)

## பெரியபுராணத்தின் மகிமையும், சேக்கிழார்சுவாமிகள் பெருமையும் கவி ச.

ஒருலகோவொருதிசையோவொருபதியோதம்மிலொருமா போவொருபெயரோவொருகாலந்தானோ, பேருலகிலொருமைநெ றிதருங்கதையோபன்மைப் பெருங்கதையோ பேரொன்றோவல்ல வேயிதனை, யேருலகெலா முணர்ந்தோதற்கரியவன் னென்றிறை வன்முதலடி யெடுத்துக்கொடுத்தருளக்கொண்டு, பாருலகினுமக ணின்றெடுத்துக் கைநீட்டப்பாடி முடித்தனர்தொண்டர் சீர்பரவ வல்லார். (க)

கருங்கடலைக்கைநீத்துக்கொளவெளிதுமுந்நீர்க்கடற்கரையி னெய்மணலையெண்ணியள்விடலாம், பெருங்கடன்மேல்வருந்திரை யை யொன்றிரண்டென்றெண்ணிப் பிரித்தெழுதிக்கடையிலக்கம் பிரித்துவிடலாகுந், தருங்கடலின்மீனையளவிடலாகும்வானத்தார கையையளவிடலாஞ்சங்கரன்றூடமது, சிரங்கொடிருத்தொண்டர் புராணத்தையளவிடநஞ்சேக்கிழார்க்கெளிதலதுதேவர்க்குமரிதே.

மதுரவிராமாயணகதை யுரைசெய்தவான்மிக பகவனுமொப்பல்ல விதிவழிபாரத முரைசெய்து கரைசெய்தவேதவியாதனு மொப் பிதைவறவாயிரநாவுடனறிவுளசேடவிசேடனுமொப்பல்ல [பல்ல பொதியமலைக்குறுமுனிவனு மொப்பலபுகழ்புனைகுன்றை முனிக் கென்பார். (ங)

பூவைமறந்தனள்வெண்டாமரைமயில்புகல்தருசங்கப்புலவோர் சொற், பாவைமறந்தனள்தேசுபாடிதபயனைமறந்தனள்பதுமத் தோ, ளுவைமறந்தனள் பொதியமலைத்தலைநண்ணியபுண்ணியமு னிவனெனுங், கோவைமறந்தனள்சேவையர்காவலனார் திருநாவிற் குடிகொண்டாள், (ச)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

துறைமங்கலம்

## சிவப்பிரகாசசுவாமிகள் அருளிச்செய்த

# நால்வர்நான்மணிமாலையில்

### சுந்தரமூர்த்திநாயனார் பொருட்டாகச் செய்யப்பட்ட விருத்தம் ௫.

படியிலாநின்பாட்டிலாரூரனனிவிருப்பன்பரமனென்ப [மன்றித்
தடியனேனறிந்தனன்வான்றொழுமீசனிணைத்தடுத்தாட்கொண்டு
தொடியுலாமென்கைமடமாதர்பானினக்காகத்தூதுசென்று
மிடியிலாமனைகடொறுமிரந்திட்டுழன்றமையால்விளங்குமாறே.

அறிந்துசெல்வமுடையானுமளகைப்பதியாற்றோழமைகொண்
டுறழ்ந்தகல்வியுடையானுமொருவன்வேண்டுமெனவிருந்து [டான்
துறந்தமுனிவர்தொழும்பரவைதுணைவாநினைத்தோழமைகொண்
சிறந்தவறிவுவடிவமாய்த்திகழுநதற்கட்பெருமானே. (௨)

வாங்குசிலைபுரையுமுடலெல்லுங்குளத்தின்மூலமலமெனுமோர்
வெங்கரவின்பகுவாயினின்றுந், தீங்கிலுயிரெனும்பணவக்குலமக
னையாதிதிரோதாயியென்னுமொருவெந்திறற்கூற்றுவனு. லோங்
குறுநாதாந்தமெனப் பெயரியவக்கரையிலுமிழ்வித்துச் சிவமெனு
மோர்தந்தையொடுங்கூட்டாய், கோங்கமுகைகவற்றுமிளமுலைப்
பரவைமகிழக்குண்டையூர்நென்மலைமுற்கொண்டவருட்கடலே. ()

நோக்குறுநுதலோனின்னிடைவிருப்பானூற்பகவன்னநுண்
மருங்குல், வார்க்குவிமுலைமென்மகளிர்தம்புலவிமாற்றுவான்சென்
றனனென்றூற், கோக்கலிக்காமன்வயிற்றிடைக்குத்திக்கொண்ட
தேதுக்குநீ புகலாய், காக்கருமுதலை விழுங்கியமதலை கான்றிடத்
தோன்றுநாவலனே. (௪)

போதமுண்டபிள்ளையென்புபொருகண்மாதுசெய்ததோ
காதல்கொண்டுசொல்லின்மன்னர்கன்மிதப்பவுய்த்ததோ
வாய்திறந்துமுதலைகக்கமகனைநீயழைத்ததோ
யாதுநம்பியரிதுநன்றெனக்கியம்பவேண்டுமே. (௫)

நோற்கரும்புகழ்மேவியசுந்தரனும்பன்மீதிவரா
நினைப்பருங்கயிலாயமடைந்தமைநின்றுகாண்குறவே
யெனக்குவந்துறுமோமகவென்றழுகின்றநாளலைபா
றணித்தருந்துடமாலையுமிழ்ந்திடுதம்பிரானல்லனே. (௬)

அரசன்பரிமேல்வரநெடுநல்யானையெருத்தத்தமர்ந்துபோய்
வரதன்கைலைமலையடைந்தமணியேமணிநீரிடுபசும்பொன்
றிரைசங்கெறியுங்குளத்துவரச்செங்கற்செம்பொனுப்பாடும்
பரிசின்றெனக்குன்செம்பவளத்திருவாய்மலர்ந்துபகர்வாயே. (௭)

பாவாய்ப்பொழிந்தவானமுதப்பவளத்திருவாய்நம்பிநீ
சேவாய்ப்பொருதுந்தருமமுடைத்தேவன்மலைக்குப்போம்பொழு
காவாய்ப்பயந்ததடக்கைமலர்க்கழறிற்றறிவார்கடாவிவரு [து
மாவாய்ப்பிறக்கக்கிடையாதேமாவாய்ப்பிறக்குந்திருமாற்கே. (௮)

செல்வநல்லொற்றியூரன்செய்யசங்கிலியாலார்த்து
மல்லலம்பரவைதன்கண்மாழ்குறவுமிழ்த்துமேனு
மல்லுநன்பகலுநீங்காதவன்மகிழடியிலெய்தி
நல்லவின்பமடைந்திருப்பனம்பியாரூரன்றானே. (௯)

பெருமிழலைக்குறும்பரெனும்பரமயோகிபெரிதுவந்துன்றிருவடித்தாமரையைப்போற்றி, விரைமலர்தூய்வந்தனைசெய்கின்றுனென்றால் விளங்கிழையா ரிருவரொடு முயங்கலாமோ, வரைமதிநின்றனைவெறுப்பதென்கொ னின்னையுடையானுக் கடுத்தசெயலுனக்குமாயிற், சுரர்முனிவர் பரவுறும் பெருஞ்சீர்த்தொண்டத்தொகைசெய்தோயறமுதனூல்வகைசெய்தோயே. (௰)

திருச்சிற்றம்பலம்.

வெண்பா.

தேவர்குறளுந்திருநான்மறைமுடிவும்
மூவர்தமிழும்முனிமொழியும்—கோவை
திருவாசகமுந்திருமூலர்சொல்லும்
ஒருவாசகமென்றுணர்.

---

முனிமொழியென்றது—பெரியபுராணம்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# சுந்தரர்வேடுபறி.

இவை சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமானாயனாரிடத்தில் பெற்றுக் கொண்டுவந்த திரவியங்களை வேடர்களால் பறிமுதல்ச்செய்ததை திருமுருகன்பூண்டியிலுள்ள சிவபெருமானைவணங்கி திரவியங்களைப் பெற்றுக்கொண்ட சரித்திரம் கூறப்பட்டது.

வெண்பா.

சூடுந்தமிழ்ப்பெருமாள்சுந்தரனார்வேடுபறி
பாடுந்தமிழ்க்கலிவெண்பாவுக்கு—நாடுஞ்
சிரத்திலஞ்சான்றன்னைத்திசைமுகத்தானுக்கக்
கரத்திலஞ்சான்கையிலஞ்சான்காப்பு.

இதுமுதல் (அ) கண்ணிசிவபெருமான் சிறப்பு.

பொன்பூத்தகொன்றைப்புரிசடையாய்பொற்சிலம்பின்
மின்பூத்தபாதிபச்சைமேனியாய்—முன்பூத்த. (க)
பைந்தாமரையாம்பதம்போற்றவென்னிதயச்
செந்தாமரைக்கிசைந்தசெல்வமே—நொந்துநொந்து. (௨)
தாய்முலைப்பாலற்றுத்தவித்தபன்றிக்குட்டிக்குப்
போய்முலைப்பாலன்றளித்தபுண்ணியனே—தாய்முலைக்கா. (௩)
நாற்கடல்சூழ்மன்றினவிந்தபுலிக்குட்டிக்குப்
பாற்கடலையீந்தபரம்பொருளே—மேற்கருகித். (௪)
தேய்ந்தமதனுடம்பைத்தேடித்திகைத்திரதி
தோய்ந்தமுலைக்கண்ணீர்துடைத்தோனே—சாந்தமுலைப். (௫)
பெண்மணியைவிட்டுப்பிரிந்தநாணுளிழந்த
கண்மணியைத்தந்தவருட்கண்மணியே—வண்மணிசேர். (௬)
பொங்குகடனஞ்சையுண்டுபூமகட்குநாமகட்கு
மங்கிலியப்பிச்சையிடவந்தோனே—துங்கமறை. (௭)
சாற்றுந்திருமுருகன்றன்னையளித்தோனென்று
போற்றுந்திருமுருகன்பூண்டியாய்—தோற்றுநாள். (௮)

இதுமுதல் (அ) கண்ணிசுந்தரமூர்த்தி நாயனார்சரித்திரம்.

இந்நாவலந்தீவிலெண்ணுமறையோர்குலத்திற்
றென்னுவலூரிற்செனிப்பித்தாய்—என்னையந்த. (௯)
ஐந்துகணைவேளிலழகுடையோனென்றுரைக்கச்
சுந்தரனென்றோர்நாமஞ்சூட்டிவைத்தாய்—வந்தெனக்கு. (௰)
வெண்ணைநல்லூருக்குளுயர்வேதியர்கடங்குலத்திற்
பெண்ணைநல்லோர்காணமணம்பேசுவித்தாய்—தண்ணளியால். ()
சின்னடிமையென்றேயினத்தில்வழக்குரைத்து
நின்னடிமையாக்கவந்துநின்றுகொண்டாய்—பின்னையிலைப். (௧௨)

பொன்முறியைக்காட்டிப்புதுமுறியைநான்கிழிக்க
முன்முறியைக்கொண்டுவந்துமூட்டினாய்—நன்மைதர. (கங)
முன்னமிட்டபேரல்லான்மூவுலகுந்தானறியப்
பின்னேயும்வன்றொண்டனென்றுபேரிட்டாய்—மன்னுலகில். (கச)
எம்பிரானேயெனையித்தனைக்காளாக்கியுயர்
தம்பிரான்றோழனென்றுசாற்றுவித்தாய்—அம்புயத்துப். (கரு)

இதுமுதல் (ரு) கண்ணிபரவை நாச்சியார்சிறப்பு

பெண்ணுக்குத்தங்கையோபெண்கள்குருபீடமோ
பெண்ணுக்குளிப்படியோர்பெண்ணுண்டோ—பெண்பெற்ற. (கசு)
பெண்ணெவளோவந்தப்பெண்பேரிதுவோவம்மம்மா
பெண்ணுக்குப்பெண்விரும்பும்பெண்மையெனும்—பெண்ணரசை.
பெண்கள்சிகாமணியைப்பெண்களுக்குநாயகத்தைப்
பெண்கள்பெருமாளைப்பெண்ணமுதைப்—பெண்பிறந்த. (கஅ)
தண்பரவைசூழுமிந்தத்தாரணியெல்லாமதிக்கும்
பெண்பரவையென்னுமொருபெய்வளையை—நண்புபெற. (கக)
நாமக்கடலுலகினம்பினைனுக்களித்துக்
காமக்கடலைக்கடப்பித்தாய்—பூமிதிசைச். (உ0)

இதுமுதல் (சு) கண்ணிதலவிசேடம்.

சைவத்துரையாக்கித்தண்டமிழைப்பாடுவித்த
தெய்வத்துரையானதெய்வமே—இவ்வுலகில். (உக)
மாஞ்சோலைபுன்னைமரச்சோலைபூகமடற்
பூஞ்சோலைகன்னற்புதுச்சோலை—ஆஞ்சோழ. (உஉ)
நாட்டுக்குண்மிக்கநகரிருக்கவேடுபறிக்
காட்டுக்குள்வந்ததென்னகாரணமோ—காட்டிலிது. (உங)
வெண்காடோசெங்காடோவேய்க்காடோசாய்க்காடோ
வண்காடோநானுமறைக்காடோ—கண்கொடிரு. (உச)
வாலங்காடோவேடராலலைக்கப்பட்டகரு
வேலங்காட்டுள்ளிருக்கவேண்டுமோ—ஞாலமுதல். (உரு)
முத்தலத்துக்குள்ளேமுருகன்பூண்டிப்பதியாய்
இத்தலம்போல்வேறுதலமில்லையோ—இத்தலத்தில். (உசு)

இதுமுதல் (ரு) கண்ணிசுந்தரமூர்த்திநாயனர் குறைகூறல்.

தாயிருந்ததிக்கிலேதன்குழவிநாடுதல்போல்
நீயிருந்தாயென்றல்லோநேர்பட்டேன்—போயிரந்த. (உஎ)
காசும்பணமுங்கனகமணியும்பணியும்
பேசுதமிழ்க்குப்பரிசுபெற்றதெல்லாம்—ஆசைமயல். (உஅ)
கோபத்தைநீக்கியுனைக்கும்பிட்டோர்முன்செய்த
பாவத்தைப்போலேபறிகொடுத்தேன்—தாபந்தீர்த். (உகூ)

தெப்பொருளுநல்கா திருந்தாலுமுன்னிருந்த
கைப்பொருளுந்தோற்கக்கணக்குண்டோ—அப்பொருட்கா. (௩௦)
அந்தக்கணக்கரைப்போலானவகையுந்தொகையுஞ்
சிந்தைக்கணக்காகச்செப்பக்கேள்—முந்துமுந்த. (௩௧)

இது முதல் (௪௭) கண்ணி திருட்டுபோன பொருள்களின்
விபரங் கூறல்.

அம்பொன்முடியிலஞ்சானந்தநடராசன்
செம்பொன்முடியிலஞ்சுசெய்தனன்காண்—நம்பதுமக். (௩௨)
கைச்சிரத்தானன்றளித்தகாதுக்கடுக்கனெழில்
வச்சிரத்துக்கேதுவிலைமட்டுண்டோ—முச்சுடர்தா. (௩௩)
னென்பதக்கமானகச்சியேகாம்பரனளித்த
பொன்பதக்கம்பத்தும்புதுப்பணிகாண்—முன்பரவை. (௩௪)
நஞ்சுவிலைந்தருணைநாதனுர்தாமளித்த
அஞ்சுவிரன்மோதிரமோரைம்பதுகாண்—விஞ்சுபுகழ்க். (௩௫)
காளத்தியானளித்தகைக்கடகம்பூச்சக்கிர
வாளத்தையும்விலையாவாங்குமே—நாளும். (௩௬)
விருத்தகிரியத்தனையான்வேண்டிவந்தசெம்பொன்
பருத்தகிரியத்தனையிற்பாரம்—பெருத்தபுகழ். (௩௭)
வெண்ணைநல்லூர்காசிவிரிஞ்சிபுரங்கேதாரம்
அண்ணலொற்றியூர்கழுக்குன்றுடுதுறை—எண்ணுநல்லூர். (௩௮)
எட்டீசருங்கூடியீந்தபணம்பாதியெங்கள்
பட்டீசரீந்தபணம்பாதிகாண்—இட்டபணி. (௩௯)
நற்கலத்தான்பஞ்சநதிநாதனெனக்களித்த
பொற்கலத்தின்வண்ணமெண்ணப்போகாதே-சொற்கலத்தில். ()
வெண்கலமும்பொன்கலமும்வெள்ளிக்கலங்களுமா
உண்கலத்திறைற்பதைம்பதுண்டுகாண்—கண்களிக்கும். (௪௧)
முத்துவடம்பத்துமொளிமொய்த்தநவமணியின்
கொத்துவடம்பத்துங்கொடுத்தனன்காண்— இத்தலஞ்சூழ். (௪௨)
சொற்பழனஞ்சோற்றுத்துறைசிறந்தவேதிகுடி
பொற்பழனங்கண்டியூர்பூந்துருத்தி—நற்பழனம். (௪௩)
நெய்யாற்றுநெய்த்தானநித்தனெனக்களித்த
ஐயாற்றுமின்னலாறுயிரங்காண்—மெய்யிலான். (௪௪)
கொண்டசரம்வென்றகுடந்தைக்கும்பேசர்தருங்
கண்டசரம்போலினிமேற்காண்பனோ—பண்டைமரு. (௪௫)
துாரான்கொடுத்ததொருகனகமாலைகொன்றைத்
தாரானதுபோற்றயங்குமே—பேரான. (௪௬)
மயூரநாதன்மகிழ்ந்தெனக்குத்தந்தமணிக்
கேயூரம்போலேகிடைக்குமோ—தாயனைய. (௪௭)

புள்ளிருக்கும்வேளூரான்பொற்பணிகடந்ததுலை
யுள்ளிருக்கும்வெண்ணையைப்போலேயுருக்கும்—பிள்ளையில்லார்.
காணிக்கைவைத்தகனகமணிமாலையொன்றி
மாணிக்கமாலையொன்றுவாங்கினேன்—நீணிலத்தில். (௪௯)
ஈயோட்டிச்செந்தேனெடுப்பவர்போல்வெய்யகலிப்
பேயோட்டிநன்னிதியம்பெற்றனன்காண்—மேயபுகழ்க். (௫0)
காழியான்பொற்பணிகள்கட்டிக்கொடுத்ததிலோ
ராழியான்கையிலணிந்தேனே—வாழுந். (௫௧)
துளைச்சட்டைநாதர்சொரிந்தநிதிக்குல்லாய்
அளைச்சட்டையங்கியநேகம்—தளைக்குளினிப். (௫௨)
பத்தூர்கொடுத்தாலும்பன்னுகாரோணனருள்
கத்தூரியின்விலைக்குக்காணுமோ—வைத்தமலர். (௫௩)
மின்னின்சரப்பணியின்மெய்ப்பணிபாரூரனருள்
பொன்னின்சரப்பணியைப்போல்வருமோ—மின்னுமந்த. (௫௪
அன்பருக்கன்பானேனளித்தநவமணிகள்
ஒன்பதுக்குமொன்பதுநூறுண்டுகாண்—என்புகல்வேன். (௫௫)
நாட்டிலிருள்போக்குநவமணியிலொன்றிருந்தால்
வீட்டில்விளக்கேற்றவேணுமோ—ஈட்டுபோருள். (௫௬)
பொன்னாடைபொன்னரைஞாண்பொன்னின்மடல்வெள்ளிமடல்
பொன்னாலவட்டமொடுபொற்படிக்கம்—பொன்னான. (௫௭)
கொத்துக்கடுக்கன்குலவுசவுக்களியாம்
முத்துக்கடுக்கன்முதலாக—எத்தனையோ. (௫௮)
மண்டலத்துக்குள்ளோர்மதிக்கப்படாக்கவச
குண்டலத்தினூறுகூறல்தோ—கண்டுவிலை. (௫௯)
சொன்னாபரணமெல்லாஞ்சொன்னாலுமம்மம்மா
கன்னாபரணங்கணக்கில்லை—பன்னரிய. (௬0)
பட்டுமெத்தைபட்டருகுபட்டுத்தழுவணைமேற்
கட்டிலுக்குள்ளேபரப்புங்காற்கோட்டை—இட்ட. (௬௧)
சாலத்தினொடுமேற்கட்டிசப்பிரமஞ்சத்தோ
டுலாத்துமணித்தூங்குமஞ்சமொன்றோ—மலாக்காவின். (௬௨)
சந்தனங்கற்பூரஞ்சவாதுபுழுகுவிலைக்
கந்தபொடிகுஞ்சமொடுகொளாஞ்சி—சுந்தரஞ்சேர். (௬௩)
பத்துவிளக்குப்போல்பதித்தநவமணியின்
குத்துவிளக்குமுதற்கூறரிய—சித்ரமணி. (௬௪)
தேரூருஞ்செல்வத்திருவீதியுஞ்சூழும்
ஆரூரன்செய்ததனேகங்காண்—சீரானைக். (௬௫)
காவுடையானெற்றியிலோர்கண்ணுடையான்றந்தபணி
பாவுடையார்க்கேற்றபலபணிகாண்—மேவுசிராப். (௬௬)

பள்ளிக்கிருந்தோதப்பத்துக்கரத்தாலும்
அள்ளிக்கொடுத்தநிதியாயிரங்காண்—வள்ளலெங்கள், (௬௭)

செவ்வந்தியீசரந்தச்சேயிழைக்காத்தந்தமணி
கைவந்திருந்தாலென்கண்குளிரும்—இவ்வந்தி. (௬௮)

வண்ணத்தான்றென்மதுரைவள்ளலளித்தபணி
எண்ணத்தானாயிரநாவில்லையே—மண்ணுலகில். (௬௯)

சொற்பதக்கந்தன்னிற்றுரைச்சொக்கநாதனருள்
பொற்பதக்கமன்றொருநாட்பூண்டதுகாண்—நற்பதிக்குள். (௭௦)

ளேதாம்பரசபையிலெங்கணெல்லைநாதனருள்
பீதாம்பரத்தையென்னபேசுவேன்—ஓதுபுகழ். (௭௧)

சங்கரனார்மேற்சாய்ந்ததற்பரனார்நம்முலகாள்
பங்கரனார்தென்கருவைப்பால்வண்ணர்—செங்கரும்பின். (௭௨)

பாட்டுரைக்குமுன்னேபரிசுகொடுத்தநிதி
ஏட்டிலடங்காதேயென்சொல்வேன்—பூட்டுமொரு. (௭௩)

கோட்டுவராகந்தரித்தார்குற்றாலச்செம்பவளக்
காட்டுவராகன்கணக்கில்லை—பாட்டையறிந். (௭௪)

தாகுவலயத்தோடமர்கருவூரானளித்த
வாகுவலயத்தேமனங்கிடக்கும்—மோகமற. (௭௫)

நஞ்சைக்களத்தில்வைத்தநாதனாரெங்கடிரு
வஞ்சைக்களத்தாரளித்ததல்லால்—வஞ்சிநகர்ச். (௭௬)

சேரன்கொடுத்ததிரவியத்தினாலேங்கு
பேரென்னன்றுபின்னுமொருபேர்பெற்றேன்—தாரணியில் (௭௭)

எங்கெங்கிருந்ததலமெல்லாந்தமிழ்பாடி
அங்கங்கேபெற்றவரும்பொருளில்—நங்கமலைப். (௭௮)

இதுமுதல் (௰௯) கண்ணி பாவைநாச்சியாரது ஆபரணங்கூறல்.

பண்ணுக்குநேர்சொற்பரவையாரென்னுமொரு
பெண்ணுக்களித்தபணிபேசுங்கால்—பண்ணுசரி. (௭௯)

கைச்சேலைகாஞ்சிபுரச்சேலைசந்திரகா
விச்சேலைமிக்கவிலைச்சேலை—மெச்சுவிலைச். (௮௦)

சேலையிலேநூறுறுதேடுநவரத்தினப்பூ
மாலையிலேநூறுறுவந்தனகாண்—காலிலிடு. (௮௧)

தண்டைசிலம்புசதங்கைசிறுபாடகமுங்
கொண்டவிலையாயிரமோகோடியோ—ஒண்டொடியார். (௮௨)

காதுக்குப்பொன்னோலைகாதுக்குப்பொற்றோடு
காதுக்குக்கொப்புகனங்குழையுஞ்—சூதொக்கும். (௮௩)

கொங்கைக்குமுத்துவடங்கோகனகப்பூப்போலும்
செங்கைக்குப்பொன்வளையுஞ்சீர்பெற்ற—தங்கத்தின் (௮௪)

சுட்டிபொட்டுக்காறைதுலங்குமுத்துமூக்குத்தி
கட்டுவடம்பீலியொடுகொலாழி—மெட்டோ. (௮௫)
டுருக்குமணியாளியுருவச்சவடி
யிருக்குமணிமேகலைகளெட்டும்—உரைக்கில். (௮௬)
வகுத்துரைக்கப்போகாமணிப்பூணனந்தந்
தொகுத்துமணியொன்பதையுந்தொட்டுப்—பகுத்ததிலே. (௮௭)
கொப்புக்காமிந்தமுத்தக்கோமேதகமுலையின்
செப்புக்காமிந்தச்செழுந்தரளம்—செப்புமுலைக். (௮௮)
கச்சுக்காமாணிக்கக்கல்லெல்லாங்கொண்டைமுத்துக்
குச்சுக்காமிந்தக்குளிர்முத்து—நிச்சயித்துத் (௮௯)
தூணிமுத்துவாரிச்சொரிந்ததிலாராய்ந்தெடுத்த
ஆணிமுத்துமூக்குத்திக்காகுங்காண்—வாணுதலாள் (௯௦)
எம்மனைக்குணித்தமிருந்துவிளையாட
அம்மனைக்காமந்தமுத்துமத்தனையும்—செம்மணியில். (௯௧)
இந்தமணிசிலம்புக்கேற்றிருக்குமந்தமணிக்
கிந்தமணிதண்டைக்கிசைந்திருக்கும்—இந்தமணி. (௯௨)
பாடகத்துக்காகுமிந்தப்பச்சைக்கற்காந்தளங்கைச்
சூடகத்துக்காமிச்சுடர்வயிரம்—ஆடகப்பொன் (௯௩)
தோட்டுக்காமிந்தத்துலங்குமுழுநீலமொன்று
நாட்டுக்குளில்லாநவமணியும்—பூட்டுபணிக். (௯௪)
கின்னபணியின்னவிடத்தின்னபணிக்காமென்ன
அன்னநடைக்கேற்றபடியாவமைத்துப் - பன்னுமளி. (௯௫)
தென்கூட்டிவைப்பதுபோற்றேடித்தேடித்தினமு
நான்கூட்டிவைத்தநவநிதியம்—ஊன்கூட்டில். (௯௬)
ஆவிபறிப்பதுபோலேயோசிலைவேடப்
பாவிபறிக்கப்பறிகொடுத்தேன்—மேவுமனம். (௯௭)

இதுமுதல் (௩௩) கண்ணி திருட்டின் உண்மையறிந்து
போன பொருள்களைக் கேட்குதல்

கல்லானவேடர்கவர்ந்துகொண்டாலென்னவும்மை
யல்லாதுபோமோவறியேனோ—நல்லதுதான். (௯௮)
போனமுத்தம்போனாலும்பொற்கொடியாண்மூக்குத்திக்
கானமுத்தமொன்றுமளியீரோ—மானனையார். (௯௯)
கொங்கைச்சிமிள்போனாலுங்கொண்டுசெவ்வாதடைக்குந்
தங்கச்சிமிளிரண்டுந்தாரீரோ—செங்கைக்குப். (௧௦௦)
பொன்னின்சிலம்புமக்குப்போரில்லாமல்லாலென்
மின்னின்சிலம்புமக்குவில்லாமோ—இந்நிலத்தில். (௧௦௧)
முன்னமொருகாலிறந்தமுப்புரம்வந்தாலுமதற்
கின்னமொருகாற்சிரிப்பதினமோ—துன்னுமலர். (௧௦௨)

வெள்ளெருக்கமாலையென்றோவெண்முத்துமாலைகொண்டீர்
கள்ளிருக்குமோசுரும்பைக்காட்டுமோ—வள்ளமுலை. (௧௦௩)
முத்துமுடிக்கல்லான்மூதுவாளெயிற்றரவு
வைத்தமுடிக்கழகுவாய்க்குமோ—மொய்த்ததங்கம் (௧௦௪)
இட்டபொட்டுக்காறையிருந்தாலும்பொட்டுநுதற்
கட்டிமுத்துச்சுட்டிதனைக்காட்டீரோ—சட்டமிடு. (௧௦௫)
மோகரத்நவேறுமுகப்பிற்பதியாமல்
நாகரத்நந்தன்னைநடுவமைத்து—நாக. (௧௦௬)
விடத்தைப்போனீலமணிமேல்வைத்திழைத்துப்
படத்தைப்போலேயுருவைப்பண்ணிக்—குடப்பணநேர். (௧௦௭)
பொற்பாபரணத்தின்போக்குந்தெரியாமல்
சர்ப்பாபரணமென்றோதானெடுத்தீர்—கற்பித்து (௧௦௮)
விட்டான்கெடுத்ததன்றுவேடன்கெடுத்ததன்று
தட்டான்கெடுத்ததிந்தத்தாழ்வுகாண்—இட்டமெய்யிற். (௧௦௯)
பாதியிலேபச்சையந்தப்பாதியிலேநீலமுமாய்ப்
பாதியின்மாணிக்கப்பவளமுமாய்ப்—பாதிநகை. (௧௧௦)
முத்துவிளையும்வையிரமுந்நூறுபெற்றிடத்தான்
ஒத்துவிளையுமொருபாதி—இத்தனையும். (௧௧௧)
ஆகத்திருக்குமணியத்தனையுங்கொண்டீரென்
மோகத்தைப்போலுமக்குமோகமோ—தேகத்தில். (௧௧௨)
பொன்னுக்குப்பொன்னணியும்பூவுக்குப்பூவணியு
மின்னுக்குமின்னணியும்வேண்டுமோ—முன்னணிந்த. (௧௧௩)
பாதிச்சோமன்புனையபற்றுதென்றோவெமது
மீதிச்சோமன்பறிக்கவேண்டினீர்—ஒத்திசை. (௧௧௪)
எட்டுக்கலையுமெடுத்துடுத்தநீரெமது •
பட்டுக்கலைக்காசைப்பட்டீரோ—எட்டுத். (௧௧௫)
தரித்தகலையார்க்குந்தனைமறைக்காதென்றோ
பரித்தகலையெல்லாம்பறித்தீர்—விரித்தநறும். (௧௧௬)
பூந்தளிர்க்கொப்பானபசும்பொன்னுடம்புக்கேற்றிருக்கு
மாந்தளிர்ப்பட்டொன்றுதரமாட்டீரோ—ஏந்திழையாள். (௧௧௭)
நற்சரிகைச்சேலையிலேநாகநிழல்காட்டுமொரு
பொற்சரிகைச்சேலைதரப்போகாதோ—சொற்சுவைதான். (௧௧௮)
பாற்குழம்புபோல்வாள்பலபணியுந்தோற்றவத
னாற்குழம்புநெஞ்சைநிலைநாட்டீரோ—மார்க்கமென்ன. (௧௧௯)
பொன்மாற்றுரைத்தளித்தீர்பொன்னுதவாவிட்டாலுஞ்
சொன்மாற்றுரைக்கிலென்னதோஷமோ—என்மொழிக்கா (௧௨௦)
இத்தனையுநீர்சற்றிரங்கினாலின்றுவரும்
அத்தனையுங்காண்பதருமையோ—கர்த்தரே. (௧௨௧)

நாலறுபதுக்குணடத்தும்விளையாட்டிவிது
மேலறுபத்தஞ்சாம்விளையாட்டோ — மாலறியா. (க௨௨)
மெய்யரேயிந்தவினைதமினிப்போதுமெங்க
ளையரேகண்பார்த்தருளுமென்ன — ஐயன். (க௨௩)
மகிழ்ந்தானமுன்மெழுகுவைத்ததுபோலுள்ள
நெகிழ்ந்தான்கருணைநிறைந்தான் — திகழ்தபொருள். (க௨௪)
வேட்டுவர்கைக்கொண்டதுபோல்வேட்டுவர்பான்மீட்பதுபோல்
கோட்டிகொண்டதல்லாற்குறைவில்லா — நாட்டமுற்று. (க௨௫)
தூதுநடந்தோமதுதுன்பமெல்லாநீக்குதற்கிப்
போதுநடந்துவரப்போகாதோ — ஓதுபொன்னி. (க௨௬)
யாற்றைவிலக்கியழைத்தீர்பெருமூச்சுக்
காற்றைவிலக்கிவழிகாட்டீரோ — நேற்றொருகால். (க௨௭)
செங்கற்பாளத்தைத்திருப்புகலூருக்குளுபர்
தங்கப்பாளத்துருவாய்த்தந்தளித்தீர் — இங்குமொரு (க௨௮)
மண்ணைப்பிடித்துமணியும்பலபணியும்
பண்ணப்படாதுண்டோபாரமோ — விண்ணவர்சூழ். (க௨௯)
தீட்டுபுகழ்க்குண்டையூர்ச்செந்நெலல்லாஙம்பரவை
வீட்டிலொருகாசுமினிவேறிலைகாண் — கேட்டபடி. (க௩௦)

இதுமுதல் (௫) கண்ணி போன பொருள்களை சிவபெருமான் கொடுக்க சுந்தரமூர்த்தி நாயனார் மனமகிழ்ச்சியடைந்தமை.

வள்ளமுலைத்தாய்க்குவருங்குழந்தைகண்டளவில்
துள்ளிமுலைப்பாலுளிப்பதுபோல் — வள்ளல். (க௩௧)
அறுத்துண்டபிள்ளையழைத்தளவிலோடிச்
சிறுத்தொண்டர்முன்புவந்தசீர்போல் — மறுத்துவிட்டுப் (க௩௨)
பின்காட்டுமூடவிலைபித்தளைந்தகாமுகர்க்கு
முன்காட்டும்பெண்கண்முலைத்துணைபோல் — வன்காட்டில் (க௩௩)
கண்ணீர்சொரிந்தபுனல்காணுதவேளையிலே
விண்ணீர்சொரிந்தவிதத்தைப்போல் — எண்ணுமறை. (க௩௪)
வல்லான்பறித்தமணிபணிபொன்னுடைசெம்பொ
னெல்லாங்கொடுத்தானெமக்கு. (க௩௫)

## வாழி.

சுந்தரனார்வாழியவர்சொற்றமிழுஞ்சூரியனார்
சந்திரனருள்ளமட்டுந்தான்வாழி — இந்திரனார்
போற்றினேனென்றென்முருகன்பூண்டியானன்பர்மனந்
தேற்றினேன்வாழிதினம்.

சுந்தரர்வேடுபறி முற்றிற்று.

## சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் முற்றிற்று.

சிவமயம்

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 8 | 10 | 3 | பெருகண | பெருங்கண. |
| 18 | 18 | 1 | பினை | பிணை. |
| 19 | 26 | 2 | பரிய | பரியு. |
| 22 | 52 | 2 | சோனு | சொனு. |
| 23 | 60 | 1 | வாசங் | வாகங் |
| 33 | 129 | 3 | போ | போந்தார். |
| 34 | 139 | 1 | போற்றெனர் | போற்றினர். |
| 42 | 197 | 3 | மலை | மாலை. |
| 48 | 10 | 1 | தாளன்மை | தாளாண்மை. |
| 50 | 24 | 2 | திருந்தற்பின் | திருந்ததற்பின். |
| 51 | 34 | 4 | மாளிகை,, | மாளிகையை. |
| 54 | 57 | 4 | வெம்மையினு | வெம்மையினு |
| 57 | 83 | 2 | யளிதருள | யளித்தருள். |
| 60 | 105 | 4 | நிடருள் | நீடருள். |
| 61 | 111 | 3 | காவிங | காவியங். |
| 62 | 119 | 1 | கண்ணுதா | கண்ணுவா. |
| 70 | 179 | 1 | நிற்றணி | நீற்றணி. |
| 72 | 198 | 1 | மகிழ்து | மகிழ்ந்து. |
| 79 | 256 | 3 | கோலின் | கோயிலின், |
| 81 | 271 | 1 | தமிஷ | தமிழ் |
| 82 | 274 | 1 | சஞ்சடை | செஞ்சடை. |
| 83 | 280 | 5 | எதிலாற் | ஏதிலார் |
| 83 | 281 | 1 | பிழைபுளன | பிழைபுளன. |
| 85 | 298 | 4 | வணங்கி | வணங்கு |
| 88 | 324 | 2 | என்ளை | என்னை. |
| 89 | 330 | 4 | பார் | பாற். |
| 91 | 347 | 1 | தாமனை | தாமதனை. |
| 92 | 359 | 3 | விழிவர் | விழியவர் |
| 96 | 383 | 1 | கோபின் | சோயின். |
| 96 | 389 | 1 | ஈரிலா | ஈறிலா. |
| 111 | 85 | 4 | ராரூர் | ராரூரர். |
| 113 | 103 | 3 | யேந்திய | யேதிய |
| 113 | 104 | 3 | பனிந்தார் | பணிந்தார். |
| 116 | 122 | 4 | தொக்கறு | தொடககறு. |
| 120 | 155 | 2 | மவிருய | மருவிய |
| 125 | 19. | 3. | கமப் ; பா | கமலப்போ. |
| 127 | 35 | 1 | செயலெறி | செயலறி. |
| 128 | 45 | 3 | வேள்ள | வெள்ள. |
| 129 | 50 | 2 | நாகி | நாயகி. |
| 131 | 1 | 1 | சடைனு | சடையனு. |
| 140 | 1 | 2 | பழழை | பழமை. |
| 142 | 9 | 1 | மூன்வி | முன்புவி. |

கி. வா. ஜகந்நாதன்.

உ

சிவமயம்.

# திருவானைக்காப்புராணம்

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து

**ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்,**

அருளிச்செய்தது.

இஃது

திரிசிரபுரம் மஹாவித்துவான்

**மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்,**

முன் பதிப்பித்த பிரதிக்கிணங்க

மதுரைஜில்லாக் கானாடுகாத்தான்

**சா. ரா. ம. சி. த. சிதம்பரஞ் செட்டியாரவர்கள்**

வேண்டுகோளின்பேரில்

உறையூர்

தி. ம சொக்கலிங்கமுதலியரால்

தஞ்சை

ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பராபவ-௵ கன்னிரவி.

உ

# இப்புத்தகத்தின் ஊதியம்

திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமிக்கு

ஷையூர் இராமலிங்கசரணரால்

நடத்திவரும் கமலபாத்திரநிவேதனத்திற்கு

உபயோகிக்கப்படும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவானைக்காப்புராணம்.

## கடவுள் வாழ்த்து.

### விநாயகர்.

நிலம்போற்றும்பணிக்கிரணநிலாவணிந்தநாயகனார்நிருதர்வாழுஞ்
சலம்போற்றுமதில்பொடித்தஞான்றினியபூசனைகள்சாலவாற்றிப்
புலம்போற்றுமெய்படியார்விநாயகனென்றியம்புபதப்பொருளைநாட்டி
வலம்போற்றுமணியிரத*மூர்ந்தமழவிளங்களிற்றைவணக்கஞ்செய்வாம். (க)

### நிட்களசிவம்.

மதிவளம்படைத்துநாளும்வளரிருள்சீக்குமாபோற்
கதிவளம்படைக்குந்தூயகருணையெவ்வுயிரின்மாட்டும்
பதிவளம்படைத்துப்பாசம்பாற்றவெய்யவனிற்றோன்றிப்
பொதிவளம்படைக்குமின்பப்பூரணப்பொருளின்வாழ்வாம். (உ)

கந்தர்துதி.

### நிட்களசத்தி.

ஆணவமகன்றசுத்தவறிவல்லாலுருவமில்லாத்
தாணுவினகறலின்றிச்சகத்தினைந்தொழிலுமாற்றிக்
கோணவமினைத்துநீக்கிக்குறுகியவுயிர்கட்கெல்லாம்
பூணவின்பநல்கும்பூரணிக்கன்புசெய்வாம். (௩)

### சம்புநாயகர்.

மணிபூத்தநறும்பொகுட்டுமலர்த்தவிசுநாகணையுமாகத்தும்பர்ப்
பணிபூத்தகயிலாயநெடுஞ்சிலம்புமொருமூவர்பணிந்துவைக
வணிபூத்தவருளமுந்திருவானைக்காவுமினிதமர்ந்தெல்லோர்க்கும்
பிணிபூத்தமலந்துரக்குஞ்சம்புநாயகர்மலர்த்தாள்பேணிவாழ்வாம். (௪)

### அகிலாண்டநாயகி.

எண்ணிறந்ததாயர்வயிற்றிருந்துபிறந்திடுந்துயரமெனைத்துநீங்க
மண்ணிறந்துபுனலிறந்துவயங்கியசெந்தீயிறந்துவளியினோடு
விண்ணிறந்துபெருங்கருணைத்தாயாகித்தனதகட்டின்விரவவைத்துக்
கண்ணிறைந்தகவின்காட்டுமகிலாண்டநாயகியைக்கருத்துள்வைப்பாம். (௫)

---

* ஊர்ந்த - உலாச்செய்த என்று பொருள் கொள்க.

## சபாநாயகர்.

பொன்னணிநூபுரஞ்சிலம்பவடிபெயர்க்குந்தொறுமங்கைப்புணர்செந்தீயு
மின்னொளிவேணியிற்புனலுமெழுந்துபொறிதிவலையிவைவிரவவீசி
மன்னியநீள்பணைமுடிப்பவுடலமுயன்றுங்கிரண்டும்வயங்கியாடத்
துன்னியபேரொளிமன்றினடநவிற்றும்பெருமானைத்தொழுதுவாழ்வாம். ()

## சிவகாமியம்மை.

இளங்குழவிப்பிணிக்கீன்றதாய்மருந்துநுகர்வதுபோலிருளின்மாண்ட
களங்குலவுமலமுயிர்கட்கொளியவருணடங்காணுங்கடன்மீக்கொண்டு
வளங்குலவுதனதுபெருங்கற்புமொருகணவரின்றமாண்புந்தோன்ற
விளங்குமிரணியமன்றினின்றருளுமணிவிளக்கைவிளம்பிவாழ்வாம். (௭)

## தட்சணாமூர்த்தி.

மும்மலம்வேறுபட்டொழியமெய்த்துயி
ரம்மலர்த்தாணிழலடங்குமுண்மையைக்
கைம்மலர்க்காட்சியிற்கதுவநல்கிய
செம்மலையலதுளஞ்சிந்தியாதரோ. (௮)

## ஆதிவிநாயகர்.

விண்ணோர்தமக்கிரங்கிவேழமுகத்தவுணனுயிர்வீட்டவீட்டற்
கொண்ணாதவொருசாங்கமுபாங்கமெனமலர்க்கரத்திலொளிரக்கொண்டோய்
கண்ணாற்பன்மொழிகேட்குமணிப்பூணோய்கமழ்கந்தக்கையான்மோக்கு
மண்ணாவென்றுரைத்தாதிப்பெருஞ்செல்வவிநாயகனையடுத்துவாழ்வாம். ()

## சுப்பிரமணியர்.

இருமுதுகுரவர்காப்பணிமையோடிருந்துசேயென்
றொருவரும்பெயரும்வேறேயொருவருஞ்சாமியாகாக்
குருபரனிறைஞ்சவுண்மைகொடுத்தொருசாமியென்னும்
பொருவரும்பெரும்பூண்டபுனிதனைப்புகழ்ந்துவாழ்வாம். (௧௦)

## வயிரவர்.

உலகமளித்தல்சுதந்திரமன்றுவணமுயர்த்தோற்கெனவவன்சே
யிலகுமுருவம்பொடித்தவன்பாலெழுந்துபடைப்புஞ்சுதந்திரமன்
றலர்மேலணையாற்கெனவவனையறங்கத்திசைமாமுகனொக்கிப்
பலரும்வெருவப்பொழிசெய்த்தோர்ப்பயிங்கம்புகுந்தோன்பதம்பணிவாம்.

## திருநந்திதேவர்.

எங்குநிறைந்தபேரறிவென்றியம்புபொருளுமான்மாவுந்
தங்குமலமும்பகுத்துணர்ந்ததனதுள்ளகம்போற்றொழப்புகுந்த
திங்கமுனிவர்முதலோரைச்சுடர்கைப்பிரம்பால்வேறுவே
றங்கணிறுவிப்பணிபுரியுமண்ணணன்மலர்த்தாளெண்ணுவாம். (௧௨)

## தண்டீசநாயனார்.

பொன்னங்கடுக்கைமுடிவேய்ந்தபுநிதற்கமைக்கும்பொருளன்றி
மின்னுங்கலனுடைகள்பிறவும்வேறுதனக்கென்றமையாமே
மன்னுந்தில்லைவன்பூசனையின்மல்கும்பயனையடியார்க
ளுன்னும்படிபூசனைகொள்ளுந்தூயோனடித்தாமரைதொழுவாம். (௧௩)

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

மழலையின்னமுதூற்றெழமாசைவள்ளத்துக்
குழலின்மென்மொழியுமையவள்கொடுத்தபால்கமழப்
பழகுசெந்தமிழ்ப்பாடலந்தேன்வடித்தாடு
மழகனுஞ்செவியூட்டியவறிஞனையடுப்பாம். (௧௪)

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

கொண்டலாடியவிழிகளுங்கோலவெண்ணீற்று
வண்டலாடியமேனியுமல்குமானந்த
மூண்டதாங்கெதிரொடுத்தெனவோதுசெம்பாட்டுங்
கண்டுகேட்டருணாவினுக்கரசினைக்கலப்பாம். (௧௫)

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அடிமையானவர்க்கருளையுந்தன்னையுமுயிரிற்
படியிலாவகையளிப்பதுபாருளோரறிய
வடிவின்மாண்டவளொருத்திதூதெனவிறைவழங்க
நொடியின்மாலைசெய்வன்றொண்டரடிமலர்நுவல்வாம். (௧௬)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

உளத்திற்றேங்கியசிவானந்தவெள்ளமுட்பொசிந்து
வளத்திற்றேங்கியதெனவெயர்பொடிப்பவான்மடையாற்
களத்திற்றேங்கியதெனவிழிகாலவன்பிறைநாட்
டளத்திற்றேங்கியவாதவூரடிகளைச்சார்வாம். (௧௭)

## அறுபத்துமூன்றுநாயன்மார்.

ஒப்பிறேடுயர்விகந்தவனுவந்தினிதருள
வப்புராதனன்றோழனுமருண்மொழிக்கவிஞன்
செப்புமேன்மையின்றொன்பதிற்றெழுவர்செம்மலர்த்தாள்
வைப்பினாவினுமனத்தினுஞ்சிரத்தினுமணப்பாம், (௧௮)

## சேக்கிழார்சுவாமிகள்.

தொகையாநாவலூராளிதொடுத்ததிருத்தொண்டப்பெருமை
வகையால்விரிக்கவுயர்நம்பியாண்டார்வகுப்பமற்றதனைத்
தகையாவன்பின்விரித்துலகோர்தம்மையடிமைத்திறப்பாட்டி
னுகையாநின்றசேக்கிழானொளிர்பொற்கமலத்தாள்பணிவாம். (௧௯)

பஞ்சாக்கரதேசிகர்.

மும்மைப்பொருட்குமிலக்கணங்கண்மொழிந்தவிரண்டுகோலத்துந்
தம்மிற்றிரியாவகைகாட்டித்தானுந்தன்மைமிகத்தேற்றி
நம்மைப்பணிந்தபுகழ்த்துறைசைநமச்சிவாயதேசிகன்றன்
செம்மைப்பதுமத்தாண்மலரெஞ்சிந்தைத்தடாகத்தலருமால். (௨௦)

கடவுள்வாழ்த்துமுற்றிற்று.

## அவையடக்கம்.

மூவுலகுமீரடியாலொருங்களந்தநாரணனுமுன்னிக்காணுந்
தேவனைத்திருவானைக்காவானையிறைஞ்சாமற்றீர்தலாமோ
வோவின்மறைநதமக்குமரிதேனுமவன்பெரும்புகழையுரைத்திடாமை
மேவுவதுமுளதாமோதிறனிலராயினும்பயனைவிரும்பினோர்க்கே. (௧)

தூயமறைநூன்முடிவிற்றுலங்குமருட்கோயிலிடைத்துதைந்துவாழுந்
தேயமலிதிருவானைக்காவினொருபெருமானோர்சிலம்பிவாயி
னுபசிறுநூற்கோயிலிடத்துமினிதமர்தலினுலான்றோர்செய்யும்
பாயபெரும்புகழ்க்கேட்குமவர்செவியிலெனதுரையும்படருமன்றே. (௨)

பொன்பூத்தநெடுங்குடுமிக்கயிலாயத்தெம்பெருமான்புரைதீர்ந்தி
மின்பூத்தமணிப்பசும்பூணுமையிவர்கட்களித்ததனைவிரும்பிச்சூதன்
சொன்பூத்தமுனிவரர்க்குக்கூறியசீர்த்திருவானைக்காவின்மேன்மை
தென்பூத்தசெழுந்தமிழாற்றெரித்தெமதுதீவினையைத்தீர்த்துமாதோ (௩)

அவையடக்கம்முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௩.

## இரண்டாவது திருநாட்டுச்சிறப்பு.

இதுமுதல் ௯ செய்யுள்-பொதுச்சிறப்பு

பூவினுட்கமலமும்பொருப்புண்மேருவுங்
காவினுட்கற்பகக்காவுந்தேவருட்
டேவர்கடேவனுஞ்சிறந்திட்டாலென
நாவலர்புகழுநீர்நாடுமிக்கதே. (௧)

பல்வகையொளியினும்பாரித்தெங்கணு
மெல்வளம்பெருக்குறுமிரவிமைந்தனொ
னல்வளம்படைத்துநாவலரின்மேதகு
சொல்வளம்படைத்ததுசோழமண்டலம். (௨)

உண்டொளித்தமணியத்துருவமாகியும்
பைந்தருமணிக்கிபலவுந்தாங்கியுஞ்
சுந்தரமிகுந்தசேணொடொவ்வாமையா
னந்தரத்திசைந்ததாலமரர்வாழ்பதி. (௩)

நறக்கிளர்பொதும்பர்நீர்நாடுபோன்மெனச்
சிறக்குநாற்பயனையுந்தேக்கவல்லதோ
துறக்கமென்றறிஞர்தம்மனக்குச்சொற்றலிற்
றுறக்கமென்றாயதுசுரர்தம்லைவப்பரோ. (௪)

இந்திரனிறைஞ்சவீற்றிருந்தவிண்ணெனீஇச்
சிந்தையின்மகிழ்வொடுந்தியாகராசரே
வந்திருந்தனரெனின்மல்குசோழநாட்
டந்தமில்பெருமையாரளக்கற்பாலரோ. (௫)

விற்பயில்சிவபுரத்தமர்ந்தவித்தகன்
பற்பன்மந்திரங்கொடுபயில்கின்றானெனிற்
பொற்பமர்சோழநாடதனைப்பூதலத்
தற்புதநாடெனவறையல்வேண்டுமோ. (௬)

எங்கணுஞ்சிவநகரெங்குந்தீர்த்தங்
ளெங்கணுமறையொலியெங்கும்வேள்விக
ளெங்கணுந்தருமமீவெங்குமல்கலா
லெங்கணுமிதற்கிணைநாடொன்றில்லையே. (௭)

சான்றவர்துவன்றுசோணாடுதங்கலா
லான்றதென்றவனியையாதிசேடனு
மூன்றியொண்மணித்தலையுறுத்திநின்றன
னென்றனற்கவ்விமற்றின்னுமீட்டவே. (௮)

களமலிவிடமணிகண்டர்போன்மென
வளவிடற்கரியதேயானுஞ்சோழநாட்
டுளமலிநால்வகைநிலத்துமோங்கிய
வளமெமக்கியன்றவாவகுத்துமென்பவே. (௯)

## வேறு.

இதுமுதல்-உ-செய்யுள்-மழைச்சிறப்பு.

தங்கணாயகன்சூரனைப்பயந்தநாட்டவிர்ந்து
மங்கையோடருள்பெற்றநாட்டினைவளர்ப்பாமென்
றங்கண்வான்படர்ந்தாழிநீர்முகந்தமாமேக
மெங்குமாய்மழைபொழிந்தனவிடம்பொருதெனவே. (௧௦)

வலனைமாட்டினோன்மருவுமோரவுணன்வல்லுடல
நிலனினீக்குவானெடுவிசும்படர்ந்துகைக்குலிச
மலகினீளொளிபடவிதிர்த்தார்த்தழுத்தியவே
றிலகுமீட்டியினீண்டினவெழிலிநீர்த்தாரை. (௧௧)

## காவிரிநதி.

புடவிநாயகிபூத்தமைக்கணிந்தசெவ்வணிபோற்
கடவுண்மால்வரைகலங்கியவாசநீராடி
விடலில்வான்களிபயர்தமைக்கணிந்தவெள்ளணிபோற்
படருமாசறத்தெளிந்தநீரொழுக்கொடும்பயின்ற. (௧௨)

இதுமுதல்-௧௪-செய்யுள்-குறிஞ்சிநிலச்சிறப்பு

அருவிபற்பலதிசைதொறும்விழுகிமிரடுக்கல்
பொருநர்வன்கயிற்றிறுக்கியபோகுயர்கழைச்சிர்
தருவவன்னவற்றுச்சியிற்கூத்தியர்தகைய
மருவுமஞ்ஞைகளாலுவமழைவரவெதிர்ந்து. (௧௩)

இழுமென்னோதையினிழிதருமருவியின்னியமாக்
குழுமுதேத்தடைத்தேன்முரல்வனகுளிர்யாழா
விழுமிதாகியகிளியினமிழற்றுவகழையின்
வழுவில்கூத்தினுக்கிசைத்தபாட்டெனநனிவழங்கும். (௧௪)

நெருப்பவிர்ந்தெனநிரைநிரைமலர்ந்தபூங்காந்தண்
மருப்பசுந்தமிழ்மாருதந்தவழ்தொறுமசைவ
வொருப்படுங்கருத்தாற்கழைக்கூத்தினையுவந்து
விருப்பொடுங்கரதலங்களைவிதிர்ப்பனபோலும். (௧௫)

சாலுங்கூத்தினியனமெனத்தடங்கரமமைத்தாற்
போலுங்காந்தள்கள்போதவிழ்ந்திதழ்கண்மேனிமிர்வ
வேலுங்கூத்தினுக்கிடும்பெரும்பரிசிலேயென்னக்
காலுங்கானறுந்தேன்மலரவிழ்ப்பனகணிகள். (௧௬)

ஆடுமாமயினோக்கியவவிர்மணிநாகம்
வாடுமோகையின்வல்விரைந்தளைதொறுநுழைவ
பாடுகூத்தியர்பரிசிலுக்கலைப்பவென்றஞ்சி
நீடுமோர்சிறைக்கரந்துறுமுலோபரோங்கர்ப்ப. (௧௭)

அரியமாதவமாற்றுநர்சூழலின்மருங்கே
யிரியல்போமதவேழத்தையெழுந்துதாய்மடங்க
னெரியமோதுவவவர்வயினீங்குமாமலத்தை
யுரியமாதவமுருக்கொடுதொடர்ந்தடர்ப்பனபோல் (௧௮)

வலகிலாவியமதத்தவர்வழிபடுந்தத்த
மிலகுதேவரிணும்பயனெய்துமாபோல
வலரிநோக்கலுமதன்சிலையாரழலுமிழ்வ
நிலவுநோக்கலுமதன்சிலைநெடும்புனலுமிழ்வ. (௧௯)

உடையநாயகனுணையாலுயர்வரைக்கயிலை
யடையுநாவலூரடிகளோடடுத்தமன்னவன்போற்
படைகையேந்தினோர்பாங்குறிற்படையொடுமவர்தம்
புடையராம்படிபுரியயக்காந்தமும்பொலிவ. (௨௦)

குங்குமங்குளிர்சந்தனங்கோழகில்பிறவுஞ்
செங்கண்வெற்பர்கள்சிதைத்தெரிமடுத்திடப்படுவ
வங்கறிந்திஃதடுக்குமேநமக்குமென்றமையுட்
டங்குமங்கியினவிவனதாங்களேயுரிஞி. (௨௧)

அழிக்கப்பட்டபினுலகெலாமாக்கத்திற்சிறந்தாங்
கொழிக்கப்பட்டபின்வளமெலாமொன்றுபற்பலவாய்ச்
செழிக்கப்பட்டனசிலம்புகள்சிலம்புகடோறுங்
கொழிக்கப்பட்டனபுனங்களுங்கொழும்பயன்றினையால். (௨௨)

ஊரன்முத்தொடுகிளர்ப்பனவெனமுனிந்தாங்கு
வேரன்முத்தமும்வேழத்தின்மருப்பவிர்முத்துஞ்
சாரன்முற்றியவேனலிற்றைறயலார்கவணைற்
றீரன்முற்றுறவெறிவனதிவள்வனவுடுப்போல். (௨௩)

இமையமால்வரைத்தையலார்திரள்பெருந்தோளி
னமைவுவாய்த்தலினமையெனப்பட்டவேயவர்கைச்
சுமையைநீத்துமென்றிரும்புனந்துவன்றுபுள்ளிரிய
விமையினீளொலிபடவெடித்திறைப்பனமுத்தம். (௨௪)

சுருள்படுங்குழற்கிகலிவண்டோட்டலர்பொதும்ப
ரிருள்படப்பெரிதீண்டினுநீண்டுறுந்தோறு
மருள்படுங்களவயலறியாப்பகற்குறியாய்த்
தெருள்படுங்களிசெய்வவென்றுவக்குமங்கலரால். (௨௫)

அமரர்நாயகனாகியவங்கணனிறைஞ்சுங்
குமரநாயகன்வணங்கியோர்கொடிச்சியைமணந்து
விமலனாடொறுமடியவர்க்களிப்பவீற்றிருக்கும்
பமரமார்பொழில்வரைவளம்பகருதற்கெளிதோ. (௨௬)

## வேறு.

இதுமுதல்-கஉ-செய்யுள்-முல்லைநிலச்சிறப்பு.

பிறந்ததம்மனையினீங்கும்பெருநதியென்னுமாது
சிறந்தகுங்குமக்கத்தூரிசெழும்பொருள்பலவுந்தாங்கி
யிறந்துழிப்பசும்பொன்வீசியிழுதுபாறயிருமற்று
மறந்தழைதாகநீங்கமடுப்பனபுறவமம்மா. (௨௭)

தேவருக்காகாவுண்டிதெவ்வுறும்விரதத்தார்போற்
றூவரகாதியண்டர்துவன்றினர்விளைப்பத்தேவர்க்
காவனவென்பார்போலவானநெய்யாதினாளு
மாவடுதண்ணினுருமாறிவண்பொருள்கைக்கொள்வார். (௨௮)

யாவரும்பழிச்சுமேன்மையிமையவருறுப்பிற்றங்கி
மேவரும்பெற்றமெல்லாம்விழைந்துதம்மேவலாற்றிற்
போவதுந்திரும்புமாறும்புரிநருந்தேவரோயென்
றாவதங்கிலத்துமாந்தர்க்கண்டொன்றுரைக்குநாமம். (௨௯)

## திருநாட்டுச்சிறப்பு.

விண்ணவர்தமக்கேயல்லால்விண்ணவருறுப்பிற்றங்கும்
வண்ணவன்கோட்டுநல்லான்வழிநடந்தொழுகாதென்றே
மண்ணவர்க்கொருசான்றாகவையகமூன்றுங்காக்குங்
கண்ணனுமாயனாகிக்காத்தனனிரைகளம்ம. (௩0)

மட்டலர்கோதைப்பைம்பூண்வள்ளிநாயகியைமுன்னோர்
கட்டழகெறிக்குமானைக்காதலித்துயிர்த்துநம்பாற்
பெட்டுலகேத்துமேன்மைபெருக்கியநெடியோன்வைப்பென்
றட்டிகழார்வத்தோடுமுறைந்தனவுழைகளெங்கும். (௩௧)

மயரறவொருவர்தொட்டவண்குளப்புனலும்வேண்டா
வியனிலப்பயிருமேயாவேலியுங்கடத்தல்செய்யா
முயலினம்வாழாநின்றமுறைதிறம்பாமைநன்றென்
றுயலுறுமனத்தார்நோக்கியுவப்பனகரியகானம். (௩௨)

உறும்பொறைநகிலினாற்றாவொசியிடையவர்சொன்மான
நறும்பொறையோதிமாதர்நளிரிதழமுதமாந்துங்
குறும்பொறைநாடரூதப்படுவனகுழல்கள்கானம்
வறும்பொறைஞான்றுமந்தவளரிசைக்கிளகிப்பூப்ப. (௩௩)

### வேறு.

கூர்த்தநுதிப்பனிமுல்லைகோதையர்தமியலொளியிற்
சீர்த்தநகைமுகையொப்புச்சிவணுதமானத்தா
லார்த்தவிதழ்நெகிழ்ந்துடைவவவர்செயற்கையொளிநகைக்கு
நேர்த்திலமென்றுடைந்தொழிவநெடுங்கொடிமாதவிமுகையும். (௩௪)

துருவினர்நாரணர்பண்டுசுகந்தந்தகணவனைத்தா
மருவவருந்தவம்புரிந்தான்மானவலர்வனபூவை
பெருகுதவத்தினுக்கிரங்கிப்பிஞ்ஞகன்பல்லுருவாகி
யருகடுத்ததெனமலர்வவசும்புபசுந்தேங்கொன்றை. (௩௫)

கற்புமேம்படுஞ்சிறப்பார்காதலைத்தணந்தவர்தாம்
வற்புமேம்படவாற்றிவதிகின்றாரக்கான
மற்புமேம்படுமாலுமணைந்தகன்முக்கட்கடவுள்
பொற்புமேம்படுவரவுபுகன்றிருந்தாற்றுவதென்றே. (௩௬)

உருப்பவிர்வேனிலின்வாடுமுயர்கானமகன்றவர்தே
ரொருப்படுகார்வரும்பருவத்தொள்ளிழையாருடன்மலிவ
விருப்பொடுதாந்தழீயினர்கண்மெலிவின்மெலிந்துவப்பினுவந்
திருப்பவர்போலிளங்குயில்களினைந்தொழிவபொருதவர்போல். (௩௭)

எவ்வளனுமினிதீட்டிலக்குமிசேர்மணிமார்பிற்
கௌவைநெடுங்கடற்பாயற்காகுத்தன்மகிழ்ந்துறையுஞ்
செவ்விபெறுநறுங்கானச்சிறப்பினைத்துமொழியாமே
முவ்வுலகத்தினுமில்லைமொழிதக்கதிறத்தினரே. (௩௮)

வேறு. இதுமுதல்-௫௰௨ செய்யுள் மருதநிலசிறப்பு.

குறிஞ்சியையடுத்துப்பாலைகொண்டெழின்முல்லைதோற்றி
யுறுஞ்சலநெய்தல்பின்னரோம்புவைத்தழிநீருந்திப்
பெறுஞ்சுகமருதஞ்சீர்ப்பப்பெயர்வதாற்பிணக்குமுற்று
மறுஞ்சகத்தான்றோர்மெச்சவைந்திணையாற்றுவார்போல். (௫௯)

மாயையின்வேறுவேறுவந்ததத்துவங்கள்போலத்
தூயபன்மலரும்பொன்னுஞ்சுடரொளிமணியுமுந்தி
மேயநற்பொன்னியாற்றின்வேறுவேறெழுந்துகால்கள்
பாயதண்பணைகளோம்பப்படர்வனவூர்கடோறும். (௬௦)

பொறிவழிப்புலன்கடோறும்புகுமுளங்குரவனுக்கா
னெறியுளியொழுக்கினேகுந்தியினுடைப்புமுற்று
மெறிபறையார்ப்பமள்ளரிடுந்தொறுமீண்டிச்செய்யுஞ்
செறிகுலையகத்தவாகிச்செல்லுவசெழுங்கானீத்தம். (௬௧)

கேட்டமெய்யருளைமீட்டுங்கேட்டுறச்சிந்தைசெய்து
தேட்டறத்தெளிந்துநிட்டைசேர்ந்திடுமறிஞரோபோல்
வாட்டமில்குலைகண்மீட்டும்வயக்கிவன்சிலையுமற்றுங்
கூட்டியொண்புனல்சிந்தாமற்கொள்ளுவர்மள்ளரொங்கும். (௬௨)

வழுவுறுமமணரிட்டவையைநீரோடுபோல
வொழுகுதண்புனலிற்சின்மீனொழுக்கினோடொழுகாநின்ற
கழுமலவிறைவனிட்டகாயர்பாசுரமேயென்னக்
குழுமியசிலமீனெதிரொண்டெதிரோருநின்ற. (௬௩)

வாதனைமலத்திற்சற்றேறவழீஇயுளம்பொறியாற்புக்கு
வேதனையுடற்றமீண்டுவினாந்துதன்னிலையைநோக்கிப்
போதுதலென்னக்காலாற்புலம்புகுசிலமீன்வல்லே
பேதுளங்கொண்டுவந்தபெரும்புனலெதிர்ந்துசெல்வ. (௬௪)

தரையவரிறந்தகாலைத்தரையொடுதுறக்கநாடு
நிரையமும்புகுவதேபோனெடும்பணையெழுந்துபாய்மீன்
விரைகமழ்பணையினூடுவிழுச்செறுவாதிமாட்டுங்
கரைதிடராதிமாட்டுங்கலப்பனபலாஞ்சிலாமே. (௬௫)

வேறு.

ஆம்பலுந்தாமரையலருஞ்சங்கமுந்
தாம்பலகோடிகடங்கும்பண்ணையி
லாம்பலுந்தாமரையளவுஞ்சங்கமுந்
தாம்பலவாமெனவினைஞர்சார்ந்துளார். (௬௬)

பொறுமையள்பூமகளென்னும்பெற்றியைத்
தெறுவதுசெய்துதாந்தெரிக்கின்றாரெனக்
கொறுகொறுத்துழல்சமண்கோலவூர்கிசேர்ந்
தெறுழலத்துழுநர்தமீட்டமெங்கணும். (௬௭)

கூலியுண்மகிழ்பெறத்தொடங்குபாதகம்
போலியனுயிர்பலபொன்றற்கஞ்சுறூர்
கோலியவுழவர்தாங்குறித்தவொண்பொருள்
சாலியென்றுயதன்பெயரானாடியே. (௪௮)

தீக்கையில்லார்க்குபதேசந்தீர்ந்தெனத்
தேக்கறல்விடருணவறந்தசெய்தொறுந்
தீக்கையுள்ளார்க்குபதேசஞ்சேர்த்தெனத்
தேக்கறல்பெருகியதுழுதசேறலாம் (௪௯)

## வேறு.

பரத்துத்தரிக்குந்தநிஜமுனம்பகைத்தநெடுமால்படைதுமிய
வரத்துத்தரிக்குந்தனதுடலைவகிர்ந்துமுதுகென்பிணைப்படையாக்
கரத்துத்தரிப்பப்புருகூதன்கருணைபுரிந்ததெனப்பண்ணை
யுரத்துத்தரிக்குந்தனதியற்கையொழிந்ததுழுநர்பயன்பெறவே. (௫௦)

வருத்தம்பலகால்புரிகிற்பின்வரம்பிலின்பத்தழுந்துநர்க்குங்
கருத்தங்குரியாதிருப்பரிதுகலக்கிவருத்தம்புரிதோறுந்
திருத்தம்பயின்றுபயன்பயக்குஞ்சிறப்பிற்றகன்பூம்பணையென்றே
யொருத்தம்பயின்றுகளமர்மகிழ்பூப்பவதனைச்சமஞ்செய்வார். (௫௧)

மண்ணிலரசன்காப்பதற்குவளத்திற்பகுக்குநல்லுழவர்
விண்ணிலரசன்மழைபொழியமேகம்விடுத்துத்தாளாண்மை
பண்ணுழுதவிக்கிதுபுரிதல்பண்பாமெனத்திண்படைக்கலிசத்
தண்ணலடித்தாமரைவணங்கியகன்செய்விதைவித்துவர்காளால். (௫௨)

பற்றுபருவந்தனக்கியையப்பற்பலுயிர்க்குந்தனுவாதி
முற்றவருளுமிறைவன்போன்முருகுவிரியும்பணைதோறு
முற்றகலங்கனீர்தெளிந்தவுடனேகவிழ்த்தவுழவர்கள்பின்
சற்றுநறுநீர்பாய்த்துவார்தயங்குமுளைகளெழுந்தாமே. (௫௩)

பவளச்சடிலத்திளம்பிறையும்பணிப்பூம்புனலுமணிந்தபிரான்
றவளத்திருநீற்றொளியுருவிற்றயங்குமுளைநாகணையானுங்
குவளைத்தடங்கண்ணியுமொருங்குகொள்ளமுழுதுமவனுருவந்
தவளப்பசந்தாலெனப்பசந்துசெறிபுன்பயிராய்வளருமால். (௫௪)

## வேறு.

புவனபோகம்வெவ்வேறவ்வுருவினுஞ்
சிவனுமென்றுதெளிக்கலுற்றோன
வுவகையோடுயர்நாறுபறித்துப்போய்
நவையினீங்கநடுகுநரொங்கணும். (௫௫)

சிறுமையாளரிற்றீர்ந்துபெரியவ
குறவுபூண்டவரொப்பவுழத்திய
ரிறுமணுவிடையென்றிரங்கார்பணை
நிறுவுநாறுநெருங்கிவளர்வன. (௫௬)

உறுப்பினாற்றம்மையேயொட்டியமாதரார்
வெறுப்பிலார்செய்வினையுறுபூம்பயி
ரிறுப்பனேர்ந்தெனவீர்ம்பணைமெங்கணு
நறுப்பங்கேருகமாதிகணாறுமே. (௪௭)

சேமவீட்டிற்கெழுவதோர்சிந்தையைக்
காமமாதிகளுலிநெருக்கியாங்
கேமமார்பயிரீண்டுபணைதொறுந்
தோமளாவுகளைகடுவன்றுவ. (௪௮)

பருவநோக்கிவன்பாசமறுத்திடுங்
குருவனையெனக்கூர்ந்தகளையெலா
மொருவுசெவ்வியுணர்ந்துபணைதொறுங்
கருமைவாட்கட்கடைசியர்கண்ணுவார் (௪௯)

வருந்துமெல்லடியென்றுமதித்திலார்
முருந்துமூரணிகர்த்தமுனிவினாற்
பொருந்துமுத்தமிதித்துப்புகுந்தவர்
திருந்துபண்ணைச்செறிகளைகட்பவே. (௫௦)

விரும்பித்தேனுகர்வீகளையுந்தொறுங்
கரும்பிற்றேமொழிக்காரிகையார்முலை
சுரும்புற்றூர்ப்பவித்தோடவிழ்செவ்விய
வரும்பிற்றேனுமுண்பாமெனுமாசையால். (௫௧)

குவளைவண்டுகொழுங்கண்கயிரவத்
துவகைவண்டொளிர்வாய்கமலத்துவண்
டவிர்முகத்துமடுப்பவவையெனக்
கவர்மலர்க்களைகட்பவர்மாடெலாம். (௫௨)

கயல்கண்ணோடும்வரால்கணைக்காலொடும்
வயலினுமைகள்வார்புறந்தாளொடு
மியலமுட்டுமிகலினவாமென
வயர்விலாற்றுக்காலாட்டியரஞ்சவே. (௫௩)

களைகட்டோறுங்கடைசியர்கைத்துணை
வளைமிக்கார்ப்பனவாய்ந்தனவென்றியென்
றுளையப்பங்கயத்தீள்கையொறுத்தொறுந்
தளையிற்பங்கயஞ்சார்வளையார்ப்பன. (௫௪)

காட்டலாற்கமலப்பகைக்காடெலாம்
வாட்டினுமந்தவாள்விழியோடிகல்
கூட்டமாங்குவளைக்குலமுங்கெட
வோட்டினுமென்றொறுப்பனகைகளே. (௫௫)

## திருநாட்டுச்சிறப்பு.

நடக்கலுற்றமையானம்பகையெலா
மடர்க்கலுற்றனமத்தகுதாட்பகை
கிடக்கலுற்றவனிச்சமுங்கீழ்ந்துமென்
றிடக்கலுற்றவவற்றினையெங்கணும். (௬௬)

வண்மொழியுமற்றுந்தமக்கிட
விண்டிடுங்கனிவாய்க்குமிகும்பகை
கொண்டசெங்குமுதக்குலமுங்கெடக்
கண்டகண்டவிடந்தொறுங்காதுவ. (௬௭)

தம்மைப்போன்மலர்த்தாமரையோடிகல்
செம்மைத்தாயசெல்வாய்வளர்மூரற்கு
வெம்மைத்தாகமுருந்தின்விளங்கிய
கொம்மைத்தாயபஞ்சாயுங்குமைத்தன. (௬௮)

ஒள்ளிதாங்குழையூம்மலர்தங்களாற்
கொள்ளும்வார்செவிகூந்தற்கிகலிய
வள்ளைநீள்சைவலமுஞ்சவட்டுவ
கள்ளுண்கோதையர்கைக்குமலங்களே. (௬௯)

பண்ணையாட்டயர்பாவைநல்லார்களைப்
பண்ணையாமெனப்பாற்றுறுநீர்மையாற்
பண்ணையானைபரப்பிடம்பாவுமப்
பண்ணையாம்பெயர்பற்றினபோலுமால். (௭௰)

கொம்பரோமலர்க்கோதையர்தாமலர்
நம்புவீரெனநன்றுதெரித்தெனப்
பம்புபூவிற்பமரமப்பூவற
வம்புண்கோதையர்மாட்டுவளர்பவே. (௭௧)

அளியினீங்கவகல்பவர்போன்மென
வளியிலாதலரட்டவரங்கையிற்
றுளிசெய்தேமலர்சோர்குழருங்குபு
குளிருநீர்ப்பணைகொம்மெனநீங்கினோர். (௭௨)

சஞ்சிதத்தொடுசார்மலமாயையுந்
துஞ்சவெஞ்சுடலூழினைத்தோலுடை
மஞ்சனேற்பதுமானவண்டின்குழா
மஞ்சிலோதியர்தாங்கொண்டகல்பவே. (௭௩)

பையவந்துபயிற்சியினைப்பொறி
மெய்யுணர்ந்திடவிட்டகன்றுலெனச்
செய்யின்வந்துசிறையோதிமக்குழாங்
கையகல்வனகஞ்சமிறத்தலால். (௭௪)

கேழ்த்தபூங்குழலார்கெழுமிக்களை
யீழ்த்துமென்மலர்க்கைத்துணைக்காலினாற்
றாழ்த்தப்பட்டுத்தழைக்கலிற்பூம்பயிர்
காழ்த்தகாமத்துக்காளையர்போலுமே. (௭௫)

மாதராலளிக்கப்படும்வாய்மையான்
மாதரார்முகம்போன்றொளிர்வான்மதி
காதலாலளிக்கப்படுங்காட்சிய
சீதநீர்வயற்செற்றியபூம்பயிர். (௭௬)

திங்கள்வெண்கதிர்த்தெள்ளமுதத்தினாற்
றங்குகின்றதனுண்மைதெரித்தெனப்
பொங்குவெண்ணிறம்பூண்கருவுட்பொதிந்
தெங்கணும்பயிரீண்டினிவந்தவே. (௭௭)

## வேறு.

வாலொளிமுளையிற்றோற்றிமரகதநிறத்தசாலி
சூலெனுங்கதிருட்கொள்ளப்பசந்ததோர்தோற்றம்போன்ற
காலும்வெண்கதிரும்பாலாங்கருத்திரண்டினிதுமுற்றச்
சாலமெய்ப்பசந்தாலென்னப்பசந்தனதளைகடோறும். (௭௮)

வணக்கமில்லார்களெல்லாம்வண்பயனென்னும்பார
மிணக்கமில்லார்களென்போலெனத்தலைநிவந்தசாலி
வணக்கமுள்ளார்களெல்லாம்வண்பயனென்னும்பார
மிணக்கமுள்ளார்களென்போலெனத்தலையிறைஞ்சிற்றம்ம (௭௯)

மூவருமுலகம்யாவுமொழிந்ததன்மயமேயென்ன
யாவருமுணரமூவர்யாவையுமினிதுதோற்றுந்
தாவின்முக்குணத்தின்வண்ணந்தாங்குதலென்னச்சாலி
மேவரவெளுத்துப்பச்சைவிராயதுசிவந்ததன்றே. (௮0)

கருமமேவிரும்பிநாளுங்கவர்தருமுயிர்கள்பின்னர்க்
கருமநேராகிஞானங்கலந்தின்பம்விளைதலோடுங்
கருமமேதானும்வேண்டாக்காட்சியிற்கமழ்நீர்வேண்டாக்
கருமநேர்நோக்கிமள்ளர்கவிழ்த்தனர்மடைகள்சீத்து. (௮௧)

கரையறுகருணைவெள்ளக்கடலொடுங்கலந்துளார்கள்
புரையறத்தமக்காதாரப்பொருளொடும்பொருந்துவார்போல்
விரைகமழ்நீத்தநின்றுவிளைந்தொளிர்தெய்வச்சாலி
தரையகம்பொருந்தவீழ்ந்துதலைவணவிறும்பூதெய்த. (௮௨)

நாள்வரையறையேநோக்குநடுவனார்தூதரொப்பத்
தாள்வரையறைகட்கேற்பத்தரும்பயன்விளைக்குஞ்செய்யிற்
கோள்வரையறையிதென்றுகுழமதிக்குயங்கையேந்தி
நீள்வரையறையுந்தோளார்நிரந்தரித்தரியலுற்றார். (௮௩

MAHAMAHOPADHYAYA
DR' U.V.S. IYER LIBRARY

பெண்ணுமையிடத்திறைப்பேணுமெய்த்தவத்தினோங்க
னெண்ணுமையெழுத்திற்பாவமிரிவதுகடுப்பநாளை
நண்ணுமைமுழக்கமேய்ப்பநனந்தலைக்கழனியார்க்குந்
தண்ணுமைவெருவிப்பீலித்தகைதரப்பிளிறுமன்றே. (அ௪)

நல்வினைபுரிவோர்தம்மைநவென்வன்றூதரானார்
பல்வினையுபசாரத்திற்படர்தரக்கொண்டுய்ப்பார்போற்
புல்வினையவையுநீங்கப்பொலிந்தநல்லரியைச்சேர்த்துத்
தொல்வினையுழவர்தங்கடலைமிசைச்சுமந்துசெல்வார். (அரு)

களத்துறப்போர்களிட்டுக்கடாவிட்டுப்பலாலநீக்கி
யுளத்துறுமகிழ்ச்சிபொங்கவுழவர்கள்காற்றிற்றூற்ற
வளத்தொடும்பொலிந்தசெந்நென்மறலிதன்முறையிற்பட்டங்
கிளைத்துறுமுயிர்கடேய்மையெய்தியதென்னமாதோ. (அசு)

மறப்பெருஞ்சேனைச்செங்கோன்மன்னவன்பகுதிதீர்த்திட்
டறப்பெருஞ்செல்வராகியாலயமாதியான
திறப்பெருங்கடன்களாற்றிச்சென்றிரந்தவர்கள்சால
வறப்பெருங்கொடைமைநல்கியாழ்குவரூர்கடோறும். (அஎ)

இன்னணஞ்சாலிச்செல்வமீட்டுதலொருபாலாகக்
கன்னலுங்கதலிக்காடுங்கமுகொடுதெங்குமாக்கித்
துன்னியமஞ்சளிஞ்சியாதியதுடவைவைத்துப்
பன்னலவளனுமீட்டும்பண்புமற்றொருபாலாமால். (அஅ)

இளமரக்காவினாடியெறிதிரைப்புனலினாடி
யுளமகிழ்பரத்தைமார்களுடன்விளையாடிச்சில்லோ
ரளமரநோக்குமில்லினநலாருடநீர்த்து
வளமலிபோகந்துய்க்குமாட்சியுமூர்கடோறும். (அகூ)

போகமேநுகராநிற்கும்புலவர்கண்முழுதுந்தாழ
மாகநாடாளும்வேந்தன்வாஞ்சையினுரிமைபூண்ட
வேகநீர்மருதவைப்பின்விழைதகுவளங்களெல்லா
நாகநாட்டரசற்கேனுநவிற்றலாந்தகைமைத்தேயோ. (கூ0)

**வேறு.** இதுமுதல்-௰௫ செய்யுள் நெய்தனிலச்சிறப்பு.

இறைவனெடுத்தவுருத்தோறுமியைந்தெவ்வுயிரும்வளர்த்தருளு
மிறைவிநிகர்ப்பவனாகானமெறிநீர்ப்பழனமிவைதம்மி
னிறையவளங்களினிதாக்குநீர்மையெளியாமேகலங்க
ளுறைவெண்டரங்கக்கடல்புகுமாலுலவாநீத்தநதிமாதோ. (கூக)

வாய்மையடுத்தமாதவத்தோர்மறிந்துபவத்திற்சென்றிடினுந்
தூய்மையடுத்ததமதியற்கைதுளங்காநீர்மைகாட்டுதல்போற்
பாய்மையடுத்தகடற்பரப்பிற்படர்ந்துபுகுந்தபெருநீத்தஞ்
சேய்மையடுத்தநதியெதிர்ந்துதேங்கியுவரோதோற்றுமால் (கூஉ)

தெள்ளித்தெளிந்துபகைகடந்தச்சவன்முத்தருலகியற்கை
த்ள்ளித்தகைந்தபேரருளிற்றமியற்றுறங்குமாறிதுவென்
றள்ளித்தரளமணிப்பவளமலைத்துக்கரைமேற்றவழ்கடலிற்
றுள்ளித்திரியுஞ்சுறவாங்கேதுயின்றுகாட்டுநிலைமைத்தால். (௯௩)

பரந்துநிறைந்தவுயிருடுபன்மாண்கருவிதகக்கொளுத்தி
யரந்தைதயங்கவகுத்தமைத்தவாக்கையுழிதந்திடுமோபோற்
புரந்துவிடுக்கும்பலமதலைபொருள்கொண்டிறுக்கும்பொழுதானுஞ்
சுரந்தபொருளேற்றிடும்பதத்துந்துவன்றுமொலியக்கடல்பொருமால். (௯௪

ஆழ்ந்துபெருநூலிடைக்கிடந்தவரியபொருளைப்பலர்கவர
வாழ்ந்தகருத்திற்பேரறிஞர்வகுத்துவிளக்குமாறேபோல்
வீழ்ந்தகருத்தினுளையர்குழாம்வில்லிட்டிலகுமணிபலவுந்
தாழ்ந்தநெடுநீர்க்கடற்குளித்துத்தடவுக்கரையெங்கணுநிறைப்பார். (௯௫)

புறவுக்கோட்டஞ்செயும்வனப்பிற்பூவைமொழியார் விழிதான்வா
ழிறவுக்கோட்டுக்கடல்பணிக்குமெழிலாலவர்நாட்டினரிறைஞ்சுஞ்
சுறவுக்கோட்டுட்கடலரசன்றேன்றிவரங்களினிதருளு
நறவுக்கோட்டுமலர்ப்புன்னைஞாழற்பொதும்பரெவ்விடனும். (௯௬)

வேறு.

இம்மையிரேர்வினைபுரிந்தாலியற்றுவினைக்கேற்றபய
னம்மையிலென்பதுநிற்கவடுத்தநுளையர்கள்களிப்பச்
செம்மைநிறப்பவளமொடுதிகழ்தரளம்வளைக்குலமுஞ்
சும்மைநெடுங்கடலன்றேதுறத்துவதுதுறைதோறும். (௯௭)

மலையடுத்தசிலைத்தோளான்வலையெறிந்துமீன்படுத்தாற்
கொலைபடுத்ததெனநுளையர்குறித்தொழிக்குமாலையரோ
சிலைபடுத்ததோடுவளச்செறிவலைகள்பலவீசி
யலைபடுத்தமீன்படுத்திட்டகன்கரையெங்கணுங்குவிப்பார். (௯௮)

வேறுருவந்தோன்றுதவிரிபுனலோடுறுமுப்பு
வேறுருவாய்வரவுமணர்வினைபலசெய்துலகத்து
வேறுருவந்தோன்றுதவிமலனூர்குருவென்ன
வேறுருவாய்வரப்பணிகள்விளைப்பார்போலரியினர். (௯௯)

தெண்ணீருட்பயின்றிருந்துந்தெண்ணீருருத்திரண்டுந்
தெண்ணீருக்குடைகின்றசெயலினூற்சுவையனைத்து
முண்ணீர்மைப்படுத்தொளிருமுப்பினைப்புல்லியவிலைக்குப்
பெண்ணீர்மையுமண்டியர்கள்பெரிதளக்கும்பான்மையரால். (௧௦௦)

எங்கண்மிடற்றிசைக்கெதிருமின்னிசைக்கோகிலம்பல்கத்
தங்குகுட்டம்பைகளளித்துத்தாயாகிவளர்த்திடு
நுங்களையீதுணவெட்டோமெனநுதலுங்கருத்தினர்போன்
மங்கையர்மீனுணங்கலுணவருங்கொடிகளோப்புவார். (௧௦௧

பெருஞ்செல்வராயிடினும்பெயராததிக்குணங்க
டருஞ்செயலராயிருப்பிற்றமையடுப்பாரொவர்யாரு
மிருஞ்செல்வக்கடலிருந்துமெடுத்துண்ணார்மணற்கேணி
யிருஞ்செல்வச்சிற்றூறலாதரிப்பார்குணமாண்பால். (௧௦௨)

வெள்ளநீர்ச்சடைப்பெருமான்மிளிர்மதியமிலேத்தவுந்
தெள்ளுநீர்க்கடற்குளிக்குஞ்செயலினலிதிறப்படியிற்
கொள்ளுமோமைமையின்னுங்கோதிலணியாகவென
வுள்ளியாங்கடுத்தனபோன்றுறைந்தனமுண்டகக்கானம். (கபரு)

சாப்பறையிஞெலிதழங்கத்தணந்தவர்தம்வரவுள்ளி
யேப்பகைக்கண்மடமாதரிரங்குகடற்கழிமாரன்
றூப்படையாக்கொலேபுரியுந்தோடவிழுநறுநீலப்
பூப்பொலிவவினமினத்திறப்புணராமையுளதேயோ. (கபச)

வன்மையுறுசிலேமென்மைமரம்போன்றுமிதந்துலகின்
மென்மையலதுயர்சைவம்வன்மையேயெனவிளக்கப்
புன்மைமதத்தினரழியப்புகழ்நாவுக்கரசினைமு
னன்மைபெறச்சுமந்தகடனலமுழுதுநவில்வாரார். (கபரு)

வேறு. இது முதல். ம. செய்யுள் பாலைநிலச்சிறப்பு.

வரன்மலிகானிலமருங்குமெல்லையாப்
பரன்மலிமுரம்பினைப்பற்றிவேனிலி
னுரன்மலிபாலைமிக்குதிப்பச்சேர்த்ததோர்
சுரன்மலிவளஞ்சிலசொல்லநின்றவே. (கபசு)

ஒருநிலத்தனநுகர்வுகந்ததன்றெனன்
மருவுவெஞ்சுரத்திடைவதிகின்றார்களீ
ரிருநிலத்தவளையுமெய்தவாறலைத்
தருளிலராய்க்கவர்ந்தாருநீர்மையார். (கபஎ)

அலர்முலேயதரநேரானகோங்கமு
மிலவமுமெல்லடியினைவுறுவகைத்
தலைவனோடவ்வுழிச்சார்நரின்புற
நிலைபெறுபஞ்சியினெறிகடோக்குமே. (கபஅ)

அணர்ந்தபூண்முலேயவரன்பரோடுறப்
புணர்ந்தபாவையினொடும்பொலிகயாமெரு
வணர்ந்தசாகையின்மலர்க்குரவமெங்கணு
நிணர்ந்தபூங்குளிர்நிழனீடநல்குமே. (கபகூ)

மலடெனக்கொழியெனவாட்கைக்கன்னித
னிலகுசெஞ்சீறடியிதயத்தெண்ணியாங்
கலநிர்சொரிந்தருந்தவத்தினின்றன
பலவுடன்காய்படாப்பாடலங்களே. (ககல)

வல்லிதன்பாகனூர்வகுத்தவூழினை
யல்லதென்றகற்றுவார்கிலத்தில்லென்
நல்லவர்தெளிதரநண்பகற்கணுங்
கல்லினைதேருவகபோதகங்களே. (ககக)

இருப்பையினுண்மலரிலங்குமுத்தமா
யுருப்பொலிசெம்மலொண்பவளக்கானமா
யிருப்பனமுன்றிலினீந்துமேய்ந்திடைக்
கருப்பையாடாக்குடில்கஞ்லவெங்கணும். (ககஉ)

குமரியினல்லதுவென்றிகூடுரு
தமரினரிவளடியடைமினென்பபோற்
சமரின்மேம்பட்டவர்தரிக்கும்வாகையவ்
விமலைதன்பாங்கெலாம்விரவிப்பூக்குமால். (௧௧௩)

கல்லதரியங்குநர்காழ்த்ததாகநோய்
வல்லைவிட்டொழிக்குநீர்வறந்ததாயினு
மல்லலுற்றழியன்மினங்கைக்கொண்மென
நெல்லியுண்கனிபலநிலத்துதிர்க்குமே. (௧௧௪)

துன்புறினல்லதுசுகந்தகாதெனு
நன்பொருள்விளக்கியநாட்டும்பாலையா
மின்பொருள்விளங்குறுமிடத்திற்சில்வள
மன்புளவறிந்தவாறறைந்திட்டாமரோ. (௧௧௫)

வேறு. இது முதல்-எ-செய்யுள் திணைமயக்கம்.

பகுத்தநானிலத்தைந்திணைப்பற்பலவளனு
மிகுத்தகேள்வியோர்க்கல்லதுவிதப்பதுதகாதாற்
றொகுத்தியாஞ்சிலமொழிந்தனந்தொகுத்தநானிலத்து
வகுத்தவான்பொருண்மயக்கமுஞ்சிலவகுப்பாமால். (௧௧௬)

குறிஞ்சிக்கும் முல்லைக்கும்.

வருடைகொல்லையின்மானமாவுடன்விளையாட
வருவிநின்றதிரடுக்கலினகன்றினைப்புனத்தி
னுருவமஞ்ஞைபுங்கானவாரணமுமுற்றெழில்க
டருவவின்னணங்குறிஞ்சியுமுல்லையுஞ்சாரும். (௧௧௭)

மருதத்திற்கும் குறிஞ்சிக்கும்.

வேழமென்கரும்பயில்வனவிலங்கலிற்பயிலும்
வேழமென்புலம்படர்வதென்னெனவெதிர்மேவி
வேழமல்கியவரைவளர்பசுந்தினைமேயும்
வேழமல்கியவியன்பணைவிரவுறுமேதி. (௧௧௮)

குறிஞ்சிக்கும் நெய்தலுக்கும்.

மீனம்பாய்ந்தெழுவிலங்கலின்வியன்சுனைவேலை
மீனம்பாய்ந்துவீழ்ந்துகளுமவ்வியன்சுனைநிலத்
தானம்பாய்ந்துளரளிவெரீஇத்தண்கழிநிலக்
கானம்பாய்ந்தயரளியெழக்கதுமெனப்பாயும். (௧௧௯)

முல்லைக்கும் மருதத்திற்கும்.

புறவநின்றலர்கடுக்கைபொன்றரப்புனற்பழன
நறவநின்றலர்தாமரைக்கரத்தினன்றேந்திப்
பெறவதற்கெதிர்கொடுத்திடப்பேணியதேய்ப்ப
வறவினார்த்தசங்காங்கொருமலர்க்கரத்தணிவ. (௧௨0)

முல்லைக்கும் நெய்தலுக்கும்.

வெறியகானமர்கோகிலமீன்கவர்புட்கள்
பறியவோப்புறும்பரத்தியர்செவிக்கிசைபகருஞ்
செறியும்வீமணமுமிழ்ந்துதன்முடையினைச்சிதைக்கு
நறியகானுடிதிரைக்கையிற்பரவுநீர்நரலை. (௧௨க

மருதத்திற்கும் நெய்தலுக்கும்.

கோழிவிட்டெறிகுழையினைக்கண்டலப்புழுமெவன்
றாழியின்கனாநீன்கவர்காகமங்காப்ப
வாழிவிட்டெறிமுத்தினையண்டமென்றுகந்து
வாழியன்னமற்றடைகிடப்பனவயற்பாங்கர். (௱௨)

நூலாசிரியர்.

இன்னவானபல்வளங்களுமியைந்தசோணாட்டுத்
தன்னைநீக்குதலருமையிற்றடாதபேரன்பிற்
பொன்னியாறிருமருங்கினும்பொற்பவார்ந்தொழுக
மன்னுமாநகர்வளஞ்சிறிதறிந்தவாவகுப்பாம். (௱௩)

திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று இதனுள்.

மேற்கூறிய நிலங்கட்கு-குறிஞ்சிகூட்டம்-பாலைஉடன்போக்கு-முல்லைதனித்திருத்தல்-நெய்தல்இரங்கல்-மருதம்-ஊடல்-என்னும்-ஐந்து தொழில்களாம்.

௧-வது குறிஞ்சுக்குத்தெய்வம்முருகக்கடவுள்-சாதி-வேடர்-௨-வது-முல்லைக்குத்தெய்வம்விஷ்ணு-சாதி-இடையர்-௩-வது-மருதத்திற்குத்தெய்வம்-இந்திரன் சாதிமள்ளர்-௪-வது-நெய்தலுக்குத் தெய்வம்-வருணன்-சாதி -செம்படவர் - ௫-வது பாலைக்குத்தெய்வம்-காளி- சாதி-மறவர்- இந்நிலங்களுக்குரித்தாய- பொருள்களை ஆங்காங்குள்ளகவிகளிற்-கூறியவற்றிற்கண்டுகொள்க.

இவ்வைந்துதிணையின்-பகுப்புகளாவன-குறிஞ்சி-மலை-முல்லை-காடு -நெய்தல் -சமுத்திரம் -மருதம்-வயல்-பாலைஇந்நான்குநிலத்துங்கலந்துள்ளன.

ஆக திருவிருத்தம்-௧௪௬

---

## திருநகரச்சிறப்பு.

இது முதல்-௰௪-செய்யுள் பொதுச்சிறப்பு

பூமேவுபசும்பொழில்சூழ்திருவானைக்காவினைமுப்புவனத்தோரு
மாமேவுபலநகருமொருநகரொன்றுதுயர்மாநகரொன்றேரத்
தேமேவுபலநகரும்புறமாகவகந்தழுவித்தீர்த்தப்பொன்னிக்
காமேவியொழுகுமெனினந்நகருக்கிணைநகரங்காட்டலாமே. (௧)

இருநதியினிடைக்கிடந்தகாரியெவற்றினுஞ்சிறந்ததென்பவந்த
விருநதியுளொருநதியேசிவபெருமானளித்ததனியல்புநிற்க
வொருநதியேயிருநதியாயொழுகவிடையிருக்குமுயரானைக்காவவ்
வொருநதிமற்றிறையளிப்பமலயமுனிகொணர்ந்ததெனிறெப்புண்டாமோ. (௨)

கங்கைநதியொருவேந்தனிரப்பவொருமுனிவாயிற்கரந்துமாண்டோ
ரங்கமலிதரப்புகுந்ததுயரானைக்காவினைச்சூழ்ந்தீமரும்பொன்னி
துங்கமுனிகமண்டலத்துட்கரந்துவிசும்பிறைவேண்டத்துதிக்கைநம்பி
யிங்கருளச்சிவபூசைக்குதவியதென்றூற்பெருமையெவற்றதாமே. (௩)

மதுவாரமுறுக்கவிழ்ந்துமலர்விரியும்பசும்பொதும்பர்மருங்குசூழ
விதுவாழுஞ்சடைமௌலிசம்புநாயகர்கருணைவிரவிவாழு
முதுவாழ்வுதருமானைக்காவினெழில்வனப்புமுதிர்தகரவித்தை
கதுவாய்மைமாயவனுருள்ளகத்தாமரைமலரோகடுக்குமன்றே. (௪)

வேறு.

உரிமையிற்சிலம்பிபூசனைபுரிந்தவுண்மைதேர்ந்தெம்பிரானுவப்ப
வரியளிக்குலமும்பூசனைபுரியுமாட்சியிற்பசும்பொழிறோறும்
புரிமுறுக்கவிழ்ந்துமலர்வழியொழுகும்புதுநறுவாரியின்முழுகி
விரிமணத்தாதுபூசிமெல்லிசைகண்மிழற்றிநின்றாட்டயர்வனவால். (௫)

இலம்பகமிலைத்ததிலகவாணுதலாரொதிரொதிராட்டயர்தோறு
மலம்புகிண்கிணியுஞ்சிலம்புமேகலையுமதிர்குரன்மழைமுகில்காட்டக்
குலம்பயின்மயில்களாடுவபூவைகுயில்கிளிபாடுவவிவையுஞ்
சிலம்பியினுவந்துதத்தபக்கியன்றதிருப்பணிசெய்வபோன்றனவால் (௬)

நாரணர்பிரமர்நாடியுமறியாநங்கைபங்காளனார்முடியுந்
தாரணிபதமுஞானபூமியினுந்தங்கருந்தவத்தினாற்சார்ந்திட்
டாரணர்க்குரியதவிசெனும்பழியுமகற்றுதுமெனமுயன்றனபோ
னீரணிபழனந்தடாகமும்பிறவுநிரந்தரித்தனமலர்க்கமலம். (௭)

முள்ளரைப்பசுந்தாட்சேயிதழ்ப்பொகுட்டுமுண்டகநாண்மலர்த்தவிசின்
வெள்ளொளிவிரிக்குமென்சிறையன்னம்விழுத்தகுதுணையொடும்பயில்வ
கள்ளவைம்பொறியுங்கடந்தவரிதையகமலநாண்மலர்மிசையஞ்சப்
புள்ளுருவாகச்சத்தியுஞ்சிவமும்பொற்பவீற்றிருப்பதுதகையும். (௮)

பண்டுவெண்ணீறுதிமிர்ந்தொளிர்படிவப்பராசரமுனிவனிவளர்த்த
மண்டுசெந்தழலினரக்கர்தங்குலங்கள்வந்துவந்துகுவளவிழையக்
கண்டவர்வியப்பப்பாசடைமருங்கிற்கதிரவெள்ளோதிமத்தெதிரோ
விண்டசெங்கமலத்தொழுகுதேனசையால்விழுவனவீற்றுவீற்றளிகள். (௯)

வேறு. முந்துபகையானசுரர்முற்றிவதிவீயுந்
தந்தமிடமாகவிகளுனவரிறுத்தாங்
குந்துமதுவுண்ணவுழிதந்தளிகள்பாயு
நந்தனவனங்கள்பலநாற்றிசையுமல்கும். (௧௰)

கைபழகமுன்புபடைகஞ்சமுதல்வீயு
மெய்பழகுவேதனகர்மேகவெனவிட்டா
னெய்பழகுகூந்தலர்நிலாமுகமுமற்று
மைபழகிநின்றவெனயாருமறிவெய்த. (௧௧)

மறநவிலும்வாட்கண்மடமாதரிசைவல்லாத்
திறநவிலவேறுகரிதேர்வொழிகசான்றோர்
புறநகரடுத்துவளர்பூவைகிளிதாமே
யுறநவில்வவுண்ணகருறுதறவொழிந்தே. (௧௨)

தீர்த்தமுடிவைத்தவொருதீர்த்தனிவனென்றுந்
தீர்த்தமுருவாகவளர்செய்தியைமதித்தே
தீர்த்தலரிதாங்களிசிறந்தொளிர்வதென்னத்
தீர்த்தமெவையும்பெரிதுதேங்கியெழில்கூறும். (௧௩)

நீருருவமாகிவளர்நின்மலன்மகிழ்ந்த
சீருருவமானநகர்சேர்ந்தனமினித்தான்
றீருணவினைமலமெனத்திகழுவப்பா
னீருருவவார்பொழிலிணர்த்துமலரூழ்க்கும். (௧௪)

வேறு. இதுமுதல்-அ-செய்யுள், புடைநகரச் சிறப்பு. யானை

தண்ணார்மதிசூடியசங்கரனார்பதங்கள்
விண்ணோர்பெருமான்பணியப்புகமேகவூர்தி
யெண்ணாவிறலோடுபுறத்திறைகொண்டதேய்ப்ப
மண்ணாமணியானைகள்யாத்தனவாரியோர்சார். (கரு)

குதிரை.

கருணைக்கடலாகியகண்ணுதலார்பதங்கள்
வருணன்றொழுவான்புகவன்னவனொழ்க்கையான
பொருதண்கடலும்புறமுற்றியபொற்புமான
வருமைங்கதிவாசியின்மந்திரம்வாய்ந்ததோர்சார். (கசு)

நிலைத்தேர்

ஒருஞான்றுமுலப்பிலிருங்கதியுய்க்குநாத
னிருசேவடியேத்தவுள்புக்கவிராறுகோடிப்
பொருசூரியரோறியதேர்புறநின்றதென்னக்
குருமாமணியாத்தொளிர்தேர்குழுமுற்றதோர்சார் (கஎ)

சிலம்பக்கூடம்.

வடவைக்கனலுங்கடனஞ்சமும்வானினேறு
முடலுஞ்சமனாணையுமோருருக்கொண்டதென்னச்
சுடருங்கணைவானயிலாதிதொடர்ந்துவீர
ரடல்விஞ்சையரஞ்சவமர்ந்தகல்லூரியோர்சார். (கஅ)

வார்த்தொழிலாளர் தச்சர் கொல்லர்.

பருமக்கலனைப்புரசைப்பகிர்வார்களார்க
ளுருவச்சகடத்துருளச்சுறையாய்தமாதி
கருவித்திரண்முற்றுமுனாற்றுகைவல்லநீரார்
மருவித்தொகுசேரியனந்தம்வெவ்வேறுவாய்ந்த. (க௯)

யானையேற்றம் குதிரை யேற்றம் இரதநடத்தல்.

வண்டாடியமாமதவேழமும்வாவுமானுஞ்
செண்டாடியசெண்டுவெளித்தலமுஞ்செறிந்து
கண்டார்களிகூரிரதத்தொழில்கற்குஞாட்புந்
தண்டாதுவிலாழிபொழிந்துதண்சேறுசெய்யும். (உ௦)

போர்த்தொழில்

ஒழுகுஞ்சுடர்வாளயில்வேல்சிலையொண்கையேந்திக்
குழுமத்திறல்வீரர்கொடுஞ்சமர்கற்குமெல்லை
விழுமக்கலனிற்பிதிருக்கநல்வெள்ளிபொன்னும்
புழுதித்திரளாய்ப்புறம்போர்ப்பபொற்பவெங்கும். (உக)

நூலாசிரியர்.

நடைமாமலையாதிகண்முற்றிநலஞ்சிறந்த
புடைமாநகரின்வளனிற்சிறிதேபுகன்றாந்
தொடைமாண்சிலைவேள்கணையின்சுவைதோற்றியாடு
மிடைமாநகரின்வளனிற்சிறிதேத்துவாயால். (உஉ)

வேறு — இதுமுதல் ௰-செய்யுள் இடைநகரச்சிறப்பு,

பளிக்குக்குன் றமும்பரந்தவெக்கரு
மொளிக்கண்மேனடையுமுயர்செய்குன் றமுந்
தெளிக்கும்பொய்கையுந்திகழுய்யானமுங்
களிக்குநீரனகடவுளார்க்குமே. (௨௩)

பலர்வியப்புறும்பளிக்குக்குன் றுகள்
கலவமாமயில்கதுவுசெவ்வியி
னிலவிருங்கறைநீக்கப்புக்கமர்
விலகிவில்லுமிழ்விதுநீகர்க்குமே. (௨௪)

குமுதவாவிதூங்குளிர்ந்தமுத்தமுங்
கமுகமுத்தமுங்கலந்தநீர்மையா
லமுதவெண்கதிரோடடுத்தமீன்
சமுகம்போன் றனதரணியெங்கணும். (௨௫)

பட்டமாடுவார்பரந்தவெக்கர்வா
யிட்டசெம்மலரொரியினெய்மர
மட்டவண்டுசூழ்ந்தாவிப்பேட்டினைத்
தொட்டுவைகவண்சுகங்கள்பாடுமே. (௨௬)

மைக்கண்மாதரார்வாவிதோய்தொறு
மெக்கர்வாயவரிடுமடிச்சுவட்
டொக்குமென்னடையோதிமம்புகத்
தக்கதன்றெனத்தரங்கநீக்குமே. (௨௭)

கொழுநர்கொங்கைபூங்கொத்தின்வேறற
வெழுதுமவ்விடையிளையர்நெஞ்சமான்
முழுகவாலவாய்முதல்வனெனக்
கெழுவுமாடமேற்கிளந்துவப்பரால். (௨௮)

திரண்மணிக்கலாற்செய்தகுன் றின்வாய்
விரவியாடுவார்விளங்குதந்நிழல்
கரவிலாதுகண்ணடியிற்றோற்றலும்
பலர்கொலோவெனப்படர்ந்துதேறுவார். (௨௯)

பேதையாருழைப்பிழையிலார்க்குமிக்
கேதமேயுறுமென்றியம்பியாங்
கோதுமாதர்கையுற்றகந்துக
மாதகாதெனவடிபட்டாடுமே. (௩0)

பாடியம்மனைபாவைமாரொறிந்
தாடுசெங்கையையயலொன் றன்னவர்
நீடுவார்குழனிலவுவண்டுக
ளோடிவீழ்ந்தெழுந்துடனுலாவுமே. (௩௧)

ஆசைநீட்சியினலேதன்முற்றுறு
மேசிலாருயிர்க்கென்றுரைப்பபோற்
பாசநீட்சியிற்பரந்துலாவுறு
மூசனீர்க்கலாரோடரிக்கணார். (௩௨)

பண்ணையாட்டயர்பாவைமார்குழல்
வண்ணமாலையும்வாசச்சுண்ணமு
மொண்ணிழற்கலனோடுவீழ்தலால்
விண்ணுளார்க்கும்விம்மிதம்விளைக்குமே. (௩௩)

நூலாசிரியர்.

போகபூமியும்பொருவுறுதென
நாகர்போற்றிடைநகருணாத்தன
மேகநாதனையிழைத்தவிஞ்சிசூழ்ந்
தோகைமிக்கவுண்ணகருணாத்துமால். (௩௪)

(வேறு-இதுமுதல்-அ௲-கவி உள்நகரச்சிறப்பு இதனுள்-௫-கவி அகழும்மதிலும்.)

வெலற்கரும்பகைவிழிநகையாதியின்விளித்தும்வன்படைநாதன்
மலர்க்கரத்துமீளிமைக்கடையாளமாவயக்கியதிறனேய்ப்ப
வலக்கண்வெம்பகையாதிகள்காணுமுனனுக்கிபுமரணென்னச்
சொலத்தகுஞ்சுடர்மதில்புடையுடுத்ததுதொல்லைமாநகரம்ம. (௩௫)

தூங்குவீங்கிருடெரந்தொளிகளூற்றுவெஞ்சுடரவன்கலைத்திங்க
ணீங்குறுதவல்லுடுக்கணமேகமுனித்தலும்வெளியூடே
யாங்கவேகுழித்தவிர்ந்திளைப்பாறவுமமைந்ததாலவிர்செம்பொ
னோங்கலாமலதெனநிவந்தோங்கியவொளிர்மணித்தடநொச்சி. (௩௬)

பொருதுதன்னிலைகடக்கும்வன்மீளியர்புவனமூன்றினுமில்லா
வருமைமல்கியதாயினும்பொருளெலாமளித்தவன்செயப்பட்டுப்
பெருமைமல்கியநகர்க்கெலாங்காட்டெனப்பிறங்கலின்மணியிஞ்சி
கருமைமல்கியவகழியும்பொறிகளூங்கலந்துவீற்றிருந்தன்றே. (௩௭)

சிவபெருமானுக்கும் மதிலுக்குஞ் சிலேடை

முடியில்வான்செழுங்கங்கையுந்திங்களுமுதிரொளிமணிப்பாம்பும்
படியநீர்க்கிடங்கடித்தலஞ்சூழ்தரப்பயின்றநொச்சியின்வீக்கங்
கடிவிராவியகடுக்கையங்கண்ணியான்கடையுகத்தெழுமாழி
நெடியநீரிடைமாலயன்முரண்கெடநிவந்துநின்றதுபோலும். (௩௮)

எறிந்துவண்டெளர்கமலமுங்குமுதமுமிருங்குவளையுமற்றுஞ்
செறிந்தநல்லெழிலந்நலாருறுப்பொடுதெவ்வுவவிவையென்று
வறிந்துவெஞ்சிறையிட்டகோட்டம்பொரூஉமவையெலாமலையூடே
மறிந்துபங்கமுற்றுண்ணெகிழ்ந்திருங்கணீர்வாக்குந்தண்கிடங்கம்ம. (௩௯)

மதிலுறுப்பு.

இறைவன்யாவரும்வணங்கியும்வாழ்த்தியுமெண்ணியநலனெய்தக்
குறைவில்பேரருளாலிழைத்திட்டவிக்கோணைமாமதிட்பாங்க
ருறையுமேனையமதிலெனவெண்மையினுறலெனவொழிக்கின்றுங்
கறையுநீள்பொறியமரர்கள்விமானமுமகற்றுவவெளியூடே (௪௰)

கோபுரம்.

செழுந்தண்மாமணிகுயின்றொளிதிசைதிசைசெறிந்துவல்லிருள்வாய்ப்பெய்
தெழுந்தகோபுரமந்நகர்த்தெய்வதமெழுந்துவிண்பரப்பெல்லைக்
கொழுந்தண்மால்வளங்கொண்டுயர்நகரொலாங்கோலவிந்நகரொப்புத்
தழுங்கொலோவெனவிழிகளிற்பார்த்திடுந்தன்மைபோன்றதுமாதோ. (௪௧)

## நகரின் கோபுரத்தின் கொடிகள்.

நால்வகைப்பெருவளங்களுமெளிதருண்மையால்வளமாண்பாற்
சால்வதிந்நகரிந்நகர்நிகர்நகர்சகங்கண்மூன்றினுமில்லை
யெல்வதென்றெழுதெய்வதமிருங்கரமெடுத்துச்சூளுறநின்றாற்
போல்வதும்பரினெழுந்தகோபுரமிசைப்பொலிந்தவார்கொடியம்ம (சஉ)

## வேறு. இது முதல் - ௰க - செய்யுள் பரத்தையர் வீதி

ீங்கரும்வளத்திற்சான்றநெடுநகர்க்குறுப்பாயென்று
மோங்கியமதிலுந்தாழ்ந்தவொலிபுனற்கிடங்குஞ்சொற்றாந்
தாங்கருமகிழ்ச்சிபொங்கத்தருணர்களுளத்தையெல்லாம்
வாங்கியொண்பொருளும்வாங்கும்வரைவிலார்சேரிசொல்வாம். (சங)

தூவியவுருவமெல்லாமொண்டொடித்தடக்கைச்செவ்வாய்க்
காவியங்கண்ணினல்லார்காரிகைக்குடைந்தவாற்றா
றேவியலுரையுமற்றுநடையுமற்றிமைப்புமற்றுப்
பாவியவுயிர்ப்புமின்றிப்பயின்றனசுவரோடொன்றாய். (சச)

கண்டவருயிரையெல்லாங்கதுமெனத்தம்பாலாக்கி
கொண்டமர்பரத்தைமார்கள்கொள்கையைத்தெரிக்குமாபோற்
கண்டவருருவமெல்லாங்கவர்ந்தொளிர்தருப்பணங்கள்
கொண்டபன்மாடமேடைகுலவுவசேரியெங்கும். (சரு)

## வேறு.

உடையினுமணியினுமுருவச்சாந்தினு
நடையினுமொழியினுநயனநோக்கினுந்
தடையறமயக்குநர்தமக்கினம்மென
விடைவனவவருழைவேரித்தண்டரோ (சசு)

அஞ்சனமெழுதியங்கயற்கண்மாமுலைக்
குஞ்சரமெழில்பெறக்கோலந்தீட்டுவார்
மஞ்சரையாவணம்வரைந்திடாமையே
யெஞ்சலில்பொருளுங்கொண்டேவல்கொள்வரால். (சஎ)

கற்பிலர்பொய்யினர்கவர்த்தநெஞ்சின
ரற்பிலரெனநனியறிந்தமன்னரும்
பொற்பொடுசிறப்பருள்பொலிவினாரெனிற்
சொற்பயில்பரத்தையர்சொருபமென்சொல்கேன். (சஅ)

சூதுபொய்யரியலிற்றொடக்கமாதியாத்
தீதுசெய்யினும்விலைத்தெரிவைமாருழை
மாதருக்குடைந்தபூமாதுவைகலுங்
கோதறுதிருவெலாங்கொடுத்துநிற்குமே. (சகூ)

கலைத்தொழிற்சுவையினுங்கடுத்திலேமென
விலைத்தெரிவையர்க்குளம்வெள்கிப்பூக்கரந்
தலைத்துருபயத்தின்விட்டன்பறவக
நிலைத்துருக்கரந்தனணிகழ்சொன்மங்கையே. (ருo)

ஆடலினரவமுமமுதுகுத்தெனப்
பாடலினிசைகளும்பகலுமெல்லியுங்
கூடலிற்றுறக்கமாய்க்குறைவிலின்பமே
நீடலின்வீடுமொய்ச்சேரிநின்றதே. (௫௧)

சுடர்விடுமவையவந்தோறுந்தீஞ்சுவை
விடமொழித்தார்வலர்வேண்டியாங்கருள்
கெடவரற்பாத்தையர்கெழுவவல்லரோர்
கடல்கடைந்திளைப்பபோகடவுளாரெலாம். (௫௨)

நூலாசிரியர்.

மேவணவகப்பொருள்விலைசெய்வாழ்க்கைய
ராவணப்பாத்தையர்சூழல்சொற்றனம்
பாவணப்புறப்பொருள்பலவும்விற்றிடு
மாவணவீதியினமைதிசொற்றுமால். (௫௩)

வேறு. இதுமுதல் ௯ செய்யுள் ஆவணவீதி.

மரகதமணிக்கிடுகுவளர்செழும்பவளக்கால்
விரவுறவெடுத்திட்டுவேறுபன்மணிமாலைக்
குரவலர்மலர்த்தொங்கல்கோடணைகொளவார்த்துப்
பரவுநன்மணமூட்டிப்பயின்றனகடையெல்லாம். (௫௪)

முந்திடவெழிற்பந்தர்முகிலுழைதரச்செய்து
நந்தொளிமணிவாழைநாகிளங்கமுகியாத்துச்
சுந்தரமலர்வாசச்சுண்ணமுநனிதூவி
யிந்திரநகரோங்கவிருத்தினர்தவிசெங்கும். (௫௫)

நடுநிலைபிழையார்போனவுத்தகுகோறங்கைத்
தொடுதலினன்றேயித்தொலைவருபொருளெல்லா
முடையவராகின்றாரூதியநாய்கரெனக்
கடைவளநோக்குநர்கள்கருதுறுந்தகையனவே. (௫௬)

வரைவளமுழுதொருபால்வனத்தனமுழுதொருபா
லுரைதகுபழனத்திறனெல்வளமுழுதொருபாற்
றிரையனமுழுதொருபாற்செறிதலினியமந்தாந்
தரைமகள்பண்டாரம்போன்றனதனித்தனியே. (௫௭)

வரையெனமணிமாடம்வனமெனவுயர்கொடிக
டிரைதவழ்கடலென்னத்திகழ்சனவொலிமூன்றும்
விரவியநியமந்தாம்விளம்புமுந்நிலந்தாமும்
பரவியதண்ணடையிற்பயில்வுறுந்தகையனவே. (௫௮)

இரதமோடெழில்வேழமிவுளியுமயிலாதிக்
கரவில்பல்படைமற்றுங்காதலின்விலைசெய்ம்மார்
நிரைநிரைநிறுவித்தநீடியநியமந்தாம்
வரமலிபாசறையின்வயங்குவவொருபாங்கர். (௫௯)

விஞ்சுபுன்மொழியும்விரவலிற்பொருள்கவரா
தஞ்செவிதுயர்கூரவினைத்தையுநுகர்கிலமென்
றெஞ்சியபொறிநான்குமின்னலிற்றுளைகிற்பத்
தஞ்சமில்பொருளெல்லாந்தலைத்தலைசிறந்தனவே. (௬0)

உளதுகொலிலதுகொலென்றொருபொருள்வினவுதலு
முளதிலதெனச்செவ்வேயுணர்த்தலுமலதிலையென்
றளவலுமவைமூன்றுமாக்கிலையாவர்களு
மளவில்பல்பொருளெல்லாந்தருகெனவமைந்தனவே. (௬௧)

கொள்ளுநர்தமக்கெல்லாங்குறைவறநனிநல்கி
யொள்ளியபொருள்பலவுமொருதினம்போற்காட்டி
நள்ளுறுமாவணந்தாநாடொறுநிறைமங்கா
டெள்ளலவாக்கிப்பிற்றிகழ்வனதகவுறவே. (௬௨)

நூலாசிரியர்.

சேயிடைப்பொருள்பலவுந்தெவ்வுநர்க்கெளிதாக
வாயிடைத்தவவுய்க்குமாவணத்தெழில்கூறாற்
பாயினபுகழோங்கும்பல்குடிகளுமல்கி
மேயினமணிவீதியியத்தகுவளுஞ்சொல்வாம். (௬௩)

வேறு. சங்கரசாதி.

எடுத்தசாங்கரத்திணங்குபல்வேறுசாதியினு
மடுத்தமாந்தர்களவரவர்க்கான்றதொல்லொழுக்க
மடுத்துமேவவுகிந்துவாழ்மறுகுகள்சூழ்ந்து
தொடுத்தவோகையிற்றுவன்றினதுலங்குநாற்றெருவும். (௬௪)

இதுமுதல் ௪ செய்யுள் வேளாளர்வீதி.

உழுதியாவருந்தத்தமதொழுக்கினிற்பிழையா
தொழுகுமாறுபகரித்துவேளாளரென்றொருபேர்
தழுவுசீர்மையர்தருமமாதிகளொருநான்கும்
செழுவுமோகையர்கிளர்ந்துவாழ்வீதிகளொருபால். (௬௫)

தருமனையினுந்தானுவின்பெருமைநேர்ந்தவர்தம்
பெருமைசேர்கலாப்பிழையிறைப்பிரிந்துபின்னவை
யெருமையூர்திதொண்டிவைப்பிழையாரிவரெனச்சார்ந்
தொருவுறுதனபோன்றனவோங்குகார்மேதி. (௬௬)

விளைந்துவந்தனவித்துமாயுணவுமாய்விரவ
வளைந்துநின்றிடும்பின்னவரமர்ந்துவாழ்மாடம்
வளைந்துநின்றுவல்விளைகண்மூவகையெனமருவத்
தளைந்துநின்றவைத்தனிப்பெருமாயையேதகைவ. (௬௭)

மண்ணிலேபலவித்திவண்பொருள்விளைப்பதுபோற்
றிண்ணமாகநல்குரவினர்செங்கையோதனமும்
வண்ணமாகியபொருள்களும்வகைவகைவித்தி
யுண்ணலாம்புகழ்விளைத்தலாலயின்றுகண்டெயிலார். (௬௮)

இதுமுதல் ௩ செய்யுள் வணிகர்வீதி.

உள்ளம்யாவையுங்கோணுதலுறுதசெந்நிலைமை
விள்ளுறுதுதங்குறிப்பினால்விளக்குவார்போலத்
தெள்ளும்வானிறைக்கோலினைச்செங்கையிற்றூங்கிக்
கொள்ளுநீர்மையர்குழுமிவாழ்வீதிகளொருபால். (௬௯)

முதல்கெடாவகையாவணத்தூதியமுகக்குங்
கதமிலாதுயர்வணிகர்தங்கைப்பொருண்முழுது
முதவியார்வலராதியோர்க்கும்பரின்மாட்டுஞ்
சிதர்வினூதியஞ்செறித்தலாற்றெறுபசிகளையார். (௭௦)

அளகைமாநகர்க்கொருவனேதலைவனாதலினவ்
வளமைமாநகரொக்குமோவளர்நிதிக்கிழவர்
கிளைஞரோடுபல்லாயிரர்கெழீஇயினர்வதியுந்
தளர்வில்பேரொளியசும்பியதமனியவீதி. (௭௧)

இதுமுதல் ௪ செய்யுள் அரசர்வீதி.

பகைமைமீக்கொளுமன்னரைப்பறந்தலைப்படுத்து
மிகைமைமீக்கொளவிண்ணெலாங்கைக்கொளவிடுத்துத்
தகைமைமீக்கொளுமண்ணெலாந்தமதுமண்ணாக்கி
வகைமைமீக்கொளுமன்னர்வாழ்வீதிகளொருபால். (௭௨)

அங்கண்வாழ்தருமரையர்கண்ணிமைப்பனவாயும்
பொங்குபோரிடையழித்திமையாதிகல்பொலிவு
தங்கண்மேவரிதென்பதுதாமறிந்திமையாத்
துங்கமேயினர்தோல்வியிற்படாவகைச்சுரர்கள். (௭௩)

இயக்குநாயகனின்றியாருயிரியங்காமை
வயக்கினாலெனவயின்வயிற்செயலறவிருந்த
வியக்கமாணவந்திறுத்தவொன்னலருயிர்குடித்துத்
தயக்கமாண்டவத்திரமுதலாஞ்சமர்ப்படைகள். (௭௪)

இரக்குமாந்தர்நல்குரவெனும்பகையொடுமிரப்பிற்
கரக்குங்காரறிவெனும்பகைகருணையம்படையா
லரக்கிமேதகுமறமெனுநிலமுழுதாண்டு
பரக்குமோகையிற்படிந்தலாற்பரிவுயிர்த்தமையார். (௭௫)

இதுமுதல் ௫ செய்யுள் மறையவர்வீதி.

மூவர்தாடொழுமுதன்மையுமூவகைப்புரமுந்
தாவநூல்பலபயிற்றலுந்தழல்கையோம்புதலு
மேவலால்வெறிக்கொன்றையங்கண்ணியான்விழையு
மோவின்மாமறையந்தணர்வீதிகளொருபால். (௭௬)

சென்னிவேறொருவருணத்திற்றணிக்கலாச்சிறப்பின்
மன்னியாவரும்வணக்கலாமதிமுடிச்சடையோன்
றன்னைநீள்சிகைதாழ்க்கலாத்தழலிடைவழிபட்
டுன்னுவான்கதியுறுபவர்வாழ்க்கைசொல்வரைத்தோ. (௭௭)

செருத்தலான்பலபடுத்துஞ்சேர்ந்தார்தமைக்கொல்லி
யிருத்திநாடொறும்பூசனையியற்றியுமிழியார்
வருத்தும்வானவர்பசியொரீஇமழைவளஞ்சிறப்பித்
தருத்திநானிலத்தரந்தையுமனுக்குநரவரே. (எஅ)

வேதமோதியும்வேள்விகள்பற்பலபுரிந்து
மேதநீவியுமதிதிபூசனையினிதமைத்துங்
காதஞன்முகனலருறக்கடிநகரிருக்கு
மாதர்வேதியரலதுகண்வையகக்கிலையே. (எகூ)

வேள்விமுற்றியவேதியர்வேறுவேறாரும்
வாள்விமானமுமிரதமுமதவிளங்களிறுந்
தாள்விசைத்தெழுபுரவியுந்தகைதலின்வீதி
யாள்வினைத்திறத்தரசர்வீதிகளொடுமமர்த்த. (அ0)

ஆதிசைவர்.

தாங்களேயருளுடையராந்தகுதியைமதியார்
யாங்கணியாவருமருளினராம்வகையெண்ணி
யோங்குபூசனையிரண்டையுமுஞற்றுவிப்பிரர்கள்
வீங்குமோகையின்வதிதரும்வியலிடம்பலவால். (அக)

மடங்கள்.

சரியையாற்றுநர்மடமொருசாரெலாந்தழையுங்
கிரியையாற்றுநர்மடமொருசாரெலாங்கெழுவு
முரியயோகியர்மடமொருசாரெலாமொளிருந்
தெரியுஞானியர்மடமொருசாரெலாஞ்சிவணும். (அஉ)

திருமஞ்சனமெடுப்போர்:

நம்பனாரடிப்பூசனைநலத்தகவியற்ற
வம்புநீள்புனன்மணிக்குடமுச்சியின்வயக்கி
யம்பரேகுநரடுத்திடுமுருவின்வான்கங்கை
பம்பவேற்றுநின்றூற்றுவான்பழகுவாரனையார். (அங)

நாற்கவிப்புலவர்கள் ஆசுகவி மதுரகவி, சித்திரகவி விஸ்தாரகவி.

கான்றதீஞ்சுவைநால்வகைக்கவிதையும்புணர்க்கு
மான்றகேள்வியிற்கவியொடுகமகனேவாதி
யான்றவாக்கியென்றனைவருமளவளாயிருந்து
சான்றநூறெரிபட்டிமண்டபம்பலதயங்கும். (அச)

அன்னசத்திரம்.

மூன்றிரட்டியசுவைகளுமொய்த்தநாலுண்டி
மான்றவைம்பொறியடங்கியமாதவர்முதலோர்க்
கேன்றநல்லுபசாரத்தினினிதுமிக்கூட்டி
யூன்றிநின்றிடுமோதனச்சாலையுமுளவால். (அரு)

இதுமுதல் உங-செய்யுள் பொதுச்சிறப்பு.

அவத்திஞன்றவரிருக்கைகளவணிலவாகத்
தவத்திஞன்றவரிருக்கையுமவணசார்பத்திப்
பவத்திஞன்றவரிருக்கையுமவணபண்பினராய்ச்
சிவத்திஞன்றவரிருக்கையுமவணதேசுறவே. (அசு)

ஆங்கணில்லதென்றோரறமனைத்துலகினுமி
லாங்கணில்லதென்றொருபொருளனைத்துலகினும்
லாங்கணில்லதென்றின்பமொன்றனைத்துலகினுமி
லாங்கணில்லதென்றரியவீடனைத்துலகினுமில். (௮௭)

வேறு.

வாரணத்திரளும்வாம்பரித்திரளுமணிக்குயின்றெடுத்தபொற்றேருந்
தாரணிபுயத்துமைந்தரந்தணர்கைத்தானமாக்கொடுத்தனருருக்கு
நீரணிமகளிர்சிதர்ந்தகுங்குமமுநீழன்மணிக்கலன்களுங்கொழித்த
சீரணிவண்டலிழுக்கலின்விரையச்செலவருசெப்பியவளவையே. (௮௮)

உருக்கியபசும்பொற்றகட்டிஞன்மணியாலுருகெழப்படுத்தவார்வீதி
பொருக்கெனப்புகுவாரடிக்கிடர்புரியப்புழுதியும்பரலுமின்றேனுந்
தருக்கினர்மடவார்வீசுகுங்குமமுந்தமணியப்பொடியும்பூந்தாதுங்
குருக்கலத்திரளுங்குவால்படக்கிடந்துசேறுநடையாக்குவமாதோ. (௮௯)

வீதிகட்கழகுபுரிவனவுயர்ந்துவிரிந்தபூம்பந்தரப்பந்தர்க்
கேதமிலழகுபுரிவனமணியினிழைத்தவேதிகையவைதமக்குக்
கோதறுமழகுபுரிவனநிறைநீர்க்கும்பமுமாடியும்விளக்குந்
தீதறுமழகுபுரிமலர்த்தொடையுஞ்செழுங்கனித்திரள்களும்பிறவும். (௯0)

நாரணன்முதலோர்வலம்வரும்வீதிநள்ளிருமருங்கினுமணியாற்
சீரணிந்தெடுத்தமாடமேடைகளிற்செறிகதிர்ப்பிழம்புதைவரலாற்
றோரணநிரையுந்துகிலிகைக்காடுஞ்சுரும்புளர்பந்தருமிடைந்து
தாரணிவிளக்குஞ்சுடரிருங்கிரணந்தடுத்தும்வல்லிருள்படாததால். (௯௧)

தமணியத்தகடுபடுத்தொளிர்நிலத்தாற்றமணியப்பொடிகள்போர்த்தெல்லா
தமணியவுருவாயிருத்தலாற்பந்தர்தழைந்திருசுடரையும்விலக்கத் [ந்
தமமறமணிகளொன்றுமோரியல்பிற்றகையொளிவிரித்தலாற்றெருக்க
டமணியவுலகம்பொரும்புரையாதுதனிச்சிவலோகமும்பொருளால். (௯௨)

வேறு

விண்ணந்தூமநிறத்ததுவேறுபல், வண்ணமேயதென்னேயெனவானவ
ரெண்ணமாடத்திழைத்தொளிர்மாமணி, நண்ணருங்கதிர்நாளும்பரக்குமே

நீலமேகநிமிர்ந்துதவழ்தொறுஞ், சூலமேந்திச்சுடர்விடுமாளிகை, ஞால
முய்ந்திடநாகத்தினீருரிக், கோலங்கொண்டகுழகனொடொக்குமே. (௯௪)

வளங்கொள்வெண்சுதையூட்டியமாடமேற், றுளங்குபைங்கதிர்ச்சோம
ன்றவழ்ந்துறல், விளங்குமாதர்முகம்பொரமெய்யுரைஇக், களங்கமாய்
க்குமக்காட்சிநிகர்க்குமே. (௯௫)

உருவவார்சிவிறிக்குலத்தூக்குநீ, டருவிவார்கொடியாரமைமாளிகை
பொருவின்மால்வரைபொற்பவங்காடுவான், மருவுமாதர்வரையமாதரே.

ஈண்டுதேவிருக்கைநிலத்துகா, தாண்டுவானிடையேயமர்வெய்திய,மா
ண்டவான்மதலைத்திரள்சேர்த்தென, நீண்டகேதனநீள்விசும்போங்குமே.

மேனிலத்தின்விராயமர்மாந்தர்கள்,கீழ்நிலத்துக்கெழூஉம்புனல்கொள்கி லார்.வானிலத்தொளிரம்புலியின்சிலைக்,கானிலைத்தகடிப்புனல்வாக்கலான் (கூஅ)

இந்துமாநகரத்தெருமேலோடெதிர், தந்துநோக்கத்தமணியமாநக, ரெந்த நாளுநீருஞ்சுமாதலா, லந்தவான்பதியார்சுராயினர். (கூகூ)

ஆளும்விண்ணழகான்றிலதென்பது. கோளுநாளுமிக்கோணைநகரென நாளுநாளுநலத்தகக்காணிய, தாளுருவதுவேதகச்சாற்றுமே. (க00)

எடுத்தமேனிலத்தின்புறமாந்தர்க, டொடுத்தவான்கலவிச்சுவைநோக் கியுள், மடுத்தனழுக்காற்றின்விண்வாழ்க்கையர், விடுத்துளாருணவோடு விழித்துயில். (க0க)

இயற்கைமெய்யெழின்முறுக்குறின்யாவருஞ்,செயற்கையற்றழிசெய்கைய றிந்துநம். மயக்குமெய்முழுதும்மறைத்தாரரோ, தயக்கமாணணியாவிளந் தையலார். (க0உ)

கருங்கயற்கண்மாதர்காதலன்பறைப்புலந்துநின்
றொருங்குதங்கைவாங்கிவீசலுற்றதாரினோடுபோய்
நெருங்குகற்பகப்பொழிற்கணீடுகூடுவண்டினை
மருங்குகண்டிதென்கொலென்றுவானுளாரயிர்ப்பரே. (க0ங)

நகுகதிர்ப்பிழம்புகாலுநன்மணிச்செய்மேனிலத்
தருகுமதுக்கமழ்ந்ததொங்கலோதிமாதர்கூடலின்
முகுளிதங்கண்கொள்ளவேர்முகத்தரும்பநோக்கிய
வகமதித்திருந்தவானினந்நலார்சமழ்ப்பரே. (க0ச)

புலந்துநிற்கும்வேலையும்புணர்ந்துநிற்கும்வேலையுங்
கலந்துநின்றதம்மையுங்கழற்றிவிட்டமானமுள்
ளலர்ந்துவீதிவெய்யினின்றவான்றமாந்தர்கேட்கென
மலர்ந்தவாண்முகத்தினார்தம்வாசமாலையாதியே. (க0ரு)

பாடகப்பசும்பொனூபுரத்தளிர்ப்பதத்தினார்
மாடகத்தயாழெழுப்பமாடுவீழ்ந்தகின்னரர்
நீடகத்தருக்கிரித்துநீவிர்பண்பயிற்றுகென்
றேடகத்தகூந்தலார்க்கிறைஞ்சிநின்றதொத்ததே (க0சு)

வயங்குகிள்ளைபூவையோடுமோனுமாதர்சொல்லென
நயங்கொள்பாடலுட்புணர்த்துநாவலார்க்கவற்றினை
யியங்குறுதுகூட்டிவிட்டிடித்திடித்துரைத்திசைப்
பயன்கொளுத்துமாதர்மேன்மைபார்த்தலின்மையென்கொலோ. (க0எ)

மங்கலச்சிறப்புநாளுமாடமெங்குமல்கலிற்
றுங்கவச்சிறப்பினோடமைந்ததூயதோட்டிமை
தங்கலான்வனப்பிரண்டுசாருமேனைமாநக
ரங்கண்ஞாலமேச்சுகின்றவந்நகர்க்கிணங்குமே. (க0அ)

ஆலயம்.

பூமடந்தைமார்பிலிட்டபொற்றபேரணிக்கல
மாமணிக்குலங்குயின்றமைந்தமாடமாநகர்
காமர்மல்குமக்கலங்கலந்திலங்குநாயக
மாமணிக்குழாங்கடுக்குமாலைவள்ளல்கோயிலே. (க0கூ)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

வேறு. திருமதில்.

தங்களுக்கிறைவனீன்றதாழ்குழற்றேவியன்பு
பொங்கமிக்காற்றுகின்றபுரையறுதவத்திற்கூறு
தங்குவதில்லையாகத்தடவரைக்குலங்கள்சூழ்ந்து
மங்குழைநின்றுங்காத்தாலனையபன்மதிலுமற்றும. (௧௧0)

திருமதிலின்கோபுரம்ரிஷபம்.

குருமணியிழைத்தநொச்சிகோபுரமாடமெங்கு
முருவவெள்விடைகடங்கியொளிர்தருகாட்சிநாதன்
றிருவடிவணங்கச்சார்வோர்செயிர்வழியிடையேநீங்கத்
தருமவெள்ளேறுபல்வேறுருக்கொடு* தவிர்ந்ததொக்கும் (௧௧௧)

தீர்த்தமெடுப்போர்.

மேற்குதீர்த்தங்கொண்மார்வியத்தகுபடியின்மாந்தர்
காதலினிறங்கியேறிக்களித்துறுங்காட்சிசுத்தத்
தேதமிலவத்தையைந்துமேறியுமிழிந்துநிற்குஞ்
சாதகருள்ளமென்னத்தகையுறுநாளுநாளும். (௧௧௨)

தீர்த்தங்கள்.

தம்பிரானுருவங்கொண்டதம்மினத்தீர்த்தங்காண
நம்பிவந்திறுத்தாலன்னநளிர்புனற்றீர்த்தமெல்லாம்
வம்புலாமலர்கள்பூத்துமலரடிக்குதவித்தேசு
பம்பியான்றவிரிற்சாலத்தெளிந்துபாவமுந்தீர்க்கும்மே. (௧௧௩)

இயாகத்தின் புகை.

கையணிநுதற்கணுடுங்கவினரங்கிறைவர்க்கான
செய்யணிகுறித்துச்சேர்ந்தார்க்கொல்லுமத்தீயைநோக்கா
தையர்செங்கனலியோம்புமவிர்மணிவேள்விச்சாலை
நெய்யவித்தூமநாளுநெடுவிசும்பளக்குமன்றே. (௧௧௪)

அறவிடைக்கொடி.

பெருகிடுவன்புபொங்கப்பிஞ்ஞகன்றன்னைத்தாங்கு
முருகியவுள்ளம்மேலாயோங்குமென்றுணர்த்தாநின்ற
திருநில்முழுதும்போற்றவெம்பிரான்றிருமுன்றோலாத்
தருமவெள்விடையினூர்திதனிக்கொடிநிவந்தகாட்சி. (௧௧௫)

வெண்ணாவல்விருட்சம்.

நம்பிரானினிதுவைகிநல்லருள்கொழியாநின்ற
வம்பொனாலயத்துமேலாலவிர்மணித்தூவிப்பாங்க
ரும்பர்வானளந்துநிற்குமுருகெழுநாவற்றூரு
செம்பொன்மால்வரையின்பாங்கர்ச்சிவணியநாவலொக்கும். (௧௧௬)

தீபங்கள்.

கவர்மணிவிளக்குஞ்செய்யகனற்செழுவிளக்கும்பல்வே
றவிர்வனவன்புபொங்கவடிமலர்தொழுவோர்க்கெல்லா
மிவர்நுதல்விழிகளாகவீவதற்கிறைவர்வைத்த
சுவமையிறழல்கள்போன்றவொளிர்செழுங்கோயிலெங்கும். (௧௧௭)

---

* தவிர்தல் - தங்குதல்.

வாத்தியம், தோத்திரம், அரசர்கள் உபயங்கொடுத்தல்.

முரசம்விண்முகிலுநாணமுழங்குறுமுழக்கும்பல்லோர்
விரசினர்வணங்கிப்போற்றும்வியத்தகுகுறைப்புந்தேவு
ரரசர்கள்பொருள்கணல்கியடிதொழுமார்ப்புமல்கித்
திரைசெறிகடல்களேழுந்தெழித்தெனத்திகழுமன்றே. (கக௮)

தலத்தின் பிரயோசனம்.

இருட்பிழம்பெடுத்துவாய்ப்பெயெரிமணிக்குவையும்வேறு
பொருட்டிரட்குவையுமியாண்டும்புணர்கலாப்புதியபொற்பு
மருட்டிறத்தினருங்காணின்மலமொருமூன்றுநீங்கி
யருட்டிறத்தினர்களாக்குமாக்கமுமவணமாதோ. (ககக)

அகிலாண்டநாயகி பெருமை.

அறுவகைமதத்தினோர்க்குமவ்வவப்பொருளாய்நின்றங்
குறுவரமருளுமுண்மையொருபொருளாயேநின்று
மறுவறவிளக்கிநின்றருள்வணங்குநரெவர்க்கும்வேட்ட
திறுவிமெய்ஞ்ஞானநீதிநிகழ்த்தகிலாண்டவல்லி. (க௨0)

சிவபெருமானைத்தரிசிக்கு முறைமை.

எவ்வழிமுயன்றுபூசையியற்றினுமடிமையானோ
ரவ்வழிவழியேயாகவடிநிழல்குறுகுமுண்மை
செவ்விதினுணர்த்துமுக்கட்செம்மலைப்பலசாலோகத்
தவ்வியமனுங்கயாருமன்பொடுகாணுங்காட்சி. (க௨க)

சிவபெருமான் மகிமை.

நெகிழ்ச்சிமிக்குடையநீராளெடுவலியுருவந்தான்கொண்
டிகழ்ச்சிமிக்குடையமாசினிணங்கினோரிருப்புநெஞ்சு
மகிழ்ச்சிமிக்குடைமையாகவரவரநெகிழ்த்துநாளும்
புகழ்ச்சிமிக்குடையவின்பப்பூரணனரசுசெய்யும். (க௨௨)

நூலாசிரியர்,

இத்தகுவளமைசான்றவெழில்வளரானைக்காவி
லுத்தமசரிதமெல்லாமுயர்ந்தநைமிசவனத்தின்
மெத்தியவன்பின்வைகும்விரதியர்சூதன்றன்னைப்
பத்தியிற்கடாவிநின்றபரிசினைப்பகரலுற்றேன். (க௨௩)

திருநகரச்சிறப்பு முற்றிற்று.

---

௮ திருவிருத்தம்-௨சுக.

## நைமிசப்படலம்.

---

இது முதல் ௰க செய்யுள் நைமிசாரணியவருணனை.

திருவிளங்கியதேயத்தவர்க்கெலாங், கருவிளங்கிய கார்வளஞ்செய்வதோர், குருவிளங்குகுரையழல்வேள்வியி,னுருவிளங்கியதாலுயர்நைமிசம்.

மண்ணயந்தநண்வாரிவழங்குமா, நண்ணலங்கனலாற்றிவளிதடுத், துண்ணயந்தவுறுவாரிஞெற்பசி, விண்ணயந்தவர்வீப்பதக்காணகம். (௨)

உதரவங்கியுலகொருமூன்றினுஞ், சிதையவங்கிவளர்த்திடுஞ்செய்கை யார், கதமிலாதவர்காய்தரிற்றேவரு, மதலையற்றிடும்வாய்மையராங்குளார்.

விடுத்தமந்திரமேவியழைக்குமுன், னெடுத்தவன்பினதற்கெதிர்கொண் டென, வடுத்துவிண்ணவராங்குறவாவெலாந், தொடுத்தவேள்வியின்றூம நிவக்குமால். (ச)

மடங்கல்வாரணமான்புலிமாறிற, விடங்கடோறுமிருப்பனவெம்பிரா, னடங்கொள்சேவடிநண்ணியதாங்களு,மடங்கிமாதவமாற்றுவபோன்றன.

அயில்கொள்சூலியருச்சனைமாலியம், வெயிலில்வாடுவேள்விடும்வெங் கணை, பயிலுமாதவர்பாலுறலஞ்சபு,செயிரிறுங்கழியுஞ்செயலொத்தன.()

மறியுடம்புதைவந்துசின்மாதவர், கறிபுனல்கினர்காக்குமப்பெற்றிமை மறிகையேந்திவடிவுகொளன்றுகைப், பெறுவதாமெனப்பேணுவதொத்த தே. (எ)

அவியிருங்கொடையந்தரர்க்கீந்திடுஞ், சவிநெடும்புகழ் தம்மையும்போர் த்தொளிர், கவின்விளக்குவ காசறுமாதவ, ரவிர்வெண்பூதி யணிந்தொ ளிர்தோற்றமே. (அ)

படியில்வேறுபற்றின்மை தெரித்தெனக், கடிவிராவு கடுக்கையங் கண் ணியெம், மடிகள்கண்மணியேயணியாக்கினர், நெடியவையகிறப்பருங் கோளினர். (கூ)

கற்பகத்துக்கவினிறைதம்மைமே, வற்பின்வந்தண வுந்திறங் காட்டுமப் பொற்பினின்றனர்புண்ணியமாதவர், வற்பின்வற்கலைவாங்கியுடுத்தியே.()

பிறவியொப்பினும் பேணியசெய்கையா, லறவர்மேவின்றனைநாண மாதவர், செறிமயிர்த்தொகை செஞ்சடையாகிவிண், ணெறியினுக்கரயு ச்சம்வணக்கியே. (கக)

மொழியுமாமொழியுங்கிளிபோற்சுவை, வழியுமாமறைமாதவர்தஞ்சிறு, ரழிவிலாசிரியன்வழியோதுறுங்,கழிவிலோதைக்கிடையொருகாலெலாம்.

விளங்குவேதபுருடரேமேவியங், குளங்கொள்காதலினோதல்வீழ்தரத் துளங்கமாமறைசொல்லிநல்லந்தணர், வளங்கொள்வேள்வி வளர்ப்பதோ ர்சாரெலாம். (கங)

மதிமுடித்தருள்வள்ளறன்பூசனை, விதியினுற்றிவிளங்கழலோம்புபு, கதி யவன்பினர்காலத்தினுற்செயு, மதிநிபூசையு மாங்கொருபாலெலாம்.(கச)

இரண்டுநாடியியக்கமறுத்திடைத், திரண்டவாயுச் செலுத்தியிருண்மல, முரண்டடுத்தொளிர்மொய்யொளியேதமகி, கரண்டகச்செயுமார்வமோர் பாலெலாம். (கரு)

நல்லஞானமிரண்டினுநாட்டம்வைத், தெல்லையற்றொளிரின்பக்கடலி டை, யல்லலற்றறிவற்றிரண்டொன்றறப், புல்லலுற்றபுணர்ப்புமோர்பா லெலாம். (கசு)

கருவிநூலுங்கணக்குமயின்றவர் பொருள்களாயும்புகற்சியோர்பாலெ லாமிருந்திநூலின்விளக்குமுணர்ந்தவர், மருவுநீதிவழக்குமோர்பாலெலாம்.

தீங்கரும்புஞ்செழுங்கனியுஞ்சுவை, யோங்குதேனுமுடங்குருத்தூஙெ்ன, வீங்குதீஞ்சுவைமேயபுராணங்கள், பாங்கிருேதும்பயிற்றியோர்யாவெலாம். (௧௯)

இன்னதாகியநைமிசத்தெய்தினன், கன்னிபாகன்கழறெுழுங்காதலான், பன்னுகேள்விப்பதினெண்புராணமுந், தன்னவாகத்தழீஇக்கொண்டசூதனே. (௧௧)

வேறு.

எய்தியசூதனெழில்வனநோக்கி, வெய்தெழுசிந்தையின் விம்மிதனாக, வைதவண்மைகியவந்தணர்தேரா, வுய்தியமென்றெதிருற்றனர்மன்னோ.()

மாதனமெய்துவறிஞரிஞெப்பக், காதலினூற்செய் கடன்முறைசெய்தங், காதனநல்கியதற்கணிருத்தி, யேதமினட்பினியைந்துரைசெய்வார். (உக)

வேறு.

இது முதல் ரு செய்யுள்நைமிசாரணியர்சூதமுனிவரையுபசரித்துக்கூறல்.

கற்பகஞ்சுரபிசிந்தாமணிங்கிகரைந்தைந்தும்
பொற்புறவெளிதிற்றுமேவறிஞர்பாற்புக்காலென்ன
வற்பொடிமீங்குப்போந்தாயாதலினடியேமாட்டுத்
தற்பரனருளின்செல்வஞ்சார்வதற்கையமின்றே. (உஉ)

இருண்மலவலியைத்தாக்குமிராறநேடாறுஞ்சேர்ந்த
பொருவறுபுராணமுற்றும்புரையறத்தெளிந்தோய்க்கியாது
மருவரிதொன்றுகேட்கவலித்தனம்வாஞ்சைமுற்ற
வருளொடிமிறுத்தல்வேண்டுமெதுவெதுவென்னிற்கேண்மோ. (உ௩)

உலப்பறுதீர்த்தந்தம்முளுத்தமதீர்த்தஞ்சால
நலத்தருமூர்த்திதம்முணலத்தருமூர்த்தியின்ன
தலத்தினுளுயர்ந்துநின்றதலத்தொருங்கிருக்குமாயின்
மலத்தொகையிரியக்கேட்கும்வாஞ்சையேமென்றுந்தாழ்ந்தார். (உ௪)

சிவபெருமான் நந்திதேவருக்கும் அம்பிகைக்கும் கூறிய வித்தலமகிமையைச் சூதமுனிவர் சவுனகமுனிவர் முதலியோர்க்கு யெடுத்துக்கூறல்.

தவத்துயர்வலிமைசான்றசவுனகமுனிவனாதிப்
பவத்தொகையிரிக்குமையர்பரிந்தனர்வினாதலோடு
மவத்தொகையுயிர்கட்கெல்லாமனுங்கவச்சூதமேலோன்
ஙின்றுதெளிந்தனனுவறவுற்றுன். (உ௫)

தேவரும்விழையநோற்குந்திருந்தருமுனிவர்நீவி
ரேவருமின்பமெய்தவெம்முழைக்கடாவிநின்ற
மூவகையுயர்வுமொன்றாய்முற்றியதலன்மற்றனைக்
காவலதில்லைகொண்மின்கைத்தலக்கனியின்மாதோ. (உ௬)

அருந்தவப்பேறுவாய்ந்தவந்தணீராதலாலே
திருந்தியவானைக்காவின்றிருத்தருமேன்மைநம்பாற்
பொருந்தியகிராந்தாமீதுபுராதனன்றேவிநந்திக்
கிருந்தருள்செய்ததாமென்றியம்பினன்மோனமுற்றுன். (உ௭)

அனையதுகேட்டலோடுமறிஞர்கண்மகிழ்ச்சிதுள்ள
வினையறுசூதன்பாதமீட்டுநன்றிறைஞ்சித்தேவி
வனைபுகழ்நந்திக்கண்ணல்வகுத்தவாவகுக்கவென்றார்க்
கினையதுமுரைத்துமென்னாவிவறினன்சூதமேலோன். (௨௮)

எற்றமிலாளராகியிருந்தவக்கிழவரொல்லா
முற்றமெய்ச்சூதன்றன்னைவினாயதுமுத்தரந்தான்
மற்றவர்க்குரைத்தவாறும்வழங்கினாந்தேவிநந்திக்
கற்றவர்க்கற்றோன்கூறுமடைவினியுரைத்துமாலோ. (௨௯)

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-௨௯௮.

## புராணவரலாற்றுப்படலம்

இதுமுதல் (௧௫) செய்யுள் திருக்கைலாயச்சிறப்பு.

உலகம்யாவையுமொடுங்குமவ்வூழியுமொடுங்கா
திலகுபேரொளியாயதன்னிறைவனேயிழையச்
சுலவுவாரிதியுலகெலாந்தொலைக்குமக்கடைநா
ணிலவிமேக்குறநிவந்துநிற்பதுநெடுங்கயிலை. (௧)

உருத்திரப்பெயர்ச்செம்மலாருருவந்தன்மயமென்
றருத்திவையகந்தெளிதரவிலங்குசாத்துவிதம்
பெருத்தகுன்றமாய்த்தாங்கியபெற்றியேகடுக்குந்
திருத்ததும்பியகொழுஞ்சுடர்கொழிக்குமச்சயிலம். (௨)

மேகமண்டலங்கவான்வரைவிராவநள்ளிடையே
நாகநன்மணியிமைப்பமேனலக்குந்தன்னொளியே
யாகநின்றவக்கிரிகுணமூன்றுநேர்ந்தனைய
தேகனக்குணங்கடந்துநின்றெனமிசையிருக்கும். (௩)

கற்றைவெண்கதிர்பரப்பியகலைமுழுத்திங்கட்
பெற்றியொத்ததுபெயர்ந்தெழுமாலைவெள்ளருவி
சுற்றின்வீழ்தரவிளங்கியகயிலைதுன்றியவா
னுற்றமீன்கணமொத்தசாரலினொளிர்முத்தம். (௪)

கொழுந்துகொண்டெழுகொழுங்கதிர்மாணிக்கமுழைநின்
றெழுந்துபல்லருவித்திரளிழுமெனவிழிவ
செழுந்தழற்பெரும்பூதத்திற்றிகழ்தரத்தோன்று
மழுந்துதண்புனற்பூதமென்றறைவதுதேற்றும். (௫)

கூம்புகையவாய்க்கூம்பல்செய்யாவிழியினவாய்த்
தேம்புனற்செழுந்தடங்களுந்தெரிசியாநின்றுங்
கோங்கல்வெண்கதிர்பரத்தலினேரிருபொழுதும்
வீங்குபங்கயங்குவளைகள்விரிதராகுவியா. (௬)

எம்பிரான்றிருவுருவெடுத்தியங்குமெய்யடியார்
வம்புலாஞ்சடைவளர்மதிக்கிரணமெவ்வாயும்
பம்பலாற்பனிக்கதிர்ச்சிலைகளும்பரனடிய
நம்பியாங்குருகியவேனைநறும்புனல்வாக்கும். (௭)

நீற்றின்வெள்ளொளிபரத்தலினெடுங்கணீரருவி
யூற்றிருத்தலிற்பேரிசைதழுவிமிக்குயர்ச்சி
மேதாற்றிநிற்றலினமலனார்சுதந்திரவிடமா
வீற்றிருத்தலினடியரின்விளங்குமப்பொருப்பு. (௮)

ஒருகொம்பானையுமொராயிரத்திரட்டிவெண்கோட்டுச்
செருவின்வேழமுந்திரளிமிற்றருமவெள்ளேறும்
பொருவிலோகையிற்பொருதியபடுவதல்லாது
மருவலார்களிற்பொருதிடப்படாததவ்வரையே. (௯)

கொண்டல்வாய்திறந்துகுத்தவெண்முத்தமோகுலவேய்
விண்டுவாய்திறந்துகுத்தவெண்முத்தமோமடங்கற்
கண்டுகாய்ந்துகுகடாக்கரிமுத்தமோவறியா
மண்டர்போற்றுமக்கயிலையஞ்சாரலினதிகம். (௧௰)

கருணைநாயகன்கழறொழக்கருதிவானவர்கந்
தருவர்சாரணர்சித்தர்விச்சாதரர்முதலோர்
மருவிவாழ்தரத்தழுவிவான்கதிகளெல்லாந்து
னுருவினேருழிக்காட்டவற்றாயதவ்வோங்கல். (௧௧)

பெண்ணினாயகியாகியபிறங்கலின்மடந்தை
பண்ணையாட்டயர்தரப்படர்பசும்பொழிலிடத்தும்
வண்ணவான்முழையிடத்துமென்மலரடிச்சுவடு
விண்ணுளார்முடிகோட்டுவவியத்தகவிளங்கி. (௧௨)

விலகிவில்லுமிழ்மணிகளும்விண்ணுயர்மணியு
மலர்செயைவகைத்தருக்களுமைவகைப்பசுவு
நிலவுபங்கயநிதிகளுநிகழ்வளைநிதியுங்
குலவுவிம்மிதப்பொருள்களும்வயின்வயிற்குழுமும். (௧௩)

கணங்கள்காதலிற்றம்பிரான்கழலிணைபரசித்
துணங்கையாட்டயர்காட்சியுஞ்சுடர்மணியரங்கின்
வணங்குநூலிடையரமகளிர்கண்மணிமுழவோ
டிணங்கவாட்டயராடலுமிடந்தொறுநிலவும். (௧௪)

இந்திரன்பதமுதலியவிமையவர்பதமுங்
கந்தமென்மலரயன்பதங்காகுத்தன்பதமு
மெந்தவிம்மிதவளங்களுமிறைஞ்சினர்க்களிக்கு
மந்தவெள்ளியங்கிரிவளமறைவதற்கெளிதோ. (௧௫)

## வேறு.

இது முதல் ௰ செய்யுள் சிவபெருமான் அரசாட்சி மண்டபச் சிறப்பு.

இனையவெள்ளியங்கிரிக்கெழில்செய்தாலெனக்
கனைகதிர்மணிச்செயுங்கால்களாயிரம்
புனைதருமண்டபம்பொலிந்ததாங்கரோ
துனைபரியேழுடைச்சுடருமாயவே. (௧௬)

தெள்ளடியாரினுந்தீமைசெய்வவென்
றள்ளொளிக்கோளுநாளனைத்தும்யாத்தென
வொள்ளியமண்டபத்துள்ளெலாமிரு
ளள்ளுறுமணித்தொடையாக்கப்பட்டவே. (௧௭)

விலகிவில்லுமிழ்மணிவீற்றுவீற்றுறீஇ
யிலகியவிளக்கமுனிமைப்பில்லார்முடிக்
குலமணிமழுங்குவகுழகன்பேரரு
ணிலவுழியுயிர்மதிரின்றுமாய்ந்தென. (௧௮)

அளவில்சிந்தாமணியனந்தகோடிகள்
வளமலிமண்டபமருங்குதுன்றுவ
களமணிமிடற்றினற்காணப்போந்தவர்க்
குளமகிழ்ந்தருளியவுறுத்தினாலென. (௧௯)

அணியிலராயினுமடிமைபூண்டுயர்
பணியினிலுரியர்தன்பாலரென்பது
துணிவுறச்சிவபிரானிருக்கைச்சுற்றெலாங்
கணிதமில்கணக்கணங்களுலிற்றென்பவே. (௨௰)

சிம்புளாயெனையமினையசெம்மலென்
செம்பொன்மாமுடிமிசைச்சிவணப்பாலனென்
றும்பரார்க்கரியரியுணர்த்தினாலெனப்
பைம்பொன்மாலரியணைபயின்றதாயிடை. (௨௧)

கவரிகடுள்ளினகால்செய்வட்டமங்
கிவர்தருகுளிர்வளியெழுப்பினின்றன
வவிரிழைவெள்ளைகளாலித்தோங்கின
வுவவுவெண்மதிக்குடையுயர்த்தப்பட்டவே. (௨௨)

வயம்படுசாரதர்மழையுநாணுற
வியம்பினரியம்பலவினியபாடினார்
நயம்படுகின்னரநாரதாதியர்
பயம்படும்வீணையிற்பண்ணியக்கினார். (௨௩)

தழங்கியகிண்கிணித்தளிர்மென்சீறடிப்
பழங்கண்மெல்லிடையினார்பண்பினாடினார்
வழங்கினர்வானவர்மதுச்செய்பூமழை
முழங்கினவடியவர்மொழிக்தோத்திரம். (௨௪)

நாரணர்நான்முகர்நாகராதியோர்
தாரணிமலரடிசார்ந்துபோற்றுறக்
காரணகாரியங்கடந்தகண்ணுதற்
பூரணருமையொடும்பொற்பவைகினர். (உ௫)

வேறு.

விண்ணோர்புருகூதன்விரிஞ்சன்மலர்க்
கண்ணோன்முனிவோரெவருங்கனலின்
வண்ணனெனவேத்திவரங்கள்பல
வெண்ணவ்வைகொண்டனரேகினரே. (உ௬)

இவ்வாறெவரும்பணியக்கருணை
செவ்வேதிகழ்கின்றதினத்தொருநாட்
கைவாரணமைந்தரொடுங்கலவி
யொவ்வாவிளையாடலுவந்தனரே. (உ௭)

அயின்முற்றியசூலமணிந்தவர்தாம்
வெயின்முற்றியவேலர்விநாயகரிற்
பயின்முற்றினராடுபதந்தனது
செயிர்முற்றுறுசெவ்வியெனக்கருதா. (உ௮)

வாரற்கவெனச்சிலர்வாய்தலயற்
றீரக்கடியுஞ்சிலர்கோயிலகஞ்
சாரக்கடிதேதழுவுந்தலைமைச்
சூரற்படையான்றொழுதீதுசொல்வான். (உ௯)

வேறு.

இது முதல் ௪ செய்யுள் நந்திதேவர் சிவபெருமானைவணங்கியுரையாடல்.

பண்ணவர்க்கரியாய்போற்றிபத்தருக்கெளியாய்போற்றி
தண்ணியமதியும்பாம்புந்தரித்தருடலைவாபோற்றி
கண்ணியவடியாருள்ளக்கருத்தினைமுடிப்பாய்போற்றி
புண்ணியமுதலேபோற்றிபூரணப்பொருளேபோற்றி. (௩0)

இரந்தவர்வறியராகாதியாவையுமெளிதினெய்தச்
சுரந்தருள்கொழிக்குமுக்கட்சுந்தரமகவினென்னைப்
புரந்தருள்புனிதவொன்றுபுகற்சியின்விழைதல்வேட்டேன்
வரந்தருபகவயாதேயதுவெனின்வகுப்பக்கேண்மோ. (௩௧)

மாதொடுமடிகள்சாலமகிழ்ந்துறைதலங்கடம்முண்
மேதகுதலத்திலேனுவிளங்கிமேலாகுந்தீர்த்த
மூதருள்கொழித்துமேலாமூர்த்தியுமொருங்குவாய்ந்த
தீதறுவரைப்பொன்றீங்குத்திருவுளம்பற்றல்வேண்டும். (௩௨)

அன்னதுமின்றுகாறுமகிலத்திலொருவர்மாட்டு
மன்னவவருளிச்செய்யாமந்தணமுடையதாகுந்
தன்மையதாதல்வேண்டுந்தலைவவென்றிரந்துமீட்டு
ன்நயமொழிகளார்த்திநகைமலரடியிற்றாழ்ந்தான். (௩௩)

இது முதல் ம செய்யுள் அம்பிகை சிவபெருமானை நோக்கியுரையாடல்.

ஆய்தோர்செவ்விநோக்கியகிலமீன்றெடுத்ததாயும்
பாயமேகலைகளார்ப்பப்பாதநூபுரங்களேங்கத்
தூயமென்மலர்ப்பூங்கோதைச்சுரும்பெழவெழுந்துவல்லே
நாயகனடியிற்றாழ்ந்துநகுமுகத்தினிதுகூறும். (௩௪)

சகத்துறுபொருள்களெல்லாந்தின்வயமாதலன்றிச்
சகத்தொருபொருளின்மாட்டுந்தான்வயமாதலில்லென்
றகத்தினெவ்வெவருந்தேறவழல்விடமெடுத்துமாந்திப்
புகர்க்கறைக்கண்டனானபூரணபுராணபோற்றி. (௩௫)

வியப்பொடுபடைத்துக்காத்துவிளிக்குமூவருக்கெவ்வாறு
செயப்படுபொருளாய்நிற்குஞ்செறிந்தபல்லுலகமவ்வா
றயர்ப்பிலத்தேவர்தாமுஞ்செயப்படுபொருள்களாகப்
பெயர்ப்பொருளாயேயென்றுநின்றருள்பெருமபோற்றி. (௩௬)

காலமுற்றறுதிநோக்கிக்கணிதமிலுயிர்கட்கெல்லாஞ்
சாலமுற்றியதேகத்தைத்தவிர்த்திடுகாலன்மாட்டுங்
காலமுற்றறுதிநோக்கிகாயத்திஞெழித்தாட்கொள்கை
சாலமுற்றெரித்துநின்றதற்பரம்பொருளேபோற்றி. (௩௭)

வேறு.

கங்கைகொழிப்பச்செஞ்சடிலங்கதிர்க்குமுடியெம்பெருமானே
யங்கணுலகம்பெரிதுய்யவருள்சேர்நந்திவிஞயபொரு
ளிங்கணறிதலடியேனுமினிதுவிழைந்தேனிதுவன்றித்
திங்களணிந்தோயோரையந்திகழ்ந்ததுளத்திலதுகேண்மோ. (௩௮)

பரந்தவுலகம்படைத்தளித்துப்பாற்றுவானுமொருநீயே
சுரந்தவன்பின்முனிவரர்கள்சுரர்கண்முதலோரெவ்வெவரு
மரந்தையறுக்கும்வேள்விமுதலனைத்தினுனும்வழிபட்டு
வரந்தந்தருளுகெனவிரக்கும்வள்ளன்மையனுமொருநீயே. (௩௯)

ஆற்றுந்தருமந்தமக்கியையவகிலவுயிர்க்கும்வேட்டபயன்
போற்றியவனேயவுளதுவேயெனமூன்றாகிப்புணர்விக்குந்
தேற்றபொருளுமொருநீயேதெள்ளித்தெளிந்தோர்சிந்தைமல
மாற்றிவளர்பேரின்பநலம்வழங்குமுதலுமொருநீயே. (௪0)

நாயவழங்குமபுனலாயதிஞைகூாயக்
கண்ணாழலாயதின்மூன்றாய்க்காலாய்க்காலிஞேரிரண்டாய்
விண்ணாய்விண்ணின்ஒன்றாகிவேட்டோர்வேட்டபலனாகி
நண்ணாருயிராயுயிர்க்குயிராய்நலக்குமிறையுமொருநீயே. (௪௧)

அருவாயுருவாயருவுருவாயவைமூன்றனையுமகன்றறிவே
யுருவாயனாதிவினையிரண்டுமொழியாமலமுங்கருமமு
மிருண்மாயையுமற்றிவைவிளைப்பவீண்டுந்தனுவாதிகளான்கு
மருவாதென்றுமோரியல்பின்வயங்குபொருளுமொருநீயே. (௪௨)

என்றுமறைகள்பலகோடியெடுத்துமுறையிட்டடிபரசும்
வென்றிமழுமான்கரத்தணிந்தவிமலாநினக்குவேறிறையு
மொன்றுபயனுமுளரேபோல்யோகமுழக்குமிதுவென்னே
மன்றவெமக்கிங்கிவையிரண்டும்வழங்கல்வேண்டுமெனவிரந்தாள். (௪௩)

## வேறு.

சிவபெருமான் அம்பிகைக்கும் நந்திதேவருக்கும், தலம்தீர்த்தம்
மூர்த்தி இம்மூன்றினது விசேடமெடுத்துக் கூறல்.

விழைந்திரந்தமடவாரலைமேதகுநந்தியைநோக்கித்
தழைந்தபெருங்கருணையினுற்றம்பிரான்முறுவலித்துக்
குழைந்தவுளத்தினிர்வேட்டகோதில்பொருளருள்செய்வா
நுழைந்தவறிவொடுங்கேண்மினெனவிதந்துநுவல்கிற்கும். (௪௪)

மந்தணமாய்த்தலந்தீர்த்தமறுமையுமிம்மையும்வீடுந்
தந்தருண்மூர்த்திபுமூன்றுந்தகவுயர்ந்தவொருதான
மந்தமில்சீர்ச்சோணாட்டினணிவளர்காவிரிக்கரையிற்
சுந்தரமாயுத்தமத்தினுத்தமமாய்த்துலங்குமால. (௪௫)

ஞானகேத்திரமென்றுநலத்தகுமத்திருநகரிக்
கானதோர்பெயர்வழங்குமறிமின்களினியிப்பா
லேனையோரரும்பொருளுமிடுகிடையாயருந்தவமத்
தானநீயடுத்தியற்றுசாற்றுதும்வந்தாங்கென்றான். (௪௬)

தம்பிரானதுகூறத்தாழ்ந்தெழுந்தங்கிருவர்களு
மெம்பிரானெளிதுய்ந்தேமினியவற்றின்பெருமைகளு
நம்பினேங்களுக்கருளவேண்டுமெனநயந்திரப்ப
வும்பரார்க்கரியபிரானுவந்தனைத்துமுரைசெய்தான். (௪௭)

பொத்தனுக்குமிதுபாற்மமெனப்புகலும்புராணத்தின்
மத்தியினுள்ளதுநுமக்குவரன்முறையேயுரைக்கின்றாம்
வைத்தமதியொடுகேண்மினெனச்சூதமாதவத்தோன்
பத்தியிற்றன்குரவனடிபணிந்துளத்திற்பதர்கிற்பான். (௪௮)

புராணவரலாற்றுப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௪௯.

---

## தலவிசேடப்படலம்.

வண்டுவரிபாடமலர்விண்டுமதுவூற்றுந்
தண்டலையுடுத்துவளருந்தலவிசேடந்
தொண்டுபுரிநந்தியொடுதோகையுமைகேட்ப
வண்டர்பெருமானமுதமென்னவருள்செய்யும். (௧)

மன்றல்கமழுங்குழன்மடந்தையுயர்நந்தி
யென்றுமெவரும்பணியயாமினிதுவைகி
யொன்றுசிவஞானநனியுய்த்தருள்சிறப்பா
னின்றததுஞானதலமென்னவிலமீதே. (௨)

சிலம்புசிறுகிண்கிணிசிலம்புபதமாதே
வலம்புரிவளைக்கரனும்வாரிசமலர்க்க
ணிலம்பணியநின்றவனுநீடியதிசைக்க
ணலம்படவிருந்தவருநாளொடுபல்கோளும். (௩)

மருத்துவருருத்திரர்வசுக்கள்கதிர்வீசு
மருக்கருமருந்தவருமன்றியினைவோரு
மொருக்கிமனநோற்றனருறைந்தனர்களாங்கு
விருப்பொடுமவர்க்கெதிர்விளங்கியருள்கூர்ந்து (௪)

காமர்கதியோடுதிரிகாலமுணர்ஞான
நாமமலநீவுசிவஞானமிவையெல்லாம்
யாமருளவேற்றவர்களின்றும்வதிகின்றார்
வாமமணிமேகலைமலர்க்குழன்மடந்தாய். (௫)

ஆங்கவரிருந்துதவமாற்றுபலதீர்த்த
மோங்கினவவற்றின்விதியோடுபடிவோரு
மீங்குரைசெயும்பயனையெய்திடுகவென்று
நீங்கருவரங்களுநிகழ்த்தினமணங்கே. (௬)

கொங்குமலிபன்மலர்கொழித்தொழுகுகின்ற
கங்கையவளக்கடிவரைப்பினனிநோற்றுத்
திங்களிதழித்தெரியல்சிந்தரவும்வேய்ந்த
வங்கிசிகர்செஞ்சடையமர்ந்தனளணங்கே. (௭)

பூவிரிநறுந்தொடைபுனைந்தகுழலணங்காய்
தாவிரியமாதவர்கடாழுமவ்வரைப்பிற்
காவிரிதவங்கள்கடிதாற்றியுயர்கங்கை
மாவிரிநதிக்கதிகமாயவண்வழங்கும். (௮)

வயங்குமண்ணிமேருவரைமாணதமடுத்தான்
றயங்குபுகழ்ஞானதலமீதுதவமாற்றி
யியங்குசிறையன்னமொளிரேமவனசங்க
ணயங்கதுவிஃவகுவரநண்ணியதையன்றே. (௯)

வரமலியுமன்னதுவரம்பிறவெழுந்து
சரயுநதியென்றுதவழ்கின்றததுசார்ந்தோர்க்
கிரவினையகற்றியெழிலார்கதியுநல்கு
மரமெனவகன்றமணியல்குன்மடமாதே. (௧௦)

வேறு.

வளர்தீந்தமிழ்முனிவன்வதிமலயத்திழுமெனவீழ்ந்
தளவாவரமெவரும்பெறவருடாம்பிரபன்னி
தளராதுயர்தவமாற்றுபுதராளத்தொகைதன்பா
லுளதாம்வகைவரமெய்தியதொளிர்பூணிளமுலையாய். (௧௧)

எழுகோமுகமலையின்றினிதிழிகோமதிநதியுங்
குழுமாமணிதிரையிற்றிவள்கோதாவரிநதியும்
பழுதோடியதவழ்சந்திரபாகைப்பெயர்நதியும்
வழுவாதெழில்வளமல்கியவருநீர்நருமதையும். (கஉ)

சிறப்பப்புவிவலயத்தினுந்திகழ்ந்தருமாட்டுந்
துறக்கத்தினுமுளதீர்த்தமுந்துன்னித்தவமாற்றி
யிறப்பப்படிகுநர்பாவமுமீட்டுந்தமதகமும்
பறப்பப்பலவரமுங்கொடுபெயில்கின்றனவாங்கே. (கங)

மணிமல்கியவெழுவேலையும்மலர்பூந்தடவுருவாய்த்
திணிமல்கியவப்பூமியிற்றிசைநான்கினும்வதியுந்
துணிவெண்கதிர்முதலோர்பெயர்சூழுஞ்சிலதீர்த்த
மணிமல்கியபலவற்றுளுமதிமேன்மையினமரும். (கச)

அப்புத்தலமதுவாதலினப்பின்மயமான்
வெப்பெற்றியதீர்த்தங்களுமினிதாங்குறைகிற்குஞ்
செப்பொத்திலகும்பூண்முலைத்திகழ்வெண்மதிதாழ்வித்
தொப்பற்றிலகியவாணுதலொளிர்பூங்கொடியனையாய். (கரு)

## வேறு.

மறந்திகழ்வேல்பொருமதர்த்தவாட்கணாய்
சிறந்தவத்தலத்துமுன்செய்தநன்மையாற்
பிறந்தவர்வதிந்தவர்பெருகினார்க்குநோ
யிறந்திடுமறுபிறப்பில்லையில்லையே. (கசு)

பாவமும்பாவங்கள்பண்ணுவோர்களு
மேவியவாசைமிக்குடையவீணருங்
காவளரத்தலங்கலக்கவல்லவோ
வோவியம்வழிபடுமுருவின்மங்கையே. (கஎ)

மறைகளின்முடிக்குமெட்டாதவாய்மைய
னிறைதருமத்தலநெடுகுகூந்தலாய்
முறையுளித்தவம்புரிமுனிவர்யோகியர்க்
குறைதருமிருக்கையாயொளிர்வதாகுமால். (கஅ)

சுடரும்வெண்ணீற்றொடுதூயகண்மணி
யுடலினரஞ்செழுத்தோதுநாவினர்
படரருச்சனைமுதற்பண்ணுவோர்க்குமத்
தடவியவளம்பதிதானமாகுமால். (ககூ

பயந்தருஞானமாபதியினல்லதை
யுயர்ந்தனவெனப்படாவுயர்ந்தமேருவும்
வயந்திகழ்கயிலைமந்தரமுங்காசியு
நயந்தகேதாரமுநறியதாரினாய். (உ0)

மந்திரமாகுமால்வசனம்யாவையுஞ்
சிந்தனையாவையுஞ்சிறந்தவிட்டையா
மந்தினின்றிடுதல்சென்றிடுதலாதிக
ளுந்தியயோகத்தினுறுப்பதாகுமே. (உக)

உண்டலுமூட்டலுமுவந்துவீசலு
மண்டினரேற்றலுமற்றுமாயிடைத்
தண்டலிலாச்சிவதருமமாமரோ
வொண்டளிர்கவற்றியவுருவச்செங்கையாய் (உஉ)

## வேறு.

அறுசுவைநால்வகையுண்டிபிறதலத்திலான்றவரையமையவூட்டி
யுறுபயனெண்மடங்காங்குவதிகின்றான்புற்கையுணவுண்டனேனும் [றோ
பெறுவனெனிற்பிறனொருவற்கூட்டிவரும்பெரும்பயன்றான்பேசப்பாற்
கொறுகொறுத்துக்கூரிலைவேற்குலத்தொடமர்புரிந்துழக்குங்குவளைக்கண்
புரந்தரனுயளகையர்தம்பெருமானுயுலகமெலாம்புரக்கும்வேந்தாய் [ணாய்
வரந்திகழவிருப்பதினுமேலானஞானதலம்வதிந்துநாளு
மரந்தைதபுஞ்சிவயோகத்தவர்மனையிற்பயிக்கநுழைந்தமைதனன்றும் [ய்
பரந்தெழுந்துகுவிந்திணைந்தபயோதரத்தினிடுகுமிடைம்பசும்பொற்பாவா

காமருகற்பகநாட்டினமுதுநுகர்ந்தரம்பையர்தங்கலவியாற்றி
யேமுறநன்திருப்பதினும்பிறதலத்திற்போகமெலாமிசையவாழ்ந்து
தேமருவியிருப்பதினுஞானதலத்துபவாசஞ்செய்தோர்வைகற்
றாமருவியிருப்பதினுஞ்சுகமதிகமாயிருக்குஞ்சயிலப்பாவாய். (உரு)

மீண்டுபெரும்பாதகங்கள்வைகலும்வைகலும்புரிந்துவழுவினோரும்
பண்டுபுரிநல்வினையாற்பகர்ஞானகேத்திரத்துப்படர்ந்துவாழின்
மிண்டுமலமாயைகன்மம்வேரோடும்விடைகொள்ளவீடுசேர்வர்
கண்டுநறுங்கனியமுதுங்கலந்தனையதீங்கிளவிகதித்தவாயாய். (உசு)

பஞ்சுநொடித்தெண்ணெய்விற்றுப்பவளவாய்ச்சிறுவர்தமைப்ப - கர்ந்திட்
டெஞ்சியமற்றிழிதொழில்கள்புரிந்தேனுஞானதலத்திருப்பினன்றே [டே
விஞ்சியநாற்பெரும்பொருளும்பெறுவரெனின்மேனையர்சீர்விளம்பற் [னு
கஞ்சமலர்க்கண்ணமரரிருவரையும்பயந்தளிக்குங்கருணைமாதே. பாற்றோ

வன்றிவலம்புரிதோகைஞமலியென்றாகழுதைவாயசங்கமென்று
கொன்றுதசைதின்றுழலும்புலையரென்றாலவரேனுங்கோலமார்ந்த
வென்றிபுனைஞானதலததிருப்பரெனின்விண்ணவருண்மேலாய்வாழ்வர்
கன்றெறிந்துகனியுகுத்தோன்சகோதரியென்றுலகியம்புப்கடிப்பூங்கோ
[தாய்
இளமையுஞ்செல்வமுமுடலுநிலையாவென்றறிந்தவர்களிளமையாதி
யுளபொழுதேஞானதலத்துறைந்துமகிழ்ந்தறமாதியுகப்பவீட்டிக் [லோ
கொளுவரலதயற்பதியிற்குறுகுதுமென்றொருஞான்றுங்குறிப்பர்கொல்
வளமலிபங்கயமாதர்வளைக்கரந்தைவரப்பதைக்குமலர்ப்பூந்தாளாய் (உகூ)

கணிகையர்காதலினுகப்பொருளீட்டுங்காரணத்தானுகவெவ்வே
றணிவளரும்வினோதமுதற்பொருட்டாகஞானதலத்தமரினன்னோர்
துணிவுடையதவந்தானமுதலானவினைசூழ்தலெற்றுக்கீர்ந்தண்
மணிவடங்கள்கிடந்துரிஞுமதர்த்தெழுந்துபுளகரும்பும்வனசக்கொங்காய்.

வழிநடையினோரிரவுவைகினுமன்னவர்துறக்கம்வைகிவாழ்வர்
கழிமகிழ்வின்ஞானதலமெதிர்நோக்கிவணங்கினுங்கைதொழினுமன்னோர்
கழிவுசெயவரும்வினைகளெதிர்நோக்கியடிவணங்கியங்கைகூப்புங் [க்
குழிவிழுந்தவுயிரிடத்துங்குருடொழியவுடன்கலந்துகுலவுதங்காய். (௯௧)

ஓதியுணரந்தணராயிரர்தமக்குப்பிறதலத்தினுவந்துநூலி
னீதிதவறுதருத்தும்பயனுற்றியிரட்டியந்தனிகரிலூரிற்
காதலொடுமொருகவளநாய்க்கிடுவோர்பெறுவரெனிற்கரிசற்றோர்க்கங்
காதரவினொருபிடிசோறளிப்பவூர்தம்பெருமையெவரளப்பர்மானே. (௯௨)

கந்தமலிபொழில்புடைசூழ்ஞானதலத்தெல்லையினைக்கடவாராயி
னெந்தவிழிகுலத்தவரோயாயினுமற்றவர்வாழுமில்லையெனல்லைச்
சந்தமணிகுலவுமுலைத்தாமரையாள்கடவாதுதங்கிவாழு
மைந்துமலிகிரவுஞ்சவரைதுளைத்தோன்றனையுயிர்த்துவளர்த்தமின்னே. ()

தவந்தானவிரதமகமாச்சிரமவொழுக்கமுதற்றருமமெல்லா
மவந்தீரவுணர்ந்தவர்கண்ஞானதலத்திருந்தாற்றியமைவரல்லா
லுவந்தேனைத்தலத்தினிடையுஞற்றுதுமென்றேமறந்துமுன்னல்செய்யார்
சிவந்தோங்கும்பொலங்குவட்டினிமையவரையுயிர்த்தெடுத்தவிறைபூங்
கொம்பே. (௯௪)

தவமாதிபுரிகுநர்க்குவேட்டநாற்பெரும்பயனூர்தாழாதீயு
முவமானமறுஞ்சித்தியெட்டினையும்விரைந்தளிக்குமும்பர்வைப்பி
னவமானபோகங்களெளிதருளும்வீடுதவுநலத்ததந்தச்
சிவமாருஞானதலமலதுலகின்வேறில்லைசெய்யவாயாய். (௯௫)

மூர்க்கனுய்ப்பிறர்க்கிடுக்கண்புரிந்துழலுமறிவில்லாமூடனாகப்
பார்க்குண்மேம்படுஞானதலத்தென்றும்வதிந்திருக்கும்பண்பனாயி
னேர்த்தபூணிளமுலையாயெமக்கினியனவனஃதெவ்வாறென்னி
லார்த்தநீர்க்கடல்விடமுமம்புலியுஞ்சான்றாவறிந்துகொள்ளே. (௯௬)

தலத்தினுயர்ஞானதலத்திருக்கைமுடியாதயலேசார்ந்தோர்தாமுங்
குலத்தினுயர்மறையவரைப்பெரியவரையடியவரைக்கோலமார
நலத்தினுயருறையுளிழைத்திருத்தினரேற்றும்வதிந்துநண்ணும்பேற்றை
நிலத்தினுயர்ந்தவர்வியப்பப்பெறுவர்நெடுஞ்செவிமடுக்குநீலக்கண்ணாய். ()

சம்புகேசுரமென்றுங்கெசாரணியதலமென்றுஞ்சாற்றுவார்க
ளும்பரார்தொழுஞானதலத்தினையிப்பெயர்மூன்றுமுமையேசால
நம்பிமாதவராதிமலமிரண்டுநீக்கிவிலெழுத்துமூன்றிற்
பம்புமேன்மையுவாகிப்பயனைவையுங்கொடுப்பனவாம்பன்னுவோர்க்கே.

பக்குவமேமேசிவதருமமலபரிபாகம்பிறந்துபதிந்துசத்தி
தொக்கவினைசமமானவுயிர்க்கலதுசுத்தபஞ்சாக்கரத்தைச்சொல்லார்
மைக்கருங்கணுமையாதேவகுத்தபெயரெவர்மாட்டும்வழங்கப்பட்டுத்
தக்கசிவஞானமளித்துயர்வீடுபுகுவிக்குந்தகைசயவரிகும். (௩௯)

பத்தியினாற்பெயர்மூன்றுமொருமுறைசொன்னாலுமிடர்பாவம்பொய்கண்
மெத்தியநோய்முதலானவாட்டமெலாம்விடைகொள்ளும்விண்ணோர்சூழ
வெத்தகையபோகவிதமெனைத்துமெதிரேநிற்குமென்றாலந்த
வுத்தமமாம்பெயரையெவருரையாதாருலகமெலாமுயிர்த்தபெண்ணே (௪௰)

மேதகையபயன்விழைவோர்ஞானதலத்துறைகவதுமேவாதாயி
னோதுகவத்தலப்பெயராயாங்கதுவுமுற்றாதேலுரைப்பக்கேட்க
காதலொடுகேட்டவருமூவகையபாதகமுங்கடந்துமேலாம்
போதமுணர்ந்தெமதடியிற்புக்கிருப்பரிஃதுண்மைபொலங்கொம்பனாய்

அஞ்ஞானவிருளோடமெய்ஞ்ஞானபானுவெழுந்தடைந்தோர்க்கெல்லா
நெஞ்சானமலர்க்கமலநெகிழ்த்தவிழ்க்குமத்தலத்தினிகரில்வாய்மை
யெஞ்சாதுவிரித்துரைப்பக்காலமில்லையினித்தீர்த்தத்தியல்புசொற்று
மஞ்சாருமலர்க்குழல்வாணுதற்கருங்கண்வெண்முறுவல்வளைக்கைமானே.

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩௮௮.

---

## தீர்த்த விசேடப் படலம்.

---

முல்லைநிகர்முறுவலினாய்முழங்குபுகழ்ஞானதலத்
தெல்லையெல்லாமலங்கரித்தாலெனவிளங்காநின்றனவாற்
கல்லெனவார்திரையினவாய்க்கமழ்நறும்பன்மலரணிந்து
மல்லன்மணிச்செழும்படிகண்மருங்கடுத்ததீர்த்தமெலாம். (௧)

திங்களெனக்குளிர்ந்தன்பர்சிந்தையெனத்தெளிந்திரப்பிற்
றங்கினவரெனமேன்மைதழீஇக்கரும்பினிரதமெனப்
பொங்குசுவையுடையினவாய்ப்புவனமொருமூன்றினுக்கு
மங்கலமெல்லாந்தருவவயங்கியவத்தீர்த்தங்கள். (௨)

ஒண்டொடியாயுத்தரத்துச்குத்தரநேருரைப்பவர்போற்
றண்டரளமணிவரன்றித்தடங்கரையிற்றவழ்ந்துலவும்
வெண்டரங்கமொலிபரப்பவிசங்ககுலமெதிரொலித்துக்
கண்டவர்கள்வியப்பெய்தக்கவின்வளர்ப்பதீர்த்தங்கள். (௩)

கயல்விருப்பினோதிமமுங்கம்புளுநேமிக்குருகும்
பயில்வனவெண்டிரையலைப்பப்பட்டுமொழிவிலவன்றோ
மயல்வளருஞ்சிற்றின்பவாஞ்சையினைவிடாரலைத்துஞ்
செயல்வளருமில்லறத்திற்றீராத்திண்ணியர்போல. (௪)

வரந்தருமெம்மொடுமெதிராமரபுடைமானதசரசிற்
பரம்பியநீவிர்களெம்பார்பயின்றிருத்தலடாதென்ன
வரம்புபுரிந்தலைப்பனபோலலையலைக்குமோதிமமு
நிரம்பியபேணமுமயங்கிநிற்பனநீர்நிலைதோறும். (௫)

மாதிரத்தெண்கடகளிறுமல்கியதீர்த்தம்படிந்து
போதலைத்துத்துளைக்கரத்துப்புனல்வாங்கித்துளித்தேகுஞ்
சீதளத்தவெக்கர்களுந்தேவருளந்திறைவாங்கும்
காதரமிக்குயிர்க்கிரியக்கடைக்கணிக்குமடக்கொடியே. (௬)

தேங்குநீறும்புனற்றீர்த்தத்தீரமெலாம்பன்மலரி
னோங்கியநந்தனவனமுமுந்திடமெங்கணுந்தவங்கள்
பாங்குபெறவிழைக்குநரும்பரயோகம்பயிற்றுநரும்
வீங்கருளினவர்பணிகள்விளைக்குநருமுளரென்றும். (௭)

இத்தகையதீர்த்தத்துள்யாதொன்றிற்றோய்ந்தெழினு
மெத்தியபண்டைப்பவத்தின்விளைத்தபெரும்பாதகமும்
வைத்தடர்ந்தவிப்பவத்திற்பாதகமும்பறிபோகக்
கொத்தினறுமலர்க்குழலாய்குலத்தொடும்வேட்டனபெறுவர். (௮)

வேறு.

மண்ணை பிரமக்கொலைச்சாயைமறலும்பிரமராக்கதமுந்
துண்ணென்றுடற்றும்பெரும்பூதத்தொடக்குந்துட்டதெய்வதமுங்
கண்ணின்றுறுத்துமந்திரத்திற்காதுமணங்குமிவையெல்லாம்.
பண்ணின்மொழியாயொருதீர்த்தம்பாற்றும்பாற்றும்படிந்தோர்க்கே. (௯)

குட்டந்தொழுநோய்முயலகநோய்குன்மஞ்சூலைவாதநோய்
கட்டமுறுத்துங்காசநோய்கண்ணோய்தலைநோயசுரம்விக்கு
ளொட்டுங்கிரந்திநோயாதியொழிக்குந்தீர்த்தமொவ்வொன்றே
மட்டுவிரிந்தநறுந்தொடையல்வருடச்சிவக்குந்தடந்தோளாய். (௰)

மறையோர்கொலைமன்னவர்கொலையேவணிகர்கொலைசூத்திரர்கொலையே
யிறைநீர்க்கேளிர்தந்தைதாய்நீடுந்துணைசூற்பசுநன்றி
பறையார்வீரரிவர்கொலையும்பாவவினையும்பிறவினையும்
பிறைநேர்நுதலாயொருதீர்த்தம்பெயர்க்கும்பெயர்க்கும்பெயர்க்குமே. (௧௧)

ஈன்றாள்புதல்வியுடன்பிறந்தாளெழிலார்குரவன்மனைமெய்மை
யான்றார்மனையேனையரில்லத்தணங்கையிழிந்தமாதர்தமை
மான்றுதரவிற்புணர்வினையும்வரையாநாளிற்புணர்வினையுஞ்
சான்றோர்வணங்குமடக்கொடியேசாடுஞ்சாடுமொருதீர்த்தம். (௧௨)

வறுமையகற்றுமனக்கவலைமாற்றும்பகையைப்புறங்கொடுக்குஞ்
சிறுமைதுறக்கும்பழிதொலைக்குஞ்சிந்தைமயக்கஞ்சிதைவிக்கு
முறுகுமடத்தின்வலிமுருக்குமுதிர்ந்தகாமமுதலாறு
மறுதிபயக்குமாடுநருக்கலம்புமணிமேகலைக்கிளியே. (௧௩)

ஒழுக்கமறிவுதவந்தானமுறவுசீலமுபசாரம்
வழுக்கில்கருணையாசாரம்வாய்மைவணக்கம்வந்தித்த
லழுக்கிலன்புதுறவடக்கமழுக்காறுமைமுதலறங்கண்
முழுக்கவருளுமுழுகுநர்க்குமுழுவெண்டிங்கண்முகத்தினாய். (கச)

நிரம்புகல்விபெருஞ்செல்வநீடுமாயுள்வலியூக்கம்
பரம்புசூழ்ச்சிகலங்காமைபனுவல்வழியேபொருளீட்டல்
வரம்பிலீகைபுகழாக்கமலியநுகர்தலிவையெல்லாங்
குரம்புமலியுமொருதீர்த்தங்குடைந்தோர்க்கெய்துங்கோற்றொடியே. (கரு)

உயிரொன்றிரண்டுவடிவெடுத்தாங்குவக்கும்பெருங்காதலின்முழுகிக்
கயில்வண்கழற்காலாடவருங்கமழ்பூந்தெரியன்மடவாரும்
பயிலும்படியிற்றுறக்கத்திற்படர்பேரின்பநலநுகர்வர்
செயிர்முற்றிரிக்குமொருதீர்த்தஞ்சென்றுபடியிற்றேமொழியே. (கசு)

அறிவுவளரும்புத்திரருமவர்தம்வழியிற்புத்திரருஞ்
செறிவுறெழுமுப்பவத்தோர்க்குந்தீராநரகின்சிறைநீங்கு
நெறியினவர்தங்குலமுலகினீடுவாழும்பிதிர்த்தேவ
ரெறிவர்பரிவையொருதீர்த்தமெய்தியொருவராடுறினே. (கஎ)

## வேறு.

தேசார்மணிகரைமேலெறிதிரைவார்தருதீர்த்த
மாசாரமொடன்பான்முறையாடுந்தவரல்லா
லேசார்தருமாசூசமுமெரிவெங்கதிர்வெப்பு
மாசானதுமொழியப்படிவாரும்பயனுறுவார். (கஅ)

வழுக்கிக்கரைபுனல்வீழினும்வாரிப்பருகிடினு
மொழுக்கத்தெழுதிரைவீசியவுறைமெய்த்தலையுறினு
மழுக்கற்றிடுதீர்த்தந்துளையங்கிலங்குளிர்செயினு
முழுக்கக்கரிசொழியக்கதிமுற்றுங்கனிவாயாய். (ககூ)

தீர்த்தத்தெழில்விழிநோக்கினர்தீர்த்தத்திசைகேட்டோர்
தீர்த்தத்துறைமீனாதிகடீர்த்தம்வளர்தாரு
தீர்த்தம்விளைநெல்லாதிகளவைதேர்குருகினமுந்
தீர்த்துக்கரிசுயர்வாரிதுதிண்ணஞ்சிறுநுதலாய். (உ0)

இவ்வாறுயர்தீர்த்தத்தருகெய்தித்தவமாதி
செவ்வாய்மையபுரியிற்றிகழ்தானம்பலசெய்யி
னவ்வானருள்பிதிரர்க்குளமமையக்கடனாற்றித்
துவ்வாவமிழ்தனையாய்பயன்சொல்லின்முடியாதால். (உக)

## வேறு.

இன்னவாறியம்புமெம்பிரானையேந்துகொங்கையா
ணன்னரோகைநண்ணிநாதவென்றுபோற்றியோதுவாண்
முன்னரெண்ணிலாததீர்த்தமெய்த்தவற்றுண்மேலவாய்
மன்னிநின்றசில்லவென்றுவாய்மலர்த்தியண்ணலே. (உஉ)

அனையதீர்த்தநாமமாடினோர்களாடுநூல்விதி
வினைகணீங்கவாடுகாலமேவுமந்திரம்பய
னினைவுறுதபாலர்தேவரீயநின்றதானமு
நினைவினோடொழுதகேவரீயுரைத்தல்வேண்டுமே. (உங)

நின்னையன்றிவேறுதீர்த்தநீடுமேன்மையுள்ளவா
றன்னையன்னையாவர்கூறுமாற்றல்வல்லராதலான்
மன்னயானிரந்துளேனெனக்கசிந்துவாஞ்சையிற்
பின்னரும்வணங்கிநீள்கைபின்னிவாய்புதைத்தனள். (உச)

மூப்பரம்பொடித்தமேருமூரிவார்சிலைக்கையான்
மைபடிந்தகண்ணியுள்ளவாஞ்சைநோக்கிமாதரா
யொப்பிலாததீர்த்தமேன்மையோருமூக்கமிக்குளாய்
செப்புகேமனைத்துமென்றுசெய்யவாய்மலர்த்தினன். (உரு)

வே று.

இச்செய்யுள் தீர்த்தங்கள் ஒன்பதிற்கும் நாமங்கள்.

காமருபிரமதீர்த்தமிந்திரபுட்கரணியேசம்புபுட்கரணி
தேமலியிராமதீர்த்தமேசிமத்தீர்த்தமேபக்கிளிதீர்த்த
மாமகத்தியநற்றீர்த்தமேசோமதீர்த்தமேபலரியின்றீர்த்தம்
வாமமேகலையாய்மேலவாந்தீர்த்தமருவியபெயரிவைகாண்டி. (உசு)

இதுமுதல் (௯) செய்யுள் முதலாவது பிரமதீர்தம்.

வரியளிமுரலமதுமடையுடைக்கும்வாரிதழ்த்தாமரைப்பொகுட்டு
விரியணைத்தவிசின்வீற்றிருந்துலகமேதகப்படைக்குநான்முகத்தோ
னுரிமையின்வாழுமுன்னொருகற்பத்தொருமகளழகுறப்படைத்தா
னரிபரந்தொழுகியகன்றெழுந்தோடியம்பலைத்தமர்த்தவாள்விழியாய். ([illegible])

கொண்டனீர்முகந்துமேக்கெழுந்தாங்குக்குலவியகூந்தலுமருகே
மண்டுகார்சாபம்வாங்கியதென்னமாமையிற்சிறந்தவாணுதலுங்
கண்டகாருமிழ்ந்தமின்னெனநுடங்குங்கப்பிடிகவற்றுநுலிடையு
மீண்டநாடதிர்க்குமதன்முழக்கனையவார்கநூபுரத்தொலியும். (உஅ)

சுரந்துசூழ்மேகமழைபொழிந்தனையதுலங்கியபேரெழில்வனப்பும்
பரந்தகாரடுப்பக்கோபமேகாந்தள்பனிமுகைமுல்லையுநீதோன்றி
நிரந்தவாறனையசேயிதழங்கைநிலவொளிமுறுவலுங்காட்டி
வரந்தராநின்றவணங்கெனவெதிரேநின்றனண்மகளெனுமாது. (உகூ)

மழைமுகிலடுப்பச்சாதகக்குருளைவாஞ்சையிற்றுளிமடுத்தாங்குத்
தழைதருகாதல்பிடர்பிடித்துந்தத்தாமரைத்தவிசினோன்றழுவி
விழைதருகாமந்துய்த்தனனுங்கேமேதகுபடைப்பயர்ந்திழிந்தான்
குழைதகுநரைமூப்பிடையறுமாயுள்கொண்டனரன்னவன்படைத்தோர் ()

ஆயதொர்தவறுநோக்கியுள்வெருவியருந்தவத்தாலெமையடுத்தான்
பாயமேகலையாயாங்கவற்கிரங்கிப்பரந்தபெருலகெலாம்போற்று
மேயசீரெழுத்தோரைந்தையுங்கிளந்துவிடுத்தனம்விடைகொடுகடந்து
தூயனும்பொருட்டுஞானகேத்திரத்தைத்துன்னினன்சதுமுகத்தோன்றல்

### வேறு.

ஞானபூமியினல்வளநோக்கிநயந்தனன்
மேனவார்திரைபின்னியதீர்த்தமெல்லாம்பிரிந்
தானகாதலகத்தெழவொன்றனையண்ணினு
னீனமோடவிதிப்படியாடியெழுந்தனன். (௩௨)

நீறுமெய்யினிரம்பவணிந்துவிரப்பெலா
நூறுகண்மணிமாலைமனுக்கணுவன்றணிந்
தேறுமஞ்செழுத்தவ்வுழிவைகினனெண்ணினன்
மாறுகொண்டெழுமைம்பொறியின்வலிவாட்டினன். (௩௩)

ஆங்குவைகிய சங்கரநாதவருட்குறி
பாங்கினுதரவால்வழிபாடுபயிற்றினன்
வீங்குமென்முலைப்புத்திரிதன்னைவிழைந்துறுந்
தீங்குதீர்ந்துசிருட்டியுமெய்தினன்மாதராய். (௩௪)

வரநிலாவியவத்தகுதீர்த்தமண்ணுவிண்
பிரமதீர்த்தமெனப்படலின்றதுபெய்வளாய்
விரவுபுத்திரியாதியர்தம்மைவிழைந்துறும்
பரவுபாவமெல்லாம்படிந்தார்க்குப்பறக்குமே. (௩௫)

### வேறு.

இதுமுதல் (௬) செய்யுள் இரண்டாவது இந்திரதீர்த்தம்.

மருத்தகற்பகவானக, ரருத்தியோடரசாள்பவன்
விருத்திரப்பெயர்மேவிய, வொருத்தனுருயிருண்டனன். (௩௬)

பிரமசாயைபிடித்தலைத், துரனழித்தலினுய்யெனப்
பரவுஞானப்பதிக்கணே, விரவுமன்பொடுமேயினன். (௩௭)

தணிவிலாதநஞ்சந்நிதி, நணியமேற்றிசைநண்ணினு
னணியிருந்ததோராவியி, னணியுவர்ததினுடினன். (௩௮)

அன்னதீர்த்தத்தகன்கரை, மன்னிநம்வழிபாடுசெ
ணன்னராற்றிநயந்துத, னின்னலோப்பியெழுந்தனன். (௩௯)

இன்பமாரிமையார்பதி, முன்புபோன்முறைசெய்தனன்
பொன்பிறங்கியபூண்முலை, மின்பிறக்குவிளங்கிழாய். (௪0)

ஏர்த்தவத்தடமிந்திர, தீர்த்தமாயதுதேமொழி
யார்த்தவைம்பெரும்பாவமும், பார்த்துளார்க்கும்பறக்குமே. (௪௧)

### வேறு.

இதுமுதல் (௩) செய்யுள் மூன்றாவது சம்புதீர்த்தம்.

தாவிலருந்தவத்துயர்ந்தசம்புமுனியென்றொருவன்
பாவுறுநஞ்சந்நிதிக்குப்பாவகன்மாதிரத்தெழிலார்
பூவலர்ந்தவொருதீர்த்தம்புகுந்தாடிக்கடனியற்றி
யேவனையவிழிமடவாயெழுத்தைந்துமினிதெண்ணி. (௪௨)

சங்கரநாதப்பெயரிற்றழைக்குமெமதருட்குறியிற்
பொங்கியகாதலிற்பூசைபுரிந்துலகெலாம்விரவித்
தங்குமெமதியற்கையினைத்தலைப்பட்டானாதலினா
லங்கதற்குப்பெயர்சம்புதீர்த்தமென்றாயதுமாதே. (௫௩)

தத்துதிரைமணிதெறிப்பத்தடங்கரையிற்குருகிரியு
மத்தகுதீர்த்தம்படிந்தோர்க்கடற்பெரும்பாதகந்துமியப்
புத்தியொடுமுத்தியிவைபுணர்கிற்கும்புனைவேய்த்தோட்
கத்திரிகைப்பெருஞ்செவிப்பூங்கத்திகைமென்குழற்கொடியே. (௫௪)

இதுமுதல் (௪) செய்யுள் நான்காவது இராமதீர்த்தம்.

இராவணனையுயிர்மாட்டியெழிற்சீதையொடுமீண்ட
வராவணையிற்கிடந்தவனேயருட்பெருஞ்சந்நிதிமேல்பால்
விராவுமலர்த்தடமொன்றின்விழைந்தாடியதன்கரைமே
ணிராமயமாநீலவிண்டுநாதர்தமைநிருமித்தான். (௫௫)

எழில்வளருமத்தீர்த்தமிராமதீர்த்தப்பெயர்பூண்
டொழிவில்கொலைப்பாதகங்களொழிவிக்குமற்றதனிற்
கழிமகிழ்வின்வீடணனுங்கரிசிரியத்தோய்ந்தெமது
செழிமலர்த்தாள்பூசித்துச்சென்றிலங்கையரசாண்டான். (௫௬)

இதுமுதல் (௨) செய்யுள் ஐந்தாவது சீமத்தீர்த்தம்.

அற்றாற்றும்விழிப்புனன்மெய்யடியர்தொழுங்கோயிலினுண்
முற்றாற்றினினிதாகிமுதிர்சுவைத்தாய்நமக்கருகே
சிற்றாற்றினொருதீர்த்தந்திகழ்ந்துளதுதிசைவிளங்க
வெற்றாற்றுயணிவடங்களிலகியபூணிளமுலையாய். (௫௭)

நீங்கரிதாமத்தீர்த்தநின்னாலேயினியுலகிற்
றேங்குபுகழ்திசைவிளங்கச்சீமத்தீர்த்தப்பெயரி
னோங்குமதனீராடுமுறுதவர்க்குக்கனங்குழையாய்
வீங்குபயனினைத்தென்னவிதிப்பரிதாம்விண்ணவர்க்கும். (௫௮)

## வேறு.

இதுமுதல் (௬) செய்யுள் ஆறாவது அக்கினிதீர்த்தம்.

தேவர்கடமக்கெல்லாந்திருமுகமெனநின்ற
பாவகன்முன்னொருநாட்பனிப்புனற்கிறைவன்ற
னாவியினனையாண்மெய்யழகணங்குறத்தப்பட்
டோவியநிறையினனாயுறுநலனுகர்வுற்றான். (௫௯)

பிறன்மனைவிழைவுற்றபெருகியபாவத்தால்
விறன்மலிதருசொன்னவீரியமதுவீழ்ந்திட்
டுறுவலிதேசோடுமொழிதலினதுநோக்கி
வெறுவியவுளத்தோடும்விரைந்தனனங்கெய்தி. (௬௦)

திகழுநஞ்சந்நிதிக்குத்தென்கிழக்கெல்லையிடைப்
புகழ்மலியொருதீர்த்தம்பொற்பொடுமெதிர்நோக்கி
யகமலியுவகையனாயடுத்ததிற்படிவுற்று
முகையவிழ்மலர்கொண்டுமுறையுளிப்பூசித்தான். (௬௧)

அன்னவன் வழிபாட்டுக்ககத்திடையருள்சுரந்து
மின்னிடைநாமூர்த்தவீரியம்வலிதேசு
நன்னலம்வரம்யாவுநல்கினமவைபெற்று
முன்னினனமரர்க்குமுன்புபோலவியுய்த்தான். (ருஉ)

மிக்கொளிதிகழுங்கிவிண்ணவன் வரம்பெறலா
லக்கினிதீர்த்தமெனவாகியதத்தீர்த்தந்
தக்கதொர்விதியாற்றிற்சார்ந்ததிறுடுநேர்க்குத்
தொக்கதொர்பிறனில்லந்தோய்வினைமுழுதோடும். (ருங)

ஆக்கையின் வலியில்லார்க்காக்கையின் வலியெய்துந்
தேக்கியதேசில்லார்தேசுமிக்குளராவர்
பாச்கியமில்லார்கள்பாக்கியத்துயர்வார்கள்
வீக்கியவத்தீர்த்தம்விதியுளித்தோய்தரினே. (ருச)

## வேறு.

இதுமுதல் (எ) செய்யுள்ஏழாவது அகத்தியதீர்த்தம்.

இமையமால்வரையேந்தலெமச்சுனை, யமைவில்காதலினங்கிமுனீத்துழி
யுமைநலாயிமையாரொடங்கெய்தலிற்; சமனிலாதுவடாதுமண்டாழ்ந்ததே

ஆயகாலையகத்தியன் றன்னைநாங், கூவியிந்தக்குவலயநேர்பெறத்
தூயமாமலயத்தினைத்துன்னுகென், றேவினுமதுகேட்டவனேந்திழாய். ()

நினக்குநேரிலைநின்னுடுநேர்பெற, லெனக்கெவ்வாறியையும்மென
வேண்டினன், றனக்குஞானதலத்திடைப்பூசைசெய், தெனக்குநேர்பெறு
கென்றனந்தையலாய். (ருஎ)

நன்றுநன்றெனநற்றவன்ருழ்ந்தெழுந், தன்றுசென்றருண்ஞானதலத்
தினம், மொன்றுசந்நிதிக்குத்தரதிக்கிடை, மன்றன்மல்குமொர்வாவிகண்
டண்மினன். (ருஅ)

நறுமலர்ப்புனனன்றுபடிந்தெழுந், துறுதியாலெமதொள்ளியபூசனை
நிறுவியெம்மைநிகர்த்துவரங்கொடு; குறுகினன் மலயங்குறுமாதவன். (ருகூ)

அறையுமத்தகுதீர்த்தத்தினுடினோர், பறையவல்வினைபற்பலமேன்மையு
நிறைவர்கல்வியுநீடியவாயுளுங், குறைவிலாதகுணங்களுமெய்துவார். (சுo)

அந்தவாவிக்கெதிரேயணிமை, னிந்திராதியரேத்தநின் சந்நிதிச்
சுந்தரத்தின்விளங்குபச்சுட்சியைப் பந்துகாணுதிபெய்வினைத்தோளினய்.

## வேறு.

இதுமுதல் (எ) செய்யுள் எட்டாவது சந்திரதீர்த்தம்.

தக்கனூர்பெறுந்தையன்மார்களுட், டொக்கநாளைனுந்தோகைமார்களை
மிக்ககாதலின்வேட்டசோமன்மற், றொக்கநோக்கிலானுரோணிசார்பினன்

தவறதாகலார்சாபமெய்தினு, னிவறுதண்கலையிறப்பநோக்கினன்
கவலைபூண்டுளான்கடுகவவ்வயி, னுவகையெய்துவானோடிநண்ணினன்

பரவிவிண்ணவர்பணியுநம்முடை, விரவுசந்நிதிமேற்றிசைக்கணே
யரவவல்குலாயற்புதத்ததாய்ப், புரவுசெய்வதோர்பொய்கையண்ணினை.

தீர்த்தமாடினான்றீர்த்தச்சோட்டிடை, யார்த்தவங்கியினரிதுநோற்றனன்
பார்த்துநாமவன்பரிவுதீர்தா, வீர்த்துளாங்கடுஞ்சாபத்தின்னலே. (சுரு)

அன்றுதொட்டவனமரராதியோர்க், கொன்றுமோகைமிக்குறுத்தித்தானல
துன்றுகின்றனன்சோமதீர்த்தமென், றென்றுமத்தடமிலகின்றதே. [ந்

நீமெத்தடமிறைந்தவன்பின, லாடினார்கயரோகமாதிகள்
வீடமண்ணிடைமிக்கசெல்வராய்க், கூடிவிண்ணினுங்குலவிவாழ்வரே.

## வேறு.

மாயவனெமதருள்வாய்ப்பமேலினி, நாயகிதன்னைநாடகஞ்செய்விப்பனு
லாயவக்காரணத்தாலச்சூழுரன், சேயிழாய்சிரங்கமெனச்சிறக்குமே. (சுஅ)

இதுமுதல் (௩) செய்யுள் ஒன்பதாவது சூரியதீர்த்தம்.

பாயிருள்பருகுபகலைக்கான்றெழுங், காயெரிக்கதிரவன்காமரத்தல மெயினனெமதுசந்நிதியின்மேற்றிசைத்.தூயதோர்தீர்த்தத்தைத்துன்னித் தோய்ந்தனன். (சுகூ)

மலர்பலகொண்டெமைவழிபட்டேத்தினு, னுலகெலாம்விளக்குது மொளிபெற்றோங்கினன், கலதியில்கருமக்குக்கரியுமாயினு, னிலவெனச் சிவந்தொளிரிதழ்ச்செவ்வாயினாய். (எ0)

சீரியவப்பெருந்தீர்த்தமண்ணிடைச், சூரியதீர்த்தமாய்த்துலங்கின்றதவ், வேரியமலர்த்தடம்விழைந்துதோய்ந்தவர், காரியமனைத்தையுங்கைக்கொள்வாரரோ. (எக)

நூலாசிரியர்.

நவமணிதீர்த்தமுநாடியாடினோர், தவமறுபயனிவைசாற்றினுமினிக் குவவினபூண்முலைக்சோற்றொடிக்கையா,யிவருறவேனவுமியம்புவாமரோ.

தீர்த்தவிசேடப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் சகூ0.

---

## நானவிதிப்படலம்.

தளவவாணகைத்தையல்கேள்சாடுநோயாதி
யளவிலாதபல்லரிட்டங்களூனுங்கவுமாதர்
வளமையாதிவீடிறுதியவரங்கண்மல்குறவு
முளமரீஇயினராடுகதீர்த்தமொன்பதுமே. (க)

இது முதல் (கங) செய்யுள் ஸ்நானவிதியின் பத்ததி கூறல்.

முந்துமந்தணராதியர்மூவர்க்குங்கதியி
னுந்துமந்திரத்தாடுதலுறுவதுபின்னோர்
கந்தமென்குழற்காரிகையாரிவர்க்குலகந்
தந்தசுந்தரிதந்திரமாத்திரையேயாம். (உ)

நகரவார்குழற்கனங்குழைத்தரளவாணகையாய்
மகரமாமதிப்பூரனைவைகறையெழுந்து
புகரிலாதநாட்கடனெலாம்பொலிவுறமுடித்து
நிகரிலாதஞ்சந்நிதிநேர்பெறவடுத்து. (௩)

முன்னர்மண்டபமத்தியின்முப்பதுகோட்ட
மன்னுவித்தவற்றுளென்பதுமண்ணுமேழ்தளிரு
நன்னரைந்துகவ்வியங்களுநவதிரவியமுஞ்
சொன்னமுப்பதுமொரோரொவொன்றுதன்னிடைவைத்தல். (௪)

அரசுகூவிளந்துழாய்புளியால்சம்புமூலம்
புரசைமால்கரிக்கூடமும்புரவிமந்திரமுங்
கரிசிலாநிரைத்தொழுவமுங்கல்விநூல்விதியின்
வரிசையாலெடுத்திடப்படுமண்களொன்பதுமே. (௫)

தளிர்துழாய்புளிசம்புகூவிளம்வடமரசு
விளரிலாவறுகென்பனவிளம்புகவ்வியங்க
ளளவில்சீர்தருமந்நலாயறிகபாறயிர்நெய்
வளநிலாவியகோசலமயமிவையாகும். (௬)

சிறுகுகாருடற்றிலநெய்கோதூமந்தீங்கட்டி
மறுவிலாச்சிவலிங்கநெல்வத்திரஞ்செம்பொன்
முறுகுபேரொளியரதனமெனமொழிந்தவைதா
முறுதியாளர்கடானமென்றுதவுமொண்பொருள்கள். (௭)

கோட்டம்வைத்திடுமுப்பதுபொருளையுங்கொலைவே
லோட்டுமைக்கணுய்சந்தனமலர்புகையொளியா
ளூட்டுமெஞ்செழுத்துரைத்துநற்பூசனைநவிற்றி
வாட்டமின்றிவெவ்வேறபிமந்திரித்ததன்பின். (௮)

ஒற்றைவெண்மருப்பிருசெவிமூன்றுகணல்வாய்க்
கொற்றவைங்கரமாறுகொண்டெழுகுலமதமும்
பெற்றபிள்ளையையெட்டுமன்பாற்பெரிதிறைஞ்சி
யற்றமின்றியிக்காரியமாக்கெனப்பராவி. (௯)

விழைந்தவன்பினற்சங்கற்பம்விதியுளிச்செய்து
குழைந்தநெஞ்சொடுங்கொடுப்பவனேற்பவன்கொடுக்குந்
தழைந்தவொன்பதுபொருள்களுந்தக்கநற்பயனு
நுழைந்துநின்றருள்சிவமலாலிலையெனநுதலி. (௧௦)

சோர்விலொன்பதுபொருளையுந்தூய்மையவாக்கி
யார்வமல்குநீராடுறும்விதிநிறைவாகத்
தீர்விலாப்பெருங்கருணையான்முடிப்பவன்சிலம்பை
வார்விலாக்கியவள்ளலேயெனப்பராய்வணங்கி. (௧௧)

மண்டுமுப்பதுபொருளும்வெவ்வேறுதம்மலர்க்கைக்
கொண்டுசென்றராவணையினான்கொழுத்தவெங்நொலும்பின்
றண்டமங்கையிற்கொண்டருடலைவன்வார்சரணம்
வண்டுதுன்றியமலர்கடேய்வந்தனைபுரிந்து. (௧௨)

பாழிவையகத்துயிர்க்கெலாம்பயமுளமலைப்பக்
கேழிலையமேற்றுழிதருங்கெழுதகையினரே
யூழியங்கியினிறங்கிளருருவுடையவரே
வாழிநல்லருள்வயிரவரேயுமைப்பணிந்தேன். (௧௩)

இதுமுதல் (௯) செய்யுள் பிரமதீர்த்தம் ஆடும் விதி.

அடியனேன்சிவதீர்த்தங்களாடுவான்புகுந்தேன்
படியிலாப்பெருங்கருணையாலருள்பணித்திடுகென்
றொடிவிலாவிடைபெற்றவனாசந்நிதியொழிந்து
முடிவிலாற்றலங்கியின்றிசைமுந்துறக்குறுகி. (௧௪)

பிரமதீர்த்தத்தின்கரைவளர்பிரசமாமரத்தை
விரவுகாதலின்வணங்கிமென்கரத்தினாற்றொட்டுப்
பரவுதீநெறிபாறமுன்னருந்தவஃபயின்ற
பிரமனாகியவிருடியைப்பேணியுண்ணினைந்து (௧௫)

நங்கைசங்கரநாததேவரைநமவந்தங்
தங்கவங்கையின்மாலையிற்றழைதரவெண்ணி
யங்கணுள்ளவரஞ்செவியினும்புகவந்தப்
பொங்குநல்லருண்மந்திரம்பொருக்கெனக்கிளந்து. (௧௬)

பெருகுமத்தடம்காத்திடும்பெருங்கணநாதன்
பொருவில்சீர்த்தியனாகியபுட்பதந்தனையுள்
ளுருகுமன்பினால்வணங்கியொண்புனலரையளவு
மருவவுள்ளுறவிறங்கிமண்ணினையெதிர்நோக்கி (௧௭)

பாவநோய்முதலரிட்டமெல்லாநனிபாற
மேவநன்றியைவிளைக்கெனவியந்துபசரித்துத்
தாவிலாதவம்மண்ணினைத்தனுவினிற்றிமிர்ந்து
காவிநேர்விழியாய்புனல்படிந்ததுகழுவி. (௧௮)

கூறுமானுடையைந்தையுங்கோசலமுதலா
வேறுவேறுறவாடிவீங்கிரும்புனலாடி
மாறிலாதவேழ்தளிரினும்வார்புனறோய்த்திட்
டேறுமாமனுமூலத்திற்புரோக்கணமியற்றி. (௧௯)

வார்ந்ததண்கரையிவர்ந்துநீர்வடிவினிற்புலர்த்தித்
தேர்ந்துதேவர்களிருடியர்தென்புலத்தவர்க்கு
நேர்ந்தநீர்க்கடன்விதியுளிநெடுங்கரத்தியற்றிச்
சார்ந்ததென்புலத்தவர்க்குளந்தழைதரும்பொருட்டு. (௨௦)

எண்ணில்பாவமுமிறுக்குமிவ்வெள்ளிருங்கொடையா
லண்ணலாகியசிவன்மகிழ்வடைந்துபேராயுண்
மண்ணிலேயெனக்களித்திடக்கடவனுலென்று
திண்ணமாகியபத்தியாற்றிலக்கொடைவழங்கல். (உக)

அதிவளம்பெறவின்னணமாடுறும்விதியே
மதிவளந்தருமேனைவண்டீர்த்தமாடுதற்கும்
விதியெனப்படுமாமுனிகாவலர்விண்ணோர்
கதிசெய்தானமந்திரங்கள்வெவ்வேறவைகரைவாம். (உஉ)

வேறு.

இதுமுதல் (உ) செய்யுள் இந்திரதீர்த்தம் ஆடும் விதி.

இந்திரதீர்த்தப்பாங்கரெழுந்தொளிர்மரந்தெங்காகு
மிந்திரனிருடிமுக்கணிறைசிவன்றேவன்காவ
றந்திடும்பாலன்கும்போதரன்சதுர்வேதம்வல்ல
வந்தணர்க்காவினெய்யையளிக்கதக்கணையன்றேடும். (உங)

கைம்மலையுரித்தமேருக்கார்முகக்கடகச்செங்கைச்
செம்மல்வீரியமாயந்தச்சிவனுக்குமகிழ்ச்சிசெய்யு
மிம்மணநெய்த்தானத்தாலின்புறக்கடவனுகு
மைம்முகப்பெருமானென்னவறைதன்மந்திரமாகும்மே. (உச)

முதுமுதல் (உ) செய்யுள் ங-வது சம்பு தீர்த்தம் ஆடும் விதி.

சம்புதீர்த்தத்தின்பாங்கர்ச்சம்புயர்மரம்வதிட்டன்
வம்பறுமிருடிதேவன்மயேச்சுரன்றீர்த்தப்பாலர்
நம்புறுசுனந்தர்தானநலத்தகுபொருள்கோதூமம்
பம்புவேதாந்தியேற்கும்பாத்திரமாவன்மாதே. (உரு)

இனியதாய்த்தேவர்க்கெல்லாமின்புறுமுணவதாகி
நனிவளர்பாவமுற்றுநலியுமிக்கோதூமத்தான்
முனிதருமலங்கண்மூன்றுமுருக்குபூதேசனுன
புனிதனும்மகிழ்கவென்றுபுகறன்மந்திரமதாகும். (உசு)

இதுமுதல் (உ) செய்யுள் ச-வது இராமதீர்த்தம் ஆடும்விதி.

இராமதீர்த்தத்தின்பாங்கரிருப்பைநன்மரமிராமன்
பராவுறுமிருடிநீலகண்டேச்சுரன்பகருந்தேவன்
விராவுறுதீர்த்தப்பாலன்வீரபத்திரன்றீங்கட்டி
யுராவியபிரமவித்தாயுயர்மறையவனுக்கீதல். (உஎ)

சுவையதாய்விமலன்பத்திச்சுவைமிகக்கொடுப்பதாமிந்
நவையறுகரும்பின்கட்டிநல்குறுந்தானத்தாலே
தவமறுத்தின்பநல்குஞ்சங்கரனெக்காலத்து
முவகையனுகவென்னவுரைத்தன்மந்திரமதாகும். (உஅ)

ரு-வது சீமத்தீர்த்தம் ஆடும்விதி.

சீமத்தீர்த்தத்தின்பாங்கர்ச்செழுமரநாவல்காற்கிய
நாமத்தானிருடிதேவனவிலமுதேசன்பாலன்
றேமிற்றீர்சுதந்தன்மேன்மைதொகுஞ்சிவலிங்கத்தனைக்
காமுற்றுதரவுநம்பாற்கலந்தவர்க்களித்தருணம். (உகூ)

நின்மலன்சாலவைகுநிலையமாயுலகமெல்லாந்
தன்மயமாகநிற்குந்தக்கவிச்சிவலிங்கத்தா
னின்மலிகண்டனோகையகத்தினனாகிமுத்தி
நன்மையையளிக்கவென்னநவிற்றன்மந்திரமாகும்மே. (௩௰)

௬-வது அக்கினிதீர்த்தம்ஆடும்விதி

அக்கினிதீர்த்தப்பாங்கர்மரம்புளியிருடியங்கி
நற்கிருசானுரேதசெனுஞ்சிவனவிற்றுந்தேவன்
றக்கசீர்க்ககுபன்பாலன்சாலியையவறியனான
பொக்கமில்சுற்றஞ்சூழ்ந்தபூசுரற்களித்தறானம். (௩௧)

வையகமாந்தர்க்கெல்லாம்வளர்பசிதாகம்போக்கி
மெய்யுறுமாற்றலாதிவிளைத்துவிண்ணவர்கட்கெல்லாம்
பொய்யறுமுணவாயின்பம்பொருத்துமிந்நெற்றானத்தா
லையமுதேசனோகையடைகவென்பதுமனுத்தான். (௩௨)

௭-வது அகத்தியதீர்த்தம்ஆடும்விதி.

அகத்தியதீர்த்தப்பாங்கரணிநிழல்வருக்கைத்தாரு
வகத்தியனிருடிதெய்வமகிலாண்டவல்லியென்னச்
சகத்தவர்பழிச்சுநீயேசுருததிதக்கபாலன் (௩௩)
மிகக்கலைவல்லானேற்பவெண்கலைவீசறானம்

தேவர்கள்விழைவதாகிச்சீதம்வெப்பிரண்டுநீக்கி
மேவுமிக்கலைத்தானத்தால்விண்ணவர்தேவரெல்லா
மோவிலின்புறுகவென்னவுரைத்தன்மந்திரமாம்பூத்த
காவிகள்செவியினோட்டிக்கவின்கவர்கருங்கட்பாவாய். (௩௪)

௮-வது சந்திரர்தீர்த்தம்ஆடும்விதி.

சந்திரதீர்த்தப்பாங்கர்த்தழைத்தெழுமரம்புன்னாகஞ்
சந்திரனிருடிதேவன்றானுமன்னவனேபாலர்
மூந்துபுட்கரனேபுட்கராக்கனேகுமுதன்மூவ
ரந்தமில்வேள்விசெய்வார்க்காடகமளித்தீறானம். (௩௫)

அங்கிசம்பந்தமாகியானந்தமுலகுக்கெல்லாந்
தங்குவதாகுமிந்தத்தமனியத்தானத்தாலே
யங்கியைநுதற்கணுக்குமருள்வளர்சிவன்மாராய
மிங்கண்மிக்குறுகவென்னாவியம்பன்மந்திரமாகும்மே, (௩௬)

௯-வது இவ்விரண்டுகவிசூரியதீர்த்தம்ஆடும்விதி.

பரிதியின்றீர்த்தப்பாங்கர்ப்பசுமரம்வில்லந்தூய
பிருகுநல்லிருடிதெய்வம்பெருகொளியென்றூழ்பால
னுருகெழுசுவானலூர்தியுயர்சிவபத்திவல்லான்
மருவுறவரதனத்தைவழங்குதறானமாகும். (௩௭)

வரமலிதேவர்தேசின்வந்தொளிகளுற்றுமிந்த
வரதனத்தானந்தன்னாலமர்பிரபாகரப்பேர்
விரவியகதிரோனின்பமேவுகவென்றுசெப்பல்
பரவுமந்திரமாம்பண்ணைப்பழித்ததீங்குதலைச்சொல்லாய். (௩௮)

இதுமுதல்(௪)கவிபிரகாரம்ஜெபம்இவைகளின்விதிகூறல்

தருமுதற்பேதமெல்லாந்தனித்தனிவகுத்துச்சொற்ற
முருவளர்பசுங்கொம்பன்னுயொன்பதுதீர்த்தமாட்டு
மருவியவிதியினுமோர்தர்கணமதுகோயிற்
றிருமுனரடுத்துத்தாழ்ந்துசிந்தையையொருக்கிநின்று. (௩௯)

மந்திரமாதிதம்மால்வருபிழைபொறுத்திட்டீங்கு
முந்தியநவதீர்த்தத்துமுழுகியபேறெம்பாங்கர்
மைந்துறநிரப்புகென்னவாஞ்சையினிரந்துநம்மைப்
பிந்துறமுக்காற்சூழ்ந்துபெருநிலத்தைங்காற்றாழ்ந்து, (௪0)

ஒருசிறையிருந்துமூலமுயர்திரியம்பகத்தை
யிருபதைந்தடுக்கியெட்டுத்தலைப்பெய்யெண்ணளவையெண்ணிப்
பொருவில்பூங்கொடிநின்கோயில்புகுந்துநின்சரணம்போற்றிக்
கருதுபுநாற்காற்சூழ்ந்துகாதலினைங்காற்றாழ்ந்து. (௪௧)

ஆங்குமந்திரங்கள்வேட்டவளவுநன்கியம்பல்வேண்டும்
பூங்குழன்மடந்தாயாங்குப்பொங்கியதீர்த்தமாடும்
வீங்கியவிதிகள்சொற்றுமென்றனன்விமலன்கேட்ட
மாங்குயிற்பழித்ததீஞ்சொன்மானினியிதனைச்சொல்வாள். (௪௨)

வேறு.

இதுமுதல் (௪) கவி அம்பிகைசிவபெருமானைவினுதல்.

கங்குனிகர்த்தகறைமிடற்றாய்கற்றைச்சடையாய்கயிலாயா
பங்கமுறுத்துமரிட்டமெலாம்பாற்றியிட்டமனைத்தினையுந்
தங்கவருளுநவதீர்த்தந்தக்கஞானதலத்திருப்பிற்
றுங்கவிரயம்பலகோடியுயிர்கடுளையுந்துரிசென்னே. (௪௩)

புழுக்கணெளியக்கறைசோரப்புண்ணைந்திழுகவுறுசீயு
மொழுக்கவுடலுநோயாதியுலப்பிலுயாற்கொளப்படலெ
னிழுக்கம்பயின்றவுளத்தினராயிரந்துமையங்கிடையாமை
முழுக்கத்துயரப்பெருங்கடலின்முழுகித்திளைக்குமிதுவென்னே. (௪௪)

மைந்தரிழந்துமனையிழந்தும்வளமையிழந்தும்பொருளிழந்து
முந்துமொளிகண்செவியிழந்துமூனாநாவிழந்துமெழிலிழந்துஞ்
சிந்தைதெருட்டுங்கலையிழந்துந்திண்மையிழந்துமிவ்வாறே
யந்திலுயிர்கள்பலகோடியரிட்டத்தழுந்துமிதுவென்னே. (௪௫)

வெண்ணெயிருப்பநெய்க்குழலும்வீணர்போலஞானதலத்
தெண்ணில்பெருமைதருதீர்த்தமிருப்பவஃற்றின்முழுகாதே
நண்ணற்கரியகொடுங்கானநண்ணியுணவாதிகள்விடுத்துப்
பண்ணற்கரியபெருந்தவங்கள்பல்லோர்பயிற்றுமிதுவென்னே. (௪௬)

இதுமுதல் (௩)கவி சிவபெருமான்விடையளித்தல்.

என்றுபனிமால்வரையுயிர்த்தவிறைவிவினவவளர்மேருக்
குன்றநெடுவார்சிலைக்கரத்தார்குளிர்நோக்குதவியருள்செய்வார்
வென்றபொறியினந்திகவுதமன்மெய்வாய்ந்ததீசியிவ
ரன்றுசபித்தார்குழைகிழிக்குமயில்வேல்விழியாயதனாலே, (௪௭)

மறையினொழுக்கந்தவந்தானம்வாய்மைபொறையாதியதருமத்
துறைநெஞ்சிலரியாவருமவருட்சிலரேயொழுக்கமுதலறந்தை
நிறைமுற்பவத்தின்பெருந்தவத்தானிகழ்த்தலுறுகின்றார்பின்னும்
பிறையொண்ணுதலாயிவரல்லாற்பேணார்ஞானதலதீர்த்தம். (சஅ)

முன்னைத்தவத்தான்ஞானதலமுறையின்வதியுநலத்தினரு
நன்னர்த்திருத்தமாடுநருநம்மையாங்குவணங்குநரும்
பின்னர்ப்பவத்தினுறார்பீழையுறார்பெண்ணரசேயுரைத்தபயன்
மன்னிப்பிரியாதெமதடிக்கீழ்வாழ்வாரிதுசத்தியமாமால். (சகூ)

எழுந்துபரந்துதண்ணெனவெச்செனமிக்கோங்கியிறுமாந்து
செழுந்தண்டரளவடமணிந்ததிதலைமுலையாயினித்தலமு
மழுந்துபடிந்தீர்த்தமுமுயரவமருமூர்த்திமேன்மையினை
விழுந்துவினைகளோட்டெடுப்பவிளங்கவெடுத்துவிளம்புவாம் (ருo)

ஞானவிதிப்படலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ருகo.

## மூர்த்திவிசேடப்படலம்.

மாயிரும்புவிமாந்தருக்கமரர்வானவர்க்கயனவற்கரியரிக்குச்
சேயிலைப்படைவேலவனவற்குத்திகழுமைமங்கரனுயர்ந்தனரவர்க்கு
நீயுயர்ந்தெனவீங்கிவர்பூசைநிகழ்த்திலிங்கங்களொன்றினொன்றுயர்ந்த
வாயவெவ்வகையிலிங்கத்துமேலாமணங்குநீபணிந்திடப்படுமிலிங்கம். (க)

### வேறு.

வல்லைவென்றொளிருமணிமுலைக்கொடியேவையகத்திடரெலாந்துமிய
நல்லறமாதிகருதிநீபூசைநடவியவெமதருட்குறிகள்
பல்லவற்றுள்ளுமெவற்றினுமேலாய்ப்பரசுகவீட்டினையருளுஞ்
சொல்லருஞானம்பெற்றிடநின்னாற்றொழப்படுமிலிங்கமேலாகும். (உ)

இக்கவிசம்புலிங்கவுற்பத்திகூறல்.

உத்தமகுணத்தோரெண்ணிலர்தவங்களுஞற்றிமெய்ஞ்ஞானமுற்றுயர்ந்த
முத்தியையடைந்தஞானகேத்திரத்தின்முருகுயிர்பூங்குழலாய்நின்
கைத்தலமலராற்றீம்புனறிரட்டிக்கவின்றருமிலிங்கநாவலின்கீ
ழெத்தகுவரமும்வழங்குவதாகவின்னினியேவிளங்குறுமால். (ங)

ஞானமிக்களிக்குந்தீர்த்தங்களுடுத்துஞானமிக்களிக்குங்கேத்திரத்தின்
ஞானமிக்களிக்குமிலிங்கமும்பலவோநவிற்றியவற்றுளுமேதாம்
வானமிக்களிக்குநின்கரமலரான்மறுவறவகுத்திடப்பட்டு
வானமிக்களிக்குமிலிங்கமென்றுரைக்கும்வார்த்தையினயிர்ப்பதுமுளதோ

### வேறு.

உலகமாட்டுவைகியவெமதுருவளவுவகைதன்னினுமொண்டொடிநின்பாற்
குலவுமோகைமிக்காயினாற்போலக்குவலயப்பெரும்பரப்பினுங்காங்கு
நிலவிவாழ்சிவலிங்கத்தின்மாட்டுநின்றுநாம்வழங்குறுமருடனினு
மிலகுஞானகேத்திரத்துநீவணங்குமிலிங்கநின்றுநாம்வழங்கருள்பெரிதாம்.

குறங்கின்மீமிசையிருத்தியுமெமதுகோலமேனியினொற்றுமைக்கொண்டு
மறங்குலாவியவாட்கணையென்றுமருவினின்னையாம்பிரிவுறாததுபோ
லறங்குலாவியஞானகேத்திரத்திலன்பினீவழிபடுமிலிங்கத்து
மிறங்கியாணவமுயிர்க்கெலாமடியவென்றுநாம்பிரியாதுவீற்றிருப்பாம். (சு)

அமுதமென்றதண்புனலினொற்றிரட்டியமைக்குமச்சிவலிங்கமவ்வியல்பா
னமுதலிங்கமென்றுரைத்திடப்படுமெங்கடுத்திறைஞ்சினோர்சித்தியமெய்தி
யமுதராதலினானுமும்மலத்தினழிந்துதோன்றுயிரருளிடத்தனவா
யமுதமென்மொழியெமையறியறிவங்கழிவதின்மையினானுமப்பெயராம். ()

அனையவாகியமந்தணமானவரும்பெரும்பொருட்பெயரினையொருகா
னினையநாவினாலுரைக்கமுற்றாதநீடுபோகமெவ்வுலகினுமில்லை
யினையவாகியவரிட்டங்கடம்முளிறுதிமுற்றுறாதிருப்பதொன்றில்லை
வினையெலாந்தபமுத்தியீரிரண்டுண்மேவுறாததுமில்லைமின்கொடியே. (அ)

அண்டர்கற்பகத்தலர்சொரிந்தேத்துமமுதலிங்கத்தையன்பினொலொருகாற்
கண்டகண்மலர்வறுமையுற்றிரங்கிக்கனகம்வேட்டொருவரையுங்காணாது
மிண்டுதுன்பறுமமுதலிங்கத்தின்மேதகும்பெயர்கேட்டவர்செவிகள்
கொண்டநல்குரவினர்க்குமுன்னறிந்துகொடுப்பதல்லதுகுறைசொலக்கே
[ளா. (கூ)

சோதிமல்கியவமுதலிங்கத்தைச்சூழ்ந்துளாரடியிம்மையினொன்றிற்
சாதல்வைத்துமற்றொருவர்தம்மாட்டுக்கதுவச்செல்லுறாமறுமைவந்தடுப்பி
னேதமுற்றறமண்மிசைமீட்டுமிடப்படாவெதிர்கூம்பியகரங்க [ய்.
ணாதநல்கெனவொருவரையிரவாதடுங்குமின்னெநுடங்குநுண்ணிடையாய்

## வேறு.

தீயவினைகளனைத்தினையுஞ்செய்தாரேனுஞானதல
மேயவமுதலிங்கத்தைவிழைந்துபணியப்பெறுகிற்பி
னாயவினைகளவையெல்லாமழல்வாய்ப்பட்டதுய்யேபோன்
மாயும்வளரெண்ணாண்மதியின்வீங்கியெங்குஞ்சிறுநுதலே. (கக)

வெறுக்கைகல்விதவந்தானம்வெவ்வேறானவறத்தானு
மொறுக்கமுடியாவாணவமுமுயிரைமயக்குமாயைகளு
மிறுக்குங்கருமமோரிரண்டுமெல்லாம்பரிதிமுன்னிருள்போ
லறுக்குமணிசேர்ஞானதலத்தமுதலிங்கதரிசனமே. (கஉ)

அனகர்வதியுஞானதலத்தமுதலிங்கமெனும்பெயராற்
சனனமரணப்பெருநோயைத்தவிர்த்துவளருமொருமருந்தை
மனமெய்மொழிமூன்றினும்பணிவார்மாட்டுச்சிறியநோயான
கனகமுதலாம்பொருட்சார்பாற்கதுவுங்கலக்கமுளதாமோ. (கங)

உறுநாள்கோளேயிராசியேயுதிக்குங்காலமாறாகித்
தெறுநீரனவாயிருந்திடினுஞ்சிந்தைக்கினியவமுதலிங்கம்
பெறுநீர்மையினால்வழிபாடுபேணுவார்க்குமற்றவைற்றா
லிறுநூலிடையாய்தீயபயனெய்தியடர்க்குமாறின்றே. (கச)

ஊழியிதுவோவெனமேகமுதகமிகுந்துபொழிந்திடினு
மூழியிதுவோவெனவெப்பமுடற்றமழைகண்மாறிடினு
மூழியிதுவோவெனவிகல்வேந்துலைக்குங்காலமடுத்திடினு
மூழிதெவன்கொல்செய்புமெனவுலப்பரதன்சிருரைப்போரே. (௧௫)

வரையால்வேலைகடைந்தெடுத்தமருந்துநுகர்ந்தோர்சுரராகத்
தரையோராகவித்தியத்தைச்சார்வார்விதியினீராடி
னுரையாகுசம்வறிதுடையோருகப்பவுடையோரிருவோரும்
புரைதீர்புனிதமொப்பாகப்பொருந்துவார்களதுபோல. (௧௬)

குலமிக்குயர்ந்தோராயிடினுங்குலமிக்கிழிந்தோராயிடினு
மலமிக்குயர்ந்தோராயிடினுமலமிக்கிழிந்தோராயிடினு
நலமிக்குயர்ந்தவமுதலிங்கநண்ணித்தொழினவ்விருவோரும்
பலமிக்குயர்ந்தவொருவீட்டினைப்பபடரும்பரிசினரே. (௧௭)

பித்துமிகுந்துவுளத்தொருவர்பெருகுவிடத்தைப்பருகுங்கான்
மெத்துசுவையின்வானமுதம்விரவப்பெறின்மற்றர்தமக்குன்
மத்தமுடனேவிடவேசம்வல்லையொழியமணித்தரளப்
பத்திநிகர்த்தமுறுவலாய்பாழியடுக்குமதுபோல. (௧௮)

நடனம்புரியுங்கணிகையரைநாடிப்புகுந்தாருயிடினு
மடமையகற்றுமமுதலிங்கமணியையடியார்மனவிளக்கைப்
படர்வில்லிமைக்குமணித்தொடலைபயில்பூண்முலையாய்தொழினவர்க்குத்
தொடர்தொல்வினையுமிப்பவத்திற்சூழும்வினையுந்தொலையுமே. (௧௯)

## வேறு.

பண்ணவர்சூழுமமுதலிங்கத்தைப்பணிவோமென்
றண்மையரேனுஞ்சேய்மையரேனுமகன்றிடிற்
றிண்ணியபாவங்கீட்டுகணக்கைச்சிதைவிப்பான்
துண்ணெனவஞ்சிச்சித்திரகுத்தன்னூரிசில்லாய் (௨௦)

ஞானதலத்தினமுதலிங்கத்தைநனிகாண
வானமனத்தோடேழடிமண்ணிட்டனராயிற்
போனபவத்துளேழனுளீட்டும்புரையெல்லா
நானமளைந்தவார்குழனங்காய்நலிவெய்தும். (௨௧)

அங்குவிளங்குமமுதலிங்கத்தின்முடிமேலோர்
சங்கமர்தீர்த்தமாட்டினரிக்குத்தயிர்பானெய்
கொங்கமர்தேன்பால்கோடிமிடாவேனையமூர்த்திக்
கிங்கினிதாட்டுமொண்பயனுற்றவுறுமாதே. (௨௨)

சம்புவின்மூலம்வைகுமிலிங்கந்தனிலங்கைப்
பைம்புனலாட்டும்பண்பினரன்னபயனுற்றால்
வம்புறுபாலாதிகண்மிகவாட்டவளர்வாய்மை
யும்பர்குழாத்துமார்சொலவல்லாரொளிர்பூணாய். (௨௩)

மருமலரோன் றுசம்புவின்மூலமகிழ்மூர்த்திக்
குருகியவன்பாலீந்தவரோண்மாமலர்வாழ்வர்
திருவியல்சங்கமொன்றுகொடுத்தோர்திகழ்செங்கைப்
பொருவறுசங்கமொன்றுதரித்துப்புவிகாப்பார். (உச)

மான்மதமீந்தமானைமதங்கைமானாகும்
பான்முதலீந்தபன்மணியான்கோபுரமேவுங்
கான்மலரீந்தபூமரவாதிகவினார்ந்த
வான்மலிவைப்புய்யானநிலாவிமகிழ்செய்யும். (உரு)

வேறு.

அருள்வளர்நாவன்மூலத்தமுதலிங்கத்தின்சார்புற்
றொருதினமேனுமன்பாலோங்கியசரியையாதிப்
பெருகியபணிகணான்கும்பெட்டவர்சாலோகாதி
மருவியமுத்திநான்கும்வல்விரைந்தடைவர்மாதோ. (உசு)

அறமுதனான்கும்வல்லேயருமையொன்றானுமின்றி
யுறவதுவேட்டோரெல்லாமொலிந்தபூஞ்சாகைநாவ
னறுமூலிலிங்கபூசைநண்ணியபொருள்கைக்கொண்டு
முறுகியவன்புபொங்கமுற்றுவித்திடுகமானே. (உஎ)

என்றுயர்மூர்த்திமேன்மையியம்பலுமிறைவன்பாத
மன்றலங்கூந்தற்செவ்வாய்மலைமகள்வணங்கிநின்று
நன்றுளமகிழ்ச்சிபொங்கநாதனேயாங்குநாவ
லொன்றுளதென்றியன்றேயதன்வரவுரைக்கவென்றாள். (உஅ)

அம்பிகைக்கிவெண்ணாவல்விருட்சத்தின்வரலாற்றைசிவபெமான்
எடுத்துக்கூறல்.

வரையினுக்கரையனீன்றமலர்க்கொடிநுசுப்பினங்கை
கரையறுகாதல்பொங்கக்கைதொழுதிரத்தலோடும்
புரைதபுகருணையோடும்பூரணன்முறுவல்பூத்து
விரைகமழ்நாவல்வந்தவரவினைவிளம்பலுற்றான். (உகூ)

மூர்த்திவிசேடப்படலம்முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-ருஙகூ.

---

# சம்புமுனிதவம்புரிபடலம்.

இதுமுதல் (ச)கவிகெசாரணியவனத்தின்விருட்சங்களின்நாமங்கள்.

புன்னைகூவிளநாகம்பூவைபிடாநமைசேவாண்
வன்னிதாதகிவேங்கைவகுளநெல்லிமயிலைபாங்கர்க்
கன்னிகாரமந்தாரங்கடுக்கைதமாலங்கச்சோல
முன்னம்வாகைவெட்பாலைமுருக்குவருக்கைபலாசு. (க)

சந்துகாரகில்போதிசண்பகமால்வரையாமா
சிந்துவாரமசோகஞ்செருந்திதிமிசுதிலகங்
கந்திநாளிசேரங்கள்கடம்பெகினில்லமடப்பு
குந்தங்கூதளமாச்சாக்குங்குமமேழிலைம்பாலை. (உ)

முருகுநரந்தங்குறிஞ்சிமுந்திரிகைப்பழச்சோலை
மருதுதடாவழையோமைமாதளைஞாழன்மதூகம்
பொருவறுமின்னமரங்கள்பொலிதருஞானதலத்தின்
மருவவிடைக்கணெழுந்துவைகுமொர்நாவலங்கானம். (௫)

வளர்ந்துவண்டுசுலாவமலர்ந்தொளிர்நாவலங்கானத்
தளர்ந்துதேவருங்காணுவரும்பெருவீட்டினைவேட்டோன்
றளர்ந்துசாய்ந்தமலத்தான்சம்புமுனியெனுந்தக்கோ
னுளர்ந்தனுதுவயத்தினெழுக்கியருந்தவமுற்றான். (௬)

வேறு.

நீறுதரித்துக்கண்மணிபூண்டுநிமிர்சென்னி
யேறியவேணிதாழ்புவிவீழவிருந்தெம்மை
வேற்றாடிமெய்த்தவமாற்றுமவன்முன்னே
வீறுயர்வெண்ணாவற்கனியொன்றுவீழ்ந்தன்றே. (௭)

பண்டறியாததிப்பியமானபழமின்னே
கண்டனனுவாகண்டுநெஞ்சங்கவர்தேசு
மண்டியசீர்மைத்தூநுசுவைத்துமற்றிதியாங்
கொண்டயிலாதகொள்கையதென்றுகுறிக்கொண்டான். (௮)

அற்புதமெய்தியப்பழமங்கைத்தலம்வவ்விப்
பொற்பமரிந்தவெற்பினைநண்ணிப்புகழ்பாடிச்
சிற்பரவீதுதிருவருள்வைத்துநுகர்கென்ன
விற்புருவத்தாய்நங்கரமீந்தான்வினைவெல்வான். (௯)

வேறு

வீங்குதீஞ்சுவையப்பழமுண்டுவிளங்கிழாய்
பாங்குமிழ்ந்தனம்வித்தினையன்னதுபார்த்துளத்
தோங்குமன்பினுவந்துகைக்கொண்டொளிர்மூரலிற்
றூங்குறுதுமடுத்துவிழுங்கினன்றூபதன். (௧௦)

வினையினீங்கியமெய்த்தவற்கீந்தவிழுப்பொரு
டினையினீள்பனையாய்வளருஞ்செயறேற்றியாங்
கனையமாதவன்பாழிவயிற்றினமர்ந்தது
நினையுமுன்முளையாகியெழுந்துநிவந்ததே. (௧௧)

சம்புமாமுனியாற்றுதவம்வளர்ந்தாலென
வம்பினீடுவெண்ணாவலவன்சிரம்வாய்திறந்
தும்பர்நாடுகிழற்றியுலவையெண்மாதிரம்
பம்பவார்தளிரீன்றுமலர்ந்துபசந்ததே. (௧௨)

அண்டமீரடியாலளந்தானகநாணுற
வண்டநாடுகண்முற்றுமடங்கவளர்ந்துமே
லண்டமுட்டியங்கேபெருங்காவல்வயிரவ
வண்டனுங்களிகூரவுவன்மெய்தைவந்ததே. (௧௩)

சுரும்புகிள்ளைகள்பூவைகுயில்பசுந்தோகைக
ளிரும்புருவினங்கின்னரமாதியிசைப்பன
விரும்புகற்பகமெய்துதருக்கைவிளித்துமென்
றரும்புநாவலெதிர்ந்தறைகூவியதொக்குமே. (கஉ)

மேக்கெழுந்துகுரங்கியிணர்த்தமென் சாகையிற்
றாக்கணங்குருவித்திரடன்னுகுடம்பைக
டேக்குசீர்த்திவிராட்புருடன்றிருமேனியி
னீக்கமின்மயிர்தோறமரண்டமிசர்க்குமே. (கங.)

நமதுவாயினனைந்தவித்தேநவைநீங்கிய
நிமிர்பெருந்தவன்மெய்யின்முளைத்தருணீடலாற்
பமரமொய்க்குமப்பாதவநீழல்பரப்பவா
ழமரராதியருந்தவமாற்றுநராயினார் (கச)

வெண்ணாவல்விருட்சத்தின் பிரயோசனம்.

பல்லவங்கைதொடினுநிழலிற்பயிலினு
மெல்லென் மாமலர்நாறினுநேர்விழிநோக்கினு
நல்லபேர்செவிகட்பினுநன் கனியுண்ணினு
மல்லல்யாவுமறுமுறுநல்லனயாவுமே. (கரு)

வேறு.

வெண்ணாவல்விருட்சத்தின்சொரூபம்.

உரைசெய்மாமறைகண்மூலமாய்ப்பராரையுபநிடதப்பொருளாகிக்
கரையுமாகமங்கள்பணைகளாய்ச்சரியைகிரியையோகங்கிளைவளார்கள்
விரைகுலாமிணராய்ஞானமோரைந்துமெல்லரும்பலர்கள்காய்கனிகள்
புரையிலாக்கனியினிரதமாயுயிரின்புகர்மலந்துரக்குமந்நாவல். (கசு)

வேறு.

எழுந்தவெண்ணாவலினீட்டநோக்கிய, கொழுந்தவமுனிவரர்குணலை யிட்டனர், செழுந்திருக்கடவுளர்மலர்கள்சிந்தினார், பொழிந்தனமதுமழைபூமரங்களும். (கள)

சம்புமாமுனிவனத்தகைமைநோக்கினான், பம்புபேரோகையம்பரவைமூழ்கியிவ், வம்புநாவலினிழன்மாதவத்தினுக், கிம்பர்மேம்பட்டதென்றெண்ணிநோற்றனன். (கஅ)

அருந்தவமன்னவனுற்றுமெல்லையி, லிருந்தவமுனிவரரிமைப்பிலார்களும், பெருங்கணநாதரும்பேணியங்கிழ, லொருங்கிருந்தருந்தவமுனாற்றி வாழ்ந்தனர். (ககூ)

இனனணஞ்சிலபகலிறந்தபாணியி, னன்னணந்தவம்புரியறவன்வந்துநம் முன்னுறவணங்கியிம்மூரிமாநிழன், மன்னவநீயினிவதிகவென்றனன். ()

ஆங்கவற்கிரங்கிநாமருப்புக்கொங்கையா, யாங்குமுன் கனிவிழுந்தெடுத்தியாங்குநீ, யோங்கிருந்தவம்புரிந்துறைதியவ்வயிற், பாங்குறவதிகுதும்படர்கவென்றனம். (உக)

கோட்டமிலெமதருள்கொண்டுதிக்கெலாந், நீட்டியபுகழினுன்சிறந்த தேசெலா, நாட்டியஞானகேத்திரத்தைநண்ணிய, வீட்டியவன்புளத்தெழுந்திட்டானரோ.. (௨௨)

பாயிரும்புவியிடைப்படர்ந்துசெல்வுழிச், சேயிடைநோக்கினூர்தேமலர்ச்சிமீயுயர்மரநடைமேவிற்றென்னென, வாயினரையமற்புதமுமேயினூர் [னே

வேறு.

அடுத்துநோக்கியமாந்தர்களங்கையாதிகளுந்
தொடுத்ததேத்தடைச்சினைகளுந்துன்னுமிப்பிறவி
யெடுத்தவேழ்வகைத்தோற்றத்துமில்லைமற்றிதுவு
முடுத்ததோலினூன்றிருவிளையாட்டெனவுவந்தார். (௨௪)

அடங்கிநோற்றவச்சம்புமாமுனிவனேயல்லா
லுடங்குசூழ்ந்துசென்முனிவருமுருப்பவிர்வெப்ப
மடங்குறுதவெய்யவன்வெயின்மாற்றினர்நல்லோர்
தொடங்குமாநலஞ்சூழ்ந்தவர்தாமுமெய்தாரோ. (௨௫)

வேறு

(சம்புமுனி சிவபெருமான் கூறிய இடம் வந்து சேர்ந்தமை.)

அண்டர்போற்றிடநாமினிதுறைந்திடுமரும்பெருந்தலநேர்ந்த
கண்டுபோற்றுபுமென்மெலநடந்துபோய்காவிரிவடபாங்கர்க்
கொண்டஞானகேத்திரத்தினைக்குறுகிமுன்கொழுங்கனிவீழெல்லை
மண்டுகாதலினெதிர்தொழுதடுத்தனன்மாதவர்க்கேறன்னூன். (௨௬)

பரிதிவானவனுருப்பெழுந்துடற்றிருபருவத்துமழனின்றுங்
கருவிமாமழையெழுந்துநீர்பொழிதருகார்முதலியநான்கு
முருவவார்திரைப்புனலினுமருந்தவமுஞற்றியொண்டொடிமாதே
யிருவினூன்றனதிதயதாமரைமலரெமதடித்தலத்தம்ம. (௨௭)

கந்தமூலமுங்கனிகளுஞ்சருகுநீர்காலுமுண்டவைநீக்கி
யந்திஞெற்றிருக்கின்றனனவன்விழியடுத்தவர்தமைக்காணு
வுந்துதேமலர்த்தென்றன்மேற்றைவரவூறுடலறியாது
நந்துமோதைகள்செவியுறுநாற்றங்கணுசிமோவாதன்றே. (௨௮)

பிரமதேவனும் சம்பு முனியும் கலந்திருந்தமை.

பெருகுமன்புடனின்னணமருந்தவம்பேணிமாதவன்வைக
மருவிமுன்னூரேதவம்புரிதாமரைமலரினூன்மூனிச்சென்னி
யுருவின்றவெண்ணுவலுமருந்தவமுஞற்றுமாதவமாண்புங்
கருதிவிம்மிதமெய்தினனளவளாய்க்கலந்துடனிருக்கின்றூன். (௨௯)

ஆருயிர்த்தொகையிருண்மலங்கழீஇயெமதடிமலர்நிழற்சேக்கச்
சேருமத்தகுநாவலின்வரவிதுசெப்பினூமினியாங்குச்
சாருமத்திறம்புரிதியென்றெம்பிரான்றையலுக்கருள்செய்ய
வோருமுத்தமகுணத்துயர்நந்திதாழ்ந்தொன்றுகேட்குவனூன். (௩௰)

இதுமுதல் (௪)கவி நந்திதேவர்சிவபெருமானை அம்பிகைபிரிவற்கு)காரணங் கேட்க சிவபெருமான் அம்பிகையின் அறியாமையை வெளிப்படுத்தல்.

திங்கள்சூடியசெஞ்சடைக்கடவுளேதிருவுருவினைநீங்கா
நங்கைபார்ப்பதிபிரிவதற்கேதுமுன்னண்ணியதுளதேயோ
விங்குக்கேட்பதுவேட்டனனருளெனவியம்புநந்தியைநோக்கி
யங்கிமூவெயிலுணநகைபுரிந்தவனருளினூற்கேட்பித்தான். (௩௧)

## வேறு.

சம்புமுனிதவம்புரியத்தகுஞானகேத்திரத்தி
னும்பர்தொழச்சென்றதற்பினுலகமெலாஞ்சிற்றின்ப
வம்புநெறியொழுகுறவிம்மாதுடனாகியநாமே
நம்புமுயிர்வீடணுகநல்யோகத்திருந்தனமால். (௩௨)

இளமைபெருங்கற்பொருவரெதிராதவெழிலொத்த
வளமையுறுமன்பனைத்துமல்கியிடம்பிரியாத
பிளவுமதிங்கர்நுதலிப்பெண்ணரசிதனைநோக்கா
தளவினெடுநாள்யோகத்தமர்ந்திருந்தவெமைநோக்கி. (௩௩)

அள்ளிலைவேற்கணநாதருகிருந்தோர்பார்த்திருப்ப
வெள்ளனகைபுரிந்திட்டாளிவளதனால்விளைகின்ற
கள்ளவினைகழுவுவான்கதங்காட்டிநமைப்பிரிந்திட்
டுள்ளமுளைந்திருத்தியெனவொருசாபமுறுத்தினமால். (௩௪)

இதுமுதல்(௧௰) கவி சிவபெருமான்கொடுத்தசாபத்திற்குஅஞ்சிஅம்பிகை
புலம்புறுதல்.

வெச்சென்றமொழிகேளாவெய்துயிர்த்துநடுநடுங்கிக்
கச்சொன்றுமுலைத்தலைமேற்கனல்சேர்ந்ததிரிநெய்போன்
மைச்சென்றமலர்நீலவாட்டடங்கண்புனலுறைப்பப்
பச்சென்றவுடல்குழையப்பணிந்துமொழிகுவளானாள். (௩௫)

அடியவர்செய்திடுங்குற்றமாயிரமும்பொறுத்தருளும்
படியில்பெருங்கருணையனேபசுவேறும்பரமேட்டி
கடியவிழுநறுங்கொன்றைக்கண்ணியாகருநீல
விடமணிந்தகருமிடற்றுவிகிர்தாநின்சரண்போற்றி. (௩௬)

பேதைமையேபெருங்கிழமையிரண்டானும்பிழைசெய்தே
னாதலினாற்பெருங்கருணையடிகேண்மற்றடியேனை
யேதிலர்போற்புறக்கணித்திட்டிருந்துயரத்திடைமூழ்கப்
போதவிடலழகன்றுபொறுத்தருளாய்பொறுத்தருளாய். (௩௭)

தண்டரளப்புனற்பொய்கைதணந்தமலர்த்தாமரைபோல்
விண்டலத்துக்கதிவீழ்விழுந்தபெருங்கடவுளர்போற்
கொண்டல்பொழிமழையொழிந்தகுளிர்பண்ணைப்பசும்பயிர்போ
லண்டர்தொழுமடிகளையானகன்றிருத்தலழகேயோ. (௩௮)

உயிர்நீத்தவுடம்பென்னவுணர்வொழிந்தவுயிரென்ன
மயிர்நீத்தமாவென்னமணிநீத்தபணியென்னப்
பயிர்நீத்தசூலென்னப்பகனீத்ததினமென்னச்
செயிர்நீத்தவடிகளையான்றீர்ந்திருத்தலழகேயோ. (௩௯)

புலனுகராப்பொறியேபோற்பூணணியாமடவார்போ
லலரணியாநீர்நிலைபோலாயணையாமகவேபோற்
பலன்விளையாநிலமேபோற்பண்ணுகாராப்பாடல்போ
னிலவுமடிகளையடியேனீத்திருத்தலழகேயோ. (௪௰)

கொம்பரிலாவிளங்கொடிபோற்கொழுங்கணிலாத்திருமுகம்போல்
வெம்பரசிலாப்படைபோல்விரகினரில்லாவவைபோற்
பம்புமுயிர்க்குயிராகிப்பசுபதியாய்க்கணவனுமா
மெம்பெருமானையுமடியேனிகந்திருத்தலழகேயோ. (௪௧)

ஆற்றரியபெருந்துயராலலைப்புண்டிவ்வாறுரைத்துக்
கோற்றொடிக்கைமடமாதுகுழைந்துருகியவ்சமுற
மாற்றுதிநின்னவலத்தைமாழ்கலைமாழ்கலையென்னத்
தேற்றியவண்மனங்குளிர்ப்பத்திருவருளாலிதுகிளந்தாம். (௪௨)

சின்னாளிங்கெமைப்பிரிந்துதிகழ்ஞானகேத்திரத்தின்
மன்னுநின்றருந்தவத்தின்மனம்வைத்துநமைப்பூசை
துன்னார்வத்தொடும்புரிந்துசூழ்திதமியாகியநீ
பின்னுமங்கருள்வழங்கவெமியாவைபேணென்றும், (௪௩)

நவின்றவருண்மொழிகேளாநந்தியெனுமியற்பெயரோய்
கவன்றகவலையிற்சிறிதுகையகன்றுதோத்திரங்க
ணுவன்றுபிழையாலெழுந்தநோன்மையுறுநாணினொடுந்
துவன்றுமணிவாய்திறந்துமற்றிதுவுஞ்சொலவலித்தாள். (௪௪)

இதுமுதல் (௪) கவி அம்பிகைசிவபெருமானைவணங்கித்தோத்திரஞ்செய்தல்.

## வேறு.

தண்ணங்கமலத்தயனுகலையான்சதமாமகஞ்செய்திமையார்க்கிறையாய்
நண்ணுங்குலிசப்படையானமரர்நவில்விஞ்சையர்கின்னரர்கிம்புருட
ரெண்ணுங்கணநாதர்கணந்துறவோரெவரும்வதிவுற்றிருமைப்பயனு
மண்ணும்பெருமைத்தடிகேளுயரிவ்வணியார்கயிலாயமலாலிலையே. (௪௫)

அதுமாத்திரமன்றுலகத்துறைவோரனைவோர்களுமன்பலர்நெஞ்சினராய்
துதிபாடியுமாதிரநோக்கியெதிர்தொழுதுந்தொலையாமையுளத்திடையே
யிதுவாலிதன்வண்ணமெனப்பதிவித்திடும்பயனெய்துவதும்பெருமான்
முதிர்பேரொளிகான்றிருள்சீத்துநலமொய்க்குங்கயிலாயமலாலிலையே. ()

ஒப்பாருயர்வாரையிலாய்வதியுற்றுயர்கின்றனவன்றுகொலெத்தலமு
மப்பேரருளையகனீயொழியாதமரும்பெருமைத்துயருங்கயிலை
யிப்பூதரம்விட்டெனைஞானதலத்தேசென்றருள்செய்ததுமெம்பெருமான்
றுப்பார்திருவுள்ளவெறுப்பெனவேசூழ்ந்தச்சமொழிந்திலதென்னுளமே.()

அடியேன்மதியாமையிழைத்தபிழையகலுங்கழுவாயெனமாதவமு
முடியாதநின்பூசனையுந்தகவேமுற்றும்பலநாளுமிம்மாமலைவாய்க்
கடியாதுபுரிந்தமர்வேனிதுவேகைக்கொண்டிடுமாறுகடைக்கணியென்
றொடியாதவுளத்தெழுமன்பினளாயுரைத்தாள்பனிமால்வரையுத்தமியே. ()

## வேறு.

இதுமுதல் (௫) செய்யுள்சிவபெருமான் நந்திதேவருக்கும் அம்பிகைக்
கும் திருவானைக்காவின் மகத்துவங்கூறல்.

நந்தியின்னணமோதுநாயகிக்கிதுசொற்றுஞ்
சுந்தரிகயிலாயத்தொல்வரையிதிற்பன்னு
ணந்தியதவமெல்லாநாழிகையொன்றதனில்
வந்திடுமுயர்ஞானவைப்பிடையதுவன்றி. (௪௧)